# பாவாணரும் தனித்தமிழும்



முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

# பாவாணரும் தனித்தமிழும்

முனைவர் மு. தமிழ்க்குடிமகன், எம்.ஏ., பிஎச்.டி
*மேனாள் அமைச்சர், தமிழக அரசு*

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**International Institute of Tamil Studies**
**தரமணி, சென்னை - 600 113**

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அறக்கட்டளைச்
சொற்பொழிவு வரிசை - 1

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Pavanarum Thanithamizhum |
| Author | : | Dr. M. Thamizhkudimagan M.A., Ph.D.<br>Former Minister, Madurai-625 002. |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Chennai-600 113 |
| Publication No. | : | 419 |
| Language | : | Tamil |
| Edition | : | Second; First-1985 |
| Date of Publication | : | 2002 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | xiv + 177 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 40/- |
| Printed by | : | United Bind Graphics<br>189-D, Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004<br>PH. 4984693, 4661807 |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு
நிறுவனம் பொறுப்பல்ல

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

# அணிந்துரை

உலக மொழிகள் பலவற்றுள் தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி என்பதை மொழி அறிஞர்கள் பலரும் சான்றுகளுடன் எடுத்துக்காட்டி நிறுவியுள்ளனர். அவ்வறிஞர்களுள் ஞாயிறாகத் திகழ்பவர் பாவாணர் ஆவார். தமிழை அயன்மொழிப் பிணைப்பினின்றும் விடுவித்து அதன் தனித்தன்மையைப் பேணிக்காத்த பெருமை பாவாணர்க்கு உண்டு. "முதல் மாந்தன் பிறந்த இடம் தமிழ்க் குமரிக்கண்டமே ; அக்குமரிக் கண்டத்தில் தோன்றிய உலக முதன்மொழி தமிழே ; அதுவே உலகத்தின் உயர் தனிச் செம்மொழி ; திராவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் தமிழ் மட்டுமே" எனும் அசைக்கவியலாத மொழிக் கொள்கைகளில், தம் வாழ்நாள் முழுதும் ஊற்றமாகவும் உறுதியாகவும் இருந்தவர் பாவாணர். மொழியின் மீது அவர்க்கிருந்த பற்றும், தமிழ்க் குமுகாயத்தின் மீது அவர்க்கிருந்த அக்கறையும் அவரைப் பல இன்னல்களுக்கும் மனஉளைச்சல்களுக்கும் ஆளாக்கிய போதும் அவற்றிற்கெல்லாம் அஞ்சாத அரிமா நெஞ்சம் கொண்டவராகப் பாவாணர் திகழ்ந்தார்.

'எனக்கு வறுமையும் உண்டு ; மனைவி மக்களும் உண்டு ; அதோடு மானமும் உண்டு' என்று முழங்கிய பாவாணர், பல நூல்களைப் படைத்துத் தமிழுக்கு வளமும், வலிமையும் சேர்த்திருக்கிறார். இத்தகு மொழி ஞாயிறு பாவாணரைப் பற்றிய அறக்கட்டளைச் சொற்பொழிவு நூல்தான் **'பாவாணரும் தனித்தமிழும்'**. இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்தியவர் தமிழ்வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறையின் முன்னாள் மாண்புமிகு அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன் ஆவார். பாவாணரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவரும், பாவாணரின் மொழிக் கொள்கைகளோடு தம்மைப் பிணைத்துத் தனித்தமிழியக்கத்தை வளர்த்தெடுத்ததில் பெரும் பங்காற்றியவருமாகிய அவர்கள், இந்நூலை மறுபதிப்பாக நிறுவனம் வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன்பேரில் இந்நூல் இரண்டாம் பதிப்பாக வெளிவருகிறது. இந்நூலை வெளியிடுவதில் நிறுவனம் பெருமை கொள்கிறது.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் நூல்களை ஒவ்வொரு தமிழனும் படித்தாக வேண்டும் ; மேலும் பாவாணரை முழுமையும் அறிந்து

கொள்ள அவரைப் பற்றிய நூல்களைப் படிப்பதும் இன்றியமையாததாகும். இன்றைய இளைய தலைமுறையினர் பாவாணரைப் பற்றி அறிந்தால் தான் மொழிப்பற்றும் மொழிக்காப்புணர்வும் அவர்களுக்குக் கைவரப் பெறும். இத்தேவைகளை இந்நூல் நிறைவுசெய்யும் என்பதில் ஐயமில்லை. தனித்தமிழ் ஆர்வலர்களுக்கும், மொழிப்பற்றாளர்களுக்கும், மொழி ஆய்ஞர்களுக்கும் இந்நூல் பெரும்பயன் நல்கும்.

இந்நிறுவனத்தின் வளர்ச்சியில் ஆர்வத்துடன் அக்கறை காட்டிவரும் நிறுவனத்தின் தலைவரும், தமிழக அரசின் கல்வி மற்றும் தமிழ் ஆட்சிமொழி- பண்பாட்டுத்துறையின் **மாண்புமிகு அமைச்சருமான முனைவர் மு. தம்பிதுரை** அவர்களுக்கும், தமிழ் ஆட்சிமொழி - பண்பாட்டுத்துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறையின் **செயலர் திரு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.** அவர்களுக்கும், **கூடுதல் செயலர் திரு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இந்நூலுக்கு ஒளியச்சுக்கோப்புச் செய்து தந்த நிறுவனக் கணிப்பொறி உதவியாளர் திருமதி பி. கௌசல்யாவிற்கும், அழகிய முறையில் நூலை அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் நன்றியும் பாராட்டுகளும் உரியன.

சென்னை
*22.7.2002*

**இயக்குநர்**

# முதல் பதிப்பின் பதிப்புரை

*டாக்டர் ச.வே. சுப்பிரமணியன்*
*முன்னாள் இயக்குநர்*
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*
*சி.ஐ.டி. வளாகம், தரமணி,*
*சென்னை.*

*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மாதந்தோறும் ஒரு அறக்கட்டளைச் சொற்பொழிவினை நிகழ்த்த வேண்டும் என்ற குறிக்கோளில் 12 அறக்கட்டளைகளுக்கு மேல் நிறுவியுள்ளது. அவற்றுள் ஒன்று மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் அறக்கட்டளைச் சொற்பொழிவு. இந்த அறக்கட்டளைச் சொற் பொழிவினைத் தகுதியுடைய முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் ஆற்றி, நூல் வடிவில் எழுதித்தர ஏற்றுக்கொண்டார்கள். இப்போது சனவரி மாதம் 4,5 நாட்களில் அந்தச் சொற்பொழிவினை நிகழ்த்த இருக்கின்றார்கள். "பாவாணரும் தனித்தமிழும்" என்ற தலைப்பில் அவர்கள் இந்த நூலினை அமைத்துள்ளார்கள். தேவநேயப்பாவாணர் அவர்கள் வாழ்க்கை வரலாறு பற்றியும் அவர்கள் எழுதிய நூல்கள் பற்றியும் தேடித் தொகுத்து வகுத்து இந்த நூலினை அமைத்துள்ளார்கள். இந்த நூல் வாயிலாகத் தமிழ் மக்கள், தமிழையே உயிராகக்கொண்டு பணியாற்றிய பாவாணர் பற்றி இன்னும் தெளிவாகத் தெரிந்து கொள்ள இயலும் என்று நம்புகிறேன்.*

*இது போன்று இன்னும் பல நல்ல நூல்களை முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தமிழ் உலகத்திற்குத் தரவேண்டும் என அவர்களை வேண்டுகிறேன். மிகக் குறுகிய காலத்தில் அச்சிட்டுத் தந்த பிளேஸ் அச்சகத்தாருக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெருந்தொகை அளித்த திரு. கோவலங்கண்ணன் அவர்கட்கும், கொடையளித்த ஏனையோர்க்கும் எங்கள் நன்றி உரித்து.*

*சென்னை* — *அன்புள்ள,*
*2-1-1985.* — *ச.வே. சுப்பிரமணியன்*

# முதல் பதிப்பின் முகவுரை

தனித்தமிழ் இயக்கத்தின் தன்னேரிலாத தலைவர் தேவநேயப் பாவாணர் மறைந்தாலும் அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடரும் வகையில் பல செயல்கள் நடைபெற்று வருகின்றன. அவர்தம் கொள்கையில் பிடிப்பும் ஈடுபாடும் கொண்ட அன்பர்கள் தொடர்ந்து இயங்கி வருகின்றனர். தமிழகத்தின் உயர் ஆராய்ச்சி நடுவம் (Centre) ஆன 'உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்' பாவாணர்க்குப் பெருமை சேர்க்கும் வகையில் அருமையான திட்டத்தைச் செயற்படுத்தியுள்ளது. பாவாணர் பெயரில் அறக்கட்டளை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. பாவாணர் மீது பற்றுக்கொண்ட அன்பர்கள் தமிழகத்திலும் அயல்நாடுகளிலும் உள்ளனர். அவர்களது துணையுடன் அறக்கட்டளை முழுமையாக்கப்பட்டு இன்று அது தன் பணியைத் தொடர்ந்துள்ளது.

அவ் அறக்கட்டளையின் சார்பில் பாவாணரது அரிய கருத்துகளை ஆய்வு நோக்கில் நாட்டு மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டுமென நிறுவனம் முடிவு செய்து முதற்கட்டமாகப் **'பாவாணரும் தனித்தமிழும்'** என்னும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அறக்கட்டளையை நிறுவிப், பாவாணர்க்குப் புகழ் சேர்க்கும் பணியினை முன்னின்றும் முனைந்தும் ஏற்பாடு செய்த என் ஆசிரியப் பெருந்தகை, நிறுவன இயக்குநர் முனைவர் ச.வே. சுப்பிரமணியனார் அவர்கள் எனக்கு முதற் சொற்பொழிவை ஆற்றும் வாய்ப்பினை எனக்கு அளித்துள்ளார். பாவாணர் கொள்கையில் ஈடுபாடும், பாவாணர் வாழ்க்கையோடு தொடர்பும் உடையவன் என்னும் முறையில் எனக்களிக்கப்பட்ட இவ்வாய்ப்புக்காக என் ஆசிரியப் பெருந்தகைக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயக்குநர் அவர்களிடம் ஒரு தனிச்சிறப்பு உண்டு. பேச்சு காற்றோடு கலந்து விடக்கூடாது என்பதால் அதனையே முதற்கண் கட்டுரையாக வடித்துத் தந்துவிட்டால் நிறுவன வெளியீடாக அதனைக்கொண்டு வந்து விடலாம் என்றும், அதுவே நிலைத்த பணியாக அமையும் என்றும் கருதினார். அதன்படி 60 பக்க அளவில் என் கட்டுரையை எழுதி விடுத்தேன்.

தனித்தமிழ்த் தொடர்பான என் செய்திகளை நான் கூறியிருந்தாலும் இந்தக் கட்டுரை பாவாணரை முற்றிலும் வெளிக்காட்டுவதாக இருத்தல் வேண்டும் என்று கருதி, நூலை இன்னும் விரிவுபடுத்தி அளிக்க வேண்டினார்.

அவ்வகையில் அவர்கள் தந்த கருத்து :

"தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகட்குப் பிறகு உலகத் தமிழ்க் கழகம் கண்ட பாவாணர் ஓர் அறிவியக்கமாகவே விளங்கினார். இத்தகு பெருமைக்குரிய பாவாணரைப் பற்றி இன்னும் தமிழ்நாட்டில் தனி நூல்களோ, ஆய்வு நூல்களோ எழுதப் பெறவில்லை. அந்நிலையில் எப் பல்கலைக்கழகமும் தொடங்காத ஒரு பணியை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஓர் அறக்கட்டளை வழி அவரின் கொள்கைகளை ஆயத் தலைப்பட்டுள்ளது. பாவாணர்க்கு நாடெங்கும் மாணவர்கள், அன்பர்கள் பலர் உள்ளனர். ஆயினும் பாவாணரைப் பற்றிய முதல் ஆய்வு நூலாக வெளிவரப் போவது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட விருக்கும் தங்களின் சொற்பொழிவு நூலே ஆகும்.

முறையே ஒரு நிறுவனம் நிறுவிய அறக்கட்டளைப் பொழிவில் பாவாணரைப் பற்றிய விளக்கங்கள், அவரின் ஆய்வுச் சிறப்புகள் போல்வன கூடுதலாக அமைய வேண்டியது தேவையானதல்லவா? அவ்வகையில் தாங்கள் பாவாணரின் நூல்களை மையமாக வைத்து மொத்தத்தில் 200 பக்கங்கட்குக் குறையாமல் நூலாக வெளியிட எழுதித் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்."

இஃது அவர்களது கருத்து என்பதை விடக் கட்டளை என்பதே பொருந்தும். கட்டளையை ஏற்று நூலை விரிவாக அமைத்தேன். பாவாணர் வாழ்க்கை வரலாறு, தமிழ், தமிழர், பிற திரவிட மொழிகள், வடமொழி, இந்தி குறித்துப் பாவாணரின் உண்மையான கருத்து ஆகியவற்றை விரிவாக இணைத்துள்ளேன்.

பாவாணர் பார்வையில் இவற்றை நான் பார்த்துள்ளதால் நூல் முழுமையும் அவரது கருத்துகளே விரவிக்கிடக்கின்றன. தேவைப் படுகிற இடத்தில் மட்டும் நான் தலையை நீட்டியிருக்கிறேன்.

பிற்பகுதியில் பாவாணர் கருத்தினை ஒட்டி நானே தருக்க முறையில் அனைவர்க்கும் விடை சொல்லியிருக்கிறேன்.

மொத்தத்தில் நூல் நிறைவோடு முடிந்திருக்கிறது என்றே சொல்லலாம். நூலின் பிற்பகுதியில் பாவாணர் நூல்கள் குறித்த ஆய்வடங்கல் இணைக்கப்பட்டுள்ளது.

பாவாணரது நூல்களை ஆழ்ந்து பயின்ற பிறகுதான் அவரைப் பற்றிய முழுமையான கருத்தை ஒருவர் உருவாக்கிக் கொள்ள முடியும். அவரது நடைமுறை, பழகுமுறை, இயக்க வினைப்பாடுகள் ஆகியவற்றைக் கொண்டு நாம் பாவாணரை அளக்க முடியாது. ஆழ்ந்த ஆய்வுணர்ச்சியோடு மறைமலையார், சுந்தரனார் போன்றவர்கள் சுட்டிய செய்திகளை விடாது பற்றி விரிவாக ஆராய்ந்து பாவாணர் பொழிந்து தள்ளியிருக்கும் செய்திகளையும் கருத்துகளையும் இன்னொருவர் தந்துவிட முடியாது.

தமிழ் ஆராய்ச்சிப் பெருங்கடல் என்பதால் மட்டுமன்றி, தமிழ் உலக முதன்மொழி என்பதை நிலைநாட்டி மீண்டும் தமிழ் அத்தகுதி பெறவேண்டும் என ஓயாது உழைத்த பெருமகன் என்னும் முறையில் தமிழுலகமே அவர்க்குத் தலைவணங்கக் கடமைப்பட்டுள்ளது.

உயிர் வாழ்கின்ற சிலரைக் குறித்து அவர் தந்துள்ள பகுதிகளையும், பெரிதும் தாக்கி அவர் வரைந்த சில செய்திகளையும் இந்நூலில் நான் காட்டவில்லை. என் அடிப்படை நோக்கம் வெளிப்படும் வகையில் மட்டும் நூல் அமைக்கப்பட்டுள்ளது.

கடலில் மூழ்கி என் கையில் கிடைத்ததைக் கொடுத்துள்ளேன். நீங்களும் அதில் மூழ்க வேண்டும் என்னும் வேண்டுகோளுடன் முடித்துள்ளேன்.

கல்லூரி முதல்வர் என்னும் முறையிலும், வேறு சில வகையில் வெளியுலகத் தொடர்புடையவன் என்னும் முறையிலும், எனக்குள்ள வேலைப்பளுவை நன்கறிந்தும் என் ஆசிரியப் பெருந்தகை இவ் வேலையை என்னிடமே ஒப்படைக்க முன்வந்தமைக்கு அவர் என் மீது வைத்த நம்பிக்கையே கரணியமாக இருக்கவேண்டும்.

அவர் நம்பிக்கை வீண் போகவில்லை என்றாலும் நாள் ஓடி விட்டது என்பதை வருத்தத்துடன் சுட்டத்தான் வேண்டும்.

1983 திசம்பரில் நான் பெற்ற அறிவிப்பினை ஏற்று வேலையை முடித்துக் கொடுக்க நவம்பர் 1984 வரை ஆகியுள்ளது. என்பால் கொண்ட அன்பின் பொருட்டு மிகுந்த பொறுமை காட்டி, இவ்

வேலையை எப்படியும் முடிக்க வைப்பேன் என்று விடாப்பிடியாக வலியுறுத்தி வந்த என் பேராசிரியர், இயக்குநர் ச.வே.சு. அவர்கட்கு மிகவும் கடப்பாடுடையேன்.

என்னிடம் இல்லாத நூல்களைத் தந்துதவிய புலவர் இளங்குமரன், முனைவர் சொல்விளங்கும் பெருமாள், திரு. கருணைதாசன் ஆகியோர்க்கும் கட்டுரைகளைப் படியெடுத்த தம்பி அசோகன், மற்றும் எம்பில். ஆய்வு மாணவ, மாணவியர்க்கும், தட்டச்சுக்குத் துணை செய்த கோ. முருகன், தீனதயாளன், விசயகுமார் ஆகியோர்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாவாணரது நூற் கருத்துகள் முற்றிலும் பரப்பப்பட்டால் தமிழ் மேன்மையுறும் ; தமிழர் இனவுணர்வுடன் எழுந்து நிற்பர் ; தமிழகம் புது ஒளி பெறும்.

இத்தகைய மொழி, இன, நாட்டு மறுமலர்ச்சிக்கு வித்திட்டு வினை புரியும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை வாழ்த்துகிறேன்.

நூலில் காணப்படும் குறைகளை அன்புடன் சுட்டுவார்க்கு நன்றியுடையேன். அதனை ஏற்றுச் செம்மை செய்து கொள்வதில் தயக்கம் காட்டாத அன்பன்.

மதுரை -14.
10.11.84.

மு. தமிழ்க்குடிமகன்

# இரண்டாம் பதிப்பின்
# முகவுரை

1984ஆம் ஆண்டில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் ச.வே. சுப்பிரமணியம் அவர்களின் கட்டளைப்படி இந்த நூல் எழுதப்பட்டது. 18 ஆண்டுகள் கழித்து இரண்டாம் பதிப்பு வெளிவருகின்றது. இந்த இடைவெளிக்குள்தான் எத்தனை நிகழ்ச்சிகள்!

1996இல் கலைஞர் தலைமையில் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றது. நான் தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சரானேன். பொறுப்பேற்ற நூறாவது நாளில் 23.8.1996 அன்று பாவாணரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன. அவரது குடும்பத்தார்க்கு உரூபா 20 இலட்சம் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் போன்ற ஒரு சில பதிப்பகங்களே அவரது நூல்களை வெளியிட்டன. 2001இல் புரட்சித் தலைவி தலைமையில் அ.தி.மு.க. ஆட்சி அமைந்தது. அவர்களால் பாவாணர் நூற்றாண்டு விழாக் கொண்டாடுவதென அறிவிக்கப்பட்டு, அதன்படி சங்கரன்கோவிலிலும், சென்னையிலும் விழாக்கள் மிகச்சிறப்பாக நடைபெற்றன. நாட்டுடைமை வாய்ப்பைப் பயன்படுத்தித், தமிழ்மண் பதிப்பகம் ஏற்கெனவே வெளிவந்த பாவாணர் நூல்களையும் வெளிவாராதனவற்றையும் சேர்த்து 50 நூல்களை வெளியிட்டுச் சிறப்புச் சேர்த்தது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி அவரது உயிர்மூச்சு. எனினும் முதல் தொகுப்பு 1985இலும், இரண்டாம் தொகுப்பு 1992இலும் வெளிவந்தன. நான் பொறுப்பேற்றபின் 3 தொகுதிகள் வெளியிடப் பட்டன. 7 கணிப்பொறிகள், 4 பதிப்பாசிரியர்கள் என முழுவீச்சில் இயக்ககம் இயங்கியது. இன்றைய அரசு போதிய நிதியை ஒதுக்கி அகரமுதலிகள் அனைத்தையும் வெளியிட ஏற்பாடு செய்துள்ளது.

அவரது எத்தனையோ கோட்பாடுகளை, அவர்வழி நாடும் என்னால் இதனைச் செயற்படுத்த முடிந்தது குறித்துப்

பெருமைப்படுகிறேன். 'கோயில் வழிபாடும்', இருவகைச் சடங்குகளும் தமிழில் நடைபெறச் செய்தல்' வேண்டும் என்பது அவரது கோட்பாடு. நானே அறநிலையத்துறை அமைச்சராக இருந்தமையால் 22 தெய்வங்களின் பெயரால் தமிழ்ப் போற்றி நூல்களை வெளியிட முடிந்தது. தமிழகத்தின் எந்தக் கோயிலிலும் யார் கேட்டாலும் தமிழில் வழிபாடு செய்தே ஆகவேண்டும் என்பது இன்றைய நிலை. "இன்றுவரை அதை மாற்ற முடியாத நிலை ஏற்பட்டு விட்டது" எனும் அவரது ஏக்கத்தைப் போக்கியிருக்கிறோம்.

அதேபோல, விளம்பரப் பலகைகளில் மேலே 'தமிழ்' இடம்பெறச் செய்வதில் பெரும் வெற்றியடைந்துள்ளோம். இன்றும் 15 முதல் 20 விழுக்காடு வரை குறையுள்ளது. அதுவும் விரைவில் அகலும்.

'தமிழ்வழிக் கல்வி' போன்ற பிற நடவடிக்கைகளையும் அனைவரும் அறிவர்.

எனவே, பாவாணர் வழி உணர்ந்து அவரது விருப்பங்களை நிறைவேற்றப் பாடுபட்டவன் எனும் முறையில் பெருமிதம் கொள்கிறேன். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு நான் தலைவராக இருந்த போது, இந்த நூலை மீண்டும் வெளியிடுவது முறையாக இராது என்று கருதினேன். தற்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் மு.தம்பிதுரை அவர்களின் இசைவோடு என்நூல் மறுமதிப்புச் செய்யப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கட்கும், இதற்கான முயற்சி மேற்கொண்டு நூலை வெளிக் கொணர்ந்த இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்கட்கும் என் நன்றி உரியது.

"ஒரு சிறுவகுப்பார் தமிழ்நாட்டில் இருந்து கொண்டு சமற்கிருதம் தேவமொழி என்று துணிந்து பொய் சொல்லும்போது, தமிழர் தம் நாட்டில் கோடிக் கணக்கினராய் இருந்து கொண்டே தம்மொழியைப் பற்றிய உண்மையை எடுத்துச் சொல்ல ஏன் அஞ்ச வேண்டும் ?" என்பது பாவாணர் தொடுக்கும் வினா. அச்சத்தைத் தூக்கி எறிந்து பாவாணர் கருதிய எச்சமுள்ள பணிகளை நிறைவேற்றப் பாடுபடுவோம். பாவாணர் நூற்றாண்டு விழா நடைபெறும் இந்நேரத்தில் இந்த நூலை வெளிக்கொணரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பணிகள் மேன்மேலும் சிறந்தோங்க வாழ்த்துகிறேன்.

திபி. 2033, ஆனி, 19 (3.7.2002)

அன்பன்
மு. தமிழ்க்குடிமகன்

# உள்ளடக்கம்

முன்னுரை

பாவாணரின் வாழ்க்கை வரலாறு ... 1

பாவாணரின் பார்வையில் தமிழ் வரலாறு .. 31

பாவாணர் பார்வையில் தமிழர் வரலாறு ... 57

பாவாணர் பார்வையில் தமிழும் பிற திராவிடமொழிகளும் ... 84

பாவாணர் பார்வையில் தமிழும் வடமொழியும் ... 100

பாவாணர் பார்வையில் இந்தி ... 113

தனித்தமிழும் பாவாணரும் ... 122

பாவாணர் நூல்கள் - ஆய்வடங்கல் ... 160

# முன்னுரை

1957 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒருநாள் மாலை திருச்சி நகர் மன்றத் திடலில் நாவலர் பேச்சுக் கேட்கலாமென நானும் நண்பர் வ. சுப்பிரமணியனும் (தமிழ்ப் பேராசிரியர், அரசுக் கலைக் கல்லூரி, நாமக்கல்) சென்றோம். கூட்டம் தொடங்குவதற்குச் சற்று நேரம் ஆகும் என்று தெரிந்ததும் பழைய புத்தகக் கடையை ஆராயச் சென்றோம். நான் பி.எசி. கணிதமும் அவர் பி.ஏ. பொருளியலும் பயிலும் மாணவர்களாக இருந்தாலும் நூல் படிக்கும் விருப்பம் இருவரிடமும் இருந்த கரணியத்தால் பழைய நூல்களில் சிறப்பான ஏதாவது கிடைக்குமா என்று தேடினோம். என் கண்ணில் பட்ட நூல் 'ஒப்பியன் மொழி நூல்' 1940 ஆம் ஆண்டுப் பதிப்பு. ஞா. தேவநேசன் என்பவரால் எழுதப்பட்டது. இந்தக் குறிப்புகளை விட என்னை ஈர்த்தது வேறொன்று ; நூலின் அடிப்புறத்தில் 'விலை உரூபா மூன்று' என்று குறிக்கப்பட்டிருந்தது ; இன்று என்னைத் தமிழ்க்குடிமகனாக உருவாக்கிய சொற்கள் இவைதாம். 'உரூபா' என்று பார்த்ததும் வியப்பு. 'ரகரம்' தமிழில் மொழிக்கு முதலில் வாராது என்பது தெரியும்; அப்படியிருந்தும் இதுவரை வேறு எவரும் 'உரூபா' என்று பயன்படுத்தி நான் பார்த்ததில்லை. இந்த நூலில் 'உரூபா' என்னும் சொல்லைப் பார்த்ததும் 'இதில் ஏதோ புதுமை இருக்கிறது' என்று கருதினேன். நூலை ஒரு புரட்டுப் புரட்டினோம். பேரம் முடிந்தது. உரூபா ஒன்று மட்டும் கொடுத்து நூலை வாங்கினோம்.

இரவு எட்டு மணிக்குள் விடுதிக்குத் திரும்பிவிட வேண்டுமென்பது கட்டுப்பாடு. அதன்படி நானும் நண்பரும் திருச்சி தூய வளவர் (St. Joseph's) கல்லூரியின் புது விடுதிக்கு வந்து சேர்ந்தோம். நூல் என்னிடமே இருந்தது. எட்டு மணிக்குமேல் எவரும் வேறெவருடைய அறைக்கும் போகக்கூடாது. என் அறையில் அமர்ந்து நூலைப் புரட்டினேன். 57ஆம் பக்கத்தில் 'வீண் வடசொல்' எனும் பட்டியலைப் பார்த்தேன். 'சம்பந்தம், சந்தேகம், சந்தர்ப்பம்' என்று இதுவரை தமிழ்தான் என்று நான் எண்ணிக் கொண்டிருந்த பல சொற்கள் வட சொல்லாகக் காட்டப்பட்டதுடன் அவற்றிற்கு நிகரான தென்

சொற்களையும் கண்டேன். அவை முன்னரே எனக்குத் தெரிந்திருந்தாலும் இப்படி வேறு பிரித்துப் பார்த்து உணர்ந்ததில்லை. எனவே இந்தப் பகுதி எனக்குப் புத்துணர்ச்சியை ஊட்டியது. அடுத்தநாள் காலை வ. சுப்பிரமணியம் அறைக்கு வந்தார். செய்தியைச் சொன்னேன். அவரும் படித்துப் பார்த்தார். இருவரும் சேர்ந்து ஒரு முடிவு எடுத்தோம், 'இன்று முதல் இயன்றவரை தனித் தமிழிலேயே பேசுவது' என்று. நண்பர் அதனுடன் நிற்கவில்லை ; 'என் அறையில் பிச்சை என்பவர் இருக்கிறார் ; அவரிடமும் சொல்லி ஏற்பாடு செய்கிறேன்' என்று சொல்லிச் சென்றார். பிச்சை, பொருளியல் இளங்கலை படித்தவர். அவர்தான் இன்று முனைவர் இரா. இளவரசாக இருப்பவர் (சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்). ஆக அன்று தொடங்கிய அந்த முயற்சிதான் இன்று என்னை உங்கள் முன் நிறுத்தியுள்ளது. அந்த நூலை முற்றிலும் படித்த பிறகும் கூடத் 'தேவ நேசன் யார்?' என்று அறிந்து கொள்ள முடியவில்லை. ஓராண்டுக்குப்பின் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.வி. அவர்கள் ஏற்பாடு செய்த கூட்டத்தில் 'ஞா. தேவநேயப் பாவாணர்' உரை என்ற செய்தி அறிந்து அங்குச் சென்றோம். உரையில் பலவகையான சொல்லாராய்ச்சிச் செய்திகளைக் கேட்டோம். கூட்டம் முடிந்தபின் பாவாணரிடம் எங்களை அறிமுகம் செய்து கொண்டோம். அவரும் மகிழ்ச்சி அடைந்து விடைபெற்றார். 1959 ஆம் ஆண்டில் சிந்தாமணி பேருந்து நிலையத்தின் அருகில் ஒரு கடையில் 'தென்மொழி' எனும் பெயரில் ஓரிதழ் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டோம். 25 காசு கொடுத்து வாங்கினோம். அட்டையின் உட்புறத்தில் பாவாணர் பற்றிய குறிப்பு இருந்தது. விரைவில் அவரைச் சிறப்பாசிரியராகக் கொண்டு இதழ் தொடரும் என்ற அறிவிப்பும், பாவாணரே எழுதியிருந்த 'தமிழ் கடன் கொண்டு தழைக்குமா?' எனும் கட்டுரையும் எங்களைப் பெரிதும் மகிழ்வித்தன.

இப்படியாக வளர்ந்த தொடர்பு வலுத்து உச்சத்திற்குப் போனது மட்டுமன்றி வாழ்க்கைப் போக்காலோ, வேறுவகையான சூழல் களாலோ மாறிப் போகாமல், நாங்கள் தமிழ்த்துறைக்கே வந்து நிலைத்ததும் தனித்தமிழ்க் கொள்கையில் மாறாமல் நிற்பதும் தாம் பாவாணரைப் பற்றிப் பேச எங்கட்குள்ள தகுதி என்று கருதுகிறேன். அந்த உரிமையில்தான் பாவாணர் அறக்கட்டளையின் சார்பான முதற் சொற்பொழிவினை ஆற்றும் வாய்ப்புக் கிட்டியுள்ளது என்று கருதுகிறேன்.

இத்தகைய சிறப்புக்குரிய பாவாணர் யார்? அவரது வரலாற்றினைக் காண்போம்.

# பாவாணரின் வாழ்க்கை வரலாறு

## முன்னுரை

"அடிகளார்" என்றால் தனித்தமிழ் வளர்ச்சிக்கு வித்தூன்றிய தமிழ்மலை மறைமலையடிகளாரையும், 'பெரியார்' என்றால் தமிழினத்தைத் தட்டியெழுப்பித் தன்மான உணர்வூட்டிப் பகுத்தறிவு புகட்டிய ஈ.வே. இராமசாமிப் பெரியாரையும், 'பாவேந்தர்' என்றால் மற்றவர் போல் யார்க்காகவும் எதற்காகவும் எதையும் பாடாமல் ஒரு கொள்கைவழி நின்று மொழியின நாட்டுணர்வுப் பாடல்களைப் பாடிய புரட்சிப் பாவலர் பாரதிதாசனாரையும் குறிப்பது போல், 'பாவாணர்' என்றால் 'உலக முதல் தாய் மொழி தமிழே' என்பதை எவரும் மறுக்க வொண்ணாச் சான்றுகளால் எண்பித்து நிறுவிய மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் ஒருவரையே குறிக்கும்."[1]

## தோற்றம்

நெல்லை மாவட்டத்தில் உள்ள சங்கரநயினார் கோவில் என்னும் ஊரில் திபி.1933 சுறவம் (தை) 26 ஆம் நாள் (7-2-1902) வெள்ளிக்கிழமை பிறந்தார். தந்தை கணக்காயர் ஞானமுத்து. தாய் பரிபூரணம் அம்மையார். இவர் பழந்தமிழ்க் குடியாகிய அரிசன வகுப்பில் பிறந்தவர். உடன் பிறந்த தமையன்மார் மூவர் ; தமக்கையர் இருவர். 1908 ஆம் ஆண்டில் தம் ஆறாம் அகவையில் தந்தையாரை இழந்தார். தம் மூத்த தமக்கையாரிடமே வளர்ந்து ஆளானார்.

## கல்வி

பாளையங்கோட்டையில் பள்ளியிறுதி வகுப்பை முடித்தார். 1924 ஆம் ஆண்டில் தம் 22ஆம் அகவையில் அக்காலத்தில் மதிப்பு மிக்கதாகக் கருதப்பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் தேர்வில்

---

1. நாங்கள் காணும் பாவாணர், ப.எ.

வெற்றி பெற்றார். அத்தேர்வில் அவ்வாண்டில் பாவாணரைத் தவிர வேறெவரும் வெற்றி பெறவில்லை. தனியொருவராக வெற்றி பெற்றதால் பாவாணர்க்கிருந்த ஆங்கிலப் பயிற்சியை அறவே புறக்கணித்தார். பின்னர் வித்துவான் பட்டம் பெற்றார். நெல்லைத் தமிழ்ச் 'சங்கப் புலவர் பட்டமும் பெற்றார். தமிழ்ப் பட்டங்கள் மட்டுமே பெற்றதால் பதவியுயர்வோ, ஊதிய உயர்வோ பெறமுடியாத நிலை ஏற்பட்டது. 1942 வாக்கில் பி.ஓ.எல். பட்டம் பெற்றார். 1944 இற்கு முன்னால் சென்னைப் பல்கலைக்கழகக் கலை முதுவர் (M.A.) பட்டத்தைப் பெற்றார்.

1934 ஆம் ஆண்டில் 4, 5, 6ஆம் படிவங்கட்குரிய 'இயற்றமிழ் இலக்கணம்' என்னும் நூலை எழுதியுள்ளார். இந்நூலை எழுதிய போது அவர் திருச்சிப் புத்தூரில் பணியாற்றினார். இதற்கு முன் 1928 முதல் 1934 வரை மன்னார் குடியில் பணியாற்றி வந்தார். திருச்சிப் புத்தூரில் ஈபர் கண்காணியர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். 1937 இல் தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்பு தலைதூக்கி நின்ற போது போராட்ட மறவர்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் 'செந்தமிழ்க் காஞ்சி' என்னும் பெயரில் 2 அணா விலையில் பாடல் தொகுப்பினை வெளியிட்டுள்ளார்.

35 ஆம் அகவையில் இந்தி எதிர்ப்பு மறவராக விளங்கிய பாவாணர் அதற்குச் சற்று முன்னரே மொழியாராய்ச்சியில் ஆர்வங் கொண்டிருந்தார். இக்கால உரையாசிரியர் சிலர் தென்சொற்களை யெல்லாம் வட சொற்களாகக் காட்டி வந்த போக்கு, பாவாணரின் கவனத்தை ஈர்த்தது.

கலை-கலா, ஆ வீறு 'ஐ' யான வட சொல் ;

சேறு - ஸாரம் என்னும் வடமொழியின் சிதைவு என்று பலவாறும் தமிழ்ச் சொற்களை வடசொற்களாக வலியுறுத்தும் போக்குக் கண்டு அவற்றின் வேர்களையும், வேர்ச் சொற்களையும் ஆராய முற்பட்டார். 1930 வாக்கில் அவர் இந்த முயற்சியை மேற்கொண்டார் எனலாம். பிறகு ஆங்கிலத்திற்கும் தமிழுக்கும் உள்ள பொதுச் சொற்களை ஆராயத் தொடங்கினார். ஆங்கில அகர முதலிகள், இலத்தீன், கிரேக்க அகர முதலிகள் ஆகியவற்றைத் துருவி ஆராய்ந்தார். தமிழ், இந்திய ஐரோப்பிய மூல மொழிக்கு மிக நெருங்கியது என்னும் கால்டு வெல் கருத்தும், வட மொழியிலுள்ள திராவிடச் சொற்களைக் குண்டர்ட்டு எடுத்துக் காட்டியமையும், எக்கேல் கூறிய குமரிக்கண்ட உண்மையும், பாவாணரை ஒர் ஆராய்ச்சியாளராக மாற்றின. மொழி நூற்றுறையில் ஆழ இறங்கியது இதன் பின்னர் தான். 1938 ஆம் ஆண்டில் கீற்று (Skeat) எதிய 'Principles of English Etymology' எனும் நூலின் இரு

தொகுதிகளையும் மிகவும் ஆழ்ந்து கற்றார். அதன் விளைவாக ஏற்பட்ட தமிழுணர்ச்சியால் "செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் நெறி முறைகள்" என்னும் தலைப்பில் பல குறிப்புகளைத் திரட்டிக் கட்டுரை வடிவில் உருவாக்கினார். என்றாலும் நூலாக வெளியிடும் துணிவு பிறக்கவில்லை. பொதுமக்கள் வாங்குவார்களோ இல்லையோ என்னும் ஐயமேற்பட்டதால் அவரும் வெளியிடவில்லை. நூல்களை வெளியிடும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திலாவது கொடுத்திருக்கலாம் ; அதையும் செய்யவில்லை. அரசோ பல்கலைக் கழகங்களோ வெளியிடும் நிலையும் இல்லை. இந்நிலையில் மெல்லிய தாள்களில் எழுதப் பெற்ற அந்தக் குறிப்புகள் செல்லரித்து வீணாகி விட்டதாக அவரே வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் அவர்கண்ட மொழிநூல் உண்மைகள் குமரிக்கண்ட வரலாறு, தமிழ் உலக முதன் மொழி எனும் உண்மை ஆகியவை நூல் எழுதத் தூண்டின.

இந்த முனைப்பில் எழுந்ததுதான் 'ஒப்பியன் மொழிநூல்'. இந்நூலில் தன் பெயரை ஞா. தேவநேசன் என்று தான் குறித்துள்ளார். தனித்தமிழ் உணர்ச்சி மேலோங்கிய பிற்காலத்தில் 'தேவநேயன்' என்று குறித்தார். தேவன், நேயன் என்ற இரண்டும் தனித் தமிழ்ச் சொற்களே. இது குறித்தும் பாவாணர் பின்னர்த் 'தென் மொழி'யில் ஒரு கட்டுரை எழுதினார். 'என் பெயர், என் சொல்?' என்னும் தலைப்பிலுள்ள அந்தக் கட்டுரையில் தம் பெயர்க்கான அடிப்படைகளை விளக்குகிறார்.

இதன் பின்னர் எழுந்தது தான் 'திரவிடத் தாய்' என்னும் நூல். கால்டுவெல் ஒப்பிலக்கணம், வரலாற்று நூல்கள், தமிழ் இலக்கணம், இலக்கியம், பிற திராவிடமொழிகள் ஆகியவற்றை ஆழ்ந்தும், ஆராய்ச்சி நோக்கோடும் கற்ற பாவாணர் தமிழ், திராவிட மொழிகளின் தாய் என்பதை அழகுற மெய்ப்பிக்கிறார்.

தம் அரிய ஆராய்ச்சி நூல்களை வெளியிட விரும்பிப் பொருள் வாய்ப்புள்ள சிலரைப் பாவாணரே நேரில் சென்று கண்டிருக்கிறார். திருப்பனந்தாள் மடத் தலைவர் சுவாமிநாதத் தம்பிரான் அவர்களையும் கண்டார். பெரும் பேராசிரியர் உ.வே.சா., சுவாமிநாதத் தம்பிரானின் ஆசிரியர். உ.வே.சா. தங்குவதற்கு மடத்தில் தனி இடமும் இருந்தது.

பாவாணர் சென்ற போது அவர்க்கும் வேறு சிலர்க்கும் மடத்தின் தாழ்வாரத்தில் தங்குவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. பகல் உணவோ பிற்பகல் 3 மணிக்குப் பரிமாறப்பட்டது. இது குறித்து வினவிய பாவாணர் 'பிராமணப் பந்தி முடிந்த பின்' தான் பிறர்க்கு உணவளிக்கப்படும்' என்னும் நடைமுறையைத் தெரிந்து கொண்டார்.

பொருளுதவி குறித்துத் தெரிந்து கொள்ளக் குருபூசை நாளன்று வருமாறு தம்பிரான் பணித்ததால்தான் பாவாணர் அந்நாளில் சென்றார். அது குறித்துப் பாவாணரே கூறுவதைப் பார்க்கலாம் : 'வாய்த்தால் தமிழுக்கு' வாய்க்கா விட்டால் வடமொழிக்கே என்று கருதிக் கொண்டு குரு பூசை நாளன்று சென்றேன். பெரும் பேராசிரியரும் (உ.வே.சா.) வந்திருந்தார். அவரும் தம்பிரான் அவர்களும் ஒருங்கே நின்ற விடத்துச் சென்று கண்டேன். 'ஐயர் அவர்களைப் பற்றித் தெரியுமா?' என்று தம்பிரான் அவர்கள் வினவினார்கள் ; 'தெரியும்!' என்றேன். ஐயரோ, ஒரு முறை நான் அவர் இல்லம் சென்று கண்டிருந்தும், தமக்கு நினைவில்லை என்றார். அவ்வளவுதான் ; தம்பிரான் அவர்கள் அப்பாற் சென்று விட்டார்கள்."[2]

"எனக்கு மடத்துப் பொருளுதவி தப்பியது பற்றி எள்ளளவும் வருத்த மில்லை. தமிழர் குமுகாய நிலைத் தாழ்வே என்னை மிக மிகப் புண் படுத்தியது. நாடு தமிழ் நாடு ; மடம் தமிழன் மடம் ; மதம் தமிழன் மதம் ; பணம் தமிழன் பணம் ; அங்ஙன மிருந்தும் தமிழன் நாய்போல் நடத்தப் படுவது இவ்விருபதாம் நூற்றாண்டிலும் தொடர்கின்ற தெனின், இற்றைத் தமிழன் உயர் திணையைச் சேர்ந்தவனல்லன் என்பது தெள்ளத் தெளிவாம்."[3] இவ்வாறு மனம் நோகும் அளவுக்கான நிகழ்ச்சிகள் பல நேர்ந்தாலும் தம் ஆராய்ச்சி முடிவுகளை அவ்வப் பொழுது 'செந்தமிழ்ச் செல்வி' இதழில் வெளியிட்டு வந்தார். 'தமிழ்ப் பொழில்' இதழும் சில கட்டுரைகளை வெளியிட்டது. அவை சிலரை மகிழ்வித்தன ; சிலர்க்குச் சின மூட்டின. எனினும் எந்த வகையான தளர்ச்சியும் தடுமாற்றமும் இன்றிப் பாவாணர் தம் ஆராய்ச்சியைத் தொடர்ந்தார்.

பாவாணர் தான் எடுத்த முடிவே சரி என்று போலியாகத் தருக்க மிடுபவர் அல்லர். 'என் கட்டுரைகளிற் சில பிழைகள் இருந்தன என்பதை இன்று உணர்கின்றேன். ஆயினும் அவை என் பெரு முடிவுகளைத் தாக்காதவாறு மிகமிகச் சிறியனவே' என்று பெருந்தன்மையோடு கூறிக் கொள்கிறார்.

ஓராண்டு நடுநிலைப்பள்ளியிலும், 22 ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளியிலும் பணியாற்றியுள்ளார். அவற்றுள் ஒன்று பிரம்பூர் கலவல கண்ணன் உயர்நிலைப்பள்ளி, பேராயக் கட்சிப் பெருமகன், சிறந்த அறுவைப் (Surgeon) பண்டகர் மல்லையாவின் பரிந்துரையால்

2. தமிழா மதம், ப.(133)
3. மேலது, பக். (133-134)

இவ்வேலை கிட்டியது. சென்னை முத்தியாலுப் பேட்டை உயர் நிலைப் பள்ளியில் பண்டாரகர் மா. அரசமாணிக்கனாரின் பரிந்துரையால் வேலைகிட்டியது. மற்றும் ஈபர் கண்காணியர் உயர் நிலைப்பள்ளி போலும் பள்ளிகளிலும் பணியாற்றினார்.

1944 ஆம் ஆண்டில் சேலம் நகராட்சிக் கல்லூரியில் பணியேற்றார். ஈடும் எடுப்புமற்ற உயர்திரு இராமசாமி அவர்களின் தமிழ்ப் பற்றாலும் நகராட்சித் தலைவர் திரு. இரத்தினசாமி அவர்களின் தமிழ்ப் பண்பாட்டாலும், நகராட்சி ஆணையர் திரு. இராமலிங்கனார் அவர்களின் தமிழ் அன்பாலுமே அங்குப் பாவாணர் பணி யேற்க நேர்ந்தது.

அங்குப் பணியாற்றிய 12 ஆண்டுகளும் பாவாணர் எந்த வகையான இடையூறுக்கும் ஆளாகாமல் நிமிர்ந்து நின்று செயற்பட்டார் எனலாம்.

சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், உயர்தரக் கட்டுரை இலக்கணம் (2 பாகங்கள்), பழந்தமிழாட்சி, முதல் தாய்மொழி, தமிழ் நாட்டு விளையாட்டுகள், தமிழர் திருமணம் ஆகிய அரிய ஆராய்ச்சி நூல்கள் இக்காலத்தில் தான் வெளியிடப்பட்டன. தம் ஆராய்ச்சி முடிவுகளை இதழ் வாயிலாகவும், நூல் வாயிலாகவும், வெளியிடுவதற்குத் துணை புரிந்த 'செந்தமிழ்ச் செல்வி' ஆசிரியர், கழக முதல்வர் வ. சுப்பையா அவர்களைப் பாவாணர் நன்றியுடன் நினைப்பதுண்டு.

12 ஆண்டு காலச் சேலம் வாழ்வில் பெற்ற நிறைவே பாவாணர் வாழ்வின் பொற்காலம் எனலாம். அதற்குப் பிறகு அந்த நிறைவை அவர் அடையவே இல்லை.

அவர் இயற்றிய இசைப்பாடலை வெளியிடுவது பொருத்தமாக இருக்கும்.

சேலங்கல்லூரி முதல்வர் இராமசாமிக் கவுண்டர்
பண்- 'காப்பி' தாளம் - முன்னை

ப.

சேலங் கல்லூரித்தலை சிறந்த முதல்வர் என்றும்
சாலும் புகழ் இராமசாமிக் கவுண்டர் அன்றோ.

து.ப.

ஞால முழுதும் தமிழ் நன்கு பரவ அடி
கோல வந்தவரென்று கூறுதல் மிகையுண்டோ-சே

உ.1

வாணியம் பாடிக்குப்பின் சேலங்கல்லூரியிரு
பானொடு மூன்றாண்டாகப் பதிந்திரண்டாம் நிலையை

மாணவே முதலென மாற்றி யேழை மாணவர்
　　மாபெருந் தொகையராய்த் தேறச் செய்தார் கலையே-சே

2

ஆரியரே பெரும்பால் ஆசிரியன் மார்அங்கே
　　அமர்ந்திருந்தார் அத்தீங்கை அகற்றவே பல்துறையும்
சீரிய தமிழரே சிறந்த தலைவரெனச்
　　சேர்ந்து பணி செய்யவே செய்தனர் நன்முறையே-சே

3

பொன்னிற நெடு மெய்யும் இன்னழ கொண் முகமும்
　　மன்னவர் குலமென எண்ண வுறுவனவே
புன்னகையொடு திரு மண்நுதல் அணி செய
　　மென்னடை நடந்துபோம் விண்ணவ னோஎனவே-சே"[4]

இக்காலத்தில் மறைமலை யடிகளாருடன் தொடர்பு கொண்டிருந்தார். பாவாணர்தம் மொழியாராய்ச்சித் திறத்தை மறைமலையடிகள் பெரிதும் போற்றினார். அவரது ஆற்றலைப் புகழ்ந்து மறை மலையடிகள் தந்துள்ள சான்றிதழை ஆங்கிலத்தில் அப்படியே தந்துள்ளேன். 1949 ஆம் ஆண்டில் தரப்பட்ட சான்றிதழ் இது:[5]

## CERTIFICATE

The Tamil works on the study of Tamil words written by Pandit Jna. Devaneyan, B.O.L. on the lines of general philological principles meet a longfelt want in Tamil. In my early days when I was interesting myself in the study of such English works as Arch Bishop Trench's Study of Words. Prof. Max Muller's Science of Language, Prof. Sayce's Comparative Philology etc., my attention turned to making a similar study of Tamil words. Dr. Caldwell's Comparative Study of Dravidian Languages opened up before me a vast and wonderful tract of Tamil knowledge then lay hidden even to great Tamil scholars. Still Caldwell's work as an incipient attempt in an unknown region could not be expected to treat exhaustively of all Tamil words. And this impelled me to write a Tamil Philology myself and publish even one or two essays of it in the first volume of my magazine Jnanasagaram. But I could not continue it. since my activities in other fields as religion, philosophy and literary history absorbed my

4. இசையரங்கு இன்னிசைக் கோவை, பக். 25-26.
5. ஒப்பியன்மொழிநூல், முன்னுரைப்பகுதி.

whole attention. Still I was looking about whether any competent scholar would take up the subject ; and I was gratified to a certain extent when Father Jananprakasar of Jaffna sent me his interesting work on Tamil Philology. The field being vast and extensive, I was looking forward to some more work on a comprehensive scale founded on ancient classical Tamil and I am glad to say that Mr. Devaneyan has met my expection almost wholly. Tamil scholars may safely rely on his careful treatment of the subject and I dare say they will be greatly benefitted by a diligent perusal of his works. It is my humble opinion that in the Study of Tamil words Mr. Devaneyan stands pre-eminent and has few rivals.

Further Mr. Devaneyan is an impressive teacher and an interesting lecturer as I had on several occasions when I had presided over the annual deliberations of Tamil Sangams to hear him speak to large audiences and engage their attention by flavouring his speech with wit and humour. As a painstaking research scholar I am confident he will bring name and fame to any institution that will engage his services.

Pallavaram, 1949. (Sd.) Maraimalai Adigal.

பாவாணர் நல்ல இசை நுட்பமும், தெளிவும் உடையவர். இசையரங்கு இன்னிசைக் கோவை, இசைத்தமிழ்க் கலம்பகம், செந்தமிழ்க் காஞ்சி ஆகிய அவரது நூல்கள் அவரது இத்திறனை மெய்ப்பிப்பவை. எப்பண்ணிலும் பாடல் இயற்றும் வல்லமை அவரிடத்தில் இருந்தமையால் தம் பெயரையே 'ஞா. தேவ நேசக் கவிவாணன்' என்று தான் முதலில் வைத்துக் கொண்டார். தனித்தமிழ்ப் பற்று ஏற்பட்ட பிறகு ஞா. தேவ நேயப் பாவாணர் என்னும் பெயர் அமைந்தது. 'தமிழ் எது வடமொழி எது' என்று வேறுபாடறியாத காலத்தில் கலந்து பேசுவதும், எழுதுவதுமாக இருந்தாலும் தனித்தமிழ் உணர்வு தோன்றிய பின் அனைத்தையும் செப்பமாக மாற்றிக் கொள்ளும் போக்கு இருந்திருக்கிறது. மறைமலையடிகள் இவ்வகையில் பாவாணர்க்கும் இன்னும் பலர்க்கும் வழிகாட்டியிருக்கிறார். பாவேந்தரின் முதல் தொகுதியில் இடம்பெற்ற சொல்லாட்சிக்கும் பிற்காலத்தில் வெளியிடப்பட்ட 'தமிழியக்கம்' நூலின் நடைக்கும் உள்ள வேறு பாட்டை நன்கு உணரலாம்.

பாவாணரின் குடும்ப வரலாற்றையும் இங்குப் பார்க்க வேண்டியது நம் கடமை.

தமது மூத்த தமக்கையாரின் வளர்ப்பில் இருந்ததால் அவர் பார்த்து ஏற்பாடு செய்த எசுதர் (Esther) என்னும் பெண்மணியைத் திருமணம்

செய்து கொண்டு வாழ்ந்தார். அவர்கட்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. மணவாளதாசன் என்னும் பெயருடைய அவர் பின்னாளில் காவல்துறை ஆய்வாளராகப் பணியாற்றினார். எதிர்பாராத வகையில் முதல் மனைவி இறக்க நேர்ந்தது. பின்னர்த் தம் தமக்கையாரின் மூத்த மகளாகிய நேசமணி அம்மையாரை இரண்டாம் மனைவியாகப் பெற்றார். இவர்களுக்கு நான்கு ஆண் மக்கள் ; ஒரு மகள்.

தம் மக்களுக்குப் பாவாணர் இட்டுள்ள பெயர்களே பாவாணரை அடையாளம் காட்டக் கூடியவை. நச்சினார்க்கினிய நம்பி (ஆசிரியர் - கோபிசெட்டிப்பாளையம்), சிலுவையை வென்ற செல்வராயன் (ஆசிரியர் - சேலம்), அருங்கலைவல்லான் அடியார்க்கு நல்லான் (துறவியார்-மைசூர்), மடந்தவிர்த்த மங்கையர்க்கரசி (சென்னை), மணிமன்ற வாணன் (சென்னை).

பாவாணர் ஆய்வில் இறங்கிவிட்டால் ஊண், உறக்கமெல்லாம் மறந்து போவார். உலகையும் மறந்து போவார். மிதிவண்டி ஓட்டிக்கொண்டு வரும் போதே எதாவது சிந்தனையில் ஆழ்ந்து எதிரில் வருபவர்கள் மீது விழுந்து விடுவதும் உண்டு. ஒருமுறை ஒரு பனை மரத்தில் மோத வேண்டிய சூழல் ஏற்பட்டதால் மிதிவண்டி ஓட்டுவதையே விட்டு விட்டதாகக் கூறியுள்ளார். 'Absent minded professor' என்பது பாவாணர்க்கு முற்றிலும் பொருந்தும்.

அவரது வாழ்க்கைத் துணைவியாராகிய நேசமணி அம்மையார் பாவாணரின் ஆராய்ச்சி தடைப்படாமல் வாழ்வதற்குரிய முறையில் எவ்வளவோ துணை செய்திருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். தனக்குரிய நலன்களைப் பேணிக் கொள்ளவும், கணவர் என்னும் முறையில் பாவாணர் தம் அன்பான துணைகளைப் பெற்றுக் கொள்ளவும் முடியாவிட்டாலும் அம்மையார் பாவாணரைக் குழந்தை போல் பேணிக் காத்து வந்தார். பாவாணரே ஒரு குழந்தை தான் என்பதை நெருங்கிப் பழகியவர்கள் உணர முடியும்.

## அண்ணாமலை நகர் வாழ்க்கை

சேலம் கல்லூரிப் பணிக்குப் பின் பாவாணரது வாழ்வு அண்ணாமலை நகரில் தொடங்குகிறது. இது குறித்துப் பாவாணரே 'என் அண்ணாமலை நகர் வாழ்க்கை' என்னும் பெயரில் 'தன் வரலாறு எழுதியிருப்பதால் செய்திகளை அதிலிருந்து தருவதே பொருத்தமாகும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1929-ஆம் ஆண்டு அரசவயவர் அண்ணாமலையார் அவர்களால் தொடங்கப் பெற்றது. தமிழ் மொழியிலக்கியம், பண்பாட்டைத் தகுந்த முறையில் வளர்க்கவும்

உலகம் முழுவதும் பரப்பவுமான சிறந்த குறிக்கோளுடன் நிறுவனம் தோற்றம் பெற்றது.

தமிழ் ஆராய்ச்சித் துறை ஏற்பட்ட பொழுது துறைத் தலைவருக்குத் தகுதியுடையாரில் மூன்று பெயரைக் குறித்து மறை மலையடிகள் ஒரு பட்டியல் விடுத்திருந்தார். அதில் பாவாணர் பெயரும் ஒன்று. பாவாணர்க்கும் அழைப்பு வந்தது. ஒரு சில கரணியங்களால் பாவாணர் அப்போது அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

1956-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியாராய்ச்சித் துறை சூன் மாதம் ஏற்படுமென்றும் முதலில் துணைப் பேராசிரியர் அமர்த்தப்படுவரென்றும் முதற்பணி, சொற்பிறப்பியல் அகர முதலியாக இருக்கும் என்றும் விளம்பரம் வெளியிடப்பட்டது. பாவாணர் அதற்கு வேண்டுகை விடுத்தார்.

அரச வயவர் முத்தையா அவர்கள் சேலம் வந்தபோது சில பேராசிரியர்கள் பாவணர்க்காகப் பரிந்துரைத்தனர்.

பண்டாரகர் அரசமாணிக்கனார், அறிஞர் ஔவை துரைசாமி ஆகியோரும் மதுரையிலிருந்து பாவாணர்க்காகப் பரிந்து எழுதியிருந்தனர். முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.வி. அவர்களும் மேடை தோறும் பாவாணரைப் பற்றிப் பேசி வந்தார். எனினும் துணைவேந்தர் டி.எம். நாராயணசாமி அவர்கள் சேதுப் பிள்ளையையும், தெ.பொ. மீயையும் கேட்டு முடிவெடுப்பதாகப் பாவாணரிடமே கூறிவிட்டார். வேண்டுகை விடுத்து அரையாண்டாகியும் அமர்த்தம் நடைபெறவில்லை. பண்டாரகர் வரதராசுலுவும் இச் செய்தியறிந்து பாவாணர்க்காகத் தாம் உதவுவதாக உறுதியளித்திருந்தார். அது போலவே அரசவயவர் முத்தையா அவர்களிடமும் கூறியுள்ளார்.

இறுதியாகப் பேரா.இலெ.ப.கரு. இராமநாதன் அவர்களிடம் கேட்டுத் தெரிந்த பின்பே பாவாணரை அமர்த்துவதென முடிவு செய்யப்பட்டது. ஒரு நாள் அமர்த் தோலையும் வந்தது. இரண்டொரு நாட் கழித்து மற்றோர் ஓலையும் வந்தது. பாவாணர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ள விருக்கும் பணியை மேற் பார்ப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருந்தது. வங்கநாட்டின் சமஸ்கிருதப் பேராசிரியர் பண்டாரகர் சுனீதிகுமார் சட்டர்சி (தலைவர்) பூனா. தக்கணக் கல்லூரிப் பேராசிரியர் பர் கத்தரே, மைசூர் கன்னடப் பேரா. சீ கண்டையா, சென்னை மாநிலக் கல்லூரிச் சமற்கிருதப் பேராசிரியர் திருஞானசம்பந்தம் மற்றும் இரா.பி.சேது, தெ.பொ.மீ., அ. சிதம்பரநாதன், இலெ. ப. கரு. இராமநாதன், கோ. சுப்பிரமணியம் ஆகியோர் குழுவில் இருந்தனர். இந்தக்குழுவின் மேற்பார்வையால்

தன்னாட்சியுரிமையோடு ஆய்வு செய்யவோ அகர முதலிப் பணியை மேற்கொள்ளவோ முடியுமா என்று பாவாணர் ஐயுற்றார்.

குறிப்பாகத் தமிழில் எழுதவோ, தமிழை நேரடியாகப் படிக்கவோ தமிழில் பேசவோ இயலாமல் சிலர் எழுதிய ஆங்கில நூல்களை மட்டும் படித்து விட்டு அதைக் கொண்டு தமிழை மதிப்பிடும் சு.கு. சட்டர்சி போன்றார் மேற் பார்வையிடுவது தம் ஆராய்ச்சி முடிவுகளையே பாதிக்கும் என்னும் எண்ணம் பாவாணர்க்கிருந்தது. இந்நிலையில் அண்ணாமலை நகர் செல்வதா இல்லையா என்று முடிவு செய்ய முடியாத நிலை எற்பட்டது. பாவாணர்க்கு 54 அகவை ஆகிவிட்டபடியாலும் சேலங் கல்லூரியிலிருந்து விரைவில் ஓய்வு பெற வேண்டிய காலம் நெருங்குவதாலும், மேற்பார்வைக் குழுவின் செயலாளராகப் பாவாணர் இருப்பதால் இடர்ப்பாடுகள் நேரினும் சமாளித்துக் கொள்ளலாம் என்பதாலுமே அண்ணாமலை நகர்ப்பணியை எற்க இசைந்தார்.

12-7-56 அன்று அண்ணாமலைப் பல்கலைக்கழக வேலையை ஒப்புக் கொண்டார். கல்வியாண்டு தொடங்கியபின் வேலையில் சேர்ந்ததால் மனைவி மக்களைச் சேலத்தில் விட்டு விட்டு அவர் மட்டும் தனியாகவே சென்றார்.

விரிவுரையாளர் குடியிருப்பில் அவர்க்கு ஒதுக்கப்பட்ட மனையில் குடியமர்ந்தார். ஓராண்டு தனித்திருக்க நேர்ந்ததாலும், உண்டிச் சாலை உணவு அவர் உடம்பிற் கொவ்வாமையாலும் முதலாண்டு முழுவதும் அவரே சமைத்துண்டார்.

பணியாற்றும் காலத்தில் அவர் கண்ட உண்மை அவராகத் தனித்து நின்று எந்த ஆய்வையும் மேற்கொள்ள முடியாது என்பதும், ஆரியத் தலைமையை ஏற்றுத் தமிழைக் காட்டிக் கொடுத்தல் தவிர மற்றெல்லா நிலைப்பாடுகட்கும் இணங்கியே ஆகல் வேண்டும் என்பதும் ஆகும்.

இவரை மேற்பார்க்கும் குழுவில் முனைவர் மு.வ., முனைவர் அரசமாணிக்கனார் ஆகிய இருவரையும் உறுப்பினராகச் சேர்க்குமாறு பாவாணர் துணைவேந்தரிடம் வேண்டியும் பயனில்லை. திராவிடமொழியாராய்ச்சித் துறையின் முதற்பணி தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் தொகுப்பென்று விளம்பரஞ் செய்யப்பட்டிருந்தாலும் குழு ஆற்றுப்படுத்தியவாறே அவர் பணி நடைபெற வேண்டுமென்று அமர்த்தோலைப் பின்னிணைப்பில் குறிக்கப் பட்டிருந்ததால் குழுக்கூட்டம் தொடங்கப் பெறும் வரை அவரால் எதையும் திட்டமிட்டுச் செய்ய முடியவில்லை. திராவிட மொழியாராய்ச்சித் துறையில் ஒரு மிசையையும் (Table) ஒரு நாற்காலியையும் மட்டும் அவர்க்கு ஒதுக்கியதோடு அவரது அலுவலகம் நின்றது.

அவர் பணியேற்று 9 மாதங்கட்குப் பின் 8.4.1957 அன்றுதான் மொழிநூற்றுறைத் தொடக்கக் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி குறித்துப் பாவாணர் எழுதியிருப்பதை அப்படியே தர விரும்புகிறேன்.

“தலைவர் பர். சட்டர்சி விரிவான தலைமையுரையொன்று நிகழ்த்தினார். கூட்டம் முழுவதும் ஆங்கிலத்திலேயே நடைபெற்றது. செயலாளர் என்ற முறையில், நான் ஓர் அறிக்கையெழுதிப் படித்தேன். தலைவர் தம் உரையிடையே, “ஒவ்வொரு நாட்டிலும் நாகரிகம் அந்நாட்டு மொழியோடு தொடர்புள்ளது. இந்திய நாகரிகமெல்லாம் சமற்கிருத இலக்கியத்திலேயே எழுதப்பட்டுள்ளது. ஆதலால் இந்திய நாகரிகம் ஆரியரதே” என்று கூறியதால் என் அறிக்கையையொட்டி இந்திய நாகரிகமெல்லாம் முதன் முதல் தமிழிலக்கியத்திலேயே எழுதப்பட்டிருந்தது. அவ்விலக்கியம் முழுதும் இறந்துபட்டபின், அதன்மொழிபெயர்ப்பான சமற்கிருத இலக்கியமே மூலம்போற் காட்சியளிக்கின்றது. ஒரு புகைவண்டி வழிப்போக்கன் கையிற் சீட்டில்லாவிடின், அம்மட்டிலேயே அவன் சீட்டு வாங்காமற் செல்பவன் என்ற முடிவு கொண்டுவிட முடியாது : ஒருகால் சீட்டுத்தவறிப் போயிருக்கலாம் ; அல்லது அடுத்தவன் திருடியிருப்பான்” என்றுரைத்து அவர் கூற்றை மறுக்க வேண்டியதாயிற்று.

கூட்டம் முடிந்தபின், பர். சட்டர்சி புன்னகையுடன், “திருவாளர் தேவநேயரீர்! நீர் அந்தச் சீட்டைக் காட்ட வேண்டும்” என்று விளையாட்டாகவும் வினையாகவும் சொன்னார். “நான் சீட்டுகாட்ட முடியாது” என்று செப்பினேன். அவர் உள்ளத்திற் கள்ளமற்றவர்தான். ஆயின், தமிழைப்பற்றி அவருக்குத் தெள்ளிய அறிவில்லை. இதற்குத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியரே பொறுப்பாவார். முனைவர் சேதுவோ, ‘இனிமேல் அந்தப் புகைவண்டிச் சீட்டுவமையை எங்கும் சொல்லாதீர்கள்’ என்று நல்லது சொல்வது போல் எச்சரித்தார். முனைவர் கத்தரே என்னைப் பற்றிய கருத்தை உள்ளத்தில் மறைவாய் வைத்துக் கொண்டார்.

அன்று எற்பாடு (சாயுங்காலம்), முனைவர் சட்டர்சியைச் சிறப்பிக்க ஒரு சிற்றுண்டி விருந்து நடந்தது. அதில் அவரைப் பாராட்டிப் பேசிய முனைவர் சேது, அவர் தம் பெயரை ‘நன்னெறி முருகன்’ என்று குறிப்பிடுபவர் என்றும், தமிழ்ப்பற்று நிரம்பியவர் என்றும் சிறப்பாய்க் குறிப்பிட்டார். அதன் உட்குறிப்பு, மொழி நூல் பற்றிய அவரது நடுநிலை முடிவே கொள்ளத்தக்கதென்பதும், தமிழ் வெறியால் தேவநேயன் கூறுவது தள்ளத் தக்கதென்பதுமே. ‘தமிழ் கெடினும் கெடுக ; தேவநேயன் பெயர் ஓங்கக்கூடா’ தென்பதே அவர் குறிக்கோள்.

முனைவர் சட்டர்சிக்குத் தமிழ் தெரியாது. அதிற் பேசவோ எழுதவோ அவருக்கு இயலாது. தமிழைப்பற்றி ஆங்கில நூல் வாயிலாகவே கற்றவர். சுநீதி குமார் சட்டர்சி என்னும் தம் பெயரின் முன்னிரு சொற்களை மட்டும் நன்னெறி முருகன் என்று மொழி பெயர்த்து, அவற்றைத் தமிழெழுத்திற் குறிக்கக் கற்றிருக்கின்றார். நெறி என்பது வழி அல்லது விதி. நீதியைக் குறிக்க அதனினுஞ் சிறந்த சொற்கள் நயம், நேர்மை என்பன. குமார் என்பது குமரன் (=முருகன்) என்னும் தென் சொல்லின் திரிபே. ஆயின், முருகன் ஆரியத்தெய்வம் என்பதும், முருகன் என்பது சுப்ரமணியன் என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பென்பதும் அவர் நம்பிக்கை. தமிழை ஆங்கில வாயிலாய்க் கற்றதனால், சில தமிழ் நூற் பெயர்களைக்கூட அவர் சரியாய் ஒலிப்பதில்லை. பத்துப்பாட்டு என்பதைப் பத்துப்பத்து என்று அண்ணாமலை நகரில் ஒருமுறை படித்தார். வேறிடங்களில் பட்பட் என்றும் பட்டுபட்டு என்றும் படித்ததாகக் கேள்வி.

தொடக்கக் கூட்டத்திற்கு மறுநாட்காலை குழுக் கூட்டம் நடைபெற்றது. அதிற் பின்வருமாறு முடிவுகள் செய்யப்பட்டன.

1. பரோ என்னும் ஆங்கிலப் பேராசிரியரையாவது, எமனோ என்னும் அமெரிக்கப் பேராசிரியரையாவது, அ.ம.ப.க. மொழிநூல் துறைப் பேராசிரியராக அமைத்தல் வேண்டும்.

2. வாசகராகவிருக்கும் ஞா. தேவநேயனார் தாம் தொகுக்கவிருக்கும் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியின் போலிகையாக, முதற்கண் யாவேனும் ஐம்பது சொற்கட்கு எழுதிக் காட்டல் வேண்டும். அதற்குக் கையாளும் நெறிமுறைகளையும் குறிப்பிடல் வேண்டும்.

3. தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய நான்கு மொழிக்கும் ஒவ்வொரு விரிவுரையாளரை அமர்த்தல் வேண்டும்.

4. கழக (சங்க) இலக்கியத்தை ஒவ்வொரு நூலாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் வரிபெயர்த்தும், பொருளும் மொழியமைதியும் அயலார்க்கு விளங்குமாறு வெளியிடுதல் வேண்டும்.

5. செந்தமிழ் x கொடுந்தமிழ், இலக்கிய மொழி x வழக்கு மொழி, ஆகிய நடைமொழிகளையும் வேறுபடுத்திக் காட்டல் வேண்டும்.[6]

---

6. 'தென்மொழி' இதழ்-சுவடி 2; ஓலை 8.

திராவிட மொழி விரிவுரையாளர்கள் பணியமர்த்தம் விரைவில் தொடங்கியது. பாவாணரும் ஐம்பது சொற்கட்கு வேரும், வரலாறும், பொருளும் விளக்கமும் எழுதத் தொடங்கினார்.

பூனா தெக்காணக் கல்லூரியின் வேனில் மொழியியற்பள்ளி மேழ (சித்திரை) மாத நடுவில் (மே முதல் நாள்) தொடங்குமென அறிவிப்பு வந்தது. துணைவேந்தர் பாவாணரை அழைத்து மேற்குறித்த பயிற்சிக்குச் செல்ல விருப்பம் உளதா என்பதைக் கேட்டறிந்தார். பாவாணரும் இசைந்தார். ஒன்றரை மாதம் நடைபெறும் அப்பயிற்சிக்கான இசைவைப் பெற்றுக் கொண்டு பாவாணர் தேராதூன் (Dehra Dun) சென்றார். மொழி, மதம், இனம், குலம் என்றும் வேறுபாடின்றி ஆசிரியரும் மாணவரும் அங்கு உடன் பிறப்புப் போற் பழகியது பாவாணர்க்குப் பெரும் மகிழ்ச்சியைத் தந்தது.

வண்ணனை மொழிநூல் தான் அங்குக் கற்பிக்கப்பட்டது. அதன் முழுப்பரப்பையும் பயிற்சி முறையையும் கற்றுக் கொண்டார். ஏற்கெனவே கிளீசன் எழுதிய நூல் கொண்டும் பல செய்திகளைக் கற்று வைத்திருந்தார். நடைபெற்ற தேர்விலும் வெற்றி பெற்றார். பின் அண்ணாமலைநகர் திரும்பினார்.

முனைவர் சட்டர்சி முன்பு ஆற்றிய தலைமையுரை நூலாக வெளியிடப்பெற்றது. பல வகையில் தமிழின் தொன்மை, முன்மை முதலிய கருத்துகள் மறுக்கப்பட்டு, தமிழைத் தாழ்வாகக் கூறுவதாகவே சட்டர்சி நூல் அமைந்தது. கே.ஏ. நீலகண்ட (சாத்திரியார்) ஏற்கெனவே தமிழரைத் தாழ்த்திக் கூறியது போலவே இவரும் கூறியிருந்தார்.

இதில் குறிப்பிடத்தக்க செய்தி 'ஸ்திரீ' என்னும் வடசொல் தமிழில் 'தி' என்னும் பெண்பால் ஈறாகத் திரிந்தமைந்தது என்பதே. இக்கருத்து பத்தாண்டுகட்கு முன் மதுரைக் கல்லூரி மலரில் இடம் பெற்று, 'செந்தமிழ்ச் செல்வி' யில் பாவாணர் அதற்கு மறுப்பும் எழுதியுள்ளார். அந்த அளவோடு அது நின்று விட்டதாகக் கருதியிருந்தார். சட்டர்சி மீண்டும் அதைக் கிளப்பி விட்டார்.

தமிழில், பெண்பால் காட்டும் ஈறு வடமொழி வருமுன் இல்லையாம். ஸ்த்ரீ என்னும் பெயர் வண்ணான், தட்டான் முதலிய பெயர்களோடு, சேர்ந்து வண்ணான்+ஸ்த்ரி - வண்ணாத்தி, தட்டாத்தி என்றானதாம்.

முருகன் தொல்காப்பியர் காலத்திய தெய்வமாக விளங்கும் போது சுப்பிரமணியனின் மொழி பெயர்ப்பு என்பதும் முற்றிலும் உண்மைக்கு மாறான கருத்தே. இக்கருத்துகள் பாவாணர்க்கு மிகப் பெரும் எரிச்சலை உண்டு பண்ணியிருந்தன.

சில நாள் சென்றபின் சட்டர்சி அண்ணாமலைநகர் வந்தார். செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலிக்குப் போலிகையாகப் (மாதிரியாக) பாவாணர் ஐம்பது சொற்களுக்கு விளக்கம் எழுதியிருந்ததைப் பார்வையிட்டார்.

அச்சன் என்பது அத்தன் என்னும் தென் சொல்லின் திரிபு என்பதையும், குமரிக்கண்ட வரலாற்றையும் சட்டர்சி பார்த்து மறுத்தார். பாவாணரைப் பார்த்து You are fighting a lonely fight என்றும் கூறினார்.

இது பற்றிப் பாவாணர் மிக விரிவாக எடுத்துக் கூறியும் சட்டர்சியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏற்கெனவே தமிழ், தமிழர் குறித்து மாறுபட்ட கருத்துடைய சட்டர்சி தம் கருத்தை ஏற்கமாட்டார் என்பதைப் பாவாணரும் உணர்ந்திருந்தார்.

அவர்பால் மிகுந்த அன்புடைய இலெ.ப.கரு. அவர்கள் கருத்து வேறுபாட்டுக் கிடமில்லாத 50 சொற்களுக்கான விளக்கத்தை அளிக்கலாம் என்று கூறியபோதும் பாவாணர் மறுத்து விட்டார்.

"தமிழைப் பற்றிய உண்மையை எடுத்துச் சொல்ல ஏன் அஞ்சவேண்டும். இங்ஙனம் எத்தனை நாளைக்கு அஞ்சியஞ்சி அடிமைத் தனத்திலும் அறியாமையிலும் தமிழன் மூழ்கிக் கிடப்பது?"[7] என்று கொதிப்படைந்தார்.

முனைவர் காத்திரே பாவாணரைப் பற்றித் தீதாகப் பல செய்திகளை மேல் அலுவலர்கட்கு எழுதி வந்திருக்கிறார். சட்டர்சியும் சேதுவும் (பிள்ளையும்) கலந்து பேசிப் பாவாணரை வேறு துறைக்கு மாற்றம் செய்தனர். அடுத்த ஆண்டில் கோ. சுப்பிரமணியன் தலைமையில் தமிழாராய்ச்சிப் பொதுத்துறைக்கு மாற்றப்பட்டார்.

அரசியல் தூதன் ஒருவன் அயல் நாட்டில் இருந்தது போல் பொதுத் துறையில் வேலை செய்து வந்தார். ஆரியத்தோடு ஒத்துப்போகுமாறு நண்பர்கள் வலியுறுத்தினர்.

"என்ன தீங்கு நேரினும் உண்மையை எடுத்துச் சொல்வது ஆராய்ச்சியாளன் கடமை என்றும், மிகக் கொடுமையாய் வடமொழிக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் தமிழை அதனின்றும் மீட்பதே என் வாழ்க்கைக் குறிக்கோள் என்றும், இதற்காகவே என்னை

7. 'தென்மொழி' இதழ்-சுவடி 2; ஓலை 12.

இறைவன் படைத்தான் என்றும்"[8] கூறி வந்தார். 12 பேர் பொதுவாக உள்ள அறையில் தான் பாவாணர்க்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஐந்து ஆண்டுகள் ஓடிவிட்டன. அவர் செய்து வந்த பணி வெளிப்படையாக வெளியிடப் படவுமில்லை. இலெ.ப.கரு அவர்களும் துணைவேந்தரும் மட்டுமே அறிந்திருந்தனர். இக்காலத்துக்குள் தான் சென்னைப் பல்கலைக் கழக அகர முதலியில் இடம் பெறாத ஆயிரக் கணக்கான தென் சொற்களைத் தொகுத்து வைக்க வாய்ப்புக் கிட்டியது. இடையில் துணைவேந்தர் நாராயணசாமி அவர்களைக் கண்டு ஓராண்டுக்குள் சொற்றொகுப்பை முடித்துத் தருவதாக உறுதியும் அளித்தார். எனினும் 6 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் துணைவேந்தர் மாறினார். தமிழ்ப் பகைவர்தம் கை ஓங்கியது. ஒரு நாள் பாவாணர்க்கு வேலை நீக்க ஆணை வந்து சேர்ந்தது. நீட்டிப்பு வேண்டியும் கிட்டவில்லை. 1961 ஆம் ஆண்டு செப்டம்பர் 23 ஆம் பக்கல் (தேதி) பாவாணர் தம் பணியை முற்றிலும் முடிக்காமலேயே அண்ணாமலை நகரை விட்டு வெளியேறினார். வேலையை விட்டு விலகினால் வருவாய் இழப்பு ஏற்படும் என்றும், வறுமை வாய்ப்பட நேரும் என்றும், ஒத்துப் போவதாக உறுதியளிக்கலாம் என்றும் நண்பர்கள் நினைவூட்டினர். எனினும் தமிழரிமா இப்படி முழங்கியது.

"எனக்கு வறுமையும் உண்டு ; மனைவி மக்களும் உண்டு ; அதோடு மானமும் உண்டு."[9]

இதுதான் பாவாணரை நம்மிலிருந்து வேறுபடுத்தும் தனிப் பண்பு ஆகும்.

1961 முதல் 1968 வரையில் ஒரு காலக் கட்டமாகக் கொள்ளலாம். வேலையோ, முறையான வருவாயோ இன்றி வாழ்வில் அல்லற்பட்ட காலம் இது. இந்நிலையில் பாவாணரது சொற்பிறப்பியல் ஆய்வுப் பணியும் முடங்கிப் போனது என்றே கூறலாம். இக்காலக் கட்டத்தில் வாழ்வில் ஒரு பேரிடி விழுந்தது. இளைப்பு நோய்க்கு ஆளாகியிருந்த அவர்தம் துணைவியார் 27.10.1963 அன்று மறைந்தார்.

இப்பேரிழப்பின் தாக்கமானது பாவாணரைப் பெருமளவு பாதித்தது. மீள முடியாத துயரில் வீழ்ந்தார். ஏற்கெனவே குழந்தையாயிருந்த பாவாணர் பேணிப் புரந்த தாயை இழந்த தனிமகன் ஆனார் என்றே சொல்லலாம். வடக்கிருத்தல் என்னும் பழமரபைப்

8. 'தென்மொழி' இதழ்-சுவடி 2; ஓலை 12.
9. 'தென்மொழி' இதழ்-சுவடி 15; ஓலை 7.

பின்பற்றும் நிலைக்கு ஆளானார். நண்பர்கள் தேற்றியதால் ஓரளவு அமைதி பெற்றார். 'வீணை' இசைப்பயிற்சியில் துன்பத்தை மறக்க முயன்றார். ஆனாலும் பாவாணர் பெரிதும் ஒடுங்கிப் போய் விட்டார் என்பதை மறுக்க முடியாது. தன்மேல் விழுந்ததும், தன்னைத் தவிர வேறெவராலும் செய்யப்பட முடியாததுமான தமிழ்ப் பணிக்காகவே உயிர் வைத்திருந்தார் என்னலாம்.

திராவிட மொழிகள் அனைத்திலும் இலக்கணப் புலமையும் இந்தி, சமற்கிருதம், கிரேக்கம், இலத்தீன், உருது, எபிரேயம், சப்பான் முதலிய மொழிகளில் புலமையும் பெற்றவர் பாவாணர். இவரால் இந்த நாட்டில் ஒரு பணியைத் தொடர்ந்தும் எதிர்ப்பின்றியும் செய்ய முடியாத நிலை.

இக்கட்டத்தில் வேலையும் போய், துணைவியாரும் மறைந்து, வருவாயும் குன்றுமானால் பாவாணரால் எழுந்து நிற்க முடி-யுமா என்பது கேள்வி.

இக்காலத்தில் தான் 1959 வாக்கில் நின்று போன 'தென் மொழி' இதழ் புதுப் பொலிவுடன் மீண்டும் வரத் தொடங்கியது. தேவநேயப் பாவாணரைச் சிறப்பாசிரியராகவும், பெருஞ்சித்திரனைப் பொறுப்பாசிரியராகவும், ம. இலெனின் தங்கப்பா, மு. சாத்தையா (தமிழ்க் குடிமகன்), செம்பியன் ஆகியோரை உறுப்பாசிரியர்களாகவும் கொண்டு 1963 பிப்ரவரியில் முதல் இதழ் வெளிவந்தது. அதன் பிறகுதான் பாவாணரின் கருத்துகளை உடனுக்குடன் வெளிப்படுத்தும் வாய்ப்பும் ஏற்பட்டது. பாவாணரை வெளியுலகத்திற்குக் காட்டவும், பாவாணரது வாழ்வுக்குதவியாகப் பொருள் திரட்டவும், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலிக்காகவே திட்டம் தீட்டிச் செயற்படவும் 'தென்மொழி' எடுத்துக் கொண்ட முயற்சி கடுமையானது ; வேகமானது ; பாவாணரது வாழ்க்கையில் ஆழ்ந்து நினைவு கூர்தற்குரியது ; பெருஞ்சித்திரனார் பாவாணரது சிறப்பைப் போற்றுவதிலும் பெரிய அளவில் அவரை முன்னிறுத்துவதிலும் பெரும்பங்கு ஏற்றார் என்பதை இந்நேரத்தில் மனமாரப் பாராட்ட வேண்டும்.

1963 திசம்பர் மாதத்தில் 'தென்மொழி' பாவாணருக்காகப் பொருள் திரட்டி வழங்க முன்வந்து அறிவிப்புச் செய்தது. 'பாவாணர் பொருட் கொடைத் திட்டம்' என அது பெயர் பெற்றது. இத் திட்டம் 6.7.64 அன்று முடிக்கப் பெற்றது. இதில் கிடைத்த தொகை உருபா 2211-04 மட்டுமே. இதற்கிடையில் பாவாணர்க்கும் 'தென்மொழி'க்கும் இடையிலும் சிறு கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றாலும் பாவாணர்க்குக் கிடைத்த இவ்வுதவியை முன்னின்று செயற்படுத்திய 'தென் மொழி' பாராட்டுக்குரியது. மொழி விடுதலை பெற அவரது

நூல்கள் கட்டாரி போல் பயன் தரக் கூடியவையாதலால் அவற்றை வெளிக் கொணரவும், அவரது நலிந்த வாழ்வுக்குத் துணை நிற்கவும், எடுத்துக் கொண்ட முயற்சி இந்த அளவோடு நின்றது. 1965 ஆம் ஆண்டில் தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போர் உச்சமாக இருந்த நேரம் 'தென்மொழி' இதழுக்கும் கொள்கை வழியில் சிக்கல் நேர்ந்தது. இந்தி தொடர்பாக வெளியிடப்படும் கருத்துகள் அரசினரால் ஊன்றிக் கவனிக்கப்பட்டன. எருமை ஒன்று குத்துவாள் வீச்சுக்கு ஆட்பட்டுக் குருதி சிந்த ஓடுவதாக ஒரு முகப்புப் படம் வந்தது. கடுமையான இந்தி எதிர்ப்புடன் சிவப்புமையில் அச்சிடப்பட்டு ஆசிரியவுரையும் வந்தது. இந்த இரண்டுக்குமாகச் சேர்ந்து அரசினரால் இரண்டு வழக்குகள் தொடரப்பட்டன. இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி ( Defence of India Rules) தொடரப்பட்ட வழக்கில் 'தென்மொழி' யின் சிறப்பாசிரியர் பாவாணர் பெயர் தான் முதற் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டது. மற்றும் பெருஞ்சித்திரன், தங்கப்பா, தமிழ்க்குடிமகன், செம்பியன் ஆகியோர் குற்றவாளிகள். பாவாணர் இந்தி எதிர்ப்புக் கருத்தில் மிக அழுத்தமானவர் என்றாலும் அவரை வழக்கில் சேர்ப்பது முறையற்றதாக இருந்தது. அவர் எழுதாத கட்டுரைக்கு அவர் மீது ஏன் வழக்கு வர வேண்டும் ? எனவே பெருஞ்சித்திரன், தங்கப்பா, தமிழ்க்குடிமகன் மூவரும் அவற்றுக்குப் பொறுப் பேற்றதாலும் பாவாணர்க்கும் அக்கட்டுரைக்கும் தொடர்பில்லை என்று தெரிவித்து விட்டதாலும் அவர் பெயர் வழக்கிலிருந்து நீக்கப்பட்டது. அதன் பின்னர் ஓராண்டுக் காலம் நடைபெற்ற வழக்கில் தங்கப்பாவும், தமிழ்க்குடிமகனும் விடுதலை செய்யப்பட்டனர். பெருஞ்சித் திரனாருக்கு 200 உருபா தண்டம் அல்லது நான்கு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. தண்டம் கட்ட மறுத்து அவர் சிறை சென்றார் என்பதுடன், சிறை சென்றதாலேயே அஞ்சல் அலுவலகத்தில் அவர்க்கிருந்த பதவியும் பறிபோனது. பாவாணரைப் போலவே பெருஞ்சித்திரனாரும் வறுமையில் வாடநேர்ந்தது. அண்ணாமலை நகரை விட்டு வெளியேறிய பின் 1961 முதல் பாவாணரது எந்த நூலும் வெளிவரவில்லை. 1966 ஆம்ஆண்டில் தான் சில அன்பர்களின் பொருளுதவி கொண்டு 'இசைத் தமிழ்க் கலம்பகம்' (முதற்பாகம்) வெளிவந்தது. இரண்டாம் பாகம் இன்று வரை வெளிவரவில்லை.

ஆறாண்டுகளாகவே கையெழுத்துப் படியாகவே இருந்த The primary classical language of the world என்னும் ஆங்கில நூல் வள்ளல் அரிராம் சேட் நினைவுக் குழுவினரின் பொருளுதவியுடன் 1966 ஆம் ஆண்டு வெளிவந்தது. மொழி நூற் புலவர் மாக்சுமுல்லரின் கருத்துகளை மறுத்து உலகத்தார்க்கு உண்மை நிலை நாட்டும் உயரிய நூல் அது.

1967 வரை பாவாணரின் இந்தி எதிர்ப்புணர்ச்சி மற்றும் மொழியியற் கருத்துகளால் பேராயக் கட்சி அரசின் எதிர்ப்பாளராகவே காட்சியளிக்க நேர்ந்தது. தனி நிறுவன வேலையும் போய், அரசினரின் சினத்துக்கும் ஆளாகிய பாவாணர் எத்தகைய வறுமையில் வாடியிருப்பார் என்பதை எளிதில் உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

இந்நிலையில் திருச்சி மாவட்டத்தில் பாவாணர் நூல் வெளியீட்டுக் குழு ஒன்று உருவாக்கப்பட்டுச் செயற்பட்டு வந்தது. செங்கை செந்தமிழ்க் கிழார் முருகன் போலும் அருந்தமிழ் அன்பர்கள் நாலாயிரம் உரூபாய்க்கு மேல் திரட்டி 1967 பிப்ரவரியில் பாவாணரின் 'தமிழ் வரலாறு' என்னும் நூலை வெளிக் கொணர்ந்தனர்.

1967 திசம்பரில் 'வடமொழி வரலாற்'றையும் வெளிக் கொணர்ந்தனர். செந்தமிழ்க்கிழார் முருகன் போன்றவர்கள் செய்த இப்பணி என்றும் போற்றுதலுக்குரியதாகும்.

அதனால்தான் உலகத் தமிழ்க் கழகம் தொடங்கப்பட்டபின் செந்தமிழ்க்கிழார் அதன் பொருளாளரானார் என்பது மட்டுமன்றி அப்பதவி அவர்க்கு 'வாணாள் அமர்த்தம் என்றும் பாவாணர் குறிப்பிடுவதும் உண்டு.

1966-ஆம் ஆண்டு கோலாலம்பூரில் முதல் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. தமிழ் நாட்டிலிருந்து முதலமைச்சர் பக்தவத்சலம் முதலாக 47 பேர் கலந்து கொண்டனர். பாவாணர் போன்றவர்கள் அறவே புறக்கணிக்கப் பட்டனர். வாய்ப்பு மறுக்கப்பட்ட நிலையில் தம் கருத்தை எடுத்துச் சொல்ல முடியாமற்போன நிகழ்ச்சிகள் எத்தனையோ உண்டு. அதில் இதுவும் ஒன்று.

1967-இல் அறிஞர் அண்ணா தலைமையில் ஆட்சி அமைந்தது. 'தமிழ்நாடு' தன் பெயரைப் பெற்றது. தன்மான இயக்கத் திருமணங்கள் சட்டப்படி செல்லும் என்னும் நிலை உருவாகியது. இந்தி எதிர்ப்பும் தொடர்ந்து நீடித்தது.

1967 இறுதியிலும் 1968 தொடக்கத்திலும் இந்தி எதிர்ப்புத் தொடர்பாகப் பாவாணர் இரு நூல்களை வெளியிட்டார். புன்செய்ப் புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றம் இந்த வெளியீடுகட்காக அரும்பாடுபட்டு உழைத்துவெளிக் கொணர்ந்தது. அரசின் சார்பில் இருமொழித்திட்டமும் சட்ட வடிவம் பெற்றது. பாவாணரது நூற் கருத்துகளும், தொடர்ந்த எதிர்ப்பும் ஆட்சியின் சார்பில் மதிப்புடன் ஏற்றுக் கொள்ளப்பட்டுச் செயற்படுத்தப் பட்டதாகவே கொள்ளலாம்.

1968ஆம் ஆண்டு சென்னையில் இரண்டாம் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்றது. பாவாணர்க்கு இதிலும் தகுதியான இடம் தரப்படவில்லை. ஆராய்ச்சிக் கருத்தரங்குகளில் தமிழுக்கு மாறான பல செய்திகள் கட்டுரை வடிவில் பரப்பப்பட்டன. பாவாணர் எதிர் நின்று மறுக்க எண்ணியும் ஏற்ற வாய்ப்பு வழங்கப்படவில்லை என்று பெரிதும் வருத்தப்பட்டார். விழாவின் கடைசி நாளன்று பூம்புகார்த் திடலில் நடைபெற்ற விழாவில் பாவாணர் மேடைக்கு அழைக்கப்பட்டு அறிஞர் அண்ணாவால் பொன்னாடை போர்த்திச் சிறப்பிக்கப்பட்டார்.

1968-ஆம் ஆண்டில் 'வண்ணனை மொழிநூலின் வழுவியல்' என்னும் பெயரில் ஒரு நூல் வெளிவந்தது.

## தனித் தமிழ் இயக்கம்

தனித்தமிழ்க்காக அரும் பாடுபட்ட மறைமலையடிகள் காலத்தில் அவரது கருத்தை ஏற்றுப் பெயர்களை மாற்றிக் கொண்டவர்கள், தூய தமிழில் பேச, எழுத முற்பட்டவர்கள் பலர். ஆயினும் ஓரியக்கமாக அது உருப்பெறவில்லை. மறைமலையடிகள் நிறுவிய பொது நிலைக் கழகம் கூடப் பெருமளவு சைவ சமயக் கோட்பாடுகளை நிறுவவும், தூய சைவத்தை நிலை நாட்டவும் பாடுபட்டது. தனித்தமிழ் ஒரு பகுதியாகவே அமைந்திருந்தது.

ஆனால் பாவாணர் காலத்தில் தனித்தமிழியக்கம் நூற்றுக்கு நூறு மொழி, இன வளர்ச்சியிலேயே கருத்துச் செலுத்தியது. புலவர் சேந்த மாங்குடியார் 'தனித் தமிழ்க் கழகம்' என்னும் பெயரில் ஒரு மன்றத்தை நிறுவி நடத்தி வந்தார். ஒரே ஊரில் ஒரு சில உறுப்பினர்களை மட்டும் கொண்டு இயங்கிய மன்றம் அது. இதுவே ஓர் இயக்கமாக உருப்பெற வேண்டும் என்னும் வேணவா அனைவர்க்கும் இருந்தது. 6.10.1968 ஆம் நாள் அன்று திருச்சியில் அதற்கான அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. பாவாணரைத் தலைவராகவும், பெருஞ்சித்திரனாரைப் பொதுச் செயலாளராகவும், இறைக் குருவனைத் துணைப் பொதுச் செயலாளராகவும், செங்கை செந்தமிழ்க் கிழாரைப் பொருளாளராகவும் கொண்டு அமைக்கப்பட்ட அந்த அமைப்புத்தான் 'உலகத் தமிழ்க் கழகம்'. தமிழ்க்குடிமகன், சேந்த மாங்குடியார், இரா. இளவரசு, பா. வளனரசு, மி.மு. சின்னாண்டார், வி. பொ. பழனிவேலனார் ஆகிய பலர் மாவட்ட அமைப்பாளர்களாக அமர்த்தப் பெற்றனர். ஆங்காங்குப் பல கிளைக் கழகங்கள் நிறுவப்பட்டன.

1969 ஆம் ஆண்டில் இயக்கம் விறுவிறுப்பாக வளர்ந்து வந்தது, இதற்கிடையில் பாவாணருடன் பணியாற்றிய வரலாற்றுப் பேராசிரியர் தி.வை. சொக்கப்பாவும், மி.மு. சின்னாண்டாரும் 'பாவாணர் நூல்

வெளியீட்டுக் குழு' ஒன்று அமைத்துப் பொருள் திரட்டி வந்தனர். எனினும் அவர்கள் எதிர்பார்த்த அளவு பயன் கிட்டவில்லை.

பாவரீணரும் இயக்க அமைப்போடு நின்று விடாமல் வேறு வகையிலும் தமிழன் ஏற்றம் பெற வைக்க ஏதேனும் செய்ய முடியுமா என்று முயன்றார். 25.6.1969 அன்று இனமானத் தலைவர் தந்தை பெரியார் அவர்கட்குத் திறந்த மடலாக ஒரு வேண்டுகோள் விடுத்தார். 'பெரியார் தென்மொழிக் கல்லூரி' நிறுவிச் செயற்படலாம் என்றும், தி.வை. சொக்கப்பா, வை. பொன்னம்பலனார் ஆகியோருடன் தானும் முன்னின்று அக்கல்லூரியைத் திறம்பட நடத்த முடியும் என்றும் எழுதினார். என்ன கரணியத்தாலோ அதுகுறித்து எந்த வகையான மேல் நடவடிக்கையும் இன்றி அவரது வேண்டுகோள் பயனற்றுப் போனது.

இந்சூழ்நிலையில் பாவாணர்க்கும் பிறர்க்கும் பெருமகிழ்ச்சி தந்த செய்தி உலகத் தமிழ்க் கழக வளர்ச்சிதான். விரைவில் கழகத்தின் ஆண்டு விழாவையும் திருவள்ளுவர் ஈராயிரமாண்டு விழாவையும் கொண்டாட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1969 திசம்பர் 28,29 ஆகிய நாட்களில் முகவை மாவட்டம் பறம்புக்குடியில் மாநாடு ஏற்பாடு செய்யப் பட்டது. மாநாட்டை ஒட்டி மலர் ஒன்றும் பாவாணர் படத்துடன் கூடிய நாள்காட்டியும் வெளியிடப்பட்டன. 'தென்மொழி'யில் அவர் எழுதிய கட்டுரை ஒன்று 'தமிழ் கடன் கொண்டு தழைக்குமா?' என்னும் பெயரில் நூலாக வெளியிடப் பெற்றது. மாநாட்டில் பாடுவதற்கென்றே பாவாணர் எழுதிய இசைப் பாடல்கள் 'இசையரங்கு இன்னிசைக் கோவை' என்னும் பெயரில் வெளியிடப்பட்டன. இந்த இடைப்பட்ட காலத்தில் பாவாணரைப் பொருள் வகையால் பெரிதும் பேணிப் புரந்தவர் பாரத மாநில வங்கியில் (SBI) அலுவலராக இருக்கும் முத்துக்கிருட்டிணன் என்பார். அவர் குறித்த புகழ்ப்பாட்டும் அந்த நூலில் இடம் பெற்றது.

அப்பாடல் :

திரு இரா. முத்துக்கிருட்டிணன்
'மண்டலம் புகழும் மாணிக்கமாய் விளங்கும்'
என்ற மெட்டு

1. மெத்தப் பெருந்தகை யொத்துப் பிறந்தவன்
முத்துக்கிருட்டிணன் அன்றோ
இற்றைக்கிருந்தமிழ்ப் பற்றிற்சிறந்தவோர் கொற்றத்
திருமகன் ஒன்றோ - மெ

2. கோப்பெருஞ்சோழனும் மாப்பிசிராந்தையும்
கோப்புமாறிப் பிறந்தன்றே

யாப்புறவேயின்றிக் கேட்பினாலேயொன்றிக்
காப்பவன் முன்வந்தானின்றே-மெ

3. தென்னன் தமிழ்பேணும் மன்னன் ஒருவனும்
சென்னையிலே யின்றே யில்லை
தன்னந்தனிவள்ளல் அன்ன இவனின்றேல்
என்னென்னவோ பெருந்தொல்லை - மெ

இந்த மாநாட்டு ஊர்வலம், கூட்டம், பிறநிகழ்ச்சிகள் யாவும் பாவாணர்க்கே ஒரு புத்துணர்ச்சியையும், மனக்கிளர்ச்சியையும் உண்டு பண்ணின. இயக்கம் இப்படியே வளர்ந்தால் இன்னும் ஏழெட்டாண்டுகளில் தமிழ்நாட்டின் ஆட்சியையே கைப்பற்றி விடமுடியும் என்று மேடையில் பேசுமளவிற்கு அவர்க்கு நம்பிக்கை பிறந்துவிட்டது. சி. இலக்குவனார், புலவர் குழந்தை, வ.சுப. மாணிக்கம், குன்றக்குடி அடிகளார் உட்படத் தனித்தமிழ் வல்ல 63 பேர் கலந்து கொண்ட அந்த மாநாடு இரண்டுநாள் நடைபெற்றது. பாவாணரின் 'திருக்குறள் மரபுரை' நூலும் இம்மாநாட்டில் வெளியிடப் பெற்றது. பாவாணரது நூல்கள் விற்ற வகையில் மட்டும் ஒரே நேரத்தில் பாவாணர் கையில் உரூபா 2000/- வரை தரப்பெற்றது. நூல்விற்று வரவாக இவ்வளவு பெருந்தொகையைப் பாவாணர் பார்த்ததேயில்லை என்னும் அளவுக்கு அவர் பூரிப்படைந்தார். இந்த மாநாட்டையொட்டி உ.த.க. கிளைகளை மிகுதியும் வளர்த்த இந் நூலாசிரியர்க்குப் பாவாணர் தந்த பாராட்டு இதோ :

பறம்புக்குடி
'குரும்பை நிகர் மென் முலையாள்' என்ற மெட்டு

1. உலகத்தமிழ்க் கழகக்கிளை யுற்ற பல மாவட்டங்கள்
முலமுலெனக் கிளைகள் மொய்த்த முதன்மையது முகவையாகும்
பலகிளையும் பாங்கா மேனும் படைப்பு முறைத் தலைமை சொல்லின்
தலைவன் தமிழ்க்குடிமகனே தங்கியதாம் பறம்புக்குடி

2. கழக முதலாட்டைச்சீர்நாள் காணரிய வள்ளுவர் தம்
பொழுது கழிந் தீராயிரம் புகலுமிந்த ஆண்டயர்வும்
பழகு பரிமேலழகர் பளகறுக்கும் உரைவிழாவும்
விழுமியவாய் நடக்குமாற்றால் விஞ்சியதாம் பறம்புக்குடி

இயக்கம் மேலும் வளர்ந்தது. 1971 சனவரிமாத வாக்கில் மதுரையில் உ.த.க. இரண்டாம் மாநில மாநாடு நடைபெற்றது : பன்மொழிப் புலவர் போன்ற பல அறிஞர்கள் கலந்து கொண்டனர் என்றாலும் தமிழ்நாட்டு இயக்கங்கட்கு வழக்கமாக வரும் நோய் இதற்கும் வந்துவிட்டது.

ஒருசில கசப்புணர்வுகள் வளரத்தொடங்கின. ஒருசிலர் மெல்ல ஒதுங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இதற்கிடையில் 1970 திசம்பர் மாதத்திலேயே 'தென்மொழி' வாயிலாகப் பெருஞ்சித்திரனார் ஓர் அருமையான திட்டத்தை வெளியிட்டார். அது 'மொழிஞாயிறு' தேவநேயப் பாவாணரின் 'செந்தமிழ்ச்சொற்பிறப்பியல் பேரகரமுதலி உருவாக்க வெளியீட்டுத் திட்டம்' என்பதாகும்.

அரசு பாவாணரைப் புரிந்து கொண்டு அவரது அறிவைப் பயன்படுத்த முன்வாராமையால் மக்களே அந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. தி.வை. சொக்கப்பா, பெருஞ்சித்திரனார், செந்தமிழ்க்கிழார், சின்னாண்டார், தமிழ்க்குடிமகன் ஆகிய ஐவர் கொண்ட குழு 1971 ஆம் ஆண்டில் தமிழக அமைச்சர் மாதவனைச் சந்தித்து வேண்டியும் ஒன்றும் நடக்கவில்லை.

எனவே 'தென்மொழி' இருநூறு உறுப்பினர்கள் கொண்ட ஒரு திட்டம் தந்தது. ஒவ்வொருவரும் மாதந்தோறும் உருபா 10.00 பாவாணர்க்கு விடுத்தல் வேண்டும். இதில் பாதி (உருபா 1000) பாவாணர் நூலை உருவாக்கத் துணை செய்ய ; மீதி ஆயிரம் பிற்காலத்தில் நூலை வெளியிட வேண்டிச் சேமித்து வைக்க ;

இவ்வகையில் இருநூறுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் சேர்ந்தனர்; தொகையும் விடுத்து வந்தனர். பாவாணரும் ஊக்கமாக வேலை செய்யத் தொடங்கினார்.

5.8.1971-இல் பறம்பு மலையில் நடைபெற்ற பாரி விழாவில் குன்றக்குடி அடிகளாரின் ஏற்பாட்டில் 'செந்தமிழ் ஞாயிறு' என்னும் சிறப்புப்பட்டம் பாவாணர்க்கு வழங்கப்பட்டது.

1972-ஆம் ஆண்டு பாவாணர் மணிவிழாக் காலமாகும். இதற்கென்று மதுரையில் 'பாவாணர் மணி விழாக் குழு' ஒன்று அமைக்கப்பட்டது. கருமுத்து தி. சுந்தரம், ஔவை துரைசாமி, பு. மனோகரன், கருணைதாசன், மெ. சுந்தரம் ஆகியோர் பெரிதும் முயன்று பெரும்பொருள் சேர்த்து வழங்கினர். அவர்கள் வழங்கிய தொகை கொண்டு 1978 இல் 'தமிழர் வரலாறு' வெளியிடப்பட்டது.

இதற்கிடையில் 1972 மே மாத வாக்கில் உ.த.க. விலிருந்து விலகியும் இயங்காமலும் இருந்த அன்பர்களை ஒருங்கு திரட்டியும் மீண்டும் உ.த.க. வை விறுவிறுப்பாக இயங்க வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. நெய்வேலியில் அனைவரும் கூடி அதற்கான திட்டங்களை

வகுத்தோம். ஆயினும் சிலர் இடைநின்று செய்த செயல்களால் உ.த.க. மறுபடியும் பழைய நிலைமை எய்த முடியாமற் போய்விட்டது.

1972 இறுதியில், சிங்கப்பூர் நண்பர்கள் தொகுத்தளித்த பணவுதவி கொண்டு 'தமிழர் மதம்' என்னும் நூல் வெளியிடப் பெற்றது.

உலகத் தமிழ்க் கழகத்திலிருந்து கருத்து வேறுபாடு கொண்ட என் போன்றார் சேர்ந்து 'தமிழியக்கம்' என்னும் அமைப்பைத் தொடங்கி 8.10.1972 ஆம் நாள் தஞ்சையில் அதற்கான தொடக்க விழாவையும் நடத்தினோம்.

1972 ஆம் ஆண்டில் பாவாணர் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து 'வேர்ச் சொற்கட்டுரைகள்' என்னும் நூலைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டது.

இந்த நிலைகட்கு இடையில் 'தென்மொழி' நடத்திய பாவாணரின் செ.சொ. பி. அகர முதலித் திட்டமும் நடந்து கொண்டிருந்தது.

திருவாரூரில் இயற்றமிழ்ப் பயிற்றகம் நடத்திய திரு.வி.க. படிமைத் திறப்பு விழாவில் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களால் பாவாணர் சிறப்பிக்கப்பட்டார்.

குன்றக்குடியடிகளார் போன்ற ஆர்வமுடைய பெருமக்கள் பலரின் முயற்சியாலும், தொடர்ந்த உழைப்பாலும் 8.5.1974 அன்று தமிழக அரசே 'செ. சொ. பி. அகர முதலி இயக்ககம்' என்னும் அமைப்பைத் தொடங்கிப் பாவாணரை இயக்குநராகப் பதவியமர்த்தம் செய்தது. இதனால் பாவாணர்க்கிருந்த நெடுநாள் மனக்குறை நீங்கியது என்றே கூறலாம்.

இதற்கிடையில் உ.த.க. அமைப்பும் இயங்கி வந்தது. தமிழன் பிறந்தகத் தீர்மானக் கருத்தரங்கச் சிறப்பு மாநாட்டைத் தஞ்சையில் கூட்டிச் சிறப்பாக நடத்தினர். அறிவியல் அறிஞர் புதுப்புனைவாளர் கோ.து. நாயுடு போன்றோர் கலந்து கொண்டனர்.

அரசு அவர்கட்கு இயக்குநர் பதவியளித்தபின் 'மிசா' நடைமுறைக்கு வந்து விட்டபடியால் அவருடைய இயக்ககம் மேலும் வளர முடியாமல் குதிரைக் கொட்டடியாக இருந்த அலுவலகத்திலேயே நடந்து வந்தது. 1976 சனவரியில் தி.மு.க. ஆட்சியும் நீக்கப்பட்ட பின் மிசாக் காலத்தில் பாவாணரால் விரிவாக எதையும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இயக்ககம் கலைக்கப்படாமல் இருந்தவரை நாம் மகிழ்ச்சியடையலாம் எனினும் போதுமான உதவியாளர்கள் இன்மையால் பாவாணரால் தாம் நினைத்தவாறும், நிரல்படவும் எதையும் செய்யமுடியவில்லை.

1977 இல் ம.கோ. இராமச்சந்திரன் முதல்வராக வந்த பின்பும் நிலைமை மாறவில்லை. நெய்வேலி அன்பர்கள் செய்த பொருளுதவியால் 1978 இல் 'மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கூட்டுடைமை' என்னும் நூல் வெளியிடப்பட்டது.

1979 ஆம் ஆண்டு சென்னையில் உலகத் தமிழ்க் கழக மாநாடு சிறிய அளவில் நடத்தப்பட்டது. இதற்கிடையில் பாவாணருடன் கருத்து வேறுபாடு கொண்டதாலும், விரைந்து இயங்க வேண்டும் என்னும் முனைப்பாலும் பெருஞ்சித்திரனார், 'உலகத்தமிழின முன்னேற்றக் கழகம்' என்னும் அமைப்பைத் தொடங்கினார்.

பாவாணர் தொடங்கிய உலகத் தமிழ்க் கழகம் இன்று மூன்றாகி விட்டது குறித்து வருந்துவது தவிர வேறென்ன செய்ய முடியும் ? தமிழ்நாட்டுக் கட்சிகளைப் பிடித்த நோய் இயக்கங்கள் எல்லாவற்றையும் பிடித்து ஆட்டிக் கலக்கிவிட்டது. இன்றளவும் பிரிவினையே நீடிக்கிறது.

சிங்கப்பூர் கோபாலகிருட்டிணன் தனியொருவராகத் தந்த பொருளுதவி கொண்டு 1979 ஆம் ஆண்டு 'தமிழ் இலக்கிய வரலாறு' வெளியிடப்பட்டது.

1980 திருவள்ளுவர் விழாவன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் முதல்வர் ம.கோ.இரா. அவர்கள் பாவாணர்க்குச் 'செந்தமிழ்ச் செல்வர்' என்னும் பட்டம் கொடுத்துப் பதக்கமும் கேடயமும் அளித்துச் சிறப்பித்தார்.

1970 இல் பாரிசிலும், 1974ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாடுகட்கும் பாவாணர் அழைக்கப்படவில்லை என்பதையும் இவண் குறிப்பிடவேண்டும். எனினும் 1981இல் மதுரையில் நடைபெற்ற உ.த. மாநாட்டில் பாவாணர்க்குத் தக்க வாய்ப்பளிக்கப்பட்டது. அந்த வாய்ப்பு ஆராய்ச்சிக் கருத்தரங்கில் கலந்து கொண்டு தம் கருத்தை எடுத்துச் சொல்லவும் பிறர் கருத்துகளை மறுக்கவுமான வாய்ப்பாக இல்லை. பந்தயத்திடலில் நடைபெற்ற பொதுநிலைக் கருத்தரங்கில் பாவாணர் 'மாந்தன் தோற்றமும் தமிழன் மரபும்' என்னும் தலைப்பில் பேசினார். ஒரு மணி நேரத்திற்குமேல் உணர்ச்சி வயப்பட்டுப் பேசியதாலும், அகவை முதிர்ச்சியாலும் மாரடைப்பு ஏற்பட்டு மதுரை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். தம் 79ஆம் அகவையில் 15.1.1981 ஆம் நாளன்று நள்ளிரவில் பாவாணர்தம் இன்னுயிர் பிரிந்தது.

அவர் வறுமைப்பட்ட காலம் உண்டு. வாடி வதங்கிய காலம் உண்டு ; பலபேரால் புறக்கணிக்கப்பட்ட காலமும் உண்டு. ஆனால் அவர் காலத்தில், அவரால்தான் தனித்தமிழ் இயக்கம் மிகப்பெரிய அளவில் 140 கிளைகட்குமேல் கொண்டு நிமிர்ந்து நின்றது என்பதனை யாரும் மறுக்க முடியாது. மிகப்பெரிய அறிஞர் என்னும் முறையில் அவரது நூல்களைப் படித்தே ஒருவன் மிகப்பெரிய அறிஞனாக முடியும் என்னும் அளவிற்கு அவர் ஆழமானவர் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

வாழ்நாள் முழுவதும் வேர்ச் சொல்லாராய்ச்சியில் ஈடுபட்ட அவர் தம் முழுக்கருத்தும் செ.சொ.பி. அகரமுதலியில் வெளியிடப் பட்டிருந்தால் உலகம் நம்மைப் புரிந்துகொண்டு போற்ற மிக நல்ல வாய்ப்புக்கிட்டியிருக்கும். ஆனாலும் தனிப்பட்ட பலர் உதவியும் அரசும் அவ்வப்போது தன் வழக்கமான போக்கில் காலங்கடந்து உதவியும் பாவாணர் திட்டமிட்டபடி அகரமுதலியின் 13 மடலங்களையும் முடிக்க வில்லை ; முடிக்க முடியவில்லை. 'அகரம்' தொடங்கி 'ஆசைமொழி' வரையில் தான் முடிக்க முடிந்தது. அந்தப் பகுதியேகூட 1984 செப்டம்பரில்தான் அச்சிடப்பட்டு முடிந்துள்ளது.

எஞ்சிய பகுதிகள் குறித்துப் பாவாணர் கருத்து என்ன ? பாவாணர் எண்ணங்கள் வெளிப்படுத்தப்படாமல் இருந்தால் எதிர்பார்த்த பயனை அவ்வகரமுதலி பெறுமா? இப்போது உள்ளவர்களோ இனிப் பொறுப்பேற்பவர்களோ பாவாணர் அளவுக்கு அதனைக் கொண்டு வந்து விடுவார்களா? இரா. மதிவாணன், புலவர் இளங்குமரன் போன்ற நல்ல ஆற்றலுடைய பெருமக்கள் பாவாணருடன் பணியாற்றியும் வெற்றியுடன் பணியை முடிக்கவில்லையே ; ஏன்?- என்பன போன்ற வினாக்கள் நம்முன் விரிகின்றன. என்றாலும் பாவாணரைப் புரிந்து கொண்டு, பாவாணர் வழியில், அவர் காட்டிய நெறியில் இயங்குபவர்கள் எந்தப் பணியையும் முடிக்கலாம் என்னும் நம்பிக்கையைத்தான் கொள்ள வேண்டியுள்ளது.

அவர் வாழ்நாளில் அவருக்குத் துணை செய்த மறைமலையடிகள் நூல்நிலையம், சேலம் தமிழ்ப் பேரவை, சேலம் குகைத் திருக்குறட்கழகம், செங்காட்டுப்பட்டி முத்தமிழ்க் கழகம், செட்டிகுளம் நாகமுத்து, பச்சமுத்து போன்றவர்கள், மதுரைத் தமிழ்ப் பாதுகாப்புக் கழகம், முசிறி, கிருத்தவத் துறைத் தமிழ்ப் பெருங்கழகங்கள் ஆகியவற்றுக்கு அவரே நன்றி தெரிவித்துள்ளார்.

ஆழ்ந்த உணர்வும் அறிவும் திறனும் உடைய தமிழறிஞர்கள் என்னும் முறையில் முனைவர் ச.வே. சுப்பிரமணியனார், முனைவர் சி. பாலசுப்பிரமணியம், முனைவர் மெ. சுந்தரம் போன்றோர் பெரும்

பொறுப்புகளை ஏற்க வேண்டும் என்னும் கருத்தையும் பாவாணர் 'தமிழ் இலக்கிய வரலாறு' போன்ற நூல்களில் குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

நிறைவாகப் பாவாணர் பற்றி வெளிவந்துள்ள மதிப்புரைகளில் இரண்டை மட்டும் குறிப்பிட்டு அமைகிறேன்.

"உலகின் முதற் செம்மொழியாகிய தமிழ்மொழியின் தொன்மை, முன்மை, நுண்மை, திண்மை, எண்மை, ஒண்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, மும்மை, செம்மை, இயன்மை, வியன்மை ஆகிய பதினாறு பண்புகளையும் மறைத்தும் திரித்தும் மழுப்பியும் குழப்பியும் வரும் 'மேலை ஆரிய' மேய்ப்பர்களுக்கும் 'கீழை ஆரிய' ஏய்ப்பர்களுக்கும் அறைகூவல் விடுக்கும் நிறைநூற் பெரும் புலவர் !

ஒப்பிலக்கணம் கண்ட கால்டுவெலாரையும் மிஞ்சி, தப்பிலக்கணம் கூறும் ஆரியப் புலவரும் அஞ்ச, மொழியியலில் ஆணிவேருக்கும் மூலங்காட்டி, வரலாற்றியலில் சல்லி வேரையும் கல்லிக் காட்டும் மொழியாராய்ச்சி மூதறிஞர்!

நல்ல மரத்துப் புல்லுருவிகட்கும், சாரத்தை உறிஞ்சி ஈரத்தில் முளைத்த காளாம்பிகட்கும் பயிரை மேயும் வேலிகட்கும்- இலக்கணங்களாய்த் திரிந்திழியும் இற்றைத் தமிழகக் கூலிப் புலவர்கட்கிடையே, மொழித் தூய்மைக்கும், இனக் காப்பிற்கும் வழிகாட்டியாய் உலவும் வல்ல்ரிமா !

குறைமதியார் தேக்கி வைத்த கறையிருளை நீக்கவந்த மறைமலையார் வழி வந்த நிறைமலையார் !

தன் மதிப்பின் கொடுமுடியாய், தன்னுரிமை முகில் இடியாய் ஆர்த்திலங்கும் சீர்த்தியினார் !

நன்றி கொன்ற தமிழினத்தின் பன்றித்தனத்தால் புகழ் மறைக்கப்பட்டும், புறந்தள்ளப்பட்டும் குமைந்துருகும் ஈக எரி (தியாக நெருப்பு) அமைந்தொளிரும் குட விளக்கு !

மடமைத் தமிழரின் அடிமைத் தனத்தால் மிடிமை வாய்ப்பட்ட கடமைக் காவலர் !

- அவர்தாம் நம் திராவிடமொழியியல் ஞாயிறு திரு ஞா. தேவநேயப் பாவாணர் !"[10]

---

10. 'அறிவு' இதழ் - மலர் 1: இதழ் 3.

'தென்மொழி' இதழில் பெருஞ்சித்திரனாரால் எழுதப்பட்ட மதிப்பீட்டுரை (1969 உலகத் தமிழ் மாநாட்டு மலரில் இடம் பெற்ற கட்டுரையின் மறுபதிப்பு):

“பளபளப்பான கருத்த முகம் ; ஒளி நிரம்பி வழியும் கூரிய விழிகள்; அகன்று ஏறிய நெற்றி ; அடர்த்துச் சிலிர்க்கும் அரிமா மீசை ; ஏக்கழுத்து; பீடு நடை ; பெருமிதமான உடை ; அறிவு தெறிக்கும் கணீரென்ற பேச்சு; குழந்தை உள்ளம் - இவற்றின் மொத்த உருவம் பாவாணர். பாவாணர் எனில் மொழியியல் ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் ஒருவரே.

தமிழ் மொழி ஆய்விலேயே ஐம்பதாண்டுகள் மூழ்கித் திளைத்த இப்படிப்பட்ட பேரறிஞர் ஒருவரைத் தமிழகம் இந்நாள் வரை கண்டதே இல்லை. இவர் வாயினின்று சரமாரியாக வந்து விழும் தனித்தமிழ் ஆராய்ச்சிக் கருத்துகளை இதுவரை எந்த அறிஞரும் தமிழ்மொழிக்கு வழங்கிடவில்லை. தமிழ்த் துறைக்கு அவர் தொண்டு புதியது ; தமிழர்க்கு அவர் கருத்துகள் மயக்கறுப்பன ; மேனாட்டார்க்கு அவர் நூல்கள் வியப்பளிப்பன. அவர் எடுத்துக் கொண்ட முயற்சி அரியது. தொல்காப்பியர் காலத்திற்குப் பின் தமிழ் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளும் ஒட்டுமொத்த முயற்சிக்குப் 'பாவாணர்' என்றே பெயரிடலாம்.

அவர் கருத்துகள், முரிக்கப்பட்ட தமிழனின் முதுகெலும்பைத் தூக்கி நிறுத்தும் வல்லமை வாய்ந்தன ; தூங்கிக் கிடக்கும் தமிழனைத் தட்டியெழுப்பும் வீறு நிரம்பியன ; மயங்கிக் கிடக்கும் தமிழ்மொழியின் செம்மாப்பினை உலகமெலாம் பறைசாற்றும் ஆற்றல் நிறைந்தன ; மொழியாராய்ச்சி என்னவென்றே அறியாமற் கிடந்த தமிழனுக்கு மொழியுணர்வூட்டி, அதன் வழிப் பண்டைய வரலாறுணர்த்தி எழுச்சி பெறச் செய்வன. அவர் பேச்சும் எழுத்தும் தமிழரின் ஒவ்வொரு செவியிலும் அறிவிலும் பட்டு எதிரொலித்தல் வேண்டும். அப்பொழுது தான் தமிழன் தன்னுணர்வு பெறுவான். தன்மானங் கொள்வான் ; தன்னறிவுணர்வான் ; மொழிப்புலங்காணாது விழிப்புலந்தப்பிய தமிழனுக்கு அவர் ஊட்டும் விழிப்புணர்வும், அதனின்றெழும் ஒவ்வோர் ஆய்வு முடிவும் தமிழர்க்கு என்றைக்கும், ஒளிகாட்டி நிற்கும் என்பதில் ஐயமே இல்லை.

ஆனால், வெற்றாரவாரச் சொற்புகழ்ச்சியும் விளம்பரப் போலிமையும் இக்காலத்துக் கற்றாரிடத்தும் நிரம்பி வழியும் காரணியத்தால், மெய்ம்மைக்கும் பொய்ம்மைக்கும் வேறுபாடு காண்பது மிக மிக அரிதாக உள்ளது. அன்றாடம் நடைபெற்றுவரும் அரசியல் சூழ்ச்சிகளாலும், அறியாமையாலும், வறுமையாலும் பிற கல்வித்துறைகளின் மேம்பாடுகள் அனைத்தையும் எடுத்துக் கூறவும் ஆளின்றிச் சீந்துவாரற்றுக் கிடக்கும் தற்காலத் தமிழகத்தில் ஏன் பிறந்தோம் என்று அறிஞர் அலமந்து கிடக்கின்றனர். அறிவியலும் வாழ்வியலும் மேனாட்டாரை எந்த அளவிற்கு ஆட்கொண்டனவோ, அந்த அளவிற்குத் தமிழகத்தை அறியாமையும் மூடநம்பிக்கையும் ஆட்கொண்டுள்ளன. இவ்விருள்சேர் இருநிலையும் ஒரு சேரப் பெருகிக்கிடக்கும் இந்நாட்டில் போலிமையும் புன்மையுமே தலை தூக்கி நிற்கின்றன ; அதிகாரம் பெறுகின்றன; எனவே உண்மை வலிவற்றுப் போகின்றது. இந்நிலையில் பாவாணரைப் போன்ற பேரறிஞர்களை நாடு இனங்கண்டு கொள்வது குதிரைக் கொம்பே.

தமிழகத்தின் தவக்குறையென்று நாம் எல்லோருமே சொல்லிக் கொள்கின்ற அறிஞரைப் பேணாத குறை தமிழ்நாட்டு மண்ணிலோ, மரங்களிலோ விளைவதன்று. அப்படிச் சொல்லியே தப்பித்துக் கொள்ளும் நம் ஒவ்வொருடைய மனத்திலும் விளைவதுதான். அது வெறுங்குறையாக மட்டும் நின்றுவிடவில்லை. தமிழக வரலாற்றிலேயே என்றைக்கும் துடைத்தெறியப்படாத கறையாகவே படர்ந்திருக்கின்றது. இதனை நம்மில் எல்லோரும் திருப்பித் திருப்பி ஒருவர் முகத்தில் ஒருவர் பூசிக்கொள்கின்றோமேயன்றி, இதனைப் போக்குகின்ற முயற்சியை நம்மில் எவரும் எக்காலத்திலும் இன்று வரை செய்யவில்லை. காரணம் நமக்கிருக்கும் பகட்டான பேச்சுதான் ; பார்ப்போரை மயங்க வைக்கும் நடிப்புதான். நமக்கேற்பட்ட அரசியல் தினைப்புதான் ; அறிவை அறிந்துகொள்ள மறுக்கின்ற அறியாமைச் செருக்குதான் ; மொத்தத்தில் நம் உடலில் ஊறிக்கிடக்கும் இருண்ட வாழ்க்கையின் ஈடுபாடுதான். இந்நிலைகள் இந்தத் தலைமுறையிலேயே அடியோடு தொலைக்கப்பட்டாலன்றி, இனி அடுத்த தலைமுறையிலிருந்து தமிழக மண்ணில் அறிஞர்களே தோன்றமாட்டார்கள் என்பது திருக்குறள் போன்ற உண்மை. தொல்காப்பியம் போன்ற உறுதி. பாவேந்தர் பாடல்கள் போன்ற தெளிவு !

தமிழனின் வீழ்ச்சிக்கு அரசியல்காரர்களும், குமுகாயச் சீர்திருத்தக் காரர்களும் எத்தனையோ காரணங்களைத் தம்தம் வரலாற்றறிவிற் கேற்பக் கூறினாலும் உண்மையான காரணங்கள் இரண்டு. ஒன்று தமிழனின் குமுகாயச் சரிவு ; இரண்டு தமிழனின் மொழிச் சரிவு.

இவ்விரண்டு சரிவுகளும் ஆரியர்கள் என்று இத்தமிழக மண்ணில் காலடி வைத்தனரோ அன்றே தொடங்கின. இச்சரிவுக்குத் தடுப்புச் சுவர் கட்டக் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாகவே தமிழன் முயன்றான். ஆனால், ஆரியத்தால் ஏற்பட்ட சரிவை ஆரியத்தைக் கொண்டே சரிசெய்ய முயன்றதால் தோல்வியே கண்டான். இந்த இரண்டு சரிவுகளுக்கும் இந்நாட்டிலுள்ள சமயங்களே மண்வெட்டிகளாகப் பயன்பட்டன. முதற்சரிவைக் கண்டு காட்டியவர் பெரியார் ஈ.வே. இரா. இரண்டாம் சரிவைக் கண்டு காட்டியவர் மறைமலையடிகளார்.

ஈ.வே.இரா. வின் குமுகாய முயற்சி மலையத்துணையென்றாலும், அதனால் இதுவரை ஏற்பட்டிருக்கின்ற பயன் ஒரு குன்றத் துணையே; அடிகளாரின் மொழி முயற்சி கடலத்துணையென்றாலும், அதனால் ஏற்பட்ட பயன் ஒரு கால்வாய் அத்துணையே.

பெரியாரின் குமுகாயப் போராட்டம் புறந்தெரிவது. அடிகளாரின் மொழியியற் போராட்டம் அகமொடுங்கியது. அடிகளாருக்குப்பின் இப்போராட்டம் இருளுள் புகைபோல் ஒளி மழுங்கியது. பாவாணரின் விடாமுயற்சியோ, அதனை மீண்டும் புகையுள் தீப்போல் ஒளி சேர்த்தது.

கருத்துகளைத் தம் அதிகாரிகளுக்கும், அரசியற் சாய்காலுக்கும் ஏற்பவளைத்துக் கொள்ளும் சிலரின் திறனையோ, அல்லது கழகநூற் காட்சிகளைக் கற்பனை நூல்களாக்கி விற்பனை செய்து பொருள் குவிக்கும் பேராசிரியர் சிலரின் போக்கையோ, அல்லது எவரைக் கொண்டோ எழுதுவித்துத் தம் பெயரைப் பொறித்து வெளியிட்டுக் கொள்ள இசைவு தந்து, அதற்கீடாகப் பெரும் பொருள் பெற்றுக் கொள்ளும் நூலாசிரியர்கள் சிலரின் கள்ள வாணிக அமைப்பையோ பாவாணர் கற்றிருந்தால் அல்லது கைக்கொண்டிருந்தால், இவரும் தமக்கென வீடுகளும் மலைத்தோட்டங்களும் தெருவுக்குத் தெரு, மலைக்கு மலை வாங்கிப் போட்டுக்கொண்டு இயங்கியில் ஊர்ந்து கொண்டு திரியலாம். ஆனால், தன்மானத் திறவுகோலைக் கொண்டு தான் அறிவுப் பூட்டைத் திறக்க முடியும் என்று கண்ட மொழி வரலாற்றுப் பேராசிரியராகிய இவர் இத்தகைய போலித் தன்மைகளைக் கண்டதுமில்லை ; கேட்டதுமில்லை.

இவர் கண்டது தமிழ் ; கேட்டது தமிழ் ; உண்டது தமிழ் ; உயிர்ப்பது தமிழ் ; கொண்டது தமிழ் ; கொடுப்பது தமிழ் ; விண்டது தமிழ் ; விளக்குவது தமிழ் என்று தமிழே என்பாகவும், தசையாகவும் குருதியாகவும் வாய்க்கப் பெற்ற தமிழின் முழுவுருவம் பாவாணர் என்னின் வியப்படையவும் வேண்டா ; மிகையென்று கருதிவிடவும் வேண்டா.

இவரின் அளப்பரிய தமிழாற்றலை முழுவதும் தமிழகம் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இவர் இதுவரை எழுதிய செந்தமிழ் நூல்கள் இருபத்தைந்து. இன்னும் ஏறத்தாழ முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் இவரால் எழுதப்பட வேண்டியிருக்கின்றன. அவை அத்தனை நூற்களும் தமிழ்மொழிக்கு ஏற்றம் உரைப்பன. வீழ்ந்துபட்ட தமிழனுக்கு விழிப்பூட்ட வல்லன. இவர் எழுதவிருக்கும் செந்தமிழ்ச் சொற் பிறப்பியலகரமுதலி இவர் ஒருவராலேயே எழுதவியலும் அரும்பெரும் நூல் ஆகும். தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக்காக்கும் அரிய ஒளிஞாயிறாகும். எத்தனை எத்தனை வகைகளுக்கோ தமிழ் என்னும் பெயரால் இன்று பெருந்தொகை பல்கலைக் கழகங்களாலும் அரசாலும் செலவிடப்பெற்று வருகின்றது. இப்பெருந் தொகையுள் ஒரு சிறு அளவு தொகையை இவர் முயற்சிக்கு ஒதுக்கிக் கொடுத்தாலும், அஃது ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடக்கும் தமிழ்மொழியை மீட்க வல்லது. மறைமலையடிகளால் தோற்றுவிக்கப் பெற்று, இவரால் பேணிக் காக்கப் பெறும் தனித்தமிழியக்கம் செழிப்படைய அடையத்தான் தமிழ்மொழி துலக்கமுற்று விளங்கும். அப்பொழுதுதான் தமிழ் அறிவியல் மொழியாகவும் வாழ்வியல் மொழியாகவும் வளம் பெறும். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய தென்மொழி இலக்கணப் புலமையும், சமற்கிருதம், கிரேக்கம், இலத்தினம், உருது, இந்தி, ஆங்கிலம் முதலிய வடமொழி இலக்கணப் புலமையும் ஒருங்கே கைவரப்பெற்ற மொழியியல் ஞாயிறான இவர் தமிழகத்தை விளங்கிக்கொண்டுள்ள அளவுக்குத் தமிழகம் இவரை விளங்கிக் கொள்ளுமானால் பயன்படுத்திக்கொள்ளுமானால் தமிழுக்கு என்றும் அழிவில்லை ; தமிழினத்துக்கும் என்றும் வீழ்ச்சியில்லை". "

11. 'தென்மொழி' இதழ் - சுவடி 15 : ஓலை 7.

# பாவாணர் பார்வையில் தமிழ் வரலாறு

தமிழ் பதினாறு வகைச் சிறப்புகளையும் ஒருங்கே கொண்ட மொழி. தொன்மை, முன்மை, ஒண்மை (ஒளிமை), எண்மை (எளிமை), இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை என்னும் பண்புகளை, உடைய தமிழ் காலப் போக்கில் வீழ்ச்சியடைந்ததற்கும், பின்னடைந்ததற்கும் பல கரணியங்கள் உள்ளன.

"வேத ஆரியமும் சமற்கிருதமுமாகிய வடமொழி தேவமொழி என நம்பப்பட்டதும், வாய்மைத் தமிழ்ப்புலவர் வாழ்க்கையிழந்ததும், தமிழின் தூய்மை குலைவுண்டதும், தமிழ் வரலாறு மறைவுண்டதும், தமிழ் கோயில் வழிபாட்டிற்குத் தகாதமொழியென்று தள்ளப்பட்டதும், தமிழரே தமிழை இகழ்ந்து புறக்கணித்ததும், பிறப்பொடு தொடர்புற்ற ஆரியக் குலப்பிரிவினையால் தமிழர் சின்னபின்னமாகச் சிதைவுண்டு ஒற்றுமையற்றதும், பேதைமையூட்டும் புராணமென்னும் தொல் கதைகளையே நீளக் கற்றுங் கேட்டும் பகுத்தறிவிழந்ததும், அவருள் நூற்றிற்குத் தொண்ணூற்றைவர் தற்குறிகளானதும் பிறப்பிழந்த போலித்தமிழர் தொன்று தொட்டுத் தமிழைக் காட்டிக் கொடுத்து வருவதும், பிற்காலத் தமிழகத்தை அடுத்தடுத்துப் பல்வேறு வேற்றரசர் ஆண்டதும்"[1] தமிழின் தளர்ச்சிக்கான கரணியங்கள் ஆகும்.

உலக முதன்மொழியும், ஆழ்ந்த மொழிநூல் ஆராய்ச்சியாலன்றி வேறெவ்வகையாலும் அறியவியலாததுமான தமிழின் வரலாற்றை எழுதுவதற்குத் தனித் தகுதி வேண்டும் என்பது பாவாணர் கருத்து.

இந்நிலையில் வரலாறு, மாந்தனூல், மொழிநூல் அடிப்படையில் பாவாணர் தமிழ் வரலாற்றைத் தெளிவுபடுத்துகிறார். காட்சியும் கருத்தும் ஆகிய ஒவ்வொன்றுக்கும் வரலாறு இருப்பினும், ஒரு நாடு, அதன் மக்கள், அவர்கள் மொழி ஆகிய சிலவற்றின் வரலாறே அந்த நாட்டு மக்களுக்குச் சில வகையில் ஏமக்காப்பாக அமையும்.

---

1. தமிழ் வரலாறு, முகவுரை.

முதற்கண் தமிழ் தோன்றிய இடம் எது என்பதனை வரையறுக்கிறார். சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையும், பி.தி சீனிவாசையங்கார், சேசையங்கார், இராமச்சந்திர தீட்சிதர் ஆகியோரது வரலாற்று நூல்களும் இக் கருத்துக்கு அரண் சேர்க்கின்றன. இக்கருத்தை நிலை நாட்டிடப் பாவாணர் பதினாறு சான்றுகளைக் காட்டுகின்றார்.

ஆரியம், துரேனியம், சேமியம் என்னும் முப்பெரும் மொழிக் குலங்களுள் துரேனியத்தைச் சேர்ந்ததாகவே திராவிடக் குடும்பம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் திராவிடக் குடும்ப மொழிகளைத் திறம்படப் பிரித்துக் காட்டியவர் கால்டுவெல். மூன்று குடும்பங்களும் ஒரே மூலத்தினின்றும் கவைத்திருக்க வேண்டுமென்பது மாக்சுமுல்லர் கருத்து. அம் மூலத்திற்குத் திராவிடம் மிக மிக நெருங்கியது என்பது கால்டுவெல் கருத்து. 'பாவாணர் இதனை மெய்ப்பிக்கின்ற பணியில் இறங்கினார்' என்பதே உண்மை.

தமிழே உலக முதல் தாய்மொழி என்பதனை வலியுறுத்திட ஒன்பது சான்றுகள் தருகிறார்.

"சான்றுகள் :-

1. தமிழ் குமரி நாட்டிலே தோன்றியமை.
2. பழந்தமிழ் திராவிட மொழிகட்குத் தாயாயிருத்தல்.
3. ஆரியமொழிகளாகக் கருதப்படும் வடநாட்டு மொழிகளின் அடிப்படை தமிழாயிருத்தல்.
4. மேலையாரிய மொழிகளிலும் அடிப்படைச் சொற்கள் பல தமிழாயிருத்தல்.
5. இருமுது குரவரைக் குறிக்கும் அம்மை அப்பன் என்னும் தமிழ்ச் சொற்கள் திரிந்தும் திரியாதும் பெரும்பாற் பெரு மொழிகளில் வழங்குதல்.
6. எல்லா மொழிக் குடும்பங்களிலும் ஒன்றிரண்டேனும் தமிழ்ச் சொல்லிருத்தல்.
7. ஆரிய மொழிகளிலுள்ள சுட்டுச் சொற்களெல்லாம் தமிழ்ச் சுட்டெழுத்துகளினின்றே தோன்றியிருத்தல்.
8. தமிழிலக்கண அமைதிகள் பல மொழிகளிற் காணப்பெறுதல்.

9. பல மொழிகட்கு அல்லது மொழிக் குடும்பங்கட்குப் சிறப்பாகச் சொல்லப் பெறும் இலக்கண அமைதிகளின் மூலநிலை, தமிழில் இருத்தல்"[2]

எபிரேயமோ (Hebrew) ஆரியமோ உலக முதன் மொழியாக முடியாது என்பதனையும் சான்றுகளுடன் நிறுவுகிறார்.

கி.மு. 1000 ஆண்டுகட்கு முன் எபிரேய மொழியில் எழுதப்பட்ட யூத அரசர் வரலாற்றில் இடம் பெறும் துகி (தொகை) என்னும் சொல் தமிழின் தொன்மையைக் குறிக்கும் சான்று எனக் கால்டுவெல் எடுத்துக் காட்டுகிறார். பாவாணரோ கி.மு. 1200க்கு முன் இயற்றப்பட்ட ஆரிய வேதத்தில் நூற்றுக் கணக்கான தென்சொற்கள் உள்ளமையை எடுத்துக் காட்டுகிறார்.

தா, முத்து முதலிய சொற்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

உள்ளபடியே இந்திய வரலாற்றை வரைவோர் இதுவரை உள்ளவாறு கங்கைக் கரையிலிருந்து தொடங்காமல் கிருட்டிணை, காவிரி, வைகையாற்று வெளிகளிலிருந்து தொடங்கவேண்டும் என்று சுந்தரம் பிள்ளையும், வின்செந்து சிமிதும் கூறிய கருத்தைப் பாவாணர் வலியுறுத்துகிறார். அப்போதுதான் தமிழ் வரலாறும் தெளிவாக அமையும் என்பது அவர் கருத்து.

தமிழ் குமரிக் கண்டத்தில் தோன்றியது என்று தெளிவாய் அறிய முடியும், ஆயினும் ஆரியச் சார்பான தமிழ்ப்பகைவரும், தமிழை அறியாத அல்லது ஆங்கிலவாயிலாய் அரைகுறையாய்க் கற்ற வடவரும் மேலையரும், மொழியாராய்ச்சியில்லாத தமிழன்பரும் ஆகிய முத்திறத்தினர் தமிழர் நண்ணிலக் கடற்கரையினின்றும் வந்தவரென்று மறைத்தும் மயங்கியும் கூறி வருகின்றனர்.

தமிழை ஆழ்ந்து கற்றுத் தமிழுக்கு ஏற்றம் விளைவித்த மேலையருள் கால்டுவெல் தலைசிறந்தவர் எனினும் தொல்காப்பியம், கழக நூல்கள் முதலியவை அவர் காலத்தில் வெளிப்படுத்தப் படாமையால் தமிழைப் பற்றிய உண்மைகளை அவர் அறிய முடியாது போயிற்று. அதனால் அவரது சில முடிவுகள் தவறாய் அமைந்துவிட்டன. எனினும் தென்னிந்திய மொழிக்குடும்பத்தை முதன்முதல் ஆய்ந்த பெருமை அவர்க்குரியது.

ஆரியர் வரும் வரை தென்னாட்டில் வேற்றுமொழி எதுவும் வழங்கவில்லை. தமிழ் வணிகர் மொழிபெயர் நாடு செல்லும் வரை -

2. வண்ணனை மொழி நூலின் வழுவியல், ப. 18.

அல்லது அயலாரொடு அரசியல், வணிகத் தொடர்பு கொள்ளும் வரை மொழி அல்லது பேச்சு எனும் பொதுப்பெயர்தான் தமிழுக்கு வழங்கியிருக்க முடியும்.

தமிழ்-தமிழம்-த்ரமிளம்-த்ரவிடம்-திரவிடம் என்றவாறு தான் தமிழ் திரிந்து 'திராவிடம்' எனும் பெயர் பெற்றுள்ளது. திராவிடம் எனும் சொல் முதலில் தமிழ் எனும் பொருளில் தான் வழங்கியது. கிபி. 470இல் வச்சிரநந்தி மதுரையில் நிறுவிய தமிழர்கழகம் 'திராவிட சங்கம்' எனப்பட்டது.

தமிழ் என்பது இனிமை என்னும் பொருள்படும் என்பதைப் பாவாணர் ஏற்றுக் கொள்கிறார். எனினும் இது ழகரத்தால் மட்டும் ஏற்பட்டதன்று. எழுத்தினிமை போன்றே சொல், செய்யுள், அணி, இலக்கியம், இசை, கூத்து இனிமை எனப் பிற இனிமைகளும் உண்டு என்கிறார். எனினும் எல்லாக் கோணத்தையும் ஆராய்ந்து 1. தனியாக ழகரத்தை உடையது 2. தந்நாட்டு மொழி எனும் இரண்டே தமிழ் எனும் பெயர்க்குப் பொருத்தமானவை என்று கருதுகிறார்.

தமிழில் உள்ள செல்வளத்தைக் குறிக்க நல்ல எடுத்துக்காட்டைத் தருகிறார்.

தெலுங்கில் இல் என்றும் கன்னடத்தில் மனை என்றும் மலையாளத்தில் வீடு என்றும் வழங்கும் தமிழ்ச் சொற்களை எடுத்துக் காட்டுகிறார்.

"ஒரு செல்வத்தாய் வீட்டினின்று ஒருவகைப்பட்ட பல பொருள்களுள் ஒவ்வொன்றை ஒவ்வொரு புதல்வியும் எடுத்துச் செல்வதுபோல் தமிழிலுள்ள ஒரு பொருட்பல சொற்களுள் ஒவ்வொன்றை ஒவ்வொரு திசைமொழியும் கையாண்டுள்ளது"[3] என்கிறார்.

தமிழ் வரலாற்றையே இயனிலைப்படலம் என்றும் (கி.மு. 50,000 - கி.மு. 10,000), திரிநிலைப்படலம் என்றும் (கி.மு. 10,000-கி.மு. 5,500), சிதை நிலைப்படலம் என்றும் (கி.மு.1500-இன்றுவரை) பிரிக்கிறார். அதன்பின் மறை நிலைப்படலம், (கி.மு.1000 முதல் இன்றுவரை) கிளர் நிலைப்படலம் (கி.மு. 100 முதல் இன்றுவரை) வருநிலைப்படலம் என்று பிரித்து ஆராய்கிறார்.

குமரிக்கண்ட வரலாறுதான் அவர்க்கு அடித்தளமாகவும், அவரது அனைத்து ஆராய்ச்சிகட்கும் மூலமாகவும் அமைவது.

3. தமிழ் வரலாறு, ப.256.

தமிழின் தோற்றம் தோராயமாகக் கி.மு. 50000 ஐ ஒட்டி அமையும் என்கிறார்.

"தமிழின் குமரிக்கண்டத் தோற்றத்தையறியாதும், தமிழின் இயல்பையும் திரவிடத்தின் திரிபையும் நோக்காதும், பெரும்பால் மேலை மொழி நூலறிஞர், அநாகரிக நிலை நாகரிக நிலைக்கு முந்திய தென்னும் நெறிமுறையைக் குருட்டுத்தனமாய்ப் பின்பற்றி, திரவிடம் திருந்தித் தமிழானதென்றும், பிராகுவீ முந்துநிலை மொழியென்றும், தமிழர் வடமேற்கினின்று பெலுச்சித்தான் வழியாய்த் தெற்கு வந்தாரென்றும் வந்தவழியில் பெலுச்சித்தானம் இருப்பதால் அங்கத்து மொழி அநாகரிக நிலையில் உள்ளதென்றும், தெற்குவந்தபின் தம் மொழியை வளர்த்துக் கொண்டாரென்றும், உண்மைக்கு முற்றும் மாறாகக் கூறியுள்ளனர்."[4] என்பது அவரது ஆணித்தரமான கருத்து.

பாவாணர் மறைந்து போன பல தென் சொற்களை ஆய்வு நோக்கில் கண்டறிந்து சொல்லும் வல்லமையைப் பெற்றவர். குமரிக்கண்டம் மூழ்கிப் போனதாலும் முதலிரு கழக இலக்கியம் முழுவதும், கடைக்கழக இலக்கியப் பெரும்பகுதியும் அழிந்து போனமையாலும் நீண்ட காலமாகத் தமிழர் தமிழைப் பேணாமையாலும் ஆயிரக் கணக்கான தென்சொற்கள் இறந்து பட்டன. அதனாலேயே பல முதலடிச் சொற்களுக்கும் வழியடிச் சொற்களுக்கும் எடுத்துக்காட்ட இயலவில்லை என்கிறார்.

தமிழ் ஐந்திணை மக்கட்கும் பொதுவாயிருக்கும் தன்மையினை விரிவாகக் காட்டுகிறார். இந்தப் பொதுமை ஒன்றே தமிழரெல்லாம் ஓரினமென்றும், தொன்று தொட்டுத் தென்னாட்டிலேயே வாழ்ந்து வருபவரென்றும், தொழில் தழுவாது பிறப்பொடு தொடர்புற்ற ஆரியக் குலப்பிரிவினையால் தூய மாபெரும் தமிழினம் சின்ன பின்னமாகச் சிதைவுண்டதென்றும் தெரிவிக்கப் போதிய சான்றாகும்.

தமிழில் செய்யுள் நடை கி.மு. 15000, ஆண்டை ஒட்டியே தோன்றியிருக்க வேண்டும் என்பது அவர் கருத்து.

"தமிழ் மாந்தர் நீண்ட காலமாக உரைநடையிலேயே பேசிவந்த பின், மதி விளக்கத்தாலும் உணர்வெழுச்சியாலும் தூண்டப்பட்டு, தெய்வப்பற்று, காதல், போர், வாழ்த்து, கதை, வரலாறு முதலிய பல பொருள்கள் பற்றி, எளியநடையில் தென்மாங்கும் சிந்தும் போன்ற

4. மேலது, ப. 255-256.

இசைப்பாட்டுகளும், அகவலும் வெண்கலிப்பாவும் இராமப்பய்யன் அம்மானையும் போன்ற செய்யுட்களும், இயற்றத் தொடங்கினர். மோனையெதுகை யமைப்பும் சொற்சுருக்கமும் பொருட்செறிவும் அவர் உள்ளத்தைக் கவர்ந்ததனால், பல்வேறு பொருள் பற்றிய பழ மொழிகளும் ஒவ்வொன்றாயெழுந்தன [5] என்கிறார்.

பண்டைத் தமிழ் இலக்கியங்கள் யாவும் செய்யுள் நடையில் இருந்தமையால் இலக்கணமெல்லாம் செய்யுள் மொழிக்கே எழுதப்பட்டன. உரை நடைக்கெனத்தனி இலக்கண நூல்கள் எவையும் இல்லை. எனினும் சொற்றொடர் அமைப்பு அன்றும் உலக வழக்குமொழியில் இருந்தது.

தமிழ் இலக்கணம் கி.மு. 10000 ஆண்டை ஒட்டியெழுந்ததாகக் கூறுகிறார். மொழியின் அல்லது இலக்கியத்தின் சிறந்த அமைப்பையும் நடையையும் எடுத்துக் கூறுவதையே குறிக்கோளாகக் கொண்டமையால் இலக்கணம் அப்பெயர் பெற்றது.

ஆரியர் தென்னாடு வந்து தமிழ் கற்றுத் தேர்ந்தபின் இயற்சொல், திரிசொல், திசைச்சொல் என்னும் மொழியில்வகைச் சொற்களோடு வடசொல்லையும் சேர்த்துக் கொண்டதுபோன்றே, பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல் என்னும் இலக்கண வகைச் சொற்களோடும் உரிச்சொல் என்பதையும் சேர்த்தனர். ஆரியர் தமக்குத் தெரியாத அருஞ் சொற்களையெல்லாம் தொகுத்துப் பொருள் உரைத்துக் கொண்டனர்.

தமிழ் இயன்மொழியாதலாலும் பொதுமக்கள் அமைத்த வழக்கு மொழியாதலாலும் அதன் எல்லாச் சொற்களும் கரணியக் குறிகளாகவே அமைகின்றன. வடமொழி திரிமொழியாதலாலும் புலமக்கள் அமைத்த செயற்கை நூன்மொழியாதலாலும் அதில் இடுகுறிப் பெயர்கள் பல அமைந்துள்ளன.

மேலும் குமரிக்கண்டப் பொதுமக்களின் நுண்ணறிவு தமிழை எத்துணைச் செப்பமாக உருவாக்கியுள்ளது என்பதை அழகுற எடுத்துக் கூறுகிறார்.

"குமரிக்கண்டப் பொதுமக்கள் கூர்மதியும் உயரிய ஒழுக்கமும் உடையராதலின், நல்லதைக் கடைப்பிடித்துத் தீயதை நீக்கும் நாகரிகப் பண்பாட்டிற்கு இன்றியமையாத பகுத்தறிவை அளவையாகக் கொண்ட, அதையுடைய மக்களை உயர்திணையென்றும், அஃதில்லா

5. மேலது, ப. 106.

தவற்றையெல்லாம் உயிரிருப்பினும் இல்லாவிடினும் அஃறிணை யென்றும் வகுத்து, அதற்கேற்ப, மகன் வருகிறான், மகள் வருகிறாள் என்று உயர்திணையிற் பால் பிரித்தும், காளை வருகிறது, ஆண் வருகிறது என்று அஃறிணையிற் பால் பிரிக்காதும், எல்லாப் பெயர்ச் சொற்களையும் வினைச்சொற்களையும் அமைத்துவிட்டமை, என்றும் தமிழன் எண்ணி மகிழ்தற்கும் தம் முன்னோரைப் பற்றிப் பெருமை பாராட்டுதற்கும் உரியதொன்றாம். இங்ஙனம் வேறெம் மொழியிலுமில்லாத சிறந்த இலக்கணவமைப்பு இற்றைப் புலமக்களினும் அற்றைப் பொதுமக்கள் அறிவாற்றலிலும் நாகரிகப் பண்பாட்டிலும் சாலச் சிறந்தவரென்பதற்குத் தக்க மொழிச்சான்றாம்.[6]

பொதுமக்கள் வழங்கும் பழஞ்சொற்றொகுதி தான் ஆய்வுக்கும், முன்மை காணற்கும் அடிப்படை எனக் கருதுகிறார். பண்டையிலக்கியத்தில் உள்ள சொல்லாட்சிகளும் பெரும் பயனுடையவை என்றாலும், அவற்றில் இல்லாத சொல்லெல்லாம் பிற்காலத்தவை எனக் கொள்ளல் பெருந்தவறாகும். அவை இலக்கியங்களே தவிர அகரமுதலிகள் அல்ல.

தமிழ் மிகுந்த சொல் வளமுடையது. "இதனை நால்வகையிலைப் பெயராலும், ஐவகைப் பூநிலைப்பெயராலும், முக்கனிகளின் பிஞ்சு நிலைப் பெயராலும், வெவ்வேறு சிறப்புப்பொருளில் சொல்லுதலைக் குறிக்கும் அறை, இயம்பு, இசை, உரை, என், ஓது, கிள, கிளத்து, கூறு, சாற்று, செப்பு, சொல், நவில், நுதல், நுவல், நொடி, பகர், பறை, பன்னு, பனுவு, புகல், புலம்பு, பேசு, மாறு, மிழற்று, மொழி, விளத்து, விளம்பு முதலிய சொற்களாலும் எழுநிலைப் பெண்ணிளமைப் பெயர்களாலும், பிறவற்றாலும், அறியலாம்"[7] என்கிறார்.

ஆங்கிலம் கற்ற பலர் தமிழைக் கல்லாமலும் தமிழின் ஆழமான சிறப்பினை அறியாமலும் தமிழை இழித்துப் பேசுவதுண்டு ; அல்லது இளக்காரமாக நினைப்பதுண்டு, ஆனால் தமிழ் எத்தகைய சொல்வளம் படைத்தது என்பதைப் பாவாணர் விரிவாக எடுத்துக் காட்டுகிறார்.

**'மறுதலை வகைகள் குறித்து அவர் தரும்' பட்டியல் :**

| | | |
|---|---|---|
| " எதிர் | - | opposite |
| திரித்தம் | - | alteration |
| பகை | - | Enmity |

7. தமிழ் வரலாறு, ப. 238.

| | | |
|---|---|---|
| மறுதலிப்பு | - | Denial |
| மாற்றுமை அல்லது மறுதலை | - | Contrariety |
| மறுப்பு | - | Refutation |
| மறை | - | Negation |
| எதிர்மறை | - | Strong negation |
| மாற்றம் | - | Transference |
| மாற்று | - | antidote |
| மாறு | - | Exchange |
| முரண் | - | Contradiction |
| விலக்கு | - | Prohibition |
| வேற்றுமை | - | Difference |
| வேறுபாடு | - | Change" [8] |

தமிழின் வளம் ஆங்கிலச் சொற்களோடு ஒப்பிட்டுப் பார்த்து வியத்தற்குரியது.

குறிக்கோள் வகை குறித்து ஒப்பிட்டுக் காணலாம்.

| | | |
|---|---|---|
| கொள்கை | - | Doctrine |
| கோட்பாடு | - | Tenet |
| குறிக்கோள் | - | Object |
| கருதுகோள் | - | Hypothesis |
| ஏடல் | - | Idea |
| நெறிமுறை | - | Principle |
| நோக்கம் | - | Aim |
| இலக்கு | - | Goal |
| இலக்கம் | - | Target |
| விதி | - | Rule |
| சட்டம் | - | Law |
| மேல்வரிச் சட்டம் | - | motto |

8. சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், ப. 41.

குதிரை கூட எண்வகையில் பெயர் பெற்றுள்ளது. மன்னர்க் கேற்ப அவற்றின் பெயர்கள் மாறியும் உள்ளன.

மொழிச் செம்மை தமிழுக்கே உரிய தனிச் சிறப்பாகும். ஆரியர் தமிழ்நாட்டிற்கு வந்தபின், அறியாமையாலும், சோம்பலாலும் தாழ்வுணர்ச்சியாலும், தமிழ்ப்பற்றின்மையாலும் ஏற்பட்ட கொச்சை வழக்கு, நீண்டகாலமாக இருந்துதான் வந்திருக்கிறது. ஆயினும், ஏடெடுத் தெழுதும்போதும் மேடையேறிப் பேசும்போதும் திருந்திய நடையையே கையாளவேண்டுமென்று, தொன்னூலாசிரியர் ஓர் அழியா வரம்பிட்டு விட்டனர்; அவ்வரம்பே, புரவலரும் புலவரும் இல்லாக்காலத்தும், பகைவரும் கொண்டான்மாரும் பல்கிய போதும், பைந்தமிழை வேலியாகக் காத்து வந்திருக்கின்றது. இவ்வரம்பு ஏனை மொழிகட்கில்லை. அதனால், அவை மக்கள் வாய்க்கு வந்த வகையெல்லாம் வழங்கி அவற்றின் சொற்கள் பல ஒழுங்கின்றியும் உருத்தெரியாதும் போயின தமிழுக்கு எது வழுநிலையோ அது பிறமொழிகட்கு வழாநிலையாயிற்று.

செருப்பு, திருப்பு, நெருப்பு, பருப்பு என்பன முறையே செப்பு, திப்பு நிப்பு, பப்பு எனத் தமிழில் வழங்கின் வழுநிலையாம் ; தெலுங்கில் வழங்கின் வழாநிலையாம்.

பாண்டி நாட்டுத் தமிழைச் செந்தமிழ் என்றது அதற்குச் செம்மை எனும் பண்பு அமைந்திருப்பதனால்தான், பிறநாட்டுத் தமிழைக் கொடுந் தமிழ் என்றது செம்மை இன்மையால்தான் ; இக்கால மொழிநூலார் சிலர் பொதுமக்கள் பேசுவதே மொழியென்று கூறிப் பிறமொழிகளின் வழுநிலையைத் தமிழிற் புகுத்தித் தமிழின் செம்மையினைத் தகர்க்க முற்படுவதைப் பாவாணர் வன்மையாகக் கண்டிக்கிறார்.

தலைக்கழகம் எனப்பெறும் முதற் சங்க காலம் கி.மு. 10000 முதல் கி.மு. 5500 வரை எனலாம். அக்காலச் சூழ்நிலை எதுவென்பதைப் பாவாணர் தெளிவுபடுத்துகிறார்.

"தமிழ் மக்கள் மொழித்துறையிலும் இலக்கியத்துறையிலும் மிகவுயரிய நிலையடைந்திருந்ததனாலும், தமிழ் வாயிலாய்க் கல்வியைப் பரப்புவது அரசன் கடமையாதலாலும் பாண்டிய வேந்தர் சிலரும் நல்லிசைப் புலவராயிருந்ததனாலும், காய்சினவழுதி என்னும் பாண்டியன், பஃறுளியாற்றங்கரையிலிருந்த மதுரை என்னும் தன் தலைநகரில், தலைமைப் புலவரையெல்லாம் கூட்டி ஒரு தமிழ்க்கழகம் நிறுவினான். அக்கழகப்புலவர், பழைய இலக்கியத்தை ஆராய்வதும் புதிய நூல்களையும் வனப்புகளையும் பாடல்களையும் இயற்றுவதும்,

தம் தொழிலாகக் கொண்டிருந்தனர். புதிய இயற்றல்களெல்லாம் பாண்டியன் முன்னிலையில் அரங்கேற்றப்பெற்றே ஆட்சிக்கு வந்தன.

அன்றைத் தமிழகத்தில் ஆரியருமில்லை ;ஆரியச் சொல்லோ கருத்தோ கலந்த நூலுமில்லை.

இன்னிசைக்கலையும் நாடகக்கலையும் நல்வளர்ச்சியடைந்திருந்தமையால், மொழியோடு இசைக்கும், நடிப்பிற்குமுள்ள நெருங்கிய தொடர்பு கருதியும், இசைப்பாட்டுகளெல்லாம் செய்யுள் வகையாயிருத்தல்பற்றியும், இசையும் நாடகமும் மொழியொடு சேர்க்கப்பெற்று, இயலிசை நாடகமெனத் தமிழ் முத்தமிழாய் வழங்கி வரலாயிற்று. இயற்றமிழை மட்டும் கூறும் இலக்கணம் பிண்டம் என்றும், முத்தமிழையும் கூறும் இலக்கணம் மாபிண்டம் என்றும், பெயர் பெற்றன".[9]

இனிக் கி.மு. 20000 முதல் இன்றுவரை தமிழ் எவ்வாறு திரிந்தும், திரிக்கப்பட்டும் தாழ் நிலையெய்தியது என்பதனைத் 'திரிநிலைப் படலம்' எனும் இயலில் தெளிவுபடுத்துகிறார்.

"குமரிக்கண்ட மாந்தர், தமிழின் ஐவகைச் சொன்னிலைக் காலத்திலும், மக்கட்பெருக்கம் இயற்கை விளைவுக்குறைவு, பஞ்சம், கொள்ளை, போர், பகை, வேற்றிடவிருப்பு, துணிசெயல் வேட்கை, வணிகம், கடல்கோள் முதலிய பல்வேறு கரணியங்களால், கிழக்கும் வடகிழக்கும் வடக்கும் வடமேற்கும் மேற்குமாக்க் கூட்டங் கூட்டமாய்ப் பிரிந்து போயினர் என்கிறார்."[10]

அவர் சென்ற விடங்களில் பலவூர்ப் பெயர்கள் இன்றும் தமிழ்ச் சொல்லாகவும், அவற்றின் திரிபாயும் உள்ளன.

தெலுங்கநாடு :- சிற்றூர் (சித்தூர்) குண்டூர், நெல்லூர், ஓராங்கல் (Warangal)

மும்பை :- வேளா என்பது பலவூர்களின் பொதுப் பெயராக உள்ளது. சாளுக்கியர் ஆண்ட மும்பை மண்டலப்பகுதி 'வேள்புலம்' எனப்பட்டது. வேளாபுரம் (Velapur) வேளூர் (Ellora).

9. தமிழ் வரலாறு, ப. 245.
10. தமிழ் வரலாறு, ப. 245.

குச்சரம் (குசராத்) துவாரகை-இது எருமையூர் நாட்டிலுள்ள துவரையின் பெயரால் (துவாரசமுத்திரம்) அமைந்த நகர் செப்புக் கோட்டையுள்ள நகர் என்பது பொருள்.

**பீகார் :–** பாடலிபுரம் (Patna) இது பாதிரிப்புலியூர் எனும் தமிழ்ப் பெயரின் வடமொழிப் பெயர்ப்பு. பாடலிபுத்திரம் என்றும் சொல்வதுண்டு.

**வங்காளம் :–** காளிக்கோட்டம் (Calcutta)/

தமிழர் வடக்கே செல்லச்செல்ல, தட்பவெப்ப நிலைமாற்றம், சோம்பல், புலவரின்மை, தமிழ்ப்புரவலரின்மை, புதிய சுற்றுச்சார்பு, தாய்நாட்டொடு தொடர்பின்மை முதலிய கரணியங்களால், தமிழ் திரிந்து கொடுந்தமிழ் எனப்பட்டது, திரியாத தென்னிலத்தமிழ் செந்தமிழ் எனப்பெற்றது. சிலர் கொடுந்தமிழ் திருந்திச் செந்தமிழாயிற்றென்பர் ; அவர் அறியார். தமிழ் வளர்ச்சியில் முற்பட்ட திருந்தாத நிலைகளெல்லாம் குமரிக்கண்டத்தின் தென்பாகத்திலேயே தீர்ந்துவிட்டன."[11]

குமரிக்கண்டம் அழிந்தமையால் ஆயிரக்கணக்கான உலகவழக்குச் சொற்கள் அழிந்து விட்டன. முதலிரு கழக இலக்கியங்களும் அழிக்கப்பட்டுவிட்டன. எனினும் ஒரு சில பழஞ் சொற்களின் முந்து வடிவினைச் சில திசைமொழிகளில் காணமுடியும். நீண்ட காலமாக மடல் தொடர்போ நேரடி உறவோ இல்லாத மக்கள் அயலாராகத் தோன்றுவது போன்றே நீண்ட காலமாக வழங்காத சொற்களும் வழக்கற்றவை போல் காட்சி தருகின்றன.

'சாலும்' என்பது 'சாலேஸ்' என்றும் 'கிண்ணம்' என்பது 'கிண்ண' என்றும் மராத்தி மொழியில் வழங்கிவருவதை எடுத்துக் காட்டுகிறார்.

வடமேலையாப்பிரிக்காவைச் சேர்ந்த கானாமொழியிலும் வா, போ, தூக்கு முதலிய தமிழ்ச் சொற்கள் அடிப்படைச் சொற்களாய் அமைந்திருப்பதை வியப்போடு நமக்குச் சுட்டிக் காட்டுகிறார்.

தியூத்தானிய மொழிகளில் ஆங்கிலோ சாக்சன் போன்றவை தமிழுக்கு மிக நெருங்கியுள்ளதாகப் பல சான்றுகளுடன் நிறுவுகிறார். ஐரோப்பிய, ஆரியமொழிகள் தமிழினின்று பேரளவு திரிந்துள்ளமைக்கு அவை விலகிச் சென்றுள்ள சேய்மை அளவே கரணியமாகும் ;

11. தமிழ் வரலாறு, ப. 248.

இன்றும் அவற்றின் முன்னொட்டுகளும் பின்னொட்டுகளும் பெரும்பாலும் தமிழ்ச் சொற்களாகவே யுள்ளன.

கி.மு. 1500 முதல் இன்று வரை உள்ள காலத்தை ஒட்டிச் சிதைவு நிலைப் படலமாகக் காட்டுகிறார் பாவாணர்.

இடைக்கழக அழிவும் இடை நிலைக் காலமும் கி.மு. 1500 முதல் கி.மு. 600 வரை அமையும். இதற்குக் கரணியம் வேத ஆரியரின் தென்னாட்டு வருனகயேயாம். இவர்களது காலம் தோராயமாகக் கி.மு.1500 ஆகும்.

வந்தவர்கள் வழக்கற்ற வேதமொழியோடு அக்கால வட்டார மொழிகளாகிய பிராகிருதங்களையும் தமிழையும் சேர்த்துச் சமற்கிருத மொழியை உண்டாக்கிக் கொண்டனர். பின் தமிழ் ஏட்டெழுத்தைப் பின்பற்றிக் கிரந்த அட்சரம் எனும் நூலெழுத்து அமைக்கப்பட்டது. அடுத்து எழுத்து, சொல் தொடர்பான இலக்கணத்தையும் பின்பு பல துறை இலக்கியத்தையும் மொழிபெயர்த்துக் கொண்டனர். ஆரியர்கள் தேவர்கள் எனும் நம்பிக்கையினால் மூவேந்தர்களே அவர்களைக் கண்காணிக்காமல் விருப்பம் போல் விட்டுவிட்டனர்.

வடமொழியில் ஐந்திரம் முற்பட்ட இலக்கண நூல் ; தொல்காப்பியர் ஐந்திரம் அறிந்தவர். கி.மு. 7ஆம் நூற்றாண்டினரான தொல்காப்பியர் இக்கால உ.வே.சா. வைப்போலப் பல செந்தமிழ் முந்து நூல் கண்டு முறையாக ஆய்ந்து தம் பெயரால் ஒரு பிண்ட நூலைத் தொகுத்து நிலந்தரு திருவிற்பாண்டியன் அவைக்களத்தில் திருவதாங்கோட்டில் நான்மறையில் தேர்ச்சிபெற்ற ஓர் ஆரியப் புலவர் தலைமையில் அரங்கேற்றினார். அக்காலத்தில் கழக அமைப்பு இல்லை என்பதையும் பாவாணர் குறிப்பிடுகிறார். பாணினீயம் கி.மு.5 ஆம் நூற்றாண்டினதாக உள்ளமையால் அது தொல்காப்பியத்திற்குப் பிற்பட்டதாகும்.

கடைக்கழகக் காலம் என்பது கி.மு. 5ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 4ஆம் நூற்றாண்டு வரையிலான காலமாகும். "ஆரியம் வர வர ஆழவேரூன்றி மூவேந்தரும் ஆரியப் பித்தராக மாறி ஆரிய வேள்விகளை இயற்றத் தலைப்பட்டு விட்டதனால், பல் வேள்விச்சாலை முதுகுடுமிப் பெருவழுதி காலத்திலேயே கழகத்தைக் கலைக்க அடிகோலப்பட்டு, அடுத்த தலைமுறைப் பாண்டியனாகிய உக்கிரப் பெருவழுதி காலத்தில் ஆரியச்சூழ்ச்சி நிறைவேறிவிட்டது!"[12] என்கிறார் பாவாணர்.

---

12. தமிழ் வரலாறு, ப. 283.

திருக்குறள் கடைக்கழக உறுப்பினரல்லாத திருவள்ளுவரால் இயற்றப் பெற்றது. ஆரிய ஏமாற்றைக் கண்டித்தமையால் கடைக் கழக ஒப்பம் பெறமுடியாமல் போயிற்று.

'வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள்
'உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி' என்னும் சுந்தரனார் கூற்றையும் இவ்விடத்தில் எண்ணிப்பார்க்கலாம்.

களவழி நாற்பது ஓரளவு கடைக்கழகஞ் சார்ந்தது எனலாம். ஏனைய பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பிந்தியவே. தொகுத்தவர்கள் அடிவரையறைகளையும் வேறு கரணியங்களையும் வைத்துக் கொண்டு வகைப்படுத்தியுள்ளனர்.

கடைக்கழகத்தின் பின் தமிழ் பலவகைகளில் சிதைந்துவரத் தொடங்கியது.

**1. மொழிச் சிதைவு**

1. வேண்டா வடசொற் கலப்பு.
2. சேரநாட்டுத்தமிழ் படிப்படியாய்த் திரிந்து வேறுமொழியாய்ப் பிரிந்து போனமை.
3. தமிழ் தலைமையிழந்து ஒரு கிளைமொழிபோற் கருதப் பட்டமை.
4. தமிழ் கோயில் வழிபாட்டிற்குத் தகாத மொழியென்று தள்ளப்பட்டமை.
5. தமிழ் தமிழராலும் தாழ்த்தவும் வெறுக்கவும் பட்டமை, இன்றும் பெரும்பாலார் தமிழ்ப்பெயரை விரும்பாமையும், சோறு என்று சொல்ல நாணுதலும் காண்க.
6. தமிழர்க்குத் தாய்மொழி யுணர்ச்சி அற்றமை.
7. நீண்ட காலமாகத் தமிழுக்கு மேல்வளர்ச்சியின்மை.
8. வடசொற் கலந்த தமிழ்க்கல்வெட்டும் தனி வடமொழிக் கல்வெட்டும் தோன்றியமை.
9. தமிழ் உரைநடை மணிப்பவழ நடையாக மாறியமை.
10. பல்வகை வழுக்களும் மலிந்த தமிழ்நடை கல்வெட்டுகளிலும் ஆவணங்களிலும் ஆளப்பெற்றமை.

2. கலைச் சிதைவு

இசை, நாடகம், கணியம் முதலிய தமிழ்க் கலைகளின் நுட்பமான முறைகள் அழியுண்டு போயின.

3. நூலழிவு

கணக்கற்ற தமிழ் நூல்கள் கற்பாரும் காப்பாரும்இன்றிக் காவிரிப் பதினெட்டாம் பெருக்கிலும், கரையான் புற்றிலும், காழ்ப்புடையார் இட்ட நெருப்பிலும் அழிந்து போயின. பாண்டித்துரைத்தேவர் தொகுத்துவைத்திருந்த ஆயிரக்கணக்கான பண்டையேட்டுச் சுவடிகளும் தீக்கிரையான வரலாறு முன்னைய அழிவுகளை மெய்ப்பிக்கும்.

4. நூலிழிபு

கலையும் அறிவியலும் பற்றிய நூல்கள் வெளிவராமல் குலமும் புகழும் காமமும் நோக்கிய நூல்கள் பெருகத் தொடங்கின. தமிழில் உள்ள எல்லா இலக்கியங்களுமே தமிழுக்குப் பெருமை சேர்ப்பவை என்ற விருப்ப அடிப்படையில் அனைத்தையும் ஏற்பவர் பாவாணர் அல்லர் ; எடுத்துக் காட்டாக ஐம்பெருங்காப்பியங்களைத் தமிழ்த் தாயின் ஐம்மக்களாகக் காட்டுவது தமிழுக்கு இழுக்கு என்பது அவர் கருத்து. இவை பல வடசொற்களும் ஆரியக் கருத்துகளும் கொண்டவை. சிலம்பு ஒன்றே அனைத்துச் சமயங்களையும் அணைத்துச் செல்லும் பொதுநெறி பற்றியது. ஏனைய இரண்டு புத்தமும் இரண்டு சமணமும் பற்றியனவே. சிலம்பும் மணிமேகலையும் மட்டுமே தமிழகத்தைத் தழுவியவை, ஏனைய தமிழகத்திற்குப் புறம்பானவையே.

5. செய்யுளிழிபு

பாவகை குன்றிப் பாவினம் பயின்றமை, வடசொற்றொகை வர வர மிக்கமை, உயர்வுப்பன்மை தோன்றியமை, பொருட்சிறப்பினும் சொற்சிறப்பே மிக்கமை ஆகிய வகைகளில் செய்யுள் இழிவு பெற்றது.

6. இலக்கணக்கேடு

வடமொழியிலக்கணத்தை வலிந்து புகுத்தி, வீரசோழியம், பிரயோக விவேகம் முதலிய புன்னூல்கள் எழுந்தமை ; எழுத்துகட்கும் பாக்கட்கும், தெய்வமும் குலமும் வகுக்கப்பட்டமை ; கலம்பகம் தேவர், பிராமணர், அரசர் வரிசையில் எண்ணிக்கையில் தாழ்ந்து படுதல் முதலிய குறைகள் நேர்ந்து விட்டன.

7. சொற்சிதைவு

சொல் இறப்பு, வழக்கழிவு, பொருளிழப்பு, இழிபு, திரிபு, முதலிய வகைகளில் தனித்தமிழ்ச் சொற்கள் சிதைவடைந்துள்ளன.

8. எழுத்துத் திரிபு

9. தமிழ்க் கல்விக் குறைவு

10. தமிழ்ப் புலவர்க்குப் பிழைப்பின்மை

11. தமிழ் ஒழிப்புத் திட்டங்கள்

மேற்கண்டவாறு இப்படலத்தின் கருத்துகள் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

நான்காவது அவர் குறிப்பிடும் மறைநிலைப்படலம் கி.மு.1000 முதல் இன்றுவரை உள்ளதாகும், இது பதினாறு வகையாக விரிவு பெறுகிறது.

"குழையும் குச்சும் ஒடிக்கப்பட்டும், கிளையும் கொம்பும் கவையும் அடியும் வெட்டுண்டும், மீண்டும் வேரினின்றும் தூரினின்றும் தளிர்த்துத் தழைத்தோங்கும் மரம்போன்று இருக்கும் தமிழை, அடிவரை சிதைத்த பின்பும் அதை அடியோடு மறைத்தற்குப் பல்வேறு வழிகளைக் கையாண்டு வருகின்றனர் தமிழின் பிறவிப்பகைவரான ஆரியர்,"[13] என்பது பாவாணர் உணர்ந்து, வருந்திக் கூறும் கூற்றாகும்.

1. தமிழ் மறைப்பு

சமற்கிருதத்திலிருந்து பிராகிருதமும், பிராகிருதத்தினின்று தமிழும் வந்ததாகக் கூறிப் பேரன் பாட்டனைப் பெற்றதாகப் பேசுகின்றனர். ஒரு சிலர் தமிழை ஒரு பிராகிருதமாகக்கூடக் குறிக்கவில்லை. 12ஆம் நூற்றாண்டில் பொய்யா மொழிப் புலவர் மதுரை சென்று தமிழ்க்கழகத்தைப் புதுப்பிக்க முயன்று தோற்றார்.

2. தமிழ்நாடு மறைப்பு

நாவலம் பொழிலைச் சம்புத் தீவு என்றும் சேர நாட்டைப் பரசுராமச்சேத்திரம் என்றும் கூறித் தமிழ்நாடு எனும் ஒரு நாட்டின் தோற்றத்தையே மறைக்க முற்பட்டனர். இது மதராசாக, சென்னையாக நின்ற காலம்வரை 'மறைப்பு' முயற்சி தொடர்ந்தது என்றே சொல்லலாம். அறிஞர் அண்ணா காலத்தில் 'தமிழ்நாடு' எனும் பெயர் பெற்றபின்தான் இக்குறை அகன்றது.

13. தமிழ் வரலாறு, ப. 288.

### 3. தமிழ் இன மறைப்பு

வேதவொழுக்கத்தைக் கைக் கொள்ளாமையால் திரவிட இனம் விலக்கப்பட்ட சத்திரிய வகுப்புகளில் ஒன்றாக மனுதரும நூலாசிரியரால் குறிக்கப்பட்டது.

இடைக்காலத்தில் தமிழ வேந்தரைச் சத்திரியராக்கி வேத வேள்வி இயற்ற வைத்து 'வர்மன்' எனும் பெயரீற்றையும் ஒட்டிவிட்டனர்.

ஆத்திரேலியப் போலியர், நீக்ரோப் போலியர், நண்ணிலக் கடற்கரையர், காண்டிநேவியர் முதலிய அறுவகையினம் சேர்ந்த கலவையினத்தார் தமிழரென்று ஒரு 'தென்னிந்திய வரலாறு' கூறும் அளவுக்குத் தமிழினம் மறைக்கப்பட்டது.

### 4. தமிழ் நாகரிக மறைப்பு

தொன்னூல்களான தென்னூல்களெல்லாம் வடமொழியில் மொழி பெயர்க்கப்பட்டபின் அழிந்தும் அழிக்கப்பட்டும் போயின. அதனால் தமிழ் நாகரிகத்தை உலகுக்கு உணர்த்த முடியாத தடை ஏற்பட்டு விட்டது.

### 5. தமிழ்க் கலை மறைப்பு

தமிழிசையைக் கருநாடக சங்கீதம் என்றும், தமிழ் நடனத்தைப் பரத நாட்டியம் என்றும் கூறுவதே கலை மறைப்பாகும்.

### 6. தமிழ் முதனூல் மறைப்பு

குறளின் அறத்துப்பால் தரும சாத்திரத்தையும், பொருட்பால் அருத்த சாத்திரத்தையும், காமத்துப்பால் காமசூத்திரத்தையும் தழுவினவை யென்பதே முதனூல் மறைப்பாகும்.

### 7. தமிழ்த்தெய்வ மறைப்பு

முருகன், மாயோன், வேந்தன், சாத்தன் என்னும் தமிழ்த் தெய்வங்கள் சுப்பிரமணியன், விஷ்ணு, இந்திரன், சாஸ்தா என்னும் ஆரியத் தெய்வங்களே என்பது தமிழ்த் தெய்வ மறைப்பாம்.

### 8. தமிழர் சமயம் மறைப்பு

சிவநெறி, திருமால் நெறியை ஆரிய மதமாகிய பிரமநெறியோடு இணைத்து இந்துமதம் எனப்பெயர் கொடுத்ததும், சிவனடியார்களையும் திருமால் அடியார்களையும் முட்டி மோதிக் கொள்ளவிட்டதும் தமிழர் சமயத்தை மறைக்கும் முயற்சிகளாகும்.

### 9. தேவாரம் மறைப்பு

மூவர் தேவாரமும் வழங்காதபடி தில்லையில் பூட்டி வைத்துத் தடுத்தது.

### 10. பொருளிலக்கணம் மறைப்பு

பொருளிலக்கணம் பாட்டியலே என்றும் அது பிறமொழிகளிலும் உள்ளதே என்றும் கூறுவது.

### 11. தமிழ்ச் சொல் மறைப்பு

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகர முதலியில் ஆயிரக்கணக்கான தென்சொற்கள் விடப்பட்டிருப்பதும், தமிழின் அடிப்படைச் சொற்களையெல்லாம் வடசொல்லென்று காட்டியிருப்பதும் தமிழ்ச் சொல் மறைப்பாகும்.

இது குறித்துப் பாவாணர் விரிவாகவே திறனாய்வு செய்து தொடர்புடையவர்க்கு விடுத்துள்ளார். சென்னைப் பல்கலைக்கழக அகர முதலியின் சீர்கேடுகள் என்று தமிழிலும் 'A critical Survey of the Madras University Tamil Lexicon ' என்று ஆங்கிலத்திலும் வெளியிட்டுள்ளார். தமிழ்ச் சொற்கள் பலவற்றின் அடிப்படையை அறியாமல் பல சொற்களை வடசொற்களின் திரிபாகக் காட்டிப் பெருங்கேடு செய்துள்ளது சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலி.

### 12. தமிழ்ச் சொற்பொருள் மறைப்பு

சிவன் என்பதை மங்கலம் என்றும் முருகன் என்பதைச் சேவற் கொடியோன் என்றும் கூறுவது.

### 13. தமிழ்க் கருத்து மறைப்பு

இயல்புடைய மூவர், தென்புலத்தார் குறித்துப் பரிமேலழகர் கூறுவது தமிழ்க் கருத்து மறைப்பாகும்.

### 14. தமிழ் எழுத்து மறைப்பு

தமிழ் ஏட்டெழுத்து பிராமியெழுத்தினின்று திரிந்ததென்றும் கிரந்த வெழுத்தினின்று தோன்றியதென்றும் கூறுவது.

### 15. முக்கழக மறைப்பு

பாண்டிய நாட்டிலிருந்த முக்கழகங்களை மறைத்தும் தமிழ்நாட்டில் இருந்த தொன்மையான கழகம் கி.பி. 9 ஆம்

நூற்றாண்டில் மதுரையில் தோன்றிய சமண சங்கமே என்று கூறியும் வருவது.

## 16. தமிழ் வரலாற்று மறைப்பு

தமிழர் கிரேக்க நாட்டிலிருந்து வந்தவரென்றும், தமிழ்நாட்டு வரலாறு கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்தே தொடங்குவதென்றும், இந்திய வரலாற்றிற்கெல்லாம் அடிப்படை ஆரிய வேதமே என்றும் கூறுவது தமிழ் வரலாற்று மறைப்பாகும்.

இவ்வாறு பல்வேறு கூறுபாடுகளில் தமிழ் வரலாற்றின் மறைக்கப்பட்ட பகுதிகளைச் சுட்டி காட்டுகிறார்.

இறுதியாக, இத்துணை மறைப்புகட்கிடையிலும் தமிழ் இருளைக் கிழித்துக்கொண்டு வெளிவந்து ஒளிகொடுப்பதற்குக் கரணியமான பல்வேறு தமிழ் அறிஞர்களைக் குறித்தும் கிளர் நிலைப் படலத்தில் குறிப்பிடுகிறார். இதன் காலக்கட்டம் கி.மு. 100 முதல் இன்றுவரையிலாகும். ஒரு சிறு வகுப்பார் தமிழ் நாட்டில் இருந்து கொண்டு சமற்கிருதம் தேவமொழி என்று துணிந்து பொய்சொல்லும் போது, தமிழர் தம் நாட்டில் கோடிக்கணக்கினராய் இருந்து கொண்டே தம் மொழியைப் பற்றிய உண்மையை எடுத்துச் சொல்ல ஏன் அஞ்சிச் சாகவேண்டும் என்பது பாவாணர் தொடுக்கும் வினா.

இவ்வகையில் முதலாமவர் திருவள்ளுவராவார், பல்சிறுதெய்வ வழிபாட்டை நீக்கிக் கடவுள் வழிபாட்டை வற்புறுத்தியும், அந்தணர் என்போர் அருட்டுறவியர் மட்டுமே என்று தெளிவுபடுத்தியும் குலத்துக் கொரு முறையின்றி நடுநிலை நயன்மை நாட்டியும் வள்ளுவர் செய்த பண்பாட்டுப் புரட்சியைப் பாவாணர் சுட்டுகிறார். இவர் காலம் கி.மு. முதல் நூற்றாண்டு.

கி.பி. 2ஆம் நூற்றாண்டினராகிய நக்கீரர் தமிழைப் பழித்த குயக்கொண்டானை அங்கதம் பாடிச் சாவித்தார்.

கி.பி.16ஆம் நூற்றாண்டில் பரஞ்சோதி முனிவர் தமிழின் இலக்கண வரம்பையும், கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோடு அமர்ந்து தமிழ்ப் பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த பாங்கினையும் போற்றுகிறார்.

கி.பி. 18ஆம் நூற்றாண்டினராகிய சிவஞான முனிவர் செய்த கிளர்ச்சியைப் பலபடப் பாராட்டுகிறார் பாவாணர்.

"வடமொழி உயர்வென்றும் தமிழ் தாழ்வென்றும் கருதப்பட்ட காலத்திலும் இடத்திலும் இருந்து கொண்டு, தம் ஆழ்ந்த தென்மொழி

வடமொழிப் புலமையாலும், அரிய இலக்கண வாராய்ச்சியாலும், செய்யுள் வன்மையாலும், தருக்க வாற்றலாலும், தமிழ் வடமொழிக்கு எள்ளளவும் இளைத்ததன்றெனு நிறுவியவர் மாதவச் சிவஞான முனிவராவர்."[14]

19ஆம் நூற்றாண்டில் சுந்தரம்பிள்ளை செய்த புரட்சிதான் ஆரியத்தைப் புறமுதுகிட்டோடச் செய்த அரிய செயல் என்று கூறுகிறார். தமிழை ஆரியத்தோடு உறழ்ந்து ஆரியச் செருக்கை அடக்கியவர் சுந்தரம்பிள்ளை.

20ஆம் நூற்றாண்டில் தமிழின் பீடார்ந்த வரலாற்றுக்குப் பெருமை சேர்த்த பெருமக்கள் பலர்.

பரிதிமாற் கலைஞர் தம் பெயரைத் தனித்தமிழாக்கித் தனித் தமிழுக்கு வித்தூன்றியவர்.

தம் நுண்மாண் நுழைபுலத்தாலும் பன்மாண் பொறிவினைப் பயிற்சியாலும் தமிழ் நெடுங்கணக்கை ஆழ்ந்தாய்ந்து தமிழே உலக முதன் மொழியென முதன் முதல் உரைத்தவரும், அதை அஞ்சாது எங்கும் எடுத்து விளக்கிய தறுகண்மை வாய்ந்தவருமான பா.வே. மாணிக்க நாயகர் பெரிதும் பாராட்டுப்படுகிறார்.

தமிழர் தென்னாட்டுப் பழங்குடிமக்களே என்று மறுக்கொணாத சான்று காட்டி ஆங்கிலத்தில் சிறுநூலும் பெருநூலும் முதன் முதலாக வரைந்த பி.டி. சீநிவாசையங்கார் தமிழ் வரலாற்றில் மறுமலர்ச்சி உண்டாக்கியவர் என்கிறார் பாவாணர். இதேபோலச் சேசையங்காரும், வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதரும் பாராட்டப்படுகிறார்கள். கடைக்கழகவுண்மையை ஆணித்தரமாகச் சான்றுடன் நிறுவிய கிருட்டிணசாமி ஐயங்காரும் பாவாணரது பாராட்டிலிருந்து தப்பவில்லை.

"சிலப்பதிகார இசைத்தமிழ்ப் பகுதிகளைச் செவ்வையாக ஆராய்ந்து, பெருந்தொகையைச் செலவிட்டு, ஆயப்பாலை வட்டப்பாலைப் பண்திரிவு முறைகளையும் வீணையியல்பையும், தம் கருணாமிர்தசாகரத்தின் வாயிலாக விளக்கிக்காட்டி, தமிழிசையின் முன்மையையும் தாய்மையையும் நிறுவியவர், தஞ்சை ஆபிரகாம் பண்டிதரே."[15]

---

14. தமிழ் வரலாறு, ப.292.
15. தமிழ் வரலாறு, ப. 293.

தமிழர் பலர் தமிழாசிரியப் பயிற்சி பெற இயலாதவாறு வடமொழிப் பயிற்சியோடிணைக்கட்பட்டிருந்த பாடத்திட்டத்தின் தீங்குகளைந்து தமிழாசிரியர்களுக்குரிய தெளிவான வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தார் கா. நமச்சிவாய முதலியார். தமிழ் நாகரிக வரலாற்றையும் தமிழ் இலக்கிய வரலாற்றையும் ஆங்கிலத்தில் எழுதி அயல் நாட்டாரும் அறியச் செய்தவர் மு.சி. பூரணலிங்கம் பிள்ளையாவார்.

"காவிரி வாய்ப்படவும் கறையான் வாய்ப்படவுமிருந்த கடைக் கழக நூல் ஏட்டுச்சுவடிகளை, ஊரூராகவும் தெருத்தெருவாகவும் வீடு வீடாகவும் திரிந்து தேடியும், விறகுத்தலையன்போல் தலையிற் சுமந்து கொணர்ந்தும், அல்லும் பகலும் கண்பார்வை கெடக் கூர்ந்து நோக்கிப் படித்தும், அரிய ஆராய்ச்சிக் குறிப்புகளும் ஒப்புமைப் பகுதிகளும் வரைந்தும், ஆராய்ச்சியாளர்க்குப் பேருதவியாகவும் பிறர்க்குப் பெரும் பயன்பாடாகவும் வெளியிட்டவர், தென்கலைச் செல்வர் பெரும்பேராசிரியர், பண்டாரகர், உவே. சாமிநாதையரே."17 என்று பாவாணர் குறிப்பிடும்போது அழுக்காறும் அப்பழுக்கும் அற்ற ஒரு பெருமிதத்தைக் காணலாம்.

தொல்காப்பியம், யாப்பருங்கல விருத்தி முதலிய நூல்களை வெளியிட்டும், ஆங்கில முகவுரை வாயிலாகத் தமிழின் தனிப் பெருமையை எடுத்துக் காட்டியும் சிறப்புச் சேர்த்தவர் ச. பாவனந்தம் பிள்ளை.

கரந்தைத் தமிழ்க் கழக வாயிலாகத் தனித்தமிழ்க் கல்லூரி நிறுவித் தமிழைப் புரந்தவர் உமாமகேசுவரம் பிள்ளை.

இவ்வகையில் தமிழ் வரலாற்றை மாபெரும் மறுமலர்ச்சிக் குள்ளாக்கிய மறைமலையடிகளாரைப் பாவாணர் உச்சி மீது வைத்து மெச்சியுரைக்கிறார். இவரை ஒட்டித் தொண்டு செய்த நீலாம்பிகையார், குமுகாய, தொழிலாளர் மறுமலர்ச்சிக்குத் தூண்டுகோலாக இருந்த திரு.வி.க. தமிழ் இலக்கிய வரலாற்றில் தமிழுணர்ச்சியைப் பரப்பிய கா.சு.பிள்ளை, சுப்பிரமணிய சாத்திரியாரின் தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பை மறுத்துச் சூறாவளிபோல் சுழற்றியெறிந்த மன்னார்குடிச் சோமசுந்தரம் பிள்ளை ஆகியோரைக் குறித்து மகிழ்ச்சியுடன் பேசுகிறார்.

மு. இராகவையங்காரின் வேளிர் வரலாற்றை ஆராய்ச்சியால் வீசியெறிந்த ந.மு.வே. நாட்டார், மறைமலையடிகட்குத் துணைசெய்தும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தை நிறுவியும் தொண்டு செய்த வ. திருவரங்கம் பிள்ளை, தமிழிசைக் கிளர்ச்சி செய்த

அரசவயவர் அண்ணாமலையார், இதற்குத் துணைசெய்த பண்டிதமணி, தூய்தமிழ்த் தொண்டாற்றிய க.ப. மகிழ்நன், தமிழில் கலைச் சொல்லாக்கத்தைத் தொடங்கி வைத்த சாமி வேலாயுதம் பிள்ளை, இதே பணியில் இணைந்து செயலாற்றியும், சென்னை மாநில ஆட்சிச் சொல் அகரவரிசையைத் தொகுத்தும் பணியாற்றிய இ.மு. சுப்பிரமணிய பிள்ளை ஆகியோரை நினைவுகூர்கிறார். நெஞ்சத் துடிப்பெல்லாம் தமிழ்த் துடிப்பாக உள்ள துடிசைகிழார், இந்தியை வண்மையாய் எதிர்த்தவரும், எவருக்கும் அஞ்சாது தமிழைத் தாங்கியவருமான சோமசுந்தர பாரதியார் ஆகியோரைத் தமிழ் வரலாற்றில் மறவாது குறிப்பிடுகிறார்.

தமிழ்ப் பாதுகாப்பிற்கும் தமிழர் முன்னேற்றத்துக்கும் பாடிய பாவேந்தரையும், தமிழ்க்குத் துணைநின்று பல்வேறு கட்டங்களில் தம் பதவியை இழந்த இலக்குவனாரையும், ஆயிரத்துக்கு மேற்பட்ட அருந்தமிழ் நூல்களை வெளியிட்டு இலக்கண, இலக்கியச் செல்வங்களை எல்லாத் தமிழரும் ஏந்திப் பிடிக்குமாறு செய்த சுப்பையா பிள்ளையையும் சுட்டுகிறார்.

மற்றும் இக்காலத்தில் உயிருடன் வாழும் தமிழ் உணர்வு படைத்த சிலரையும் பாராட்டுகிறார். தம் கல்லூரி முதல்வராக இருந்து எல்லா வகையிலும் துணைசெய்த சேலம் இராமசாமிக் கவுண்டர் அவர்களைப் பாமாரி பொழிந்து பாராட்டுகிறார்.

தமிழ் வரலாற்றை முடித்துத் தமிழின் வருங்காலம் குறித்த கருத்துகளை வரையும் பாவாணர் அதற்கு 'வருநிலைப்படலம்' என்று பெயரிட்டுள்ளார். முற்காலத்தில் தமிழைக் கெடுத்தவர்கள் பல்வேள்விச்சாலை முதுகுடுமிப் பெருவழுதியும் சோழன் அரசவேள்வி வேட்ட பெருநற்கிள்ளியும், சேரமான் பல்யானைச் செல்கெழுகுட்டுவனும் போலும் மூவேந்தர்கள் ஆவார்கள். இக்காலத்தில் தலைமைப் பொறுப்பிலுள்ள பல தமிழறிஞர்களே தமிழுக்குக் கேடு சூழ்வதாக அவர் கூறுகிறார். தமிழ்ப் பேராசிரியர்கள் தமிழைக் காட்டிக் கொடுப்பதும், அதற்கு உடந்தையாயிருப்பதும், எதுபற்றியும் கவலைப் படாதிருப்பதுமான மூன்று நிலைகளில் செயற்படுவதாகப் பாவாணர் குறிப்பிடுகிறார்.

இத் தமிழ்ப்புலவர்களை வாள்போற் பகைவர் என்றும் கேள்போற் பகைவர் என்றும் இருவகைப்படுத்தலாம். முன்னவர் வடமொழியடிப் படையில் தமிழ் கற்று வண்ணனை மொழிநூலைக் கையாள்பவர்; பின்னவர் அவருடன் ஒத்துழைத்து நிற்போராவர். இவர்கள் தமிழ் வரலாற்றையும் தமிழ்ச் சொல் வளத்தையும் உள்ளபடியே

அறியாமையால் ஒரு சூழ்ச்சிக் கூட்டாக இருந்து கொண்டு கேடு புரிவதாகக் கூறுகிறார். செந்தமிழைக் காக்கவேண்டுமெனில் இவ்விருசார் தமிழ்ப்பகைவரையும் புறக்கணித்தல் வேண்டும்.

வடமொழி தமிழைத் தாக்கியும் தாழ்த்தியும் அதற்குரிய அரியணையைக் கைப்பற்றியிருப்பதால் வடமொழியைத் தாக்காமல் தமிழைக் காக்க முடியாது, வடமொழியை விலக்குதல் அல்லது அதன் உயர்வொழித்தலே தமிழைக் காக்கும் சரியான வழியாகும்.

தமிழை மீட்டல் காத்தல் வளர்த்தல் முதலிய பணிகளை உள்நாட்டளவிலும், வெளி நாட்டளவிலும் இரு வகையாக்கலாம். தமிழுக்குத் தமிழ் நாட்டிற் செய்யவேண்டியவை என 36 கருத்துகளைப் பாவாணர் தெரிவிக்கிறார். அவற்றுள் சில :-

தனித்தமிழ்ப் பற்றும் தமிழிலக்கிய அறிவும் உள்ள ஆசிரியரையே கல்வியமைச்சராக அமர்த்துதல் ;

தனித்தமிழ்ப் பற்றும் தமிழறிவும் உள்ள இயக்குநர், முதல்வர், பேராசிரியர் ஆகியோர் பதவியிலிருப்பினும் ஓய்வு பெற்றிருப்பினும் தகுதிநோக்கித் துணைவேந்தராக அமர்த்தப்படவேண்டும் ;

தமிழுக்கு மாறாகவேலை செய்யும் எந்தப் பதவியினரையும் நீக்குதல்;

கல்வி, ஆள்வினை, வழக்குத் தீர்ப்பு ஆகிய முத்துறையிலும், இரு மொழித் திட்டத்தையே செயற்படுத்துதல் ;

சென்னைப் பல்கலைக்கழக அகர முதலியைத் திருத்திச் செப்பனிடுதல், தமிழ்நாட்டு உண்மை வரலாற்றை எழுதுவித்துப் பாடமாக வைத்தலும், தமிழ்ப்பகைவரால் எழுதப்பட்ட பொய் வரலாற்றைப் புறக்கணித்தலும் ;

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியை உருவாக்குதல், செம்மையானஆங்கிலத் தமிழ் அகரமுதலி தொகுப்பித்தலும் கலை அறிவியல் கம்மியக் குறியீடுகளைத் தூய தமிழில் மொழிபெயர்த்தலும்;

கலைக்களஞ்சியத்தில் தமிழைப் பற்றியுள்ள தவறான கருத்துகளைத் திருத்துதல் ;

அச்சிற்கு வாராத தமிழ்ச் சொற்களையும் தமிழ் ஏட்டுச் சுவடிகளையும் தக்கவாறு பதிப்பித்தல் ; கல்வெட்டுத் தொகுப்பும் வெளியீடும் தக்க தமிழறிஞரைக் கொண்டு செய்வித்தல்.

பாடநூற்களைத் தூய தமிழில் எழுதுவித்தல் ; ஆட்பெயர் ; இடப்பெயர், பொருட்பெயர், பட்டப் பெயர், சிறப்புப் பெயர் ஆகிய அனைத்தையும் தூய தமிழாக்கல் ; இலக்கணம், இசை, நாடகம், கணியம், மருத்துவம் முதலிய பழந்தமிழ் அறிவியல்களையும் கலைகளையும் தூய்மைப் படுத்துதல் ;

அரசினர் அறிவிப்புகளும், விளம்பரங்களும் செப்பமாக அமையச் செய்தல்; (தமிழ் நாட்டுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் பலவற்றில் திருக்குறளே தவறாக எழுதி வைக்கப்பட்டிருப்பதை நினைவிற்கொள்ளலாம்.)

தமிழையும் பதினெண் திராவிட மொழிகளையும் ஒருங்கே கற்பிக்கும் கல்லூரி நிறுவுதல்.

கோயில் வழிபாடு, இருவகைச் சடங்குகளும் தமிழில் நடைபெறச் செய்தல்;

தமிழுக்காக உயிரிழந்தோர் குடும்பத்துக்கும், தமிழ்ப்பற்றாற் பதவி இழந்தோர்க்கும், வருவாயற்ற தமிழ்ப் புலவர்கட்கும் உதவுதல் ;

தனித்தமிழ் இதழ்கட்குப் பொருளுதவி செய்தல் ;

மேனாட்டாரைத் துணைகொண்டு தென்மாவாரியில் ஆழ மூழ்கிப் பழம்பொருள் எடுத்து ஆராய ஏற்பாடு செய்தல் ;

தியாகராசையர் கீர்த்தனைகள் போன்றே இன்பமாய்ப் பாடக் கூடிய உயரிய மெட்டுப் பாடல்களை அறிவும் ஒழுக்கமும் தழுவிய பொதுப் பொருள்கள் பற்றி இயற்றித் தரும் இசைவாணர்க்கும் பாவலர்க்கும் சிறந்த பரிசளித்தல் ;

ஊர்க்காவல், படைத்துறை, உடற்பயிற்சி முதலியவற்றைத் தமிழ் ஏவற் சொற்களைக் கொண்டு நடப்பித்தல் ;

மறைமலையடிகள் பி.தி. சீநிவாசையங்கார், வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர் ஆகிய மூவர்க்கும் சென்னையில் படிமை நிறுவுதலும், அம் மூவரது முழுவுருவப் படங்களையும் அரசியல் அலுவலகங்களிலும் பொதுக் கூடங்களிலும் மாட்டி வைத்தலும்;

செய்யுட்கே சிறப்பாகவுரிய இலக்கணக் கூறுகளை நீக்கி விட்டு உரை நடையிலக்கணத்தை மட்டும் விரிவாகவும் விளக்கமாகவும் எழுதிப் பொதுத் தமிழ் மாணவர்க்குப் பாடமாக வைத்தல் ;

முனைவர் சட்டர்சியும், முனைவர் கக்திரேயும் 'இந்திய ஞால நூலியல் வரலாறு' முதன் மடலத்தில் தமிழைப் பற்றி வரைந்துள்ள தவறாள கருத்துகளைத் திருத்துதல்.

ஆகிய பணிகளைப் பாவாணர் குறிப்பிடுகிறார்; இவையனைத்தையும் மேற்கொண்டு ஒருசில ஆண்டுகள் விடா முயற்சியுடன் செயற்படுத்தினால் தமிழ் தன் பழைய தாழ்மைகளினின்று விடுபட்டுப் புதுநிலை கொள்ளும் என்பது உறுதி.

இனித் தமிழுக்கு வெளிநாட்டில் செய்ய வேண்டியவை என ஏழு கருத்துகளைக் கூறுகிறார்.

1. உண்மையான தமிழ் வரலாற்றை ஆங்கிலத்தில் வெளியிட்டு உலக முழுவதும் பரப்புதல் ;
2. வெளி நாடுகளில் உள்ள தமிழ்ச் சொற்கள், நூல்கள், கலைகள், பழக்க வழக்கங்கள், வழிபாட்டு முறைகள் முதலியவற்றை ஆராயுமாறு தக்க ஆராய்ச்சியாளரைத் தொடர்புடைய நாடுகட்கு அனுப்புதல் ;
3. வெளிநாடுகள் போன்றே நடுவண் அரசு, பிற இந்திய மாநிலங்களோடு ஆங்கிலத்தில் மட்டும் எழுத்துப் போக்குவரத்து நடத்துதல் ;
4. ஒவ்வொரு பெருநாட்டிலும் ஒரு தமிழ்ப் பேராசிரியர் பதவி ஏற்படச் செய்தல்;
5. தமிழ் மொழி நாகரிகப் பண்பாட்டை உலகமெங்கும் எடுத்துரைக்க ஒரு விடைமுகவர் குழுவை (Delegation) ஏற்படுத்தல் ;
6. இலங்கை போன்ற நாடுகளில் தமிழ் அறிவும் பற்றுமுள்ள தமிழர் ஒருவரைத் தூதராக அமர்த்தல்.
7. ஆக்சுப் போர்டு ஆங்கில அகரமுதலி, பிரித்தானியக் கலைக் களஞ்சியம் ஆகியவற்றில் தமிழைப் பற்றி உள்ள தவறான குறிப்புகளை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

தமிழ் வரலாற்றைக் குமரிக்கண்டத்திலிருந்து தொடங்கி அதன் வளர்ச்சி தளர்ச்சிகளை மேற்கோள்களுடனும் வேர்ப்பொருள் ஆராய்ச்சியுடனும் தெளிவு படுத்தி இன்றைய காலக் கட்டத்தில் நலம் செயத்தக்க பணிகளைத் தெளிவுறச் சுட்டிக் காட்டும் பாவாணர் தமிழின் மீது எல்லையற்ற அன்பும், தமிழின் நலிவு கண்டு மாறாத கவலையும், தமிழைப் பண்டு போல் புதுமை மொழியாக ஆக்கிக் காட்ட வேண்டுமே என்னும் துடிப்பும் உள்ளவர்.

எனினும் அவரது ஆசைகளை நாம் புரிந்து கொண்டு எந்த அளவுக்குச் செயலாற்றுகிறோம் என்பதைப் பொறுத்துத்தான் தமிழின் ஒளிமயமான எதிர்கால வரலாற்றை நாம் உருவாக்க முடியும். உள்ளத்தில் பிறந்த உண்மை ஒளியின் அடிப்படையில் பாவாணர் கூறும் கருத்துகளை ஆராய்ந்து ஏற்றுச் செயற்படுதலே பாவாணர்க்குச் செய்யும் சிறப்பாகும். ஆரியர் தென்னாடு வந்தபின் தமிழ் வளர்ச்சி தடைப்படுத்தப்பட்டது. ஆயிரக்கணக்கான சொற்கள் மறைந்தும் வழக்கு வீழ்த்தப்பட்டும் போயின. ஆயினும் அறிவியற் குறியீடுகளை மொழிபெயர்க்கப் போதிய கருவிச் சொற்கள் இன்றும் உள்ளன. பொறுமையோடு அதைச் செய்தால் சிறப்புறலாம். ஆங்கிலராட்சி வந்தபின், அதுவும் சென்ற நூற்றாண்டில்தான் தமிழ் வளர்ச்சி தொடங்கியது. மறைமலையடிகளால் அது வேகம் பெற்றது. இன்று பலரது முயற்சியினால் செறிவுடனும் நிமிர்ந்து நின்றும் தமிழ் வளர்ந்து வருகிறது.

"தமிழைக் காப்பது தமிழ் நாட்டரசின் தனிக்கடமை. அது அக்கடமை தவறின் நக்கீரரும் மறைமலையடிகளும் சோமசுந்தர பாரதியாரும் இலக்குவனாரும் போல் தமிழைப் போற்றிக் காப்பது இற்றைத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் தலைமேல் விழுந்த தலையாய கடமையாம்"[17] என்று பாவாணர் சுட்டுகிறார்.

தமிழர் கடமை என்ன என்பது குறித்துப் பாவாணர் விரிவாகக் கூறுகிறார்.

"இந்த நிலையில் தமிழிற் போதிய சொற்களில்லை என்று குறை கூறுதலும் வழக்கற்ற சொற்களைப் புதுக்கக்கூடாதென்று தடை செய்தலும் ஒருங்கே நிகழ்கின்றன. தமிழாட்சியும் மாட்சியும் நீங்கி எத்தனையோ நெடுங்காலம் கழிந்தபின்னும், இக்காலக் கருத்துகட்கேற்ற சொற்களும் சொற்கருவிகளும் தமிழில் மலிந்துள்ளன. பல தமிழ்ச்சொற்கள் வழக்கற்றமைக்குக் கரணியம் அயலாரால் புகுத்தப் பெற்ற ஏமாற்றுக்கொள்கை யாதலின், அவற்றைப் புதுக்குதல் தமிழர் கடனும் முறைமையுமாகும்.

ஒரு நாட்டுச் செல்வங்களுள் மொழியும் ஒன்றாகும். மொழித் துணையின்றி ஒரு நாட்டார் நாகரிகமாகவும் (வசதியாகவும்) ஏந்தாகவும் வாழ்வதரிது. முன்னோர் அரும்பாடுபட்டீட்டிய அறிவுச் செல்வமெல்லாம், மொழிவாயிலாகவே போற்றப்பட்டு வருகின்றது. புல் என்றொரு பொதுப் பெயரையோ அறுகு என்றொரு சிறப்புப் பெயரையோ, வா என்றொரு வினைச் சொல்லையோ, புத்தம் புதுவதாக

17. மண்ணில் விண், ப. 248.

ஒருவர் எங்ஙனம் ஆக்குதல் கூடும் ? எத்துணைச் சொற்கள் சேர்ந்து ஒரு பெரு மொழியும் அதன் இலக்கியமும் அமைகின்றன ! முன்னோர் வைத்துப்போன சின்னஞ் சிறு பொருட்களைக்கூடப் பொன்னேபோல் போற்றுவது மக்கள் வழக்கமாயிருக்க, தொன்று தொட்டு இன்றுகாறும் கணக்கற்ற தலைமுறைகளாய்த் தொடர்ந்தும் திரண்டும் வரும் அரும் பெருஞ் செல்வத்திரட்டாகிய மொழியை, எத்துணைக் கவனமாகவும் கண்ணியமாகவும் பேணுதல் வேண்டும் !

இடைக்காலத் தமிழரின் பேதைமையால், பாழான மண்ணிற்கும் படையான சிதலுக்கும், படியாதார் நெருப்பிற்கும் பதினெட்டாம் பெருக்கிற்கும் பற்பல பூச்சிக்கும் பகைவரின் சூழ்ச்சிக்கும், இரையான கலைநூல் சொல் எத்துணை யெத்துணை ! பல கலைகளிலுள்ள சொற்றொகுதிகளெல்லாம் சேர்ந்தே ஒருமொழியாகும். ஒரு சார் கலைச் சொற்களைப் பிறிதொரு கலையிலும், ஒரு நூற் சொற்களைப் பிறிதொரு நூலிலும் காண்பதரிது. திருவாசகம் இன்றில்லையேல், சாழல், தெள்ளேணம் முதலிய சொற்களை வேறெங்கு காணமுடியும்? திருவாசகத்திலும் திருவாசகமான எத்துணை அருநூல்களும் பெருநூல்களும் இறந்துவிட்டன! அவற்றிலுள்ள முழுமணிச் சொற்களனைத்தும் பெரும் பாழ்க்கடலுள் மூழ்கினவே ! தொல்காப்பியம் ஒன்றில்லாவிடின் இற்றைத் தமிழர்(கதி) நிலை என்னவாகும் ? இவற்றை யெல்லாம் தீர எண்ணி, இறந்தன போக எஞ்சிய சொற்களையேனும் இற்றைத் தமிழர் இறவாது காப்பாராக."[18]

இவ்வாறாக, விரிந்த பார்வையிலும் ஆழமான ஆராய்ச்சியிலும் ஒப்பீட்டு நோக்கிலும் பாவாணர் தமிழ் வரலாற்றை நமக்கு எடுத்துக் கூறுகிறார்.

18. சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் ப. 88-89.

# பாவாணர் பார்வையில் தமிழர் வரலாறு

முதன் முதல் நாகரிக விளக்கேற்றி நானில முழுவதும் அறிவொளி பரப்பியவன் தமிழனே.

தமிழர் குமரிக்கண்டத்தில் தோன்றி, கடல்கோள், இனப்பெருக்கம், நாடுகாண் விருப்பம் முதலிய பல்வேறு கரணியங்களால் வடக்கே சென்றனர். அவருட்பலர் பனிமலைவரை சென்று திரவிடராயினர்.

கிறித்துவுக்கு முற்பட்ட தமிழர் வரலாறு பெரும்பாலும் ஆரியக் கலப்பு இல்லாதது ; தமிழர்க்குப் பெருமை தருவது ; பிற்பட்ட வரலாறு ஆரியக் கலப்பு உள்ளது ; சில வகைகளில் தமிழர்க்குச் சிறுமையும் சேர்ப்பது ; ஆயினும் இற்றைத் தமிழர் நிலை இரங்கத்தக்கதாய் உள்ளது. "இற்றைத் தமிழருட் பெரும்பாலாரும், தம்மைத் தாமே தாழ்த்துவதிலும், இனத்தாரைப் பகைத்துப் பகைவரை வாழவைப்பதிலும், பகைவர் மனங்குளிரத் தம் முன்னோரைப் பழிப்பதிலும், தம்மருமைத் தனிமொழியைப் புறக்கணித்துப் பகைவரின் அரைச் செயற்கைக் கலவை மொழியைப் போற்றுவதிலும், ஒப்புயர்வற்றவராய் உழல்கின்றனர்."[1]

எட்டாம் நூற்றாண்டில் வெளிநாட்டினின்று வந்த முகமதியர் சிறுபான்மையர் எனினும் ஆங்கிலர் நீங்கும் காலத்தில் தமக்கெனக் கோன்மை கொண்ட தனி நாட்டைப் பெற்று விட்டனர். ஆனால் நூறாயிரம் ஆண்டிற்கு முன்பே தோன்றிய தமிழர் 'தம் நாடு' என்று சொல்லிக் கொள்ளும் முழுமையைப் பெறவில்லை. இந்நிலையில் தமிழர்தம் வரலாற்றைத் தெளிவுபடுத்திக் கொள்வதுதான் எதிர்கால ஏற்றத்தை எளிதில் எய்துவதற்குரிய வித்தாகும்.

முதலில் தமிழர் யார் என்பதை வரையறுத்தல் வேண்டும். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு தமிழ்நாட்டிலோ அயலிடங்களிலோ வாழ்பவரும், தமிழ் நாட்டில் வாழ்ந்து தலைமுறை பலவாய்த் தமிழரோடு

---

1. தமிழர் வரலாறு, முகவுரை.

தமிழராகக் கலந்து விட்டவரும் தமிழர்கள் எனப்படுவர் என்பதே பொதுக் கருத்து.

"காடுபுகுந்தவ ராயினும் பண்டைக் கவின் மறந்திந்
நாடு கடந்தவ ராயினும் இப்பெரு நானிலத்தே
ஓடி உறைபவ ராயினும் உண்மைத் தமிழ்க்குருதி
ஓடுவ தென்றே உரைப்பார் எவரோ அவர்தமிழர்" [2]

என்று பெருஞ்சித்திரனார் கூறுகிறார்.

பாவாணர் இது குறித்துக் கூறும் கருத்துகளை நோக்கவேண்டும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதே தமிழர் கொள்கை. தமிழைப் போற்றுவாராயின், தமிழருக்கு மிக நெருக்கமான திரவிடர் மட்டுமன்றி, மராட்டியர் மார்வாடியர் முதலிய வடநாட்டாரும், ஆப்பிரிக்கர் ஐரோப்பியர் முதலிய அயல் நாட்டாரும், தமிழரே.

'பெருமையெனப் புன்செருக்கிற் பிரிந்து வாழ்ந்து
பிறருக்கொன் றீயாத புல்ல ரேனும்
எருமையொடு குரங்கரவம் தவளை தின்பார்
இரப்பெடுப்பார் தீயதொழு நோய ரேனும்
கருமைமிகும் ஆப்பிரிக்கர் முண்ட மெய்யர்
காடுறையும் விலங்காண்டி மாந்த ரேனும்
அருமை யுறுந் தனித்தமிழை விரும்பு வாரேல்
அவரன்றோ தலையாய தமிழர் கண்டீர்'

தமிழைப் போற்றுதலாவது, தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமாகும் என்னும் உண்மையை ஒப்புக் கொள்வதே[3] என்கிறார்."

தமிழர் யார் என்பது குறித்துப் பாவாணர் கூறும் மற்றொரு கருத்தும் கவனிக்கத் தக்கது.

"தமிழ் நாட்டு மக்களுள் ஆரியர் யாவரெனின் பார்ப்பனர் என்னும் ஒரு குலத்தாரே. பிறருள், பிற்காலத்து வந்த மேனாட்டாரும், அவரது கலப்புற்ற இந்தியரான சட்டைக் காரரும், உருதுவைத் தாய்மொழியாகக் கொண்ட முகமதியரும் தவிர மற்றவரெல்லாம் தனித்தமிழரே"[4] என்கிறார்.

2. பெருஞ்சித்திரன், 'தென்மொழி' இதழ்
3. தமிழர் வரலாறு, ப. ௩௫௨ (352)
4. ஒப்பியன் மொழி நூல், ப. 2

*தமிழர் என்பார் தமிழைப் பேணுவாரே.*

மாணிக்கவாசகர், போப்பையர், சீனிவாச ஐயங்கார், இராமச்சந்திர தீட்சிதர் போன்றவர்களே உண்மைத் தமிழர்கள் என்கிறார் பாவாணர்.

"தமிழ்நாட்டிற் பிறந்து தமிழரென்று பெயர் தாங்கினும் வடமொழியில் வழிபாட்டை விரும்புபவரும், இந்தியை இந்தியப் பொது மொழியாக ஏற்பவரும், தமிழர் முன்னேற்றத் திட்டங்களைத் தடுப்ப வரும் தமிழராகார்"[5] என்பது பாவாணர் கருத்து.

இந்த வரையறை (Definition) யின் அடிப்படையில் தமிழர் வரலாற்றை ஆராய முற்படுவோம். மாந்தனின் தொல்லகம் குமரிக் கண்டம் எனப்படும் 'லெமூரியா' (Lemuria) தான் என்னும் ஆராய்ச்சிகளை முழுமையாக ஏற்றுக் கொண்டு அந்த அடிப்படையில் தமிழர் வரலாற்றைப் பாவாணர் எழுதுகிறார்.

பழந்தமிழர் தம் முன்னோரைத் தென்புலத்தார் என்பர். தெற்கே அமிழ்ந்துபோன குமரிநாடே தமிழர் தொல்லகம் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

"தமிழ் என்னும் சொல் முதலாவது தமிழரைக் குறித்திருப்பது அவருடைய தனிப்பட்ட நாகரிகம் பற்றி. பண்டைக் காலத்தில் நாவலந்தேயத்தில் மட்டுமல்ல, உலக முழுவதிலுமே தமிழர் தலை சிறந்த நாகரிகராயிருந்ததனால் தனிப்பட்டவர் என்னும் பொருளில் தமிழர் எனப்பட்டனர். பழந்தமிழரின் நாகரிகத்தை அவருடைய பழக்க வழக்கம், சிறந்த கருத்துகள், செய்யுள் வன்மை, அவர் செய்திருந்த பொறிகள், தமிழின் அமைதி, முத்தமிழ்ப் புணர்ப்பு, தமிழ்க்கலை நூல்கள் முதலியவற்றால் அறியலாம்."[6]

"தமிழன் என்னும் இனம் தமிழ் பற்றியதே யாதலால், தமிழ் தோன்றிய இடமே தமிழன் பிறந்தகமாம். அது தென்வாரியில் மூழ்கிப்போன குமரிநாடே"[7] என்று தெளிவுபடுத்தி அதற்காகப் பதினாறு சான்றுகளையும் தருகிறார். மேலும் குமரி நாட்டுத் தமிழ்த் தோற்றத்தை ஒப்புக் கொள்ளாதார் தமிழரேனும் அயலாரேனும் எத்துணைத் தமிழ் கற்றவரேனும் எப்பெரும் பட்டம் பெற்றவரேனும் தமிழியல்பையும், தமிழர் வரலாற்றையும் அறிந்தவராகார்.

---

5. மண்ணில் விண், ப. 183.
6. திராவிடத்தாய், ப. 4.
7. தமிழர் வரலாறு, ப. கஉ (12)

தமிழர் தென்னாட்டுப் பழங்குடிமக்களே என்னும் உண்மையை நிலை நாட்டிய பி.தி. சீநிவாசையங்கார், இராமச்சந்திர தீட்சிதர் போன்றவர்கள் பாவாணருக்கு வழிகாட்டுகின்றனர்.

தமிழர் வரலாற்றுக் காலக் கட்டங்களை மூன்று வகையாகப் பகுக்கிறார். ஆரியர் வருகைக்கு முற்பட்ட தனித்தமிழ்க் காலச் செய்திகள், ஆரியர் வந்தபின் அவர் சொல்லும் கருத்தும் தமிழிலும் தமிழர் வாழ்விலும் சார்ந்த நிலை ; ஆங்கிலர் வந்தபின் தமிழ் மொழியும், தமிழிலக்கியமும், தமிழர் உள்ளமும் ஆரியக் கலப்பு நீங்கித் தெளிந்த நிலை ஆகிய மூன்றுமே அவரது பகுப்பு நிலைகள்.

குமரி மலைத் தொடரின் அடிவாரமான குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த குமரிநாட்டு மாந்தர் பொன்னம் (Metal) எதுவும் கண்டு பிடிக்கப்படும் முன் கற்களாலேயே கருவிகள் செய்து கொண்டு வாழ்ந்தனர். கி.மு. 5,00,000 இவர் தம் காலமாகும்.

கி.மு. 1,00,000 முதல் கி.மு. 50,000 வரையில் புதுக்கற்காலம். கருங்கல்லால் வழவழப்பும் கூர்மையும் உடைய கருவிகளைச் செய்து கொண்டனர். குறிஞ்சியிலும் முல்லையிலும் வாழ்ந்தனர் ; கால் நடை வளர்ப்பும், வானாவாரிப் பயிர் விளைப்பும் தொழில்கள்.

அடுத்தது கி.மு. 50000-30000 எல்லைக்குட்பட்ட பொற்காலம். பொற்காலம் என ஒன்று தமிழகம் தவிர வேறெந்த நாட்டிற்கும் இருந்ததில்லை என்று ஆணித்தரமாகக் கூறுகிறார். பிறநாடுகள் ஒழுக்கத்திலும் கல்வியிலும் தலைசிறந்த காலத்தை வேண்டுமானால் பொற்காலம் என்று கூறிக்கொள்ளலாமே தவிர, செஞ்சொற்பொருளில் பொற் கருவிகள் வழங்கிய காலமொன்றைக் குறிக்க முடியாது என்கிறார்.

குமரிக் கண்டம் ஆத்திரேலியாவோடும் தென்னாப்பிரிக்காவோடும் இணைந்திருந்ததனால் அந் நடுவிடத்திலும் பொற்றகணைகள் எளிதாய்க் கிடைத்திருக்க வேண்டும். குமரிக்கண்டம் முழுவதும் பழம் பாண்டி நாடாகும். மக்கள் மருத நில வாழ்வை மேற்கொண்டபோதுதான் நாகரிகப் பாங்கும், நகரப் பாங்கும், நகர அமைப்பும் உருவாயின.

கோயில் வழிபாட்டுக்கு ஒரு பூசகனும், காவலுக்கும், வழக்குத் தீர்க்கவும் ஒரு தலைவனும், பண்டமாற்றக் கடைக்காரனும் தோன்றியிருக்க வேண்டும். பின் உழவர்களும், உழவர்க்கு வேண்டிய துணை செய்யும் தொழிலாளர்களும் தோன்றினர். செம்படவரும் உமணரும் மட்டும் நெய்தல் நிலத்தில் தங்கி மீன் பிடித்தும் உப்பு விளைத்தும் வந்தனர்.

செம்புக் காலம் கி.மு. 30000-கி.மு. 15000 எனும் எல்லையுடையது. அரசராட்சியும் அவரின் கீழ் உழவர்களும் அவர்களிலிருந்து பிரிந்து வணிகர்களும் கலந்து மக்கள் அமைப்பும் நிலைபெற்றன. தமிழர்களே கோயில் வினைகளைப் பார்ப்பாராகவும் அமைந்தனர்.

அடுத்தது உறை (வெண்கலம்)க் காலம். இது கி.மு. 10000 வரை வரும். யானை, குதிரைகட்கான கழுத்துமணிகள், அரசவையில் மணி, கோயில்மணி என்றவாறு ஒழுகலாறுகள் விரிவடைந்துள்ளன. இக்காலத்தில் நாவாய் முதலியவற்றின் துணைகொண்டு நெய்தல் நில மக்கள் நீர் வாணிகத்தைப் பெருக்கியுள்ளனர்.

வெள்ளிக்கலங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் வெள்ளி வேய்ந்த மாடங்கள் பல இடங்களில் இருந்ததாகவும் கூறப்படுகிறது. எனினும் வெள்ளிக்காலம் என ஒருகாலம் அமையவில்லை.

கி.மு. 10000க்குப் பின் வருவது இருப்புக்காலம். இதன் தாக்குரவு (Influence) இன்று வரை நீள்கிறது.

இந்நிலையில் தமிழர்தம் கழக வரலாற்றைப் பாவாணர் சுட்டுகிறார். முதலிரு கழக உறுப்பினர்களும்தூய தமிழர் ஆவர் ; அகத்தியர், இடைக்கழக வீழ்ச்சிக்குப்பின் வடநாட்டினின்று வந்த ஆரியர். 'தலைக்கழகம் கி.மு. 10000' என்பதைப் பாவாணர் ஏற்கிறார்.

89 பாண்டியர் தலைமுறை இருந்திருப்பதால் ஒரு தலைமுறைக்குச் சராசரி 80 ஆண்டுகள் என்று வைத்துக் கொண்டாலும் தலைக் கழகம் 4440 ஆண்டு நீடித்தது என்பது பொருத்தமே.

இக்காலத்தில் தமிழர்கள் பல வகையான பண்பாடுகளுக்கு உறைவிடமாகத் திகழ்ந்தனர். சுருங்கச் சொல்லல் கூட ஒரு பண்பாட்டுக் கூறாகப் பண்டைத் தமிழராற் கொள்ளப்பட்டது. இலக்கணத்தில் பொருளிலக்கணப் பகுதி அமைந்துள்ளதே தமிழனுக்குச் சிறப்பைச் சேர்ப்பதுதான். "இதனால் தமிழன் பெருமையையும் தமிழின் பெருமையையும் ஒருங்கே உணரலாம். ஏனை மொழியிலக்கண நூலாரெல்லாம் எழுத்து, சொல், யாப்பு அணி என்னும் நாலொடு நின்றுவிட, தமிழிலக்கண நூலார் மட்டும் யாப்பின் பொருளுக்கும் இலக்கணம் வகுத்தது, குமரி நாட்டுத்தமிழரின் ஒப்புயர்வற்ற அகக்கரண வளர்ச்சியைக் காட்டும். பொருளிலக்கணம் போலப் பண்டைத் தமிழனின் புலமை நுணுக்கத்தைக் காட்டும் சான்று வேறெதுவுமில்லை."[8]

---

8. தமிழர் வரலாறு, ப. ககரு (115)

தமிழனுக்குத் தமிழ் அகம் ; திரவிடம் அகப்புறம் ; ஆரியம் புறம்; சேமியம் புறப்புறம் ; இவ்வகைக் கூற்றினின்று அகம், புறம் என்னும் சொற்களின் பொருளை ஒருவாறு உணரலாம்.

கழகத் காலத்திலேயே தமிழர் நாடகத்துறையில் வல்லவராக விளங்கினர். கணக்கு, கணியம் முதலியனவும் கைவந்த கலைகளாக விளங்கின. தலைக்கழகக் காலத்தில் சிவ மதத்திற்கும் திருமாலியத்திற்கும் பொதுவானதும், ஒரு பரம்பொருளை எங்கும் என்றும் உள்ளத்தில் தொழுவதும் ஆன கடவுள் நெறி தமிழ்த்துறைவியரால் தோற்றுவிக்கப்பபட்டது ; காலமாறுதல்களாலும் ஆரியர்தம் கலப்பு முயற்சிகளாலும் தமிழர் தம் அடிமைத் தனத்தாலும், இந்து மதம் தலைதூக்கியது. உருவவழிபாடு, வடமொழி வழிபாடு முதலியன புகுத்தப்பட்டன ; கோயில் பூசகர்களும் தமிழர் அல்லாதவராக வரக் கூடிய சூழல் வந்தது. இக் கொடுமையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்றுதான் பின்னாளில் வள்ளலாரும் குரல் கொடுத்தார்.

**'வேறுபடு சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்**
**விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்**
**மாறுபடும் கருத்தில்லை' என்கிறார்.**

முதற் கடல்கோள் நேர்ந்த போது ஆப்பிரிக்காவும் ஆத்திரேலியாவும் குமரி நாட்டினின்று அறவே பிரிந்து நெடுந் தொலைவு நீங்கி விட்டன.

தமிழகக் கலவணிகர் மேலையாசியாவோடும், எகிப்து நாட்டொடும் வணிகம் செய்து வந்ததாகவே தெரிகிறது.

பஃறுளியாறும் குமரிக்கோடும் மூழ்கினாலும் அதிலிருந்து தப்பிய பாண்டியன் வடதிசை சென்று கங்கைச் சமவெளியைக் கையகப்படுத்தி இமயத்திலும் கயல் பொறித்து மீண்டான். அப்பகுதி மொழி பெயர் தேயமாகையால் தன் குடியினன் ஒருவனை அமர்த்தி விட்டுத் தென் பகுதிக்கே மீண்டான். இடைக்கழகத்தையும் நிறுவினான். பாண்டிய நாட்டின் முழுப் பகுதியையும் கவனிக்க முடியாமையால் கீழ்நாடு சோழ நாடாகவும், மேலைநாடு மலைச்சரிவால் சாரல் நாடாகவும் (சேரல்நாடு) பெயர் பெற்றன. இவ்வகையில் செல்வாக்கு வளர்ந்த பின் மூவேந்தர் ஆட்சி வந்தது.

கடல் வழியாக வருவோர்கட்குப் பாண்டிய நாடு வாயில்போல இருந்ததால் அதன் தலைநகர் கதவம் அல்லது கதவபுரம் என்று பெயர் பெற்றிருக்கலாம்.

கதவம் - வடமொழியில் கவாட - கபாட (முறைமாற்றுப் போலி). வடமொழியில் இச்சொற்கு மூலம் இல்லை. சோழனுக்கு உறையூரும், சேரனுக்குக் கருவூரும் (திருச்சி மாவட்டம்) தலை நகராயிருந்தன. பாண்டியன் தலைநகர் ஆட்சிக்கும், நீர் வாணிகத்திற்கும் ஒருங்கே பயன்பட்டது. நெல்லை, மதுரை, முகவை மாவட்டங்களின் மேல் பகுதியும், கொங்குநாடும் வேம்பாய் (பம்பாய்) மாநிலத்தில் மேல் பாகமும் சேர நாடாயிருந்தன.

கதவபுரம் கட்டியமைக்கப்பட்டுப் பல்லாண்டானபின்பு தான் இரண்டாம் கழகம் நிறுவப்பட்டது.

மூவேந்தரும் ஒரே குடியினரானதால் தம்முட் பெண் கொண்டும் கொடுத்தும் வாழ்ந்தனர். புதுவிறல் தாயத்தை நச்சிய பேராசைப் பெருவேந்தன் தலையெடுத்தபோது மட்டும் ஆநிரை கவர்தல் எனும் விளையாட்டில் தொடங்கி அழிவைத்தரும் போர்வரை வந்துள்ளது.

கடல் கோளச்சத்தாலும் மக்கட் பெருக்கத்தாலும், பெருங்கூட்டத்தார் வடநாவலம் சென்று குடியேறினர். தம் தாயகத்தை நினைவு கூர்தற்கு அவர்கள் அமைத்துக் கொண்ட நகரே மதுரை (மதுரா).

சோழனும் வடபுலம் சென்று இமயத்தில் புலி பொறித்து விட்டுத் தன் படிநிகராளியை (Representative) அங்கு அமர்த்தி விட்டு வந்தான். வடபுலத்திலும் தமிழர் மிகுதியாயிருந்ததாலும் கற்றார் அனைவர்க்கும் தமிழே இலக்கிய மொழியாய் இருந்தமையாலும் தமிழரசே எங்கும் நடைபெற்றது.

இரண்டாம் கடல்கோள் தோராயமாகக் கி.மு. 2500இல் நிகழ்ந்திருத்தல் வேண்டும். இதில் நாகநாடு எனும் பகுதி 1200 கல் தொலைவு பரப்பளவுடன் மூழ்கிப் போயிற்று.

கடல்கோள் நிகழ்ந்தவுடன் பாண்டியன் முன்னரே அணியமாக வைத்திருந்த பெருங்கலத்திலேறிக் கொற்கைத் துறைப்பாகம் வந்து சேர்ந்திருக்க வேண்டும் என்று பாவாணர் கருதுகிறார். அதன் பிறகு தன் குடிகள் வாழ்வதற்குச் சோழ நாட்டிலும் சேர நாட்டிலும் தென் கோடிப் பகுதிகளை வென்று கொடுத்தான். இந்நிலையில் சேர சோழ பாண்டியர்களுக்குள் பிணக்கும்அதன் விளைவாகப் போரும் நிகழ்ந்துள்ளன. மூவேந்தர்களுக்குள் பிற்காலத்தில் ஏற்பட்ட போர்களுக்கும் இதுவே தொடக்கமாகவும் அமையும்.

சாலித்தீவினைப் பாண்டியன் கைப்பற்றியபின் தமிழர் அங்கும் சென்று குடியேறினர். பின் படிப்படியாகப் பக்கத்துத் தீவுகளிலும்

நிலங்களிலும் பரவினர். பொருநையோ (Borneo) மலையா (Malaya) என்னும் பெயர்களை ஆழ்ந்து நோக்கினால் பழந்தமிழர் தொடர்பு விளங்கும்.

சோழர்களின் சிறப்பாக ஒன்றைக் குறிப்பிடலாம். கரிகாலன் முன்னோருள் ஒருவன் ஆழ்கடல் கடந்து மீண்டிருக்கிறான்.

கரும்பு நியூகினியாவில் விளைந்த ஒன்று. அதனருகில் உள்ள சாலிநாட்டுக்கு அது பரவியது ; பின் சேரருள் ஒருவன் தமிழகத்துக்குக் கரும்பைக் கொண்டு வந்து பயிராக்கினான். இங்ஙனம் நிலவணிகரும் நீர்வணிகரும் மூவேந்தரும் பலவிடங்களிலிருந்து அரும் பொருட்களையெல்லாம் கொண்டுவந்து தமிழர் வாழ்க்கையை வளப்படுத்தினர். சீனத்திலிருந்து கற்கண்டு, மலையாவிலிருந்து பாக்கு, அரேபியாவினின்று கொடிமுந்திரி, சின்ன ஆசியாவிலிருந்து கொத்துமல்லி, சீரகம், பெருஞ்சீரகம் முதலியவை கொண்டு வரப்பட்டன.

"கி.மு. 1500 போல் ஆரியர் இந்தியாவிற்கு வரும் வரை, தமிழ் மொழியும் தமிழிலக்கியமும் தமிழ் நாகரிகமும் தமிழர் வாழ்க்கையும், இம்மியும் ஆரியங் கலவாது முழுத் தூயநிலையில் இருந்து வந்தன."[9]

உலக மக்கட்குள் தமிழர் தலைசிறந்த நாகரிகம் உடையவர் என்பதை அவருடைய மொழியமைதியும் கருத்தும் தெளிவாகக் காட்டும் என்று பாவாணர் குறிப்பிடுகிறார்.

தமிழன் சிறப்பைக் கால்டுவெல் வியக்கிறார்.

" 'தமிழ் போன்ற திரவிடமொழியை நன்றாகக் கற்ற ஐரோப்பியர் ஒருவர் அத்தகைய வியத்தகு மொழியை வளர்த்துள்ள மக்களினத்தை மதிப்பொடு கருதாமல் இருக்கமுடியாது' என்றும் 'தென்னிந்தியப் பழங்குடி மக்கள் மிக மதிநுட்பம் வாய்ந்தவர் என்பதற்கையமில்லை' என்றும் கூறியுள்ளார்".[10]

இதன்பின் ஆரியர் இந்தியாவுக்குள் புகுந்து தமிழ் நாட்டுக்கும் வந்தபின்தான் தமிழர் வாழ்வில் பலவகையான குறைபாடுகளும் இருட்டடிப்புகளும் நேரத் தொடங்கின. இச்செய்திகளைக் கலவு நிலைக் காண்டத்தில் பாவாணர் கூறுகிறார்.

ஆரியம் என்பது இனவகையில் ஐரோப்பாவில் தோன்றியதேனும்; மொழிவகையில் இந்தியாவிலேயே தொடங்கிவிட்டது. அதன்

9. தமிழர் வரலாறு. ப. கருள(157).
10. சொல்லாராய்ச்சி கட்டுரைகள், ப. 75.

தொடக்கநிலை வடுகு என்னும் தெலுங்கே. வடுகு என்பது வடகு என்பதன் திரிபு. வடகு-வடமொழி, தெலுங்கு பெயராலும் திரிபாலும் வடமொழியென்னும் சமற்கிருதத்தை ஒருபுடை ஒத்ததாகும்.

வட இந்தியாவில் ஆரியரை எதிர் கொண்டவர் தமிழர் வழியினரான திரவிடர். எனவே வடதிரவிடம் ஆரியரின் தாக்குதலுக்குள்ளானது.

ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தபோது ஆடுமாடு மேய்ப்பதன்றி வேறொன்றும் அறிந்தவரல்லர், அவர்கட்குக் கல்வியோ, கலையோ, எழுத்தோ இலக்கியமோ இல்லை.

ஆரியர் வடநாட்டிலிருந்து தமிழரொடும் திரவிடரொடும் போட்டியிட்டுப் பழந்தமிழ் மந்திரங்கள் போல் பாடத்தொடங்கினர். ஆரியப் பூசாரிகளின் வான்கோழியாட்டுப் போன்ற பாட்டுகளும் தென்றமிழ்ச் சொல் மிக்கு எகர ஒகரமின்றிப் பிராகிருதம் என்னும் மொழியிலேயே உள்ளன என்று பாவாணர் சான்று காட்டுகிறார்.

தென்னாட்டுக்கு வந்த ஆரிய வகுப்பார் பூசாரியரே. அவர்கள் ஆற்றல் மறவர்களாகவோ, படை வலிமை கொண்டோ வரவில்லை. அவர்கள் அரசர்களை அடுத்து நின்று ஒட்டிக் கொண்டு வேள்வி செய்து காட்டித் தங்களை நிலைநாட்டிக் கொண்டனர். பொதுமக்கள் பணம் அரசர்வாயிலாகச் செலவிடப்பட்டது. வேள்வி தெரிந்தவர்கள் பொன்னும் மணியும் பரிசாகப் பெற்று, விருந்தும் உண்டு கொழுத்தனர். வேள்வியால் மழை பொழியும் என்னும் கருத்தும் வேரூன்றச் செய்து விட்டதால் பொருளியல் வளர்ச்சித் திட்டங்கள் போல வேள்விகள் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டன.

ஆரியர் கையாண்ட மற்றொரு வலக்காரம் இந்திர வணக்கம். வேந்தனுக்குரிய வடசொல் இந்திரன். மருதநில வேந்தன் வணக்கத்தை ஆரியர் தழுவி நின்று இந்திர வணக்கமாக்கினர். குறளும், சிலம்பும் எடுத்தாளும் அளவுக்கு 'இந்திரன் வேரூன்றி விட்டான்.

வடநாட்டில் இந்திரனை மன்றாடிப் பாடிய மந்திரங்கள் தமிழர் தம் உள்ளத்தை இறுகப் பிணித்துவிட்டன. அரசர்களே இதற்கு மயங்கி வீழ்ந்தமையால் அரசர் வழி இயங்கிய பொதுமக்கள் அடிமையாவது மிக எளிதாகப் போய்விட்டது.

சிவ நெறியாளரான மன்னர்கள் இத்தகைய நிலைகட்கு வயப்படவில்லை. அதனால் ஆரியப் பூசாரியர் தமக்கு வயப்பட்டவரைக் கொண்டே வயப்படாதவரொடு போரிட்டு வென்றனர். தமிழ்

மன்னர்களுக்குள் ஏற்பட்ட பூசல்களுக்கான கரணியங்களுள் இதுவும் ஒன்று.

பேராயக் கட்சித் தலைவரான பிராமணர் அறியாமையும் தன்னலமும் கொண்ட தமிழரைக் கொண்டே நயன்மைக் கட்சித் (Justice party) தலைவர்களை வீழ்த்திக் காட்டியதை இதற்கு ஒப்புமையாகக் காட்டுகிறார் 'பாவாணர்'.

அகத்தியர் தமிழகம் வந்து முத்தமிழும் கற்று இலக்கணமும் இயற்றினார். அவரிடம் பயின்ற ஆரிய, தமிழ் மாணவர்களுள் ஒருவரான இந்திரன் பொருளை நீக்கி எழுத்தும், சொல்லுமான ஆரிய இலக்கணம் இயற்றி அதற்கு ஐந்திரம் எனப் பெயரிட்டான். இத்தாலிய வீரமாமுனிவர் கோவாவில் தமிழ் கற்று நெல்லையில் அமர்ந்து இலக்கணமும், இலக்கியமும் இயற்றியமை மேற்கண்ட நிகழ்ச்சிக்கு ஒப்புமையாகும் எனப் 'பாவாணர்' உரைக்கிறார்.

தமிழர்களில் சிலர் மதப்பித்தராயிருந்தமையால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பிராமணர் தாம் நிலத்தேவர் என்றும், தம் மொழி தேவமொழியென்றும் கூறி ஏமாற்றினர். இது பற்றிப் பாவாணர் நயம்படக்கூறுகிறார் "அவர்கள் குமரிமுதல் பனிமலைவரை இந்தியப் பழங்குடி மக்கள் அனைவரையும், உலகில் மக்களுள்ள காலமெல்லாம் தமக்கும் தம் வழியினர்க்கும் அடிமைப்படுத்துதற் பொருட்டு, குமுகாயத் துறையில் ஒன்றும் சமயத்துறையில் ஒன்றுமாக ஈரணைத் திந்தியத் திட்டங்களை வகுத்துவிட்டனர்."[11] என்கிறார்.

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் பிரிவுகள் தமிழிரிடை இருந்தன. இவை முற்றிலும் தொழில் பற்றியன வாகும். ஆனால் ஆரியர் ஊடுருவலுக்குப்பின் தொழில் பற்றியிருந்த குலப்பாகுபாடு நிறம் (வர்ணம்) பற்றி மாற்றியமைக்கப்பட்டது.

அந்தணர் என்போர் துறவியரான ஐயர் ; அகப்பொருள் துறைக்கு அவர் ஏற்காமையின் இல்லறத்தரான பார்ப்பாரே அந்தணர் எனப் பெற்றார். அந்தணர் என்போர் அறவோர் ; கல்விக்குரியவர் அந்தணர். தலைமைப்புலவர், அமைச்சர் முதலானோர் இத்தகுதி பெற்றனர். புலவராகவும், அமைச்சராகவும் வாய்ப்புப் பெற்ற பிராமணர் 'அந்தணர்' என்னும் தமிழ்ப் பெயருக்குள் பாய்ந்து கொண்டனர்.

அரசர் என்பவர் கோக்களும், வேந்தருமேயாவர். காவல் (ஆட்சி) இவரது தொழில். இவர்களையே சத்திரியர் ஆக்கினர். நிலவணிகம்,

11. தமிழர் வரலாறு, ப. ௧அஅ (188)

நீர்வணிகம் செய்பவர் வணிகராவர். ஆனால் உழவும், வணிகமும், மாடுமேய்ப்பும் ஒருங்கே செய்பவரை வைசியர் என்று மாற்றி விட்டனர்.

வேளாளர் என்பவர் உழுவித்துண்பவர் ; ஆனால் உழவும், கைத்தொழிலும் கூலிவேலையும் செய்யும் மூவகுப்பாரையும் சூத்திரர் என மாற்றி விட்டனர். "மக்களை நால்வகுப்பாக வகுத்து, பிராமணனுக்கு வெண்ணிறமும் சத்திரியனுக்குச் செந்நிறமும் வைசியனுக்குப் பொன்னிறமும் சூத்திரனுக்குக் கருநிறமும் சார்த்திக் கூறி, நால்வருணப் பாகுபாட்டை ஏற்படுத்தி, பிராமணர் கல்வித் தொழிலையும் பிற வகுப்பார் தத்தமக்குக் குறிக்கப்பட்ட தொழில்களையும் வழிவழி செய்து வரவேண்டுமென்றும், சத்திரியன் முதலிய மூவரும் பிராமணனுக்கு இறங்கு வரிசையில் தாழ்ந்தவ ரென்றும், சூத்திரன் மேன் மூவர்க்கும் வைசியன் மேலிருவர்க்கும் சத்திரியன் பிராமணர்க்கும் தொண்டு செய்யவேண்டுமென்றும், இது இறைவன் ஏற்பாடென்றும், மேல்வகுப்பார் மூவரும் பூணூல் அணியும் இருபிறப்பாள ரென்றும், வேதத்தைச் சூத்திரன் காதாலுங் கேட்கக் கூடாதென்றும், பிராமணனைக் காணின் மற்ற மூவரும் தத்தம் தாழ்வுநிலைக்குத் தக்கவாறு ஒதுங்கி நிற்கவேண்டு மென்றும், இறைவன் கட்டளையிட்டதுபோற் கற்பித்துவிட்டனர்"[12] என்கிறார் பாவாணர்.

தமிழர்தம் பழக்க வழக்கங்கள் குறித்துப் பாவாணர் கூறும் கருத்து ஏற்கத்தக்கதே. பண்டைத் தமிழருள் ஆடவர் குடுமி வைத்திருந்தனர். மீசையைச் சிரைத்துக் கொள்ளும் வழக்கம் தமிழர்க்கில்லை. மேனாட்டாரைப் பின்பற்றியும் ஆரியரை அடியொற்றியுமே சில தமிழர்கள் மீசையைச் சிரைத்துக் கொள்ளப் புதிதாகப் பழகிக் கொண்டனர்.

பண்டைத் தமிழர் மணமுறைகள் பற்றியும் அதில் ஏற்பட்டுள்ள பல மாறுதல்களைக் குறித்தும் பாவாணர் விரிவாகப் பேசியுள்ளார்.

கடைச்சங்க காலம்வரை பெரும்பாலான தமிழர் மணங்கள் தமிழ் மரபிலேயே நடந்து வந்தன. பிராமணர் வந்த பின்னும் இந்நிலை பலவிடங்களில் தொடர்ந்தே வந்தது. இன்றும் ஊர்ப் பெரியவரை மட்டும் வைத்து நடத்திக் கொள்ளப்படும் திருமணங்கள் நாட்டுப் புறங்களில் உள்ளன.

பார்ப்பனர் என்னும் பெயர் முதன்முதலில் தமிழப் பூசாரியையே குறித்தது.

---

12. தமிழர் வரலாறு, ப. ௧௮௯-௧௯௦ (189-190)

மணவகைகளில் பண்டைக் காலத்தில் முல்லை நிலத்து ஆயரிடை ஏறுதழுவி மணக்கும் குலமரபு இருந்து வந்ததைக் காணலாம். இது கொடை மணம் ஆகும். மற்றும் காதல் மணம், கவர்வு மணம் ஆகியவை இருந்தன.

பிராமணர் பெருந்தொகையினராய்த் தமிழகம் வந்து சேர்ந்த பின்புதான் தமிழர் திருமணங்களில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. வட மொழிக் கரணங்கள் மேலாண்மை செலுத்தத் தொடங்கின. ஆரியக் கரணத்தால் விளைந்த தீமைகள் பல.

1. தமிழுக்கும் தமிழனுக்கும் தாழ்வு. 2. தமிழப் பார்ப்பாருக்குப் பிழைப்பின்மை. 3. சிறு தெய்வ வழிபாடு 4. கற்பிழுக்கக் கூற்று. 'நீ முதல்நாள் திங்களுக்கும் (சோமன்) இரண்டாம் நாள் யாழோருக்கும் (கந்தருவர்) மூன்றாம் நாள் தீக்கும் (அக்கினி) உன் மனைவியை அளித்துவிட்டு நாலாம்நாள் அவளை நுகர்வாயாக' என்று மணமகனைப் பார்த்துக் கூறுவது தமிழன் கற்புணர்ச்சிக்கு மிக மிக இழுக்குத் தருவதாகும். 5. வீண் சடங்குகள்- தீ வலஞ் செய்தல், அம்மி மிதித்தல், அருந்ததி காட்டல் முதலிய பல சடங்குகள் வீணானவையாகும். 6. கரணம் விளங்காமை. சில தமிழ்க் குலத்தார் மணவறையில் திரைகட்டித் தாலி கட்டுகின்றனர். மகமதியர் இந்நாட்டிற்கு வந்தபின் ஏற்பட்ட மாறுதலாகும் இது.

தமிழ் மரபிற்கொவ்வாச் சடங்குகளை அகற்றிச் சீர்திருத்தம் செய்து தமிழர் வாழ்வில் மறுமலர்ச்சியுண்டாக்கிய பெருமக்கள் பலர். சித்தூர் மார்க்கசகாயஆச்சாரியர், மறைமலையடிகள், திரு.வி.க., பெரியார் முதலியோர் பலவகையில் தமிழர் மணமுறைகளை நிலை நாட்டினர்.

மணஉறவுகள் குலவெறியுடன் நடைபெறுவது தமிழர்க்கு இழுக்காகும். வள்ளுவர், திருமூலர்போன்றோராலும் கண்டிக் கப்பட்டதை உணராத தமிழர் இன்றும் குலவுணர்ச்சியிலேயே திளைத்திருத்தல் நம் மீளா அடிமைத் தனத்தையே காட்டும். நாளும் கிழமையும் ஓரையும் வேளையும் பார்த்துப்பார்த்து என்றும் அச்சத்தோடேயே வாழ்வதால் இந்தியரின் சராசரி வாழ்நாள் குறைந்துள்ளது. மேனாட்டார் வாழ்நாள் கூடியுள்ளது என்பதை எடுத்துக்காட்டுடன் விளக்குகிறார் பாவாணர்.

தாலிகட்டும் வழக்கம் தமிழரதே என்றும் நிலைநாட்டுகிறார்.

இவ்வாறாகத் தமிழர் வாழ்வின் இன்றியமையாத மணச் சடங்கு குறித்துப் பாவாணர் மிகவிரிவாக ஆராய்ந்து தமிழர் மரபினைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

தமிழர்கள் குமுகாயவியலில் தாழ்ச்சி பெற்றதற்கான அடிப்படை இதுவேயாகும். பிராமணர் பொதுமக்களோடு தொடர்பு கொள்ளாது வேந்தரையடுத்தே நின்றனர். வேந்தர்தம் பேதைமை, கொடைமடம், மதப்பித்து ஆகியவை கண்டு வேள்விகளைச் செய்யத் தூண்டி அப்படிச் செய்தால் இம்மையில் வெற்றியும் மறுமையில் விண்ணுலகப் பதவியும் கிடைக்கும் என்னும் அளவுக்குத் துணிவூட்டப்பட்ட போது அறிவியற் கல்வியும் மொழியாராய்ச்சியும் இல்லாத அக்காலத்து அரசர் நம்பி அடிமையாயினர்.

ஒன்றரை நூற்றாண்டு ஆங்கிலர் ஆட்சியும் இரு நூற்றாண்டு ஆங்கில அறிவியற் கல்வியும் கால் நூற்றாண்டு நயன்மைக் கட்சி தந்த அரசியல் முன்னேற்றமும் ஏற்பட்ட பின்னும் தமிழர்கள் இன்றும் பல்வேறு வகையான அடிமைத்தனத்துக்கு ஆட்பட்டிருப்பதைக் காணும்போது உலகியலறிவு குறைந்த அந்நாளில் எளிதாக ஏமாந்திருக்க மிகுதியான வாய்ப்புண்டு.

பிராமணர் மதத்துறையில் மட்டும் தமிழரை முழுமையாக வெல்ல முடியவில்லை என்பது பாவாணர் கருத்து.

ஆரிய மதத்தில் வீடுபேற்றுக் கொள்கையும் கடவுள் உணர்ச்சியும் கோவில் வழிபாடுமில்லை. பல்வேறு சிறு தெய்வங்கட்கு விலங்குகளைக் காவிட்டுத் தீயிற் சுட்டெரிக்கும் வேள்வி முறையே அவர்கள் மதப் போக்காக இருந்தது.

ஆனால் "தமிழரோ, எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் படைத்துக் காத்தழிக்கும் இறைவனை, சிவன் என்னும் பெயராலும் திருமால் என்னும் பெயராலும் பெரும்பாலும் காய்கனிகளையே படைத்து வழிபடுவனவும், வெவ்வேறு மெய்ப்பொருளியல் கொண்டனவும், இல்லறத்தாலும் துறவறத்தாலும் வீடுபேறடைவனவுமான, சிவமதம் திருமால்மதம் என்னும் இருபெரு மதங்களை யுடையவர்"[13] படைப்பவன் பிரமன் என்னும் கொள்கையைப் புகுத்தியவர் பிராமணர்களே. பிரமா பிராமணகுல முதல்வன் என்பதும் நால்வருணங்களையும் அவற்றிற்குரிய குணங்களையும் படைப்பவன் என்பதும் உட்கருத்தாகும்.

எனினும் தமிழர் பிரமாவை வணங்காது விட்டனர் என்பதும் உண்மையே. பிரமாவிற்குக் கோவில் வழிபாடு இல்லாமற்போனது. அதனால் சிவனையும் திருமாலையும் ஆரியத் தெய்வங்களாக மாற்றினர். சிவனை இமயமலைக்கே அனுப்பி வைத்து விட்டனர். ஆரியர் வருமுன்

13. தமிழர் வரலாறு, ப. கசாஉ (193)

தமிழர் வடநாட்டிற் பரவியிருந்தனர். குமரிக்கண்டம் மூழ்கியபின் சிந்துவெளி வழியாகவே தமிழர் மேலையாசியாவிற்கும் அதன்பின் ஐரோப்பாவிற்கும் சென்றிருப்பராதலானும், சிந்து என்னும் ஆற்றுப் பெயர் தமிழர் இட்ட பெயராகவே இருக்கலாம் என்பது பாவாணர் கருத்து.

தொல்காப்பியம் பண்டைத் தமிழ் நாகரிகத்தையும் பண்பாட்டையும் தாங்கி நிற்கும் ஒரு பெருந்தூணாகும். தமிழர் வரலாற்றைக் கூறும் தெளிவான நூலும் அதுவே. பொருளிலக்கணம் வாழ்க்கை இலக்கணமாகவே அமைந்துவிட்டது. அதிற் கூறப்படும் புறத்துறைகள் பண்டைத் தமிழரின் மதத்தை மட்டுமன்றி அக்காலத்திய குடியாட்சி உரிமையையும் காட்டுவனவாயுள்ளன. தொல்காப்பியர் காலத்தில் தமிழர்களுக்குள் பிறப்பால் உயர்வு தாழ்வு கருதும் மனப்பாங்கு தோன்றியது. தொல்காப்பியர் காலத்தில் கழகமும் ஏற்பட வில்லை ; அவர் அகத்தியரின் மாணவரில்லை.

தொல்காப்பியத்துள் ஆரியக் கருத்துகளும் ஒரு சில வடசொற்களும் இருப்பது அக்காலத்து நிலைமை. தமிழை ஆரியத்தினின்று மீட்க முனைந்த சுந்தரம் பிள்ளையின் நூலில் 'பாஷாபிமானமும், தேசாபிமானமும்' இருப்பதுபோல அது.

கடைக்கழகக்கால நூலாகிய திருக்குறள் தமிழ் முன்னோரின் பெருமையை அறியவும் நாம் முன்னேறி நம் உரிமையைப் பெறவும் இன்று நம் கையில் உள்ள தெளிவான கருவி என்பது பாவாணர் கருத்து.

தமிழர் தொழிற்குலங்களாக மட்டுமே பிரிந்திருந்தனர் என்பதைத் தொல்காப்பியம் தெளிவுபடுத்துகிறது. தொல்காப்பியர் காலத்தின் பின் சோழநாட்டின் வடபகுதி தொண்டை நாடாயிற்று. சேரநாட்டின் கீழ்ப்பகுதி கொங்கு நாடாயிற்று.

இரண்டாம் கடல் கோளுக்குப்பின் கொற்கையிலும் மணவூரிலும் இருந்து பாண்டியர் ஆண்டுவந்தனர். கி.மு. 5ஆம் நூற்றாண்டில் வடமொழி இலக்கணமாகிய பாணிணீயம் இயற்றப்பட்டது.

தமிழகத்தின் மேல் முதன்முதலாகப் படையெடுத்தான் வடஇந்திய அரசன் சந்திரகுப்த மௌரியன் கி.மு. 301க்குப்பின் வந்த படையில் வடுகர், கோசர், மோரியர் என்னும் மூவின மறவர் இருந்தனர். சோழன் இளஞ்சேட்சென்னி அனைவரையும் வென்று மோரியரைத் தமிழகத்தினின்று விரட்டினான்.

பல தீய கொள்கைகள் தமிழர் உள்ளத்தில் பதிக்கப்பட்டுவருவது கண்ட திருவள்ளுவர் தமிழனின் கண் திறக்கவும் அடிமை நிலையிலிருந்து மீட்டு மாந்தனாக்கவுமே குறளை இயற்றினார்.

பல மன்னர்கள் இத்தகைய நிலைகட்கு ஆட்பட்டதனால் தான் வீழ்ச்சி ஏற்பட்டது. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிக்குப்பின் கி.பி. முதல் நூற்றாண்டினனான கரிகால் வளவன் காடுகொன்று நாடாக்கி நீரின் வந்த நிமிர்பரிப் புரவி, காலின்வந்த கருங்கறிமூடை முதலான அரியவும் பெரியவுமான பொருட்களை இறக்குமதி செய்து வளம் பெருக்கி வாழ்ந்தாலும், அவனும் ஆரியச் சாய்க்கடையில் வீழ்ந்திருந்தான் என்றே அறியப்படுகின்றது.

கி.பி. 2ஆம் நூற்றாண்டினராகிய ஆரியப் படைகடந்த நெடுஞ் செழியன், சேரன் செங்குட்டுவன் போன்றோர் தமிழினத்தின் பெருமையைக் காத்தனர் என்றே சொல்லலாம்.

"சேரன் செங்குட்டுவன், தமிழரசரை யிகழ்ந்த கனகவிசயர் மேல், பனிமலையிலெடுத்த பத்தினித் தெய்வப் படிமைக் கல்லை ஏற்றிக் கொணர்ந்தது, என்றும் தமிழர்க்குப் பெருமை தருவதே. ஆயினும், அக்கல்லைக் கங்கைக் கரையில் நீராட்டிய போது, மாடலன் என்னும் பிராமணனுக்குத் துலைநிறைத் தானமாக ருo(50) துலாம் பொன் கொடுத்ததும், கொடுங்கோளூரில் அவன் சொன்னவுடன் வேள்வி செய்ததும், அவனது ஆரிய அடிமைத் தனத்தைத் தெளிவாகக் காட்டும்"[14] என்கிறார் பாவாணர்.

கி.பி. 3ஆம் நூற்றாண்டில் உக்கிரப் பெருவழுதி காலத்தில் பாண்டிய அரசும் கடைக்கழகமும் குலைந்தன.

கடைக்கழகக்காலத்தில் பல குறுநிலமன்னர்கள் இருந்தனர். மூவேந்தர் கைகளும் தாழ்ந்து இருந்ததால் குறுநிலமன்னர் பலர் தலையெடுத்து முடியணிந்து கொண்டனர். ஈகை தமிழர்தம் சிறப்புத் தன்மை என்றாலும் குறுநிலமன்னர்கள் தாம் இத்தன்மைக்கு உயிரூட்டிச் சிறப்புச் செய்தவர்கள். மூவேந்தர்கள் பிராமணர்களைப் பேணி வந்தமையால் ஏழை எளிய கூத்தர்கட்கும் புலவர்கட்கும் எட்டாக் கையராக இருந்து வந்தனர். இக்குறையை நீக்கி அனைவர்க்கும் ஊக்கமளித்தவர்கள் குறுநிலமன்னர்களே. தமிழர் வாழ்வில் கலை சிறக்கவும், இலக்கியம் முதலியன ஏற்றம் பெறவும் வள்ளல்கள் வாய்ப்பளித்தனர்.

கண்ணகிக்குப் படிமை நிறுவியபின் காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல் கொண்டது. அதை யொட்டிச் சற்று முன்பின்னாகக் குமரி நாடும் கடலுள் மூழ்கியது. தமிழகத்தின் தென்னெல்லை கடலாக ஆயிற்று.

---

14. தமிழர் வரலாறு, ப. உ௩உ (232)

நிலவணிகமும், நீர்வணிகமும் கடைக்கழகக் காலத்தில் பெரு வளர்ச்சி அடைந்திருந்தன.

கடாரம் (பர்மா), மலையா, சுமதுரா (Sumatra), சாலி (சாவகம்) முதலிய நாடுகளுடன் நல்ல தொடர்பு இருந்தது. தமிழர்கள் கடல்தாண்டி நெடுந்தொலைவு சென்று வந்தமை கண்கூடு. கீழ்க்கரையிலிருந்த கொற்கை, தொண்டி, புகார் முதலிய துறை நகரங்களுள் புகார் தலைசிறந்ததாக விளங்கியது. யவனரும், கிரேக்கரும், உரோமரும் வந்து தங்கும் வாய்ப்பையும் வளத்தையும் பெற்றிருந்தது.

மேல்கரையிலிருந்த முசிறி, தொண்டி, மாந்தை முதலியனவும் சிறந்த பெயர் பெற்றிருந்தன.

பாண்டியர் அகத்தசு (Augustus கி.மு. 44-கி.பி. 14)) என்னும் உரோம நாட்டுப் பேரரசனுக்குத் தூது விடுத்ததாகவும் சொல்லப்படுகிறது. வணிகம், தூதாண்மைத் தொடர்பு இரண்டும் தமிழர்தம் மேம்பாடான நிலைக்குச் சான்றுகளாம். இந்நிலை கி.பி.4 ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது. உலகில் முதலில் ஆழ்கடலிற் கலஞ்செலுத்திய பெருமை தமிழர்க்கே உண்டு. அதனாலேயே கடல், கலத்துறை பற்றிய தமிழ்ச் சொற்கள் பல மேலையாரிய மொழிகளில் கலந்துள்ளன.

நாவி, நாவாய்- L. navis. navia OF. navie M.E.navie E. navy GK-naus. மேலும் நெல் தொன்றுதொட்டுத் தமிழகத்து விளைபொருள் என்பதும், அரிசி முதன்முதல் தமிழகத்தினின்றே மேனாடுகட்கு ஏற்றுமதியானதென்பதும் வெளிப்படை.

தமிழ்வேந்தரின் பொற்செல்வப்பெருக்கையும் ஏமாளித் தன்மையையும் கண்ட பிராமணர்அவரிடமிருந்து இயன்றவரை பொன்னும், நிலமும் பறிக்கத் திட்டமிட்டுப் பதினாறு தானங்கள் வகுத்துள்ளனர்.

ஆரியர் வருகைக்குப் பின் தமிழர் முதலில் மதவியலில் வீழ்ச்சி யடைந்தனர். பின்னர் குமுகாயவியலில், மொழியியலில், ஆட்சியியலில் படிப்படியாக வீழ்ச்சியுற்றனர்.

ஒரு பொருள் அல்லது நெறிமுறை (Principle) இன்னவாறு இருத்தல் வேண்டும் என்று மதித்துக் கொள்வதே மதம்ஆகும். மக்களின் அறிவுநிலைக்கேற்ப மதம் (1) சிறுதெய்வ வணக்கம் (2) பெருந்தேவ மதம் (3) கடவுள் சமயம் என மூவகைப்படும். குமரிநாட்டுத் தமிழ்மக்கள் கி.மு. பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்பே இந்நிலைகளைக் கொண்டிருந்தனர்.

பேய், மரம், நாற்பூதங்கள், இருசுடர், 'ஆன்' போலும் நல் விலங்கு, நச்சுயிரி முதலியவற்றை வணங்கியுள்ளனர். ஐந்திணைக்கும் உரிய தெய்வங்களை வேறுபடுத்தி வழிபட்டு வந்தனர். காவல் தெய்வம், இல்லுறை தெய்வம் என்றவாறும் சிறுதெய்வ வணக்கம் விரிவடைந்திருக்கிறது.

பெருந்தேவ மதங்களாகச் சிவமதமும், திருமால் மதமும் விளங்கின.

பரம்பொருளை உள்ளத்தில் அகக் கண்ணால் கண்டு தொழுது, முக்கரணத் தூய்மையுடன் ஒழுகுவது கடவுட் சமயமாகும்.

ஆரியர் புகுந்தபின் தெய்வப் பெயர்கள் யாவும் வடமொழியில் மாற்றப்பட்டன. தமிழ்த் தெய்வ வணக்கத்தை முதலில் ஏற்றும், ஏமாற்றியும் நாற்பிறவிக் குலப்பிரிவினை ஏற்படுத்தியும், முத்திருமேனிக் கொள்கையை அறிமுகம் செய்தும் தமிழாரியத் தெய்வ இணைப்புச் செய்தும், பலதெய்வங்களைப் பெருக்கியும் ஆரியர் தமிழரை அடிமைப் படுத்தினர்.

கி.பி. 5ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிள்ளையார் விநாயகராகி கி.மு. 10ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே குமரி நாட்டுக் குறிஞ்சி நிலத்தில் தோன்றிய முருகனுக்கு அண்ணனாகிய கதையை அறிந்தால் மேற்கண்ட உண்மை புலனாகும்.

திருமால் தோற்றரவு (அவதாரம்) முதலாய தொல்கதைக் கட்டுகளால் தமிழர் பெரிதும் மயங்கிப்போய் விட்டனர். அண்ணாமலை அருணாசலம் ஆனது மட்டுமன்றிப் பகுத்தறிவைக் கொல்லும் பச்சைப் பொய்களால் இடம், தெய்வம் ஆகியவற்றில் பல பெயர்களையும் மாற்றியமைத்தனர்.

"திராவிட நாகரிகத்தை ஆரிய நாகரிகமாகக் காட்டுவதற்கு, பொருட் டொகைகளைப் பெருக்குவதும், புதுச் சொற்களைப் புணர்ப்பதும் ஆரியர் வழக்கமாகும்"[15] என்று பாவாணர் குறிப்பிடுகின்றார்.

மதப் பிரிவுகள் பல்கியமையால் தமிழில் வடசொற் கலப்பும், தமிழர்க்குள் பிரிவினையும் மேன்மேலும் வளர்ந்தன.

உருவ வழிபாட்டை ஒதுக்கிப் பரம்பொருள் ஒன்றே உண்மை என்று கூறிய கடவுட் சமயம் வலிந்து மறைக்கப்பட்டது. உருவ வழிபாடு இருந்தால்தான் ஆரியர்க்குப் பிழைப்பும், தமிழரை முன்னேற வொட்டாது என்றும் அடிமைத்தனத்துள் அமிழ்த்தும் வாய்ப்பும்

15. தமிழர் மதம், பக். ௧௦௩ - ௧௦௪ (103-104).

ஏற்படும். இதனாலேயே கடவுட் சமயம் அழிந்தது. பிற்றைக் கால வள்ளலார் பரம்பொருளை மட்டுமே பார்த்துக் கடவுட் சமயத்தை மேலோங்கச் செய்தவர். அவர்தம் கடையைக் கட்டிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதை நாம் அறிவோம். ஆரியர்தம் எதிர்ப்பும், ஆரிய அடிமைகளாய் விளங்கும் தமிழர் தம் புறக்கணிப்பும் தாமே இதற்குக் கரணியங்கள் !

கோயில் வழிபாட்டுக்கென 'ஆகமம்' 'தந்திரம்' முதலிய தொழுகை நூல்களை அமைத்துக் கொண்டனர். தமிழ்வழிபாடு ஒழிந்ததற்கு இதுவும் ஒரு கரணியம்.

ஆரியர்தம் அளவிறந்த முயற்சியினால் சிவனியம், திருமாலியம் ஆகிய மதங்கள் தடுமாற்றம் எய்தின.

எதிர்பாரா வகையில் சிவனியர் ஆரியச் சார்பு மிகுதியும் உள்ளவராகவும், திருமாலியர் தமிழ்ச் சார்பு உள்ளவராகவும் மாறிவிட்டனர். சிவனியமாகிய சைவத்தை ஆரியத்தினின்று மீட்க மறைமலையடிகள் போன்றவர்கள் அரும்பாடுபட வேண்டியதாயிற்று.

"முத்தொழிற் சிவனை அழிப்புத் திருமேனியாகவும், முத்தொழில் மாலைக் காப்புத் திருமேனியாகவும், ஆரியர் வகுத்ததனாலும் மாலியம் தமிழகத்தில் வரவர வளர்ந்து வந்திருக்கிறது எனலாம். இராமாயண பாரதக் கதைகளும் இதற்குப் பெரிதும் துணை செய்திருக்கின்றன."[16] என்று பாவாணர் குறிப்பிடுவதன் நடைமுறை உண்மையை நாம் நன்கு உணரமுடியும்.

ஆரியர் பெரும்பாலும் திருமால் வணக்கத்தவராகவே இருப்பதைக் காணலாம். சிறு தெய்வங்களையெல்லாம் தமிழ்நாட்டுக்குள் கொண்டு வந்து பரப்பிய ஆரியர் இப்போது சிறு தெய்வங்களை அறவே வழிபடுவதில்லை என்பதை உணரலாம். பூசாரிகள் என்னும் முறையில் வழிபாடு நிகழ்த்துவது அன்றி வேறு எவ்வகையிலும் அவர்கள் கீழிறங்குவதில்லை.

தமிழர் இழந்த கோயில் உரிமைகள் தமிழரைப் பலவகையில் இழிபு படுத்திவிட்டன. சோறு என்னும் தமிழ்ச் சொல்லைச் சொன்னமைக்காகத் திருவாடுதுறை மடக் குட்டித் தம்பிரான் ஒருவர் ஒரு புலவரை அடித்தார் என்பது வரலாற்றுச் செய்தி.

சில இடங்களில் உணவு படைக்கப்படும் போது பிராமணர்க்கு விடுதியின் உட்புறத்திலும் தமிழர்க்கு வெளிப்புறத்திலும் வைத்துப்

---

16. தமிழர் மதம், ப. கஉ0 (120).

படைக்கப்படும். அதுவும் ஒரே நேரத்திலன்று. பிராமணர் சாப்பிட்டு முடிந்தபின்தான் தமிழர் சாப்பிட முடியும்.

பிராமணப் பொதுவுண்டிச் சாலைகளில் பிராமணரின் எச்சில் இலைகளிலிருந்து வழித்தெடுக்கப்பட்ட கறிவகைகளை எடுத்துத் தமிழர்க்குப் படைப்பது வழக்கமாயிருந்தது.

சேரன்மாதேவியில் இதுபோன்ற நிகழ்ச்சி நடைபெற்றதால்தான் அதனை எதிர்த்துப் பெரியார் பேராயக் (Congress) கட்சியை விட்டே வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழர்களில் சில வகுப்பார் கோயிலில் நுழையவே கூடாது என்று தடுத்து வைக்கப்பட்டிருந்த கொடுமையையும் தமிழர்க்கு ஏற்பட்ட தாழ்வாக எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

கள்ளிறக்குவோர் சிவன் கோயில்களுட் புகக் கூடாதென்று ஆகம சாத்திரம் கூறுவதாகச் சொல்லி நாடார் என்னும் சான்றார் குலத்தவரைக் கோயிலுட் புகவிடாமற் செய்து கொண்டிருந்தனர். 1874இல் மதுரை மீனாட்சியம்மன் கோயிலுட் புகமுயன்ற நாடார் வகுப்பினர் தடுக்கப்பட்டனர். 1899 இல் சிவகாசிச் சிவன் கோயிலுக்குள் புகமுயன்ற போதும் தடுக்கப்பட்டனர். இதையொட்டி ஏற்பட்ட கலவரத்தில் 23 கொலைகள் 102 தீவட்டிக் கொள்ளைகள் நடைபெற்றன. இக்கலவரம் முழுவதும் தமிழராகிய பல்வேறு குலத்தவர்க்குள் மட்டும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

19ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் திருவனந்தபுரம் நாடார் குலக் கிறித்தவப் பெண்கள் சட்டையணிந்தது கூட எதிர்ப்புக் குள்ளானது. மேல் வகுப்பார் எனப்படும் தமிழரே அதை எதிர்த்தனர்.

இவ்வாறாகக் குலப் பிரிவினைகளால் தமிழன் தன்னைத்தானே இழிவுபடுத்திக் கொண்ட நிகழ்ச்சிகள் ஏராளமாகும்.

தமிழர் அனைவருள்ளும் ஊனுண்ணாதவர் உயர்ந்தவரென்றும் ஊன் உண்பாருள் ஆடு, கோழி, மீன், முட்டை மட்டும் உண்பவர் உயர்ந்தவரென்றும், பன்றியும் நண்டும் உண்பவர் அவரினும் தாழ்ந்தவரென்றும், மாடுதின்பவர் எல்லாரினும் கடைப்பட்டவரென்றும் கருதப்படுகிறது.

ஆனால் மாட்டிறைச்சியுண்ணும் ஐரோப்பியர், அமெரிக்கர், அராபியர், யூதர் ஆகிய அனைவரும் பிராமணர்களாலும் தமிழர்களாலும் உயர்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

மதத்துறையில் தமிழர் தலைநிமிர்ந்து நிற்கவேண்டுமானால் சில நெறிமுறைகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என்று பாவாணர் தெளிவுபடுத்துகிறார். திருக்கோவில் தமிழ் வழிபாடு, பல் வகுப்புக் கோயிற் பூசகர், வழிபாட்டில் வீண் செலவு நிறுத்தம், உருவிலா வழிபாடு, இந்து மதம் என்னாது தென்மதம் என்னல், எல்லா மதமும் தனித்தமிழ் போற்றல் போன்றவற்றில் அனைவரும் கருத்தூன்றிச் செயலாற்ற அழைக்கிறார்.

குமுகாயத் துறையிலும் தமிழர் தம்மைத் தாமே தாழ்த்திக் கொண்டனர். தமிழ்த் துறவியர்க்குரிய அந்தணன், முனிவன் என்னும் பெயர்களை மட்டுமன்றி இறைவனுக்குரிய பகவன், கடவுள் என்னும் பெயர்களையும் ஆரியரும் தமிழகப் பிராமணர்க்கே உரித்தாக வழங்கத் தலைப்பட்டனர்.

ஆரியர்கள் சாமி என்றழைக்கப்பட்டது குறித்துப் பாவாணர் விளக்குகிறார்.

"பார்ப்பனர் தங்களை அந்தணராகக் காட்டிக் கொண்டபின் தமிழர் தங்களைச் சாமி என்று கடவுட் பெயரால் அழைக்குமாறு செய்து விட்டனர். அதுவே இன்றும் தொடர்ந்து வருகின்றது"[17] என்கிறார்.

மேலும் ஆரியர்களிடத்தில் போர் செய்தற்குரிய தன்மைகளும் தமிழரை நாகரிகத்தால் வெல்லக் கூடிய உயர்வும் இருந்ததில்லை. அவர்கள் தமிழரை வென்றதெல்லாம் வலக்காரத்தினாலேயே ஆகும்.

தமிழர் எப்படிச் சூத்திரர் ஆனார் என்பது கவனிக்கத்தக்கது. தமிழருக்கும் சூத்திரர் என்னும் பெயர்க்கும் எள்ளளவும் தொடர்பில்லை. ஆரியர்கள் தமிழ் நாட்டில் வேரூன்றியபின் தமிழர் இங்ஙனம் தாழ்த்திக் கூறப்பட்டனர்.

நால்வருணப் பிரிவால் பல தமிழர்கள் தாழ்த்தப்பட்டனர். கட்டில் பின்னுவோனையும், பறையடிப்போனையும் புறநானூற்றுப் பாடல்களே தாழ்த்திப் பாடும் நிலை ஏற்பட்டது.

பிராமணர் தமிழரோடு கலந்து வாழாமல் அக்கிரகாரம் என்னும் தனிக்குடியிருப்புப் பகுதியினை அமைத்துக் கொண்டனர். அரசர்களே

17. ஒப்பியன் மொழி நூல், ப. 38.

அன்பளிப்பு என்னும் பெயரில் சதுர்வேதி மங்கலங்களை உருவாக்கிக் கொடுத்ததால் மிகவும் வாய்ப்பாகப் போய்விட்டது. இவ்வகையில் மூவேந்தருள் சேரர்களே முந்தியடிமைப் பட்டவர்கள் என்று பாவாணர் குறிப்பிடுகிறார்.

மூவேந்தர்கள் கி.பி. 2ஆம் நூற்றாண்டுக்குப்பின் பெருமளவில் தங்கட்குள் பூசலை வளர்த்துக் கொண்டனர். "மூவேந்தர்களுள்ளும் ஓரளவு ஒற்றுமையிருந்த கடைக் கழகக் காலம் வரை அயலார் தமிழ் நாட்டைக் கைப்பற்ற முடியவில்லை.

அதன் பின்னரே, ஒன்றன்பின் ஒன்றாகப் பல அயலாட்சிகள் தோன்றி, மூவேந்தரும் மறைந்தனர். அன்று மூவேந்தர் ஒற்றுமையைக் குலைத்த ஏதின்மாக்கள் கூட்டம், இன்றும் தமிழரிடையிருந்து ஒற்றுமையைக் குலைத்து வருகின்றது"[18] என்று கூறுகிறார் பாவாணர்.

தமிழர் கொடை மடம் படுவதுண்டு. ஆனால் படைமடம் படுவதேயில்லை. கி.பி. 16ஆம் நூற்றாண்டு வரை தமிழ் நாட்டில் அயலரசுகள் வந்து நிலைத்ததேயில்லை. தமிழர்க்குள் ஒற்றுமை குலைந்ததாலேயே அடிமைப்பட நேர்ந்தது.

தமிழர் தாமே கெட்டனர் என்பது பாவாணர் கருத்து.

"ஏமாறி யில்லாமல் எவனும்
ஏமாற்ற வழியுண்டோ
தாமாகத் தம்மைத் தணித்துக் கொண் டயலார்மேல்
தப்பாகச் சுமத்தின் தாங்காது பழியே'[19] என்கிறார்.

தமிழன் வீழ்ச்சி குறித்து மற்றோர் இடத்தில் குறிப்பிடுகின்றார்.

'குப்பை யுயர்ந்தது கோபுரம் தாழ்ந்தது
குடிபுகுந் திரந்தவன் கோவா னான்
ஒற்றுமை யில்லாமல் உலைந்துப்போய்த் தமிழன்தான்
ஊமையடிமை என உழல்கின்றான்'[20]

'தமிழிலே பெயரைத் தாங்ககில் லாரைத்

தமிழரெனவுந் தகுமோ'[21] என்று ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்.

18. தமிழர் வரலாறு, ப. உருஎ (257)
19. இசைச் தமிழ்க் கலம்பகம், ப. 37.
20. மேலது, ப. 46.
21. மேலது, ப. 70.

'பிறப்பாலே சிறப்பில்லை தமிழா—இதைப்
பெருநாவலன் சொன்னான் தமிழா
மறத்தாலும் திறத்தாலும் தமிழா—மேன்மை
மதியறி வொழுக்கத்தால் தமிழா'[22] என்று அறிவுறுத்துகிறார்.

அவர் வேண்டுகோள் தமிழர் ஆரியர் ஒற்றுமை வேண்டுவதாக உள்ளது.

'தமிழரும் ஆரியரும் சமநிலையுணர்வோடு
தமிழையே தாங்க வேண்டும்—நல்ல தங்கமே
தமிழகம் ஓங்க வேண்டும்'[23]

தமிழர்தம் போலி நிலையும் கோழைத்தனமும் கண்டு ஒரு கட்டத்தில் சாடவும் செய்கிறார்.

'தமிழர் என்னும் பெரும்பெயரைத் தாங்கித்திரியும்
உருவங்காள்!
இமிழ்கடல் பொங்கி எச்சரித்தும் இன்னும் உணரா,
நன்மரங்காள் ![24]

மொழித் துறையிலும் தமிழர் பல்வேறு இழிநிலைகளை ஏற்றனர். தம்மையறியாமலேயே தமிழ் தாழ்ந்தது என்று நம்பத் தலைப்பட்டனர். இந்த இழிநிலை இன்றுவரை மாறவில்லை.

இலக்கியத் துறையிலும் நம்பத்தகாத செய்திகள் எல்லாம் புகுத்தப்பட்டுத் தமிழர் இம்மை மறுமைச் சிந்தனைக்கு ஆளாயினர்.

கி.பி.300 முதல் 590 வரையில் தமிழகத்தில் களப்பிரர் ஆட்சி இருந்தது. இவர்களைக் களப்பாளர் என்பார் பாவாணர். இவர்கள் வடநாட்டிலிருந்து வந்ததாகத்தான் பொதுவாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால் பிராமணர்க்கு அளிக்கப்பட்ட வேள்விக்குடிப் பட்டயத்தை மறுத்ததனாலும், முருக வழிபாட்டினர் என்று சொல்லப்படுவதனாலும் தமிழராகவும் இருந்திருக்கலாம் என்பது பாவாணர் கருத்து.

'பல்லவர் ஆட்சி சோழ நாட்டுப் பகுதியில் கி.பி. 9ஆம் நூற்றாண்டுவரை நீடித்தது. பல்லவர், காடவரும் காடுவெட்டிகளுமான தமிழரே' என்று பாவாணர் கூறுகிறார்.

---

22. இசைத் தமிழ்க் கலம்பகம், ப. 76.
23. மேலது, ப. 212.
24. மேலது, ப. 242.

தமிழ்வேந்தர் கோயில் வழிபாட்டுக்காகக் காசியிலும் காசுமீரத்திலும் இருந்து பிராமணர்களை வரவழைத்தனர். அவர்கள் மடத்தலைவர்களாக இருந்து மிகுந்த சொற்செலவு (செல்வாக்கு) பெற்று விளங்கினர். நாளடைவில் கோயில்களில் வடமொழி புகுந்து கொண்டது. இன்றுவரை அதை மாற்ற முடியாத நிலை ஏற்பட்டு விட்டது.

இதுமட்டுமன்றி அரசர்களும் நல்ல தமிழ்ப் பெயர்களை மறந்து வடமொழிப் பெயர்களையும் பட்டங்களையும் தாங்கும் நிலைக்கு ஆளாயினர். பராந்தகன், விஜயாலயன், பாஸ்கரவர்மன் என வடசொற்பெயர்கள் பெருவழக்காயின. ராஜகேசரி, பரகேசரி என்னும் அடைமொழிகளும் தோன்றின. தமிழர்க்குள் எண்ணற்ற இழிவு நிலைகள் தோன்றின. தமிழப் பார்ப்பாரும், அந்தணரும் தம் நிலையினின்று தள்ளப்பட்டனர். உழுவித்துண்ணும் வேளாளர் சூத்திரருள் அடக்கப்பட்டனர். அரசரும் வணிகரும் உட்படத் தமிழர் எல்லாம் சூத்திரர் எனப்பட்டனர். வெள்ளாளர் தம்மை உயர்த்தக் கருதிச் சற்சூத்திரர் என்று சொல்லிக் கொண்டது சிரித்தற்குரிய செயலாகும். ; இசை நாடகத் தொழிலையும், உழவுத் தொழிலையும் செய்து வந்த சிலவகுப்பாரை ஐந்தாம் குலத்தினர் (பஞ்சவர்) ஆக்கி விட்டனர். பாணர், பறையர், பள்ளர் ஆகியோர் இப்படி ஆக்கப்பட்டவர்தாம். சான்றாரை (சானார்)யும் பஞ்சமராக்கினர்.

ஆங்கிலக்கல்வி, கிறித்துவநெறி, நீதிக்கட்சியும், தன்மான இயக்கமும் தந்த வலு ஆகியவை இன்று சான்றாரை மருத்துவம், கல்வி, வணிகம் ஆகிய மூன்றிலும் முன்னேறிய உச்சவகுப்பினராக உயர்த்திவிட்டன.

தமிழர்களே தீண்டார், தீண்டுவார், அண்டார், காணார் என நால்வகைப் படுத்தப்பட்டனர்.

ஆனால் இவ்வளவு பிளவுகளும், தாழ்வுகளும் ஏற்பட்டும் தங்கள் இன இழிவை உணராமல் தமக்குள்ளேயே என்குலம், உன்குலம் என்று அடித்துக் கொண்டுசாகும் அவலநிலை இன்று மேலோங்கியுள்ளது.

சோழர்காலத்தில் வலங்கை இடங்கைப் பிரிவுகளும் ஏற்பட்டிருந்தன ; பிற்காலத்தில் இவர்களுக்குள் ஏற்பட்ட வழக்குகள் பலவற்றை ஆங்கிலேயர் தீர்த்துவைத்துள்ளனர்.

"தமிழன் தன் முயற்சியினால் இம்மையில் தன் நிலைமையை யுயர்த்தினாலும், தன் குலத்தை மறுமையில்தான் மாற்ற முடியும் என்றும், சூத்திரன், பல பிறப்பில் தவஞ்செய்து வைசியனாகலா

மென்றும், இங்ஙனமே வைசிய நிலையிலும் சத்திரிய நிலையிலும் முயன்ற பின்னரே இறுதியிற் பிராமணனாக முடியுமென்றும் ஒரு திரிவாக்கக் கொள்கை புகுத்தப்பட்டது. இதை நம்பி ஏராளமான பொருளை வேள்வியிற் செலவிட்ட பேதையர் எத்தனையோ பேர் ! இனி, ஆறு தாண்டலையும் கடல் கடத்தலையும் தடுத்தது அறிவு வளர்ச்சித் தடையாகும்." [25] என்கிறார் பாவாணர்.

மறம், பகுத்தறிவு, தன்மானம், நெஞ்சுரம் ஆகியவற்றை இழந்ததும், தமிழ்ப்பற்றின்மையும், பண்பாட்டுத்துறையில் ஏற்பட்ட சீரழிவுகளாம்.

இவ்வாறாகத் தமிழர் பல்வேறு கலப்பு நிலைகட்கு ஆட்பட்டுத், தம் வரலாறும், இனஉயர்வும் கூடத் தெரியாத ஏதிலிகளாக மாறிப் போயுள்ளனர்.

இவ்வளவுக்கும் பின்னால் தமிழரிடை ஏற்பட்ட மறுமலர்ச்சியைத்தான் பாவாணர் தெளிநிலைக் காண்டத்தில் குறிப்பிடுகிறார்.

திருவள்ளுவர் தொடங்கிப் பல்வேறு புலவர்கள் தமிழரின் கண்களைத் திறந்துள்ளனர் ; அவர்களது அடிப்படை முயற்சிகளுக்கான நல்ல பயனைத் தந்தது ஆங்கிலர் ஆட்சியேயாகும்.

கிறித்தவ விடையூழியர் (Missionaries) பலர் செய்த தொண்டின் விளைவாகத் தாழ்த்தப்பட்ட தமிழர் பலர் பல்வேறு துறைகளில் முன்னேற வாய்ப்பு ஏற்பட்டது, வகுப்புவாரிச் சுழல்பதவிகளும், உதவித்தொகை முதலிய சலுகைகளும் பிற்காலத்தில் அனைவருக்கும் வாய்த்ததென்றால் அதற்கான அடிப்படைகளை இட்டவர்களை மறந்துவிடலாகாது.

நாட்டுப்பற்றிற்கு உயிர் மொழிப்பற்று ; இந்நூற்றாண்டில் பரிதிமாற்கலைஞரும் பாம்பன் குமர குருதாச அடிகளும் தனித்தமிழ் முன்னோடிகளாவர். மறைமலையடிகள் தனிப்பெருந் தமிழ் மீட்பர் என்று பாவாணர் குறிப்பிடுகிறார்.

பொதுத்தேர்தலில் தோல்வியடைந்தபின் நயன்மைக் கட்சித் தலைவர் பலர் இருக்குமிடந்தெரியாமற் போயினர். இந்நிலையில் "பெரியார் ஒருவரே திரவிட-ஆரியப் போர்க்களத்திற் புகுந்து உடைபடை தாங்கி இடைவிடாது போராடி, கல்லாப் பொதுமக்கள் கண்ணைத் திறந்து கற்றோர்க்கும் தன்மானவுணர்ச்சி யூட்டி, பிராமணியத்தைத் தலைதூக்க வொண்ணாதடித்து வீழ்த்தி, ஆச்சாரியார்

25. தமிழர் வரலாறு, பக். 311-312.

புகுத்திய இந்தியை எதிர்த்துச் சிறைத் துன்பத்திற் காளாகி, கணக்கற்ற சீர்திருத்தத் திருமணங்களை நடத்தி வைத்தும் பகுத்தறிவியக்கத்தைத் தோற்றுவித்தும், மூடப் பழக்க வழக்கங்களை யொழித்தும்" [26] வெற்றி கண்டவர். இவரோடு திரு.வி.க. செய்த தொண்டினையும் பாவாணர் பாராட்டுகிறார். பா.வே. மாணிக்க நாயகரையும் பாரதிதாசனையும் தமிழ்ப் போராளிகளாகக் குறிப்பிடுகின்றார். சோம சுந்தரபாரதியாரும் கி.ஆ.பெ. விசுவநாதமும் இந்தியெதிர்ப்புத் தலைவர்களாக விளங்கினர். இன்னும் பல்வேறு வகையில் தமிழர் முன்னேற்றத்துக்காக உழைத்த பெரியோர்களை மறவாது சுட்டுகிறார்.

அறிஞர் அண்ணாவின் சீரிய செயல்கள் பாவாணரால் பாராட்டப் பெறுகின்றன.

கோவில் வழிபாடும் இருவகைச் சடங்குகளும் தமிழில் நடைபெற்றால்தான் தமிழன் முற்றிலும் விடுதலையடைந்ததாகக் கொள்ள முடியும். திருவதாங்கோட்டில் தீண்டாதார்க்கு முதன்முதல் திருக்கோவில்களைத் திறந்து விட்டவர் சி.பி. இராமசாமி ஐயர்தான் என்பதைக் குறிப்பிட்டுவிட்டு, 'தமிழரெல்லோரும் நல்லவரல்லர் ; பிராமணரெல்லாரும் தீயவரல்லர்' என்று முத்தாய்ப்பு வைக்கிறார்.

தமிழர் பல்வேறு சிற்றினங்களாகப் பிரிந்தமைக்குக் கரணியமே தமிழ் திரிந்ததுதான் ; இந்நிலையில் தமிழர் முன்னேறுவதற்கான சில வழிகளைப் பாவாணர் குறிப்பிடுகிறார்.

1. ஆங்கிலக் கல்வியைப் பேண வேண்டும்.
2. தனித்தமிழ் பேணல் - தனித்தமிழால் அன்றிக் கலவைத் தமிழால் தமிழன் உயர்வடைய முடியாது.
3. ஆராய்சியாளரைப் பேணலும், புதுப்புனைவாளரை ஊக்கலும் வேண்டும்.
4. பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிப் பதவிகளில் இருக்கும் தமிழ்ப் பகைவரை நீக்கல்.
5. இலவசக் கட்டாயத் தொடக்கக் கல்வி.
6. பிறப்புப் பற்றாது தொழில் பற்றிய குடிமதிப்பு (Census)
7. கல்வித்துறையில் குலப்பட்டத்தை நீக்கல்.
8. மக்கள் தொகைக் குறைப்பு

---

26. தமிழர் வரலாறு, ப. 334.

9. தமிழ் ஆட்சியினர் முன்னோக்கும் சேணோக்கும் கொண்டு செயற்படவேண்டும்.

10. தமிழனை முன்வைத்துத் தமிழர், தமிழரல்லாதார் என்று பார்க்க வேண்டுமேயல்லாது நயன்மைக் கட்சியர் போல் பிரித்தலாகாது.

11. தமிழரின் பொருளியல் நிலையைச் சீரழிக்கும் பரிசுச் சீட்டை நிறுத்த வேண்டும்.

12. நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் எண்ணித் திட்டமிடும் பொறுப்பாட்சி தேவை.

13. மாணவர் அரசியற் கட்சியில் சேரலாகாது.

பல்வேறு போர்க்கருவிகளையும், மதிற் பொறிகளையும் செய்யத்தெரிந்த தமிழர் இப்போது மாட்டு வண்டியும் குதிரை வண்டியும் மட்டும்செய்ய முடியும்என்னும் அளவுக்குக் குறுகிப்போயினர். ஆனால் ஆரியரோ இன்றைய அறிவியல் உலகையே ஆக்கிப் படைத்து ஆட்டிப் படைத்துக் கொண்டுள்ளனர். தமிழின ஒற்றுமை சிதைந்து போனதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே ஒற்றுமையைப் பேண வேண்டும். மக்கட்பெயர்களைப் பெயரளவில் வழங்கவேண்டுமேயன்றி வேறுவகை ஒட்டுகளோடு வழங்கக்கூடாது.

இந்நிலையில் துருக்கியைத் திருத்தி முன்னேற்றிய கமால்பாட்சா போல் ஒருவர் தமிழ்நாட்டுக்குத் தேவை என்பது பாவாணர் கருத்து.

பிந்தித் தோன்றிய நாடுகள் எல்லாம் முன்னேறிவிட்டன. ஆனால் உலகில் முதன்முதல் நாகரிக விளக்கேற்றிய தமிழன் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக முன்னேற முடியாமல் தடுக்கப்பட்டுள்ளான். தடைகளை உடைத்துத் தலை தூக்க வேண்டியது தமிழன் கடமை.

தமிழன் ஒவ்வொருவனும் தான் பிறப்பில் தாழ்ந்தவன் அல்லன் என்பதை உணர வேண்டும்.

"இன்று தமிழன் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாயிருந்து பழமை போற்றி வருபவர், பெரும்பாலும் முந்திய அல்லது மூத்த தலைமுறையினரே. இனிமேலும் அவ்வநாகரிகக் கொள்கையில் ஊன்றியிருப்பாராயின், விரைந்து ஒரு பெரும் புரட்சியே கிளர்ந்தெழும். இளந் தமிழர் உள்ளத்திலெல்லாம் ஓர் எரிமலை கொதித்துக் குமுறிக் கொண்டிருக்கின்ற தென்றும், எச்சமையத்திலும் அது பொங்கி வழியுமென்றும், அவர் அறிவாராக"[27] என்கிறார்.

27. தமிழர் வரலாறு, ப. 359.

பொதுவாகவே நடந்து முடிந்த உலகத் தமிழ் மாநாடுகள் எவையும் பாவாணரை நிறைவுபடுத்தவில்லை.

"தமிழனை ஆரியனும் ஏமாற்றுகின்றான் ; திரவிடனும் ஏமாற்றுகின்றான் ; தமிழனும் ஏமாற்றுகின்றான்." [28] என்கின்றார்.

---

28. தமிழர் வரலாறு, ப. 360.

# பாவாணர் பார்வையில் தமிழும் பிற திராவிட மொழிகளும்

தமிழே திராவிடத்தாய். இதனை 1891-ஆம் ஆண்டிலேயே சுந்தரம் பிள்ளை தெளிவுபடுத்தினார். ஆயினும் ஆராய்ச்சியாளரின் பொறுப்பின்மையாலும் பொதுமக்களின் அறியாமையாலும் இவ்வுண்மை இன்னும் அறியப்படாமல் உள்ளது.

இது குறித்துப் பாவாணர் தரும் முன்னுரை கூர்ந்து நோக்கத்தக்கது.

"பெலுச்சித்தானத்திலும் வடஇந்தியாவிலும் இன்னும் திராவிட மொழிகள் வழங்குவதையும், வடநாட்டு ஆரிய மொழிகளிலும் திராவிட நெறிமுறைகளே அடிப்படையாய் அமைந்து கிடப்பதையும், குச்சரமும் (குசராத்தி), மராட்டியும் பண்டைக்காலத்தில் பஞ்சத்திராவிடிகளில் இரண்டாக வடமொழியாளராலேயே கொள்ளப் பட்டதையும், இந்திய மொழிகளிலெல்லாம் மூவிடப் பெயர்களும் முக்கியமான முறைப்பெயர்களும் தமிழ்ச் சொற்களாய் அல்லது தமிழ் வேரடிப் பிறந்தனவாயிருப்பதையும், சென்ற நூற்றாண்டில் தெலுங்கு நாட்டிற்கும் கன்னட நாட்டிற்கும் சென்ற தமிழ்க் குறவர் (எறுக்கலவாரு அல்லது கொரவரு) கூட, இன்று தமிழைத் தெலுங்கும் கன்னடமும் போல ஒலித்துப் பேசுவதையும், நோக்குமிடத்து தமிழிற் புணர்ச்சியும் பகுசொன்னிலையும் தோன்றாத தொன்முது காலத்தில், தமிழே இந்தியா முழுதும் தனிப் பேராட்சி பெற்றிருந்தமை புலனாம்" [1] என்கிறார்.

மேலும் அவர் கூறுவதாவது :

"தட்ப வெப்ப நிலையினாலும், ஒலிமுறைச் சோம்பலினாலும், இலக்கிய விலக்கண அணைகரையின்மையாலும், ஆரியக் கலப்பினாலும், தமிழர் விழிப்பின்மையாலும், நாவலந் தீவு முழுவதும் ஒரு தனியாய் வழங்கிய முதுபழந்தமிழ், பல்வேறு மொழிகளாய்ப் பிரிந்து, வடநாட்டில் ஆரியமயமாயும் தென்னாட்டில் ஆரியக்

---

1. திரவிடத் தாய், முகவுரை.

கலப்பினதாயும் வேறுபட்டதுடன், ஆரியச்சார்பு மிக்க திராவிட மொழிகள் மேன்மேலும் தமிழை நெருக்கி நெருக்கித் தெற்கே தள்ளிக் கொண்டே வருகின்றன".[2]

இந்நிலையில் தமிழையும் பிற திராவிட மொழிகளையும் ஒப்பிட்டு ஆராய்வதால் உருப்படியான பல பயன்கள் விளைகின்றன. தமிழின் சிறப்பையும் பழந்தமிழர் பெருமையையும் அறிவதுடன் உலகம் முழுவதும் தழுவிய குலநூல், வரலாற்றுநூல், மொழிநூல் ஆகிய முக்கலைகளின் திறவுகோலையும் காணப்பெறலாம் என்று பாவாணர் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிடுகிறார். தொடர்புடைய பலமொழிகளை ஆராய்ந்து ஒரு மொழியை அதனோடு தொடர்புடைய பிற மொழிகளின் தாய் என நிறுவுவதற்கு ஒரு வழி உள்ளது.

"ஒரு மொழிக்கு அடிப்படையானவும், இன்றியமையாதவுமான மூவிடப் பெயர்கள், முறைப் பெயர்கள், தட்டுமுட்டுப் பெயர்கள், அக்கம் பக்கப் பொருட் பெயர்கள், பேரிடப் பெயர்கள், வா, போ முதலிய முக்கிய வினைகள், பல்வகைப் பண்புப் பெயர்கள், கை கால் முதலிய சினைப் பெயர்கள், ஆகிய இவை, இயற்கையான வடிவிலும் வேர்ப் பெயர்கள் தாங்கியும் எம்மொழியிலுள்ளனவோ, அம் மொழியே அதற்குத் தாய் எனத் துணிதல் வேண்டும்"[3] என்பதுதான் அவ்வழி.

"சிலர், தமிழுக்கு மிகப் பிற்பட்டனவும், தமிழினின்றே தோன்றினவும், மிகத்திரிந்துள்ளனவும், ஆரியக் கலப்பு மிக்குள்ளனவுமான மலையாளம், கன்னடம் முதலிய மொழிகளுக்குப் பிற்காலத்தில் வட மொழியைப் பின்பற்றி எழுதியுள்ள 'கேரளபாணினீயம்', 'கர்னாடக ஸப்தமணி தர்ப்பணம்' போன்ற நூல்களைத் துணைக்கொண்டு தமிழியல்பை ஆராய்வது, நரிவாலைக் கொண்டு கடலாழம் பார்ப்பதும், தந்தையை மகன் பெற்றதாகக் கொள்வதும் போன்றதே"[4] என்பது பாவாணர் கருத்து.

தமிழ் 'தமிழம்' என வழங்கியது நாட்டையும் மொழியையும் குலத்தையும் குறித்தது. பண்டைக்காலத்தில் 'அம்' ஈறு பெற்று வழங்குதல் மரபாக இருந்தது. கடாரம், சாவகம் முதலியன எடுத்துக்காட்டுகளாகும்.

"வடநாட்டு ஆரிய (சமற்கிருத) நூல்களில் திராவிடம் என்னும் சொல் முதலாவது த்ரமிளம் என்றே வழங்கி வந்தது. ழகரம் வட

2. திரவிடத்தாய், ப. 4.
3. மேலது, ப. 6.
4.

மொழியிலில்லை. சில உயிர்மெய்ம் முதல்களை ரகரஞ் சேர்த்து த்ர, ப்ர எனப் புணரெழுத்துகளாகத் திரிப்பது வடநூலார் வழக்கம். எ-டு : படி-ப்ரதி, பவளம்-ப்ரவளம். இதனால், தமிழகம் என்னுஞ் சொல் த்ரமிளம் எனத்திரிந்தது இயல்பே. பின்பு அது நாளடைவில் த்ரவிடம், எனத் திரிந்தது. ள-ட, ம-வ, போலி. த்ரவிடம் என்பது மெய்ம்முதலாதலின் தமிழில் திரவிடம் என்றாகிப் பின்பு திராவிடம் என நீண்டு வழங்குகின்றது." 5

தொல்காப்பியம், சங்க இலக்கியம் முதலியவை அறியப்படாத காலத்தில் ஆய்வு செய்த கால்டுவெல் இதற்கு மாறான கருத்தைக் கூறியுள்ளார். ஆனாலும் கிரியர்சன் தமிழம் என்பதே த்ரவிடம் என்பதன் மூலம் என்பதை நிலைநாட்டியுள்ளார்.

தலைக் கழகக் காலத்தில் தமிழ், செந்தமிழ், கொடுந்தமிழ் என இரண்டாக வகுக்கப்பட்டது. இவை வழங்கும் நாடுகளும் செந்தமிழ் நாடு, கொடுந் தமிழ்நாடு எனப்பட்டன. செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்திருந்த பன்னிரு நாடுகளும் கொடுந்தமிழ் நாடுகளாயிருந்தன.

செந்தமிழ்ச் சொற்கள் இயற்சொல் (primitives). திரிசொல் (Derivatives) என இரண்டாக வகுக்கப்பட்டன. கிள், சேர் என்பன இயற்சொற்கள். கிள்ளை, சேரி என்பன திரிசொற்கள். கிள், சே என்பன வேர்ச் சொற்கள். இவைதான் முந்தியவை. இதன்பின் இயற்சொற்கள் பிறக்கின்றன.

கொடுந்தமிழ்ச் சொற்கள் செந்தமிழ் நாட்டைச் சுற்றியிருந்த பலதிசையிலும் வழங்கியமையால் திசைச் சொற்கள் எனப்பட்டன.

இடைக் கழகக் காலத்தில் புதிதாய் வந்துவழங்கிய ஒருசில வடசொற்கள் தமிழிற் கலந்த அயன்மொழி என்ற வகையில் வட சொற்கள் என்றே கூறப்பட்டன.

கொடுந்தமிழ்ச் சொற்கள் ஐந்து வகைப்படும்.

| தமிழ் | தெலுங்கு |
|---|---|
| 1. செப்பு-விடைசொல் | செப்பு (சொல்)-பொருள் திரிந்த சொல். |
| 2. போயினான் | போயினாடு-வடிவு திரிந்த சொல். |
| 3. செய், கும்பு | Cey. Gumpu - ஒலி திரிந்த சொல். |

5. திரவிடத் தாய், ப. 8-9.

4. வெதிர் — வெதுரு - செந்தமிழில் வழக்கற்ற சொல்.

5. சதிர் — சதுவு-புதுச் சொல்.

இது திராவிட மொழிகள் அனைத்திற்கும் பொருந்தும். தொல்காப்பியர் காலத்தில் கொடுந்தமிழ் நாடுகளாய் இருந்தவை பழந்தீபம், சிங்களம், கருநடம், வடுகு (தெலுங்கம்), கலிங்கம் முதலியவை. இவை பிற்காலத்தில் பிறமொழி நாடுகளாகவே ஆகிவிட்டன.

"இன்றும் தென்னாட்டில் ஓரளவு செவ்வையாய்ப் பேசப்படும் தமிழ் வடக்குநோக்கிச் சிறிது சிறிதாய்த் திரிந்து முதலாவது கொடுந் தமிழாயும் பின்பு திராவிடமாயும் திரிவதையும், திராவிடமும் ஆரியக் கலப்பால் காலாரியமாய் மாறுவதையும், அதற்கப்பால் முறையே அரையாரிய மொழிகளும் முழு ஆரிய மொழிகளும் வழங்குவதையும், ஆரியர் பழங்குடிச் சொற்களையெல்லாம் அகற்றிவிட்டு அவற்றிடத்தில் ஆரியச் சொற்களையே வழங்குவதில் கண்ணுங் கருத்துமாயிருந்து இக் கேட்டுத் தொழிலை வடக்கிருந்து தென்கோடிவரை செய்து வருவதையும் நோக்கின், முற்காலத்தில் ஒரு மொழியே நாவலந்தேய முழுதும் தென்கோடியிலிருந்து வடகோடி நோக்கிச் சிறிது சிறிதாய்த் திரிந்து வழங்கியதென்பதையும், ஆரியக் கலப்பில்லாவிட்டால் இன்றும் வடநாட்டில் திராவிடமே வழங்கும் என்பதையும் உய்த்துணரலாம்"[6] என்று பாவாணர் குறிப்பிடுகிறார்.

விந்தியமலைக்கு வடக்கிலுள்ள இந்தி, வங்கம் முதலிய மொழிகளை வடதிரவிடம் அல்லது முன்திரவிடம் என்றும் அம்மலையை அடுத்த மராத்தி, குசராத்தி முதலியவற்றை நடுத்திரவிடம் அல்லது இடைத்திரவிடம் என்றும், தெலுங்கு, கன்னடம் முதலியவற்றைத் தென்திரவிடம் அல்லது பின்திராவிடம் என்றும் அழைக்கலாம் என்பது பாவாணர் கருத்து.

தெலுங்கு தனியாய்ப் பிரிந்து போனபின் திராவிட மொழிகளை 'ஆந்திர திராவிட பாஷை' என அழைத்தனர் வடநூலார். இதில் 'திராவிடம்' என்பது தெலுங்கொழிந்த பிற தென்னக மொழிகளைக் குறிப்பிடுகிறது. கி.பி. 7ஆம் நூற்றாண்டின் குமரில பட்டர் வழக்கும் இதுவே.

கன்னடம், மலையாளம் பிரிந்த பின் தமிழ் ஒழிந்த பிற அனைத்தும் திராவிட மொழிகள் எனப்பட்டன.

---

6. திரவிடத் தாய், ப. 16.

"தமிழினின்று திரிந்துள்ள திராவிட மொழிகள், பின்வருமாறு பன்னிரண்டெனச் சென்ற நூற்றாண்டிற் குறித்தார் கால்டுவெலார்.

### திருந்திய மொழிகள்

1. மலையாளம்
2. தெலுங்கு
3. கன்னடம்
4. துளு (துளுவம்)
5. குடகு (குடகம்)

### திருந்தாத மொழிகள்

1. துடவம்
2. கோத்தம்
3. கோண்டி
4. கொண்டா அல்லது கூ
5. ஒராவுன்
6. இராசமகால் அல்லது மாலெர்
7. பிராகுவி

இந்நூற்றாண்டில், பேரா. எமெனோவும் இற்றைத் திராவிட மொழிகள் மலையாளம், கோத்தம், துடவம், குடகம், துளுவம், கன்னடம், தெலுங்கு, கோலாமி, நாய்க்கி, பரிசி (பர்ஜி), கடபம், கோண்டீ, கொண்டா, கூய், குவீ, குருக்கு, மலாத்தோ, பிராகுவி எனப் பதினெட்டாகக் கணக்கிட்டுள்ளனர்.

திராவிட மொழிகள், பொதுவாக வடக்கே செல்லச் செல்லத் திரிந்தும் சிதைந்தும் குன்றியும், தெற்கே வரவரத் திருந்தியும் விரிந்தும் இலக்கியம் கொண்டும் இருக்கும்.

மலையாளம் தென்னாட்டு மொழியும் பழஞ்சேரநாட்டுத்தமிழின் திரிபுமாயினும், துஞ்சத்து எழுத்தச்சனின் அடிமைத்தனத்தால், பிற திராவிட மொழிகளினும் மிகுதியாகவும் அளவிறந்தும் ஆரிய வண்ண மாக்கப்பட்டது."[7] ஆனால் பாவாணர் ஓரிடத்தில் தமிழல்லாத திராவிட மொழிகள் 21 என்று குறிப்பிடுகிறார்.[8]

தமிழினின்று பிற திராவிடமொழிகள் வேறுபடக் கரணியங்கள் பல. அவற்றைப் பன்னிரண்டாக வகுக்கிறார் பாவாணர்.

---

7. தமிழர் வரலாறு, ப. 275.
8. தமிழ் இலக்கிய வரலாறு, ப. 311.

1. தமிழ் அல்லது திரவிட மக்கட் பெருக்கம்.

2. எழுத்தொலித் திரிபு

ழ-ட (தெ) - தட்பவெப்பநிலை
ண-ன (தெ) - சோம்பல்

3. சொல் திரிபு

4. பொருள் திரிபு

5. இயற்கைத் திரிபு
வீடு-இல்-மனை

6. வழக்கற்ற சொல் வழங்கல்
துன்னு-தை (ம)

7. குடியேற்றப் பாதுகாப்பு

8. புத்தாக்கச் சொல்
மேடி (டி) - வாங்கு

9. தமிழொடு தொடர்பின்மை

10. வடசொற்கலப்பு

11. வடமொழி எழுத்தையும் இலக்கணத்தையும் மேற்கொள்ளல்

12. தமிழின் பண்படுத்தம்

திராவிடத்திற்கு ஆரியக் கலப்பால் வரும் பத்துக் கேடுகளைக் குறிப்பிடுகின்றார் பாவாணர். மேலும் "ஆரியர் வடமொழியைத் தேவமொழியென்று சொல்லித் திரவிட மொழிகளிலெல்லாம் எண்ணிறந்த வேண்டாத வடசொற்களைப் புகுத்தி, தமிழொழிந் தவற்றிற்கு வடமொழி யெழுத்துகளையும் இலக்கணத்தையும் வகுத்து, சரித்திரத்தை மாற்றித் திரவிட நாகரிகத்தை ஆரிய நாகரிகமாகக் காட்டி வடமொழியையே திரவிடத் தாயென்று கருதும்படி செய்து விட்டனர். தமிழரல்-திராவிடரும்வடமொழித் தொடர்பை உயர்வாகவும் தமிழ்த் தொடர்பை இழிவாகவும் கருதி, ஆரியச் சார்பில்லாத தமிழையும் தமிழரையும் பழிக்கின்றனர். இது, மூக்கறையன் பிறரையும் மூக்கறுக்கச் சொன்ன கதையேயன்றி வேறன்று"[9] என்றும் கூறுகிறார்.

---

9. திரவிடத்தாய், ப. 21.

"செந்தமிழும் கொடுந்தமிழும் சேர்ந்ததே தமிழாதலானும், தமிழல்-திரவிட மொழிகளெல்லாம் பழைய கொடுந் தமிழ்களேயாதலானும், திரவிடரெல்லாம் ஒரு குலத்தாரே யாதலானும், ஆரியக்கலப்பின்றி அவர் பேசும் சொற்களும் இயற்றிய நூல்களும் திரவிடமே யாதலானும், எல்லாத் திரவிட மொழிகளும் சேர்ந்தே முழுத்திர விடமாகும், திரவிட மொழிகள் பலவாயினும், அவற்றுள், தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளம் என்னும் நான்குமே சிறந்தனவாகும்".[10]

திரவிட மொழிகளில் உள்ள திரவிடச் சொன்னூற் கலையனைத்தும் திரவிடர் எல்லோர்க்கும் பொதுவுடைமையாகும். தமிழரல்-திரவிடர் ஆரியச் சார்பை விலக்கித் தமிழைத் தழுவினால் தாய்க்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பு வலுப்பெறும் என்று பாவாணர் குறிப்பிடுகிறார்.

குமரி நாட்டுத்தமிழே திராவிட தொழிகட்கெல்லாம்தாயாதலால் முன்னதன் ஒரு பொருட் சொற்களினின்றே பின்னவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சொல்லைத் தெரிந்தெடுத்து ஆளுகின்றது.

செப்பு - செப்பு (தெலுங்கு)

கிள- ஹேளு (கன்னடம்)

பறை - பற (மலையாளம்)

தமிழுக்கும் பிற திராவிடமொழிகட்கும் உள்ள தொடர்பையும் வலுவான உறவையும் நிறுவுதற்குப் பாவாணர் கால்டுவெல் கண்காணியாரின் கருத்துகளை விரிவாக எடுத்துக் காட்டுகிறார். கால்டுவெல் காட்டிய முடிவுகளில் சில மாறுபாடுகள் உண்டென்றாலும் அடிப்படை உறவு முறைகளைத் தெளிவு படுத்தியதாகவே பாவாணர் ஏற்றுக்கொள்கிறார்.

இனி, பல்வேறு அடிப்படையில் தமிழுக்கும் பிற திரவிடமொழிகட்கும் உள்ள தொடர்புகளைத் தனித்தனியே ஆராயலாம்.

தொல்காப்பியர், இளங்கோவடிகள் காலம் வரை வேங்கடத்துக்குத் தெற்கே தமிழ்தவிர வேறெம் மொழியும் வழங்கியதில்லை. எனினும் கொடுந்தமிழ் என்றிருந்த திசைமொழிகள் (Regional Dialects) பிற்காலத்தில் திரவிடம் என்னும் கிளைமொழிகளாகத் திரிந்துவிட்டன.

10. மேலது, ப. 22-23.

கி.மு.1500 எனும் கால அளவில் முதலில் திரிந்த மொழி தெலுங்காகும். கி.பி.2ஆம் நூற்றாண்டிலேயே தெலுங்கு மொழி தெளிவாக உருவாகிவிட்டது எனலாம்.

தெலுங்கை 'வடுகு' என்பது தமிழர் வழக்கு. ஆந்திரம் என்பது ஆரியர் வழக்கு. தெலுங்கு என்பதுதான் தெலுங்கராலேயே இடப்பட்டது.

தெலுங்கின் பழைய பெயர் திரிலிங்கம். இதனைத் திரிகலிங்கம் என்றும் குறிப்பதுண்டு. தெலுங்கிற்கு வழங்கும் பல பெயர்களுள் 'தெனுகு' என்பதும் ஒன்று. 'தேன்போன்றது' எனும் பொருள் படைத்தது என்பது பண்டிதர் வழக்கு.

சேரன் செங்குட்டுவனுக்கு வடநாட்டுச்செலவில் துணைவரான நூற்றுவர்கன்னர் ஆந்திரமன்னராயிருக்கலாம் என்று பாவாணர் கருதுகிறார். தெலுங்கு மொழியை முதன் முதலாகக் குறிப்பிட்ட அயலார் சீனத்திருப்போக்கரான யுவான் சுவாங் என்பவர். இது 7ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்தது.

9ஆம் நூற்றாண்டில் வடுகர் கொங்கு நாட்டில் குடியேறிவிட்டனர்; 12ஆம் நூற்றாண்டில் வடுகர் தமிழ்நாட்டில் நிலைத்துவிட்டனர்.

கி.பி. 10, 11ஆம் நூற்றாண்டுகளில் கீழைச் சாளுக்கியர்களுடன் சோழர் மணவுறவு கொண்டிருந்தனர். கலிங்க நாட்டுத் தெலுங்குமன்னர் குலோத்துங்க சோழனால் வெற்றி கொள்ளப்பட்ட காலம் கி.பி. 1115 ஆகும்.

15ஆம் நூற்றாண்டில் பாண்டியன் வேண்டுகோளை ஒட்டி, கிருட்டின தேவராயர் படைகள் தமிழ் நாட்டில் புகுந்தன. சோழ பாண்டி நாடுகள் நாயக்கர் ஆட்சிக்குட்பட்டன. நாயக்கர், இரெட்டியார் இனத்தவர்கள் தமிழ்நாட்டில் பெருகினர். பின் தெலுங்க வேளிரும், குறுநில மன்னரும் தோன்றினர். எட்டய தெலுங்கு வேளிரும், குறுநில மன்னரும் தோன்றினர். எட்டயபுரமும் பாஞ்சாலங்குறிச்சியும் இக்காலத்தில் தான் உருவாகின.

திருவேங்கடம், திருக்காளத்தி, திருத்தணிகை முதலியவை இருமொழி நிலையங்களாக மாறின ; தெலுங்கு வடமொழிக் கலப்பால் முற்றிலும் மாறியுள்ளது என்றாலும் ஒரு காலத்தில் வடமொழித் தொடர்பேயில்லாத கொடுந்தமிழாக இருந்ததுதான். ஊர்ப் பெயர்களின் சுட்டுகளை ஊன்றி நோக்குவார்க்கு இவ்வுண்மை புலனாகும். ஊர் (நெல்லூர்), புரம் (அனந்தபுரம்), குடி (தேவகுடி), களம் (ஸ்ரீ காகுளம்) முதலியன தனித்தமிழ் ஈறுகளே.

தட்பவெப்பநிலை, மக்கட்பெருக்கம், பண்டையிலக்கியவிலக்கணமின்மை, தமிழரோடு உறவு கொள்ளாமை, தமிழ் நூல்களைக் கல்லாமை, ஒலிமுறைச் சோம்பல், வடசொற்கலப்பு ஆகிய கரணியங்களால் தெலுங்கு தமிழினின்று திரிந்தது.

மூவிடப்பெயர்களில் தமிழ் தெலுங்கான பாங்கினைக் காணலாம். யான், நான்-நேனு, நீன், நீ-நீவு, நீர்-மீரு அவர்-வாரு அவை-அவி. வண்டி-பண்டி, தோனி-தோனே முதலிய பெயர்களையும், ஒகட்டி, இரடு, மூடு, நால்கு முதலிய எண்ணுப் பெயர்களையும் நோக்கி உண்மை காணலாம் தெலுங்குத் திரிபிற்கான விளக்கத்தைப் பாவாணர் கீழ்க்காணுமாறு தெளிவுபடுத்துகிறார். "தமிழுக்கும் தெலுங்குக்கும் பல சொற்கள் பொதுவாயிருப்பினும், அவற்றுள் எது எதினின்று வந்ததென்று ஆராய்ச்சியில்லாதார்க்குத் தோன்றாதிருக்கலாம். ஒரு சொல்லின் இருமொழி வடிவங்களின் பொருளையும் வேரையும் ஆராயின், எது இயற்சொல் (Primitive), எது திரிசொல் (Derivative) என்று அறிந்து கொள்ளலாம்.

வெண்ணெய் (வெள் நெய்) என்பது தமிழில் வெள்ளையான நெய் என்று பொருள்படுவது. இதன் திரிபான வென்ன என்னும் தெலுங்குச்சொல் இப்பொருளைத் தருவதன்று. தம்முன் (அண்ணன்) என்பதற்கு எதிராகத் தமக்குப்பின் பிறந்தவனைத் தம்பின் என்றனர். அது தம்பி என உலக வழக்கில் கடைக்குறையாய் வழங்குகின்றது. ஆனால், தெலுங்கிலோ தம்முடு எனத் திரிந்து வேர்ப்பொரு ளிழந்து விட்டது". [11]

தெலுங்குச் சொற்கள் தமிழில் திரிந்துள்ள முறைகளையும் பத்து வகையில் தெளிவுபடுத்துகிறார். தெலுங்கை அடுத்துத் தமிழிலிருந்து பிரிந்த மொழி என்று கருதப்படுவது கன்னடமாகும். கன்னடம் என்பது கருநடம் என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபு. முதலில் நாட்டையும் பின்னர் மொழியையும் குறிக்கிறது. கருநாடகம் என்பது மிகப்பழைய வடிவம். சில ஆண்டுகட்குமுன் அந்த மாநிலத்தார் மைசூர் மாநிலம் என்றிருந்ததைக் கருநாடக மாநிலம் என்றே மாற்றிவிட்ட செய்தி இங்கு நோக்கத்தக்கது.

கரியநாடு அல்லது கருங்கூத்து என்று பொருள்படும் 'கருநாடகம்' என்பதனைக் கரிசற் பாங்கான நாடு என்று கொள்வதே பொருத்தமாகும்.

---

11. திரவிடத்தாய், ப. 97-98.

கி.பி. 11ஆம் நூற்றாண்டில் துவரை நகர் என வழங்கப்படும் துவார சமுத்திரத்தில் ஹொய்சள பல்லாள மரபு நிறுவப்பட்டது. இது கூடப் புலிகடிமால் என்பானின் வழிமரபே.

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தவனான சீயகங்கன் காலத்தில் நன்னூல் அரங்கேற்றப்பட்டது. இதிலுள்ள குறிப்புகளைக் கொண்டு மைசூர் நாட்டில் வேங்கட நேர் எல்லை வரை 12ஆம் நூற்றாண்டு வரையுமாவது தமிழ் தவிர வேறொரு மொழியும் வழங்கவில்லை என்றே கூறலாம்.

எனினும் வடசொற்கலப்பால் கி.பி. 6ஆம் நூற்றாண்டில் தான் கன்னடம் என்னும் மொழி தோன்றத் தொடங்கியது எனலாம்.

கருநாடக மாநிலத்தில் உள்ள பலவூர்கள் தனித்தமிழ் ஈறுகளையே கொண்டு விளங்குகின்றன. மைசூர், சீரங்கபட்டினம், அரிசிக்கரை முதலிய ஊர்களை நோக்கவும் ; மைசூர் அரசரின் இயற்பெயரான 'உடையார்' என்பதே தமிழ்த் தொடர்பைத் தெளிவுறக் காட்டுவதாகும்.

கன்னடச்சீமையில் தமிழ் மன்னராட்சி ஒழிந்தமை, தமிழ்நூல்கள் வழங்காமை, தமிழர் விழிப்பின்மை, தட்பவெப்ப நிலையால் தமிழ் ஒலியும் சொல்லும் திரிந்தமை, வடசொற்கலப்பும் வடமொழியிலக் கணவமைப்புமாகிய பல கரணியங்களால் கன்னடம் தமிழினின்று திரிந்தது.

18 முறைகளில் கன்னடம் திரிந்துள்ளதாகப் பாவாணர் குறிப்பிடுவார்.

ப-ஹ ஆவதும், ப-வ ஆவதும் கன்னடத்தில் பெருவழக்காகும்,

பள்ளி-ஹள்ளி ஆகும். வேண்டா-பேடா ஆகும்

தாதை-தாத்த ; அத்தன் - அச்ச ; அம்மை-அம்ம ; அவ்வை-அவ்வெ முதலிய முறைப்பெயர்கள் தெளிவான உறவைக்காட்டுவன. கடிதம் கொண்டு போகிறவனை ஓலைக்காரன் என்போம். இது 'ஒலெகார' என்று கன்னடத்தில் வழங்குகிறது, தலையாரி தலாரி என்று வழங்குகிறது.

ஒந்து, எரடு, மூட, நால்கு எனும் எண்ணுப் பெயர்களும் ஈண்டுக் கருதத்தக்கவை. விழுங்கு என்பதே தமிழ். 'முழுங்கு' என்று கொச்சையாகத் தான் வழங்குகிறது. இது கன்னடத்தில் 'முங்கு' என வழங்கும்.

'ஈ ஊரினல்லி நனகே ஒந்து மனெயு இதே' எனும் சொற்றொடர் அமைப்பும் ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

இனி, அடுத்து வரும் மலையாள மொழிகுறித்த செய்திகளை விளக்குவோம்.

கழகக் காலத்தின் சேரநாடு இன்று மலையாள நாடாகும். சிலம்பை வெளிக் கொணர்ந்த மண் இன்று சிலம்பை அயல்மொழிக் காப்பியமாகக் கருதும் அளவுக்குச் சூழல் உருவாகி விட்டது.

மறன், திறன், என்னும் பெயர்கள் மறல், திறல் என்று திரிந்தாற்போலச் சேரன் என்னும் பெயரும் சேரல் எனப் போலியாகிப் பின்பு 'அன்' ஈறுபெற்றுச் சேரலன் என வழங்கிற்று. நார்முடிச்சேரல், இளஞ்சேரல் என்னும் பெயரையும் 'தென்னவன் சேரலன் சோழன்' என்னும் திருவாசக மொழியினையும் கொண்டு இதனை நிறுவலாம்.

சேரலன், கேரலன், கேரளன் என மருவிற்று ; நாளிகேரம், கேரம் என்றாகிக் கேரளம் என்று ஆனது என்பது பொய்மைக் கூற்று எனப் பாவாணர் மறுக்கிறார்.

கி.பி. 10ஆம் நூற்றாண்டுவரை சேரநாடு செந்தமிழ் நாடாக இருந்தது.

"ஐங்குறுநூறும் பதிற்றுப்பத்தும் ஆகிய கழக நூல்களும், சிலப்பதிகாரம் ஆகிய கழக மருவிய நூலும், புறப்பொருள் வெண்பா மாலையும், சேரமான் பெருமாள் நாயனாரின் ஆதியுலாவும், குலசேகர ஆழ்வாரின் பெருமாள் திருமொழியும் மலையாள நாடெனப்படும் சேர நாட்டில் எழுந்த செழுந்தமிழ் நூல்களே".[12]

கி.பி. 1320 இல் வீரராகவ சக்கரவர்த்தியால் பொறிப்பிக்கப்பட்ட கோட்டயம் செப்பேட்டுமொழி மலையாளத் திரிபுகளுடன் கூடிய தமிழாகும்.

எடு:- வாதில் (வாயில்), எழுந்நள்ளி (எழுந்தருளி). 1350இல் இயற்றப்பட்ட கண்ணசப் பணிக்கர் இராமாயண மொழியும் இத்தகையதே.

"போர்த்துக்கீசிய விடைத்தொண்டர் (Missionaries) முதன்முதல் மலையாளக் கரையில் வந்திறங்கினர் என்றும், மலையாள நாட்டு மொழியைத் தமக்கு முந்திய அரபியர்போல மலபார் என்றழைத்தனர் என்றும், கீழ்கரையிலும் இலங்கைக் கரையிலும் வழங்கிய மொழி (தமிழ்) அதையொத்திருக்கக் கண்டு அதையும் அப்பெயரால் அழைத்தனர் என்றும், அவர்கள் மலையாளக் கரையிலுள்ள

12. திரவிடத்தாய், ப. 35.

அம்பலக்காட்டில், 1577 அல்லது 9-இல் முதன் முதல் தமிழெழுத்தில் அச்சிட்ட புத்தக மொழியை 'மலபார் அல்லது தமிழ்' (Malabar or Tamil) என்று குறித்தனர் என்றும் கால்டுவெல் கண்காணியார் கூறுகின்றார்."[13]

இதனால் 16ஆம் நூற்றாண்டுவரை மலையாள நாட்டுமொழி கொடுந்தமிழாய் இருந்தது என்றும் அதன் பின்னரே திரிபுற்றது என்றும் உணரலாம்.

கி.பி. 1650 இல் ஆரிய எழுத்தை வகுத்தும், ஆரியச் சொற்களையும் விகுதிகளையும் புகுத்தியும் மலையாள மொழியை அமைத்தவர் துஞ்சத்து எழுத்தச்சன் என்பவர்தாம்.

கி.பி. 1860இல்தான் முதல் மலையாள இலக்கண நூல் எழுந்தது. 19ஆம் நூற்றாண்டுவரை மலையாளிகள் தமிழையும் கற்றுவந்தனர் என்றே பலமுதியவர்கள் கூறுகின்றனர்.

நாயர், நாயாடி, வாரியர் முதலிய குலத்தினர் மலையாளத்திற்கே சிறப்புடையவராக இருந்தாலும் அவர்தம் குடிப்பெயரெல்லாம் தனித்தமிழே. மேற்றிசையை அவர்கள் 'படுஞாயிறு' என்று குறிப்பிட்டாலும் அதில் செந்தமிழ் மணம் கமழ்வதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

மலையாள நாட்டின் தொண்டி, முசிறி, வஞ்சி, முதலிய துறைமுகங்கள் பண்டைத் தமிழகத்தில் அனைவராலும் பயன்படுத்தப் பட்டவை.

கோழிக்கோடு, தலைச்சேரி, கண்ணனூர், பாலைக்காடு, பரப்பனங்காடி, திருவஞ்சைக்களம் முதலிய பெயர்களும், பெயர்ஈறுகளும் தமிழின் தாய்மைத் தன்மையை வெளிப்படுத்துவனவாம்.

12ஆம் நூற்றாண்டில் வேணாடு, பூழிநாடு, குடநாடு, குட்டநாடு, மலைநாடு முதலியவை கொடுந்தமிழ் நாடுகளாக இருந்தன. இன்று அவை கேரளநாட்டின் பகுதிகளாக உள்ளன.

மலையாளம் திரிந்ததற்குக் கரணியங்கள் என ஆறு குறிப்புகளைத் தருகிறார் பாவாணர்-

1. சேரநாடு பெரும்பாலும் மலைத்தொடரால் தடுக்கப்பட்டுப் பிற தமிழ்நாடுகளுடன் பெருந் தொடர்பு கொள்ளாதிருந்தமை.

13. மேலது, ப. 35.

2. 12ஆம் நூற்றாண்டோடு பாண்டிய மரபும் 13ஆம் நூற்றாண்டோடு சோழமரபும் சேர மரபுடன் மணவுறவு நிறுத்தியமை.

3. வடமொழிக்கும் வடமொழியாளர்க்கும் தெய்வ உயர்வு கற்பிக்கப்பட்டமையும் வரம்பிறந்த வடசொற் கலப்பும்.

4. மிகு மழையால் மலையாளியர்க்கு மூக்கொலி சிறந்தமை

5. மலையாளியர் முன்னோரின் செந்தமிழ் நூல்களைக் கல்லாமை.

6. மலையாளியரின் ஒலிமுறைச் சோம்பல்." [14]

மலையாளம் திரிந்த முறைகளை 20 வகையாக வகுக்கிறார் ; அவற்றுள் வினைமரபு வேறுபாடு அமையும் பாங்கினை மட்டும் பார்க்கலாம்.

முட்ட புழுங்ஙுக (அவிக்க), விளக்கு கெடுக்க (அணைக்க), முட்டுக் குத்துக (கொடுக்க), காலுற முறிக்க (வெட்டுக), மடங்ஙி (திரும்பி) வருக.

"சேரநாட்டுக் கொடுந்தமிழாகிய மலையாளத்திலுள்ள இருவகைத் தமிழ்ச் சொற்களையும் வழக்கு வீழ்த்தற்கும் மலையாளத்தார் தமிழ்ச் சொற்களைக் கடன்கொண்டு அதனால் அவர்க்கும் தமிழர்க்கும் தொடர்பு ஏற்படாதபடியும், ஆரியர் வடசொற்களை மிகுதியாய்க் கலந்து மலையாளத்தைக் கெடுத்துத் தமிழுக்கு மிக அயன்மைப் படுத்திவிட்டனர்." [15] என்று பாவாணர் தரும் குறிப்பு ஆழ்ந்து நோக்கத்தக்கது. இதிலுள்ள முறைப்பெயர்கள் முற்றிலும் செந்தமிழ்ச் சொற்களாகவே இருப்பது வியப்புக்குரியதாகும்.

அப்பன், அம்ம, மகன், மகள், . . . . . . . . மாமனைப் பெண்ணப்பன் என்றும் மாமியைப் பெண்ணம்ம என்றும் சொல்வது கேட்கக் கேட்க இனிமையாகவுள்ளது,

அங்ஙாடி, மதிலு முதலிய இடப்பெயர்களும் தோல், தோள், நரம்பு முதலிய சினைப் பெயர்களும் பச்ச, வெள்ள முதலிய குணப்பெயர்களும், ஒன்னு, ரண்டு, மூன்று, நாலு முதலிய எண்ணுப் பெயர்களும் தமிழ்-மலையாள உறவைத் தெளிவாகக் காட்டுவன.

மலையாள வினைகளெல்லாம் ஏவலாகும்போது பெரும்பாலும் வியங்கோள் வடிவுகொள்ளும்.

செய்-செய்யுக தா-தரிக

14. திரவிடத்தாய், ப. 40.
15. மேலது, ப. 42.

மலையாள வினைமுற்றுகள் திணைபால் காட்டா ஆதலின் இரு திணை யைம்பால் மூவிடங்கட்கும் பொதுவாம். தமிழில் பதிற்றுப்பத்து என்பது மலையாளத்தில் பதுப்பத்து என்று வழங்கும்.

'ஞான் ஆ ஆளோடு ஈ குதிரெய வாங்கி' எனும் சொற்றொடர் தமிழுறவைத் தெளிவுபடுத்துவதாகும்.

'காற்றுள்ள போள் தூற்றணும்

ரண்டு தோணியில் கால்வெச்சது போலே', எனும் பழமொழிகள் தமிழுறவைத் தெளிவுபடுத்துவன.

**துளு** : திருந்திய திரவிட மொழிகளுள் ஒன்று இது. குடகுக்கு நெருக்கமானது; கன்னடத்தினின்று சிறிதும் மலையாளத்திலிருந்து பெரிதும் வேறுபட்டது.

தனி எழுத்தில்லாதது ; பழைய இலக்கியம் இல்லாதது ; சிலர் கன்னட எழுத்திலும் சிலர் மலையாள எழுத்திலும் எழுதி வருகின்றனர்.

துளுவநாடும் கொடுந்தமிழ் நாடுகளுள் ஒன்றாகும் ; எனினும் துளு மொழி கிளைமொழியாய்ப் பிரிந்து போனது 16ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்த்தான் ; துளுவநாட்டிலிருந்து தொண்டை மண்டலத்திற்குக் குடிவந்த வேளாளர் தொண்டைமண்டலத் துளுவ வேளாளர் என அழைக்கப்படுகின்றனர். அவர் மொழி தமிழேயாகும்.

நான் யானு என்றும்

நாம் நம என்றும் வழங்கப்படும்.

கள்வெ (கள்வன்), சோமாரி (சோம்பேறி) முதலியவையும், ஏளு, எண்ம, ஒம்பத்து, பத்து முதலிய எண்ணுப் பெயர்களும் ஈண்டு ஒப்பிட்டு நோக்கத்தக்கது. மல்-பருமை ; மல்லல்-வலி ; மிகுதி-இச்சொல் துளு மொழியில் நன்கு வேரூன்றி நிற்கும். 'யென குதுரெகு நின குதுரெ மல்லெ-' என்பது தமிழுறவைத் தெளிவாக விளக்கும் சொற்றொடராகும்.

ஏனைய திருந்திய திரவிட மொழிகளைப் போலவே துளு திரிதற்கான கரணியங்களும் அமைந்துள்ளன.

தமிழுக்கும் திரவிடத்திற்கும் உள்ள வேறுபாடுகளைப் பாவாணர் பட்டியலிட்டுக் காண்பிக்கிறார்.

| தமிழ் | திரவிடம் |
|---|---|
| 1மூச்சொலியும் தனியெடுப்பொலியுமின்றிப் பெரும்பாலும் மெல்லொலி மொழியாயிருத்தல். | 1. மூச்சொலியும் தனியெடுப்பொலியும் வலிப்பொலியும் மிக்கு ஆரியத்தன்மையடைந்நதிருத்தல். |
| 2. சொல்வளமும் சொல்லாக்க ஆற்றலும் மிக்குப் பிற மொழிச் சொற்கலப்பில்லாத் தூய்மையை வேண்டல். | 2. சொல்வளமும் சொல்லாக்க ஆற்றலுமின்மையால் தூய்மை வேண்டாது எம்மொழிச் சொற்கலப்பையும் ஏற்றல். |
| 3. சமற்கிருதத்தைப் பகையாகக் கோடல். | 3. சமற்கிருதத்தை நட்பாகக் கோடல். |
| 4. வடமொழி தமிழ்த் திரிபென்னுங் கொள்கையுண்மையும் திருக்கோவில் வடமொழி வழிபாட்டை விலக்கலும். | 4. வடமொழி திரவிடத்திற்கு மூலமன தேவமொழியென்னுங் கொள்கையும், வடமொழி வழிபாட்டையே போற்றதலும். |
| 5. சொற்கள் பெரும்பாலும் திருந்திய வடிவில் வேர்ச்சொல் காட்டி நிற்றல். | 5. சொற்கள் பெரும்பாலும் திரிந்தும் சிதைந்தும் வேர்ச்சொல்லின்றி நிற்றல். |
| 6. ஆரியச் சார்பற்ற தூய தனியிலக்கியமுண்மை. | 6. பெரும்பாலும் ஆரீயச் சார்பான இலக்கியமே கொண்டுள்ளமை. |
| 7. தமிழன் பிறந்தகத்தை அறிதற்கான தொல் வரலாற்றுச் சாற்றுண்மை. | 7. தொன்னிலையறிதற் கியலாத 9-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட இலக்கியமேயுண்மை |
| 8. பொருளிலக்கணமுங் கூறும் முழு நிறைவான இலக்கணமுண்மை. | 8. பொருளிலக்கணமின்மை. |
| 9. வடமொழித் தொன்மங்களை (புராணங்களை) ஒப்புக்கொள்ளாமை. | 9. வடமொழிப் புராணங்களை முற்றும் ஒப்புக்கொள்கை. |
| 10. கட்டாய இந்தியை எதிர்க்கும் உணர்ச்சி தமிழர்க்கு விஞ்சியிருத்தல். | 10. கட்டாய இந்தியை எதிர்க்கும் உணர்ச்சி திரவிடர்க்கின்மை. |
| 11. பெரும்பாலும் குமரிநிலத் தமிழுக்கு நெருங்கிய இயன்மொழி. | 11. பெரும்பாலும் தமிழின் திரிமொழி. |
| 12. வடசொல் தீரத்தீரச் சிறப்பது. | 12. வடசொல் சேரச்சேரச் சிறப்பது.[16] |

16. தமிழ் இலக்கிய வரலாறு, ப. 321-322.

தமிழுக்கும் தமிழல்லாத பிற திரவிடமொழிகட்கும் உள்ள தொடர்பினைப் பாவாணர் பின்வருமாறு குறிப்பிடுவதுடன் அதையே முடிந்த முடிபாக வற்புறுத்துகிறார் என்பதையும் உணர வேண்டும்;

"தமிழல்-திரவிட மொழிகள் உயிரும் உடம்பும் போன்ற அடிப்படையும முக்கியமுமான பகுதிகளிலெல்லாம் தமிழேயென்றும், ஆடையும் அணியும் போன்ற மேற்புறவணியில் மட்டும் ஆரியந்தழுவினவென்றும், அவ்வாரியமும் (அவை) தமிழைத் தழுவுங்கால் வேண்டாததே யென்றும், வடமொழியைத் தமிழல்-திரவிடத்தின் தாயெனக் கூறுவது பெரிதோர் ஏமாற்றமென்றும் தெரிந்துகொள்க.

திரவிடச் சொற்களுட் சிலவற்றின் இயற்கை வடிவம் தமிழல்-திரவிட மொழிகளிலேயே இருப்பதுண்மையாயினும், அவை மிகமிகச் சிறுபான்மையவென்றும், அதுவுங் குடியேற்றப் பாதுகாப்பின் பாற்படுமென்றும் நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் திரவிடச் சொல்வேர்கள் தமிழிலேயே உள்ளனவென்றும் அறிதல் வேண்டும். தமிழல்-திரவிட மொழிகளின் மூவிடப்பெயரும் எண்ணுப்பெயருமே இவ்வுண்மையைத் தெரிவிக்கப் போதிய சான்றாகும்.

குடியேற்றப் பாதுகாப்பான ஒரு சிறு பகுதியால் தமிழின் தாய்மை குன்றிவிடாது. சில சூழ்ச்சிப்பொறிகளின் பழைய அமைப்புகள் இன்று கீழ்நர்ட்டில்தான் உள்ளன. இதனால், மேனாட்டார் கீழ்நாட்டாரிடமிருந்து பொறிக்கலையைக் கற்றார் என்றாகாது. இங்ஙனமே குடியேற்றப் பாதுகாப்பும்'[17]

இதுகாறும் கூறியவற்றால் தமிழே திரவிடமொழிகட்குத் தாய் என்பது தெள்ளத்தெளிவாக விளங்கும்.

தமிழ் திரவிடத்தாய் மட்டுமன்று. உலக முதன் மொழியும் ஆகும். இதனை எண்பிக்கவும் (to prove) பாவாணர் சான்று காட்டுகிறார்.

Bag, broad, kill, spread முதலிய சொற்களுக்கு மூலம் தெரிய வில்லை என்று ஆக்சுப்போர்டு அகர முதலி தெரிவிக்கிறது. அவற்றுக் கெல்லாம் மூலம் தமிழிலேயே உள்ளது என்று பாவாணர் தக்க சான்றுகளுடன் மெய்ப்பிக்கிறார்.

---

17. திரவிடத்தாய், ப. 112.

# பாவாணர் பார்வையில் தமிழும் வடமொழியும்

வடமொழி வரலாற்றை எழுதத் தொடங்கும் பாவாணர் முன்னுரையாகத் தரும் சில கருத்துகள் ஆழ்ந்து எண்ணுதற்குரியன.

இவ்வுலகில் இதுவரை நிகழ்ந்து வந்த பெரிய ஏமாற்றுகளுள் தலைமையானது வடமொழி தேவமொழி என்பதே. இந்த ஏமாற்றுக்கு இலக்காகாதவர் எவரும் இலர் எனலாம்.

பழங்குடிப் பேதைமையாலும் கொடைமடத்தாலும் மதவெறியாலும் தமிழ வேந்தர் ஏமாறினர். தமிழ் மறைப்புண்டு கிடப்பதும் தமிழர் ஆரியர்க்கு அடிமைப்பட்டுக் கிடப்பதுமே மேலையர் ஏமாறியதற்குக் கரணியம்.

தமிழின் அரியணையில் ஆரியம் அமர்ந்திருப்பதால் அதனை மீட்டாக வேண்டும் எனும் கடமையுணர்ச்சியோடு பாவாணர் தம் கருத்துகளை முன்வைக்கிறார்.

"பரந்த பாகுபாட்டில் ஒரு கூட்டுக்குடும்பமாய் அமைகின்ற, இந்திய ஐரோப்பிய மொழித்தொகுதியின் தொடக்கநிலை தமிழாயும் முடிவுநிலை சமற்கிருதமாயும் இருப்பதால், வடமொழியின் வரலாற்றை அல்லது இயல்பைத் தெளிவாய் அறிதற்கு, தமிழின் பிறந்தகம் எதுவென்று முதற்கண் காணல் இன்றியமையாததாம்."[1]

தமிழை ஆராய்ந்த பலர் தமிழைச் சமற்கிருத அடிப்படையில் ஆய்ந்து பேரன் பாட்டனைப் பெற்றான் எனும் முறையில் தமிழ் நெடுங்கணக்கு சமற்கிருதத்தைப் பின்பற்றியதென்று முடிவுகட்டிவிட்டனர். ழ,ள,ற, ன எனும் நான்கும் வடமொழியில் இல்லாமையால்தான் தமிழ் நெடுங்கணக்கின் இறுதியில்

---

1. வடமொழி வரலாறு, ப. 1.

வைக்கப்பட்டன வென்று கூறுகின்றனர். வடமொழியில் இன்மையே இறுதி வைப்பிற்குக் கரணியமாயின் வடமொழியில் இல்லாத எகரமும், ஒகரமும் இறுதியில் வைக்கப்படாதது ஏன் என்பது அவரது வினா.

தமிழ்ச் சொற்கள் குடும்பம் குடும்பமாகவும் குலங்குலமாகவும் தொடர்பு கொண்டிருப்பதோடு குமரிநாட்டு வரலாற்றொடு இரண்டறக் கலந்திருப்பதையும் உணர்த்துகிறார். தமிழ்ச்சொற்களுட் சில வடசொற்கள் போல் தோன்றலாம். அஃது உண்மையன்று என்பதைத் தெளிவான சான்றுகளுடன் மறுக்கிறார்.

"கிரேக்க மொழியிற் சில தமிழ்ச் சொற்களிருப்பது கொண்டு கிரேக்க நாட்டினின்று தமிழர் வந்தாரென்பது, ஒரு மரத்தினின்று பறிக்கப்பட்டு வேறிடத்திலுள்ள சில இலைகளின்றே அம்மரந் தோன்றிற்றென்பதை யொக்கும்"[2] என்கிறார்.

சமற்கிருதத்தில் ஐந்தில் இருபகுதி முழுத் தமிழ்ச்சொல் ; ஐந்திலிருபகுதி தமிழ் வேரினின்று திரிந்த திரிசொல் ; ஐந்திலொருபகுதி இடுகுறிச்சொல்.

உ.வே.சா. தம் 'குறுந்தொகை உரையுள்' நூலாராய்ச்சி என்னும் தலைப்பில் 44 சொற்களை வடசொல்லாகக் காட்டுகிறார். "அவற்றுள் அகில், அமயம், அமிழ்தம், அரசன், அவை, ஆரியர், உலகம், ஏமம், கடிகை, கலாவம், காமம், காலம், குணன், குவளை, சகடம், சூலி, சேமம், சேரி, தண்டு, தாது, தூது, தெய்வம், நகர், நீலம், பக்கம், பணிலம, பருவம், பவழம், மண்டிலம், மணி, மதம், மதி, மாலை, முகம், முத்து, முரசு, யாமம் என்னும் முப்பத்தேழும் தென் சொற்களாம்"[3] என்று பாவாணர் குறிப்பிடுகிறார்.

எழுத்தின் முறை, பிறப்பு, உயிர்மெய்த் தனிவடிவம், மாத்திரை, கிளவி, புணர்ச்சி ஆகியவற்றில் வடமொழி இலக்கணம் தமிழைத் தழுவித்தான் அமைந்துள்ளது. எழுத்தின் வரிவடிவம் கிரந்தம், நாகரிக என்னும் இருவகையிலும் பெரும்பாலும் தமிழை ஒத்திருப்பதைக் கூர்ந்து நோக்குவார் காணமுடியும். உலக மொழிகளைஆரியம், சேமியம், சித்தியம் (துரேனியம்) என மூன்று மொழிக் குடும்பமாகப் பகுப்பர். தமிழும் அதன்வழிப்பட்ட திராவிடமும் சேர்ந்த தென்மொழிக் குடும்பத்தை சிலர் ஆரியத்துக்குள்ளும், சிலர் சித்தியத்துக்குள்ளும் அடக்குவர். உண்மையில் அது அவையிரண்டிற்கும் பொது மூலமாகும்.

2. வடமொழி வரலாறு, ப. 9.
3. தமிழர்மதம், ப. 154.

"இவற்றுள் முதன்முதலாக ஆரியம் எனப் பெயர் பெற்றது இந்திய ஆரியமே. இந்திய ஆரியருள் ஒரு கூட்டத்தார் மேற்கு நோக்கிப் பிரிந்து சென்று கீழைப் பாரசீகத்திற்குக் குடியேறியபின், அவர் நாட்டிற்கு ஆரியா அல்லது ஆரியானா என்று பெயர் ஏற்பட்டதாகத் தெரிகின்றது. ஆரியானா என்பது பின்னர் இரான் என மருவிற்று. இம்மரூஉவினின்றே ஐரேனியம் (Iranian) என்னும் மொழிப்பெயர் தோன்றியுள்ளது"[4]- என்று பாவாணர் கூறுகிறார்.

வடமொழிக்கு, சமற்கிருதம், தேவபாஷா, கீர்வாணம், ஆரியம் என்றும் வேறுபெயர்களும் உண்டு. இவற்றுள் பின் மூன்றும் தற் புகழ்ச்சியின் விளைவால் எழுந்தவை.

கி.பி. 3ஆம் நூற்றாண்டினதாகிய மணிமேகலையில் வடமொழியாளன், வடமொழியாட்டி என்னும் வழக்குகள் உள்ளன. ஒரு வகையில் ஆரியம் எனும் சொல்லே தமிழ் மூலத்திலிருந்து வெடித்ததுதான் ; இதுகுறித்துப் பாவாணரே தெளிவுபடுத்துகிறார்.

"சிந்து வெளியிலிருந்து ஆரியனுக்குத் தென்னாட்டுத் தமிழ்ச் சொல்லால் எங்ஙனம் பெயர் அமைந்திருக்குமென்று, பலர் ஐயுறலாம். ஆரியர் வருகைக்கு முன்பும் வட இந்தியாவில் திரவிடரே பெரும்பாலராய்ப் பரவியிருந்தனர் என்பதையும், இந்தியாவிற்கு வருமுன்னரே வேத ஆரியரின் முன்னோர் மொழியில் தமிழ்ச்சொற்கள் கலந்திருந்தன என்பதையும், வேதக்காலத்திலேயே வேத ஆரியர்க்குத் தமிழரொடு தொடர்பு ஏற்பட்டுவிட்டது என்பதையும் உணர்வார்க்கு, இதில் எள்ளளவும் ஐயத்திற்கிடமில்லை யென்க".[5]

ஆரிய இனத்தின் பிறந்தகம் குறித்து இன்றும் யாரும் ஒரு முடிவுக்கு வரவில்லை. இந்நிலையில் இந்தியாவில் ஆரியர்க்குள்ள தொடர்புகளை வரையறுத்துக் கொண்டு மேற்சென்றால் பல உண்மைகளைக் காணமுடியும்.

வடமொழி ஒரு திரிமொழியும் கலவைமொழியுமாகலின் ஐவேறு நிலை கொண்டதாக உள்ளது. தென்திரவிடம் (வடுகு), வடதிரவிடம் (பிராகிருதம்), கீழையாரியம், வேதமொழி, சமற்கிருதம் ஆகியவை அவை.

ஆரியர் வருமுன்பே தமிழர் இருமைக்குமேற்ற பல துறைகளிலும் உயர் நாகரிகமடைந்திருந்தனர். தமிழர்தம் கலை இலக்கியப் படைப்புகள் யாவும் வடமொழியில் மொழிபெயர்க்கப்பட்டன.

4. வடமொழி வரலாறு, ப. 20.
5. மேலது, ப. 24.

மேலை அறிஞர் இந்த உண்மையை அறியாமையால் இந்திய நாகரிகம் முழுமையுமே ஆரிய நாகரிகம்தான் என்று மயங்கினர். இது, 'ஓர் இரவலன் தன் சூழ்ச்சியாற் புரவலனான பின் அவனை அரசர்குடிப் பிறந்தவனாகக் கருதுவதொத்ததாகும்' எனப் பாவாணர் குறிப்பிடுகிறார்.

இனி வேதம் குறித்துப் பாவாணர் கூறுவதைப் பார்ப்போம். "இந்திய ஆரியரின் முதல் இலக்கியமாகிய வேதம் இந்தியாவிலேயே இயற்றப் பெற்றது; தமிழ் மதங்களாகிய சிவநெறி திருமால்நெறி ஆகிய இரண்டொடும் சிறிதும் தொடர்பற்றது. ஆரிய மதமாகிய சிறுதெய்வ வேள்வி வணக்கத்தைத் தமிழரும் திரவிடரும் ஏற்றுக் கொள்ளாமையின், ஆரியர் அடுத்துக் கெடுத்தல் முறையில் தமிழ் மதங்களையே மேற்கொண்டு, புதுத்தெய்வங்களைப் படைத்தும் பல்வேறு புராணம் என்னும் தொல்கதைகளைக் கட்டியும், அவற்றை ஆரியப்படுத்தித் தமிழையும் தமிழ்ப் பூசாரியரையும் தள்ளிவிட்டு, பிராமணரே ஆரிய மொழியிற் கோயில் வழிபாடு செய்து வரும்படி ஏற்பாடு செய்து விட்டனர்."[6]

வடமொழியைப் பெருமைப் படுத்த வேண்டிச் சிலர் தொல்காப்பியர் காலத்தை மிகப் பிந்தியதாகக் கூறுவதைப் பாவாணர் ஏற்க வில்லை.

தொல்காப்பியர் காலம் கி.மு.7ஆம் நூற்றாண்டாகுமெனப் பாவாணர் பல ஏதுக்களைக் காட்டுகிறார். பாணினியின் காலம் கி.மு. ஆம் நூற்றாண்டாகும்.

செந்தமிழாகிய தமிழும் கொடுந்தமிழ்களாகிய திரவிட மொழிகளும் சேர்ந்தது தென் மொழியாகும் ; இந்நிலையில் தென்மொழிக்கும் வடமொழிக்கும் உள்ள வேறுபாடுகளைப் பின் வருமாறு காட்டுகிறார்.

| | தென்மொழி | வடமொழி |
|---|---|---|
| 1. | தெற்கில் தோன்றியது. | வடக்கினின்று வந்தது. |
| 2. | இயற்கையாய் அல்லது தானாய்த் தோன்றிய இயன்மொழி. | திராவிடத்தினின்று திரிந்து தமிழால் வளம்படுத்தப்பெற்ற திரிமொழி. |
| 3. | தூய ஓரினத்தாய்மொழி | ஈரினக் கலவை மொழி. |
| 4. | உலக வழக்கு மொழி. | வழங்கா நூன்மொழி அதனால் பிற மொழிகளையே சார்ந்து வாழும் உண்ணி மொழி. |
| 5. | இந்திய ஐரோப்பிய மொழிக் கோவையின் முதனிலை. | இந்திய ஐரோப்பிய மொழிக் கோவையின் இறுதிநிலை. |
| 6. | மென்மொழி. | வன்மொழி. |
| 7. | இயற்கைப் பால் மொழி. | செயற்கைப் பால்மொழி. |
| 8. | பொருளிலக்கணத்தால் இலக்கண நிறைமொழி. | பொருளிலக்கணமின்மையால் இலக்கணக் குறைமொழி. |
| 9. | செம்மை வரம்புமொழி. | செம்மை பரம்பிலா மொழி. |
| 10. | பெரும்பாலும் மூல இலக்கியமொழி. | பெரும்பாலும் மொழிபெயர்ப் பிலக்கிய மொழி. |
| 11. | உண்மை, சன்மை, அன்பு முதலியவற்றை உணர்த்தும் பண்பாட்டு மொழி. | பொய்மை, பிரிவினை, ஒருகுல முன்னேற்றம் முதலியவற்றை யுணர்த்தும் பண்பாடற்ற மொழி. |
| 12. | மக்கள் மொழியென்று ஒப்பும் மொழி. | தேவமெழியென்று ஏமாற்றும் மொழி" [7] |

---

7. வடமொழி வரலாறு, ப. 50

மேலும், "தென்னாடு வந்த வேதப் பிராமணரையும் அவர் வழியினரையும் நிலத்தேவரென்றே தமிழர் நீண்டகாலம் நம்பியதனாலும், அவ்வாரியரும் தமிழ்வழி நூலியற்றித் தமிழ்ப்பற்றினர் போல் நடித்துத் தமிழர்க்குப் புலனாகாவாறு சன்னஞ் சன்னமாய் ஆரியக்கருத்துகளை நுண்ணிதிற் புகுத்தி வந்ததனாலும், திருவள்ளுவர் காலம் வரை ஆரியத்தீங்கு தமிழர் கண்ணிற்குத் தெரியாது மறைந்திருந்தது" [8] என்றும் குறிப்பிடுகிறார்.

தென்மொழி வடமொழிப் போராட்டம் தொன்றுதொட்டு வழங்கிவருதலைக் காலவரிசைப்படியாக இலக்கிய மேற்கோள்களுடன் பாவாணர் விளக்குகிறார். 'மனோன்மணீயம்' சுந்தரம்பிள்ளையின் கருத்துப்புரட்சி தமிழக வரலாற்றில் ஒரு திருப்புமுனை என்று கருதுகிறார். 1916ஆம் ஆண்டு மறைமலையடிகளும் நீலாம்பிகையாரும் கலந்து பேசி எடுத்த முடிவு வடமொழி வல்லாண்மைக்கு ஒரு வீழ்ச்சியும் தமிழ் மீட்சியுமாகும் என்பது பாவாணரின் அழுத்தந் திருத்தமான எண்ணம். இது குறித்துப் பாவாணர் கூறும் கருத்து எண்ணி வியக்கத்தக்கது.

"1916ஆம் ஆண்டு, மறைமலையடிகளும் அவர்களின் அருமை முதன்மகளார் நீலாம்பிகையம்மையாரும் வடசொல்லுள்ளிட்ட வேற்றுச் சொற்களைக் களைந்து நல்லுரமிட்டு நன்னீர் பாய்ச்சிக் கண்ணுங் கருத்துமாய்ப் பேணி வளர்க்கத் தொடங்கியதினின்று, தமிழ்ப் பயிர் தழைத்தோங்கி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகின்றது. அதே சமயத்தில், அகப்பகையும் புறப்பகையுமான பல்வகைத் தமிழ்ப் பகைவரும், வேற்றுச் சொற்களை மீண்டும் மீண்டும் ஊடுவிதைத்துக் கொண்டும் விலங்கு பறவைகளை ஏவிக்கொண்டும் வரத்தான் செய்கின்றனர். ஆயினும் அவர் படுதோல்வியடைந்து அடியோடு அழிந்தொழிந்து போவது அண்ணணித்தே" [9] என்கிறார்.

தமிழே வடமொழிக்கு மூலம் என்பது பாவாணர் கருத்தாதலின் அதனை மெய்ப்பிக்கும் வண்ணம் பல சான்றுகளை அள்ளித் தெளிக்கிறார். அவ்வகையில் மொழியதிகாரப் பகுதியில் வேத ஆரியரின் முன்னோர் மொழி மேலையாரிய மொழிகட்கு இனமாயிருந்த பாங்கினைப் பலசொற்களின் தமிழ் வடிவத்தையும் அதன் முன்மையையும் கூறித் தெளிவுபடுத்துகிறார். இது தொடர்பாக

8. மேலது, ப. 51.
9. வடமொழி வரலாறு, ப. 53.

இஞ்சிவேர் எனும் சொல்லை எடுத்துக்கொண்டு அவர் எவ்வாறு ஆராய்கிறார் என்று பார்ப்போம்.

இஞ்சி - ஒரு மருந்துப் பூண்டு

இதன் இலக்கிய வழக்குக்கான மேற்கோள்களைக் காட்டுகிறார்.

இஞ்சுதல் - நீரை உள்ளிழுத்தல்

இஞ்சி காய்ந்தால் சுக்கு

சுள்-சுட்கு-சுக்கு-நீர் வற்றியது

இஞ்சிக்கு, இஞ்சிவேர், இஞ்சிக்கிழங்கு, இஞ்சிப்பாவை என்றும் பெயர்கள் உண்டு.

கி.மு.விலேயே இஞ்சி மேனாடுகட்கு ஏற்றுமதியான ஒரு பொருளாகும்.

| | | |
|---|---|---|
| ம.இஞ்சி | கோ.இஞ்ச் | பர்.சிங்கிவேர |
| L.Zingiber | GK. Zingiberis | LL.gingiber |
| OE. gingiber | E.ginger | |

இது குறித்துப் பாவாணர் கூறும் விளக்கம் வருமாறு :

"மேலையாரியச் சொற்களெல்லாம் இஞ்சிவேர் என்னும் தமிழ் வடிவைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. அவற்றை வழங்குவோரும் அவற்றைத் தமிழ்ச் சொல்லின் திரிபென ஒத்துக்கொள்வர். ஆயின் வேதமோதுவது தவிர வேறொன்றுந் தெரியாத வடமொழியாளரோ, இஞ்சிவேர் என்பதைச் ச்ருங்கவோ எனத் திரித்து, மான் கொம்பு போன்ற வடிவினது என்று வலிந்தும் நலிந்தும் பொருள் கூறி, அதை வடசொல்லாகக் காட்ட முயல்வர். ச்ருங்க என்பது கொம்பு என்று மட்டும் பொருள்படும். இஞ்சிவேர் பொதுவாகக் கிளை கிளையாயிருப்பது பற்றி, அதை மான்கொம்பொடு ஒப்பிட்டு மான் என்னுஞ் சொல்லையுஞ் சேர்த்துக் கொண்டது, வடமொழியாளர்க்குத் தென்மொழி மீதுள்ள அழுக்காற்றையும், பகுத்தறிவிற்குச் சற்றும் பொருந்தாவாறு துணிந்து கட்டிக் கூறித் தென்சொல்லை வட சொல்லாகக் காட்டும் இழிவழக்கத்தையும், காட்டச் சிறந்ததொரு சான்றாம். வேர என்பதும் உடம்பு என்று பொருள்படுவதேயன்றி, வேர் என்னும் பொருள் கொண்டதன்று. இத்தகைச் சொற்பொருட் காரணத்தை மேலையரும் ஏற்றுக்கொண்டது, அவரின் தமிழறியாமையையும் அதனால் விளையுந் தீமையையும் காட்டுவதாகும்".[10]

10. வடமொழி வரலாறு, ப. 88.

குண்டம் என வழங்கும் வடமொழிச் சொல் தமிழ்ச்சொல்லே என உறுதி செய்கிறார்.

குள்-குண்டு = குழி, சிறுகுட்டை

குண்டும் குழியும் என்பது உலக வழக்கு.

குண்டு-குண்டம் = குழி, குட்டை ; பானை, குடுவை வடமொழியில் குண்டு என்னும் வடிவமும் இல்லை ; குள் என்னும் மூலமும் இல்லை.

வடவை என்னும் சொல் தமிழ்ச் சொல் என்பதை நிறுவுகிறார்.

"பண்டைத் தமிழர் சுற்றுக் கடலோடிகளா (Circumnavigators) யிருந்தமையால், வடமுனையில் ஒரோவொருகால் தோன்றும் மின்னொளியைக் கண்டு அதற்கு வடவை அல்லது வடவனல் எனப் பெயரிட்டிருந்தனர். குமரிக் கண்டத்திற் பல பேரழிவுகள் நேர்ந்ததினால், ஊழியிறுதியழிவிற்கு அவ்வடவையே காரணமென்று கருதினர்,"[11] என்று குறிப்பிடுகிறார். பண்டைத் தமிழிலக்கியம் முற்றும் அழியுண்டு போனமையால் அதைப்பற்றிய இலக்கியக் குறிப்பினைக் காட்ட முடியவில்லை. இச்சொல்லை வடசொல்லாகக் காட்ட வேண்டி 'வடபா' என்றும் அதன் வடமொழி வடிவிற்குப் பெண் குதிரை என்று பொருளிருத்தலால் அதற்கேற்ப ஒரு கதையைச் சுட்டி வடபாக்னி என்றும் வடபாமுகாக்னி என்றும் விரித்து விட்டனர் என்கிறார்.

வடமொழி வரவால் சில தமிழ்ச் சொற்கள் அடையும் தடுமாற்றம் எண்ணிப் பார்த்தற்குரியது. குருதியைக் குறிக்கும் அரத்தம் தென்சொல். 'ரத்த' என்பது வடசொல் வடிவம். அதை 'ரத்தம்' என்று திரித்து, ரகரம் மொழிக்கு முதலில் வராது என்பதால் இரத்தம் என்று எழுதும் நிலை ஏற்பட்டுவிட்டது. இது அரங்கன் என்னும் தென் சொல்லை 'ரங்கன்' ஆக்கி மறுபடி 'இரங்கன்' ஆக்குவது போன்றதேயாகும். திவாகரம், பிங்கலம், சூடாமணி முதலிய சொற்றொகுதிகளும் (நிகண்டு) 'இரத்தம்' என்றே சுட்டுகின்றன. இதையொட்டிப் பிற்கால இலக்கியங்கள் எடுத்தாள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. உள்ள அரத்தத்தை ஒழித்துவிட்டு ஏன் இவ்வளவு இலக்கிய வழுவிற்கு இடந்தர வேண்டும்?

வீணை என்பது தமிழ்ச் சொல்லே என்று கூற முனையும் பாவாணர் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் இளங்கோவடிகளும் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் அப்பரும் 'வீணை' என்னும் சொல்லைப் பயன் படுத்தியிருக்கவும், 'வீணை' என்பது 11ஆம் நூற்றாண்டில்

11. மேலது, ப. 249.

வடக்கினின்று வந்த ஆரிய இசைக்கருவி என்பார் கூற்று தமிழ் வெறுப்பால் எழுந்தது என்கிறார்.

தமிழ்நாட்டில் வழங்கும் கணியநூல் (ஜோதிடம்) குமரி நாட்டிலேயே தமிழரால் முற்றிலும் அறியப்பட்டிருந்தது. அதை வழி வழியாகக் கையாண்டு வந்த வள்ளுவரைத் தீண்டாதவராக்கிக் கணியநூல் உரிமையை ஆரியர் தமக்கே ஆக்கிக் கொண்டதோடன்றி அது வடமொழி வழங்கிய செல்வம் என்பது போன்ற ஒரு தோற்றத்தையும் உண்டாக்கி விட்டனர் என்கிறார்.

மொழியதிகாரத்தின் முடிவாகப் பாவாணர் கூறும் கருத்து ஆழ்ந்து எண்ணுதற்குரியது.

"வடசொற்களுள் குறைந்த பக்கம் ஐந்திலிரு பகுதி தமிழாயினும், அவற்றுள் ஒன்றுகூடத் தமிழென்று காட்டப்பெறாமையும், முழுப் பூசணிக்காயைச் சோற்றில் முழுக்குவது போல் தமிழ் என்னும் பெயரே த்ரவிட என்னும் வடசொல்லின் திரிபென்று கூறுவதும், எத்துணை நெஞ்சழுத்தமான இரண்டகச் செயல் !

நூற்றுக்கணக்கான வடசொற்கட்கு மூலம் அல்லது முதனிலை தமிழிலிருக்கவும், அவற்றைக் குறியாது வடசொல்லின் பெயர் வடிவினின்றே வினைச்சொல்லைச் செயற்கையாகத் திரித்திருக்கின்றனர். சமற்கிருதம் உலக வழக்கிலில்லாத இலக்கிய நடை மொழியாதலின் (Literary dialect), அதிற் பெயரடி வினைகளை விருப்பம்போல் மிக எளிதாகத் திரித்துக்கொள்ளலாம். 'தாதுபாட' என்னும் வடமொழி வேர்ச்சொற்றிரட்டின் ஆசிரியர், தந்து புனைந்துரைத்தல் என்னும் உத்தியை இவ்வகையில் தாராளமாகக் கையாண்டுள்ளனர்.[12]

இனி இலக்கணம், இலக்கியம் என்னும் சொல்லாட்சிகள் குறித்து ஆய்கிறார். இவை தொன்று தொட்டு நூலும் வனப்பும் என இருபாற்பட்ட தமிழ்ச் செய்யுள் தொகுதிக்கே முறையே பெயராகி வழங்கி வந்துள்ளன. இவற்றிற்கு நேர் வட சொற்களே வியாகரணம், சாகித்தியம் என்பனவாகும்.

இரு மொழியிலும் இலக்கணம் ஒன்றே என்று சிலர் கூறுகின்றனர். அதை மறுக்கும் வகையில், வடமொழியிலக்கணத்தில் எழுத்தும் சொல்லும் ஓரளவு தமிழைத் தழுவியன ; யாப்பு முற்றிலும் வேறுபட்டது ; அணி பெரும்பாலும் இரண்டிற்கும் பொதுவாம் ; ஆயினும் சில தமிழ்ச் சொல்லணிகள் வடமொழியில் வரா ; பொருள்

12. வடமொழி வரலாறு, ப. 294-295.

வடமொழியில் இல்லவேயில்லை. இதுவே தமிழில் முதன்மையானது. ஆகவே இரு மொழியிலும் இலக்கணம் ஒன்றேயென்பது அறியாமையின்பாற் பட்டதாம்."[13] என்கிறார்.

எழுத்துச் சாரியை குறித்துப் பார்க்கும்பொழுது வடமொழியாளர் கரம்,காரம் என்னும் இரண்டையே தமிழினின்று கொண்டுள்ளனர். அதோடு குறிற்கு இரண்டையும் வேறுபாடின்றியும் ஆள்வர். இதனால் சாரியை அமைப்பின் தமிழ் மூலம் தெளிவாகத் தெரியும் எனக் குறிப்பிடுகிறார். வடமொழிக்கு முதன்முதல் எழுத்து ஏற்பட்டது தமிழ் நாட்டில்தான். அது தமிழ் வட்டெழுத்தினின்று திரிந்த கிரந்த எழுத்து. அதன் காலம் கி.மு10ஆம் நூற்றாண்டு.

வடமொழிக்கும் தமிழுக்கும் உள்ள உறவுகள் குறித்துக் கால்டுவெலார் கூறிய கருத்துகளில் சில முரண்பாடுகள் நேர்ந்துவிட்டன. அதற்கு ஒரே கரணியம் தொல்காப்பியத்தையும் அதன் வழியிலான தமிழின் முதன்மையையும் அறியாமையே ஆகும். அதனாலேயே மூலத்தைப் படியாகவும் படியை மூலமாகவும் பிறழ உணர நேர்ந்தது.

வடமொழியிலக்கணம் எழுத்து, சொல், சொற்றொடர் என்னும் மூன்றொடு முடிகிறது. செய்யுள், அணியிலக்கணங்கள் வேறு நூல்கள்போல் வெவ்வேறாகக் கூறப்படுகின்றன.

தமிழில் உள்ள நன்னூல் போலும் தென்னூல்கள் வடநூல் முறை தழுவிய பின்னூல்கள் என்று பாவாணர் குறிப்பிடுகிறார். 'நன்னூல் நன்னூலன்று' என்று அவர் 'தென்றல்' இதழில் எழுதிய கட்டுரையும் ஈண்டு நினைவு கூர்தற்குரியது.

வடமொழி என்பது ஒருகாலும் பேசப்படாத நூல்மொழியேயாகும். அதனால் வடமொழி வரலாறு என்பதே வடமொழி இலக்கிய வரலாறுதான்.

இலக்கியப்போக்கில் தமிழ் இலக்கியங்கள் பிற்பட்டதாகவும் ஆரிய வழிப்பட்டதாகவும் கொள்ளப்பட நேர்ந்தமைக்கு முதற் கரணியம் வடமொழியாளர் தம் விடாமுயற்சியும் உழைப்புமே என்பதை யாரும் மறுக்கவில்லை. பிராமணர் கழகக் காலத்திலேயே தமிழில் உள்ள இசை, நாடகம் பற்றிய நூல்களை முன்னோக்கோடு வடமொழியிற் பெயர்த்து வைத்தனர்.

---

13. வண்ணனை மொழி நூலின் வழுவியல், ப. 30.

பெயர்ப்பு என்பது தோன்றாதவாறும் மூலநூல் போலக் காட்சியளிக்குமாறும் அவர்கள் கையாண்ட உத்திகள் சில. மறுபாகுபாடு (Reclassification), புதுப் பெயரீடு (Change of nomenclature), மாற்றம் (Alteration) சேர்க்கை (Addition) என்பன அவை.

தமிழிசையினைக் கருநாடக சங்கீதம் எனப்பெயர் மாற்றி, பாணரைத் தீண்டத்தகாதவராக்கி ஆம்பல், குறிஞ்சி, சுருட்டி, செவ்வழி, தக்கம், நாட்டை, நேரிசை, புறநீர்மை, முல்லை, விளரி முதலிய தூய தமிழ்ப் பெயர்களை மாற்றிக் கரகரப்ரியா, தன்யாசி, நீலாம்பரி, பைரவி, வனஜாட்சி முதலிய இடுகுறிப்பெயர்களை இட்டு வடமொழியிலும், வடமொழி கலந்த திரவிடத்திலும் பாட்டுகளை இயற்றிப் பாடி ஆரியக் கலையாகக் காட்டியிருப்பது இரண்டகச் செயல் என்று பாவாணர் கண்டிக்கிறார்.

வடநூல்கள் தோன்றத் தோன்றத் தென்னூல்கள் மறைந்து கொண்டே வந்திருக்கின்றன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மொழி பெயர்க்கப்பட்ட நூல்கள் புது நூலாக, முதுநூலாக, மூலநூலாகக் காட்சியளித்துள்ளன.

தமிழரை நிலையாக அடிமைப்படுத்துதற்கென்றே மனுதரும சாத்திரம் கிபி. 2ஆம் நூற்றாண்டிலும், கோயில் அமைப்பு, வழி பாட்டு முறை, பயன் முதலியவற்றை விளக்கி 'ஆகமம்' கி.பி. 6ஆம் நூற்றாண்டிலும் வடமொழியில் இயற்றப்பட்டன.

வடமொழி தமிழகத்தில் தமிழாலேயே வளர்ந்ததென்பதைப் பாவாணர் அழுத்தமாகக் கூறுகிறார். சிறந்த வட நூலாசிரியர் பலர் தமிழ் நாட்டாராயிருந்ததும் 14ஆம் நூற்றாண்டில் வேதங்கட்கு விளக்கவுரை வரைந்த சாயனாச்சரியார் தென்னாட்டாராயிருந்ததும் இவ்வுண்மையைக் காட்டுவனவாகும்.

வடமொழியால் தமிழ் பல்வேறு வகையில் மறைக்கப்பட்டது எனப் பாவாணர் வேதனையோடு குறிப்பிடுகிறார்.

"சொன் மறைப்பு, சொற்பொருள் மறைப்பு, முதனூல் மறைப்பு, கழகக் கலைப்பு, முன்னூலழிப்பு, கலை மறைப்பு, அறிவியல் மறைப்பு, தெய்வ மறைப்பு, சமய மறைப்பு, கொள்கை மறைப்பு, கருத்து மறைப்பு, ஒழுக்க மறைப்பு, நாகரிக மறைப்பு, பண்பாடு மறைப்பு, கருப்பொருள் மறைப்பு, அறிவு மறைப்பு, மொழி மறைப்பு, எழுத்து மறைப்பு, கழக மறைப்பு, வரலாறு மறைப்பு, தமிழன் பிறந்தக மறைப்பு, தமிழ்நாடு மறைப்பு, தமிழ் இனமறைப்பு, வனப்புக்கதை மறைப்பு, பொருளிலக்கண மறைப்பு, புலவரை மறைப்பு, மொழியாக்க முயற்சித்

தடுப்பு, தனித்தமிழ் வழக்குத் தடுப்பு, தமிழ்ப் பற்றுத் தடுப்பு, தமிழ் விழாத் தடுப்பு, தமிழ்ப் புலவர் பதவிப்பேறு தடுப்பு, தமிழ்த் தொண்டர் வாழ்வுத் தடுப்பு முதலியன,"[14] அவ்வகைகள் என்கிறார்.

'சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அவை ஔ என்னும் ஒன்றலங் கடையே'

என்னும் தொல்காப்பிய நூற்பா பல சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது.

'அ ஐ ஔ எனும் மூன்றலங் கடையே' என்று மாற்றி, பல சகர முதல் தென்சொற்களை வட சொல்லென்று காட்டற்கும் தமிழ் சொல்வளமற்ற மொழி என்று பழித்தற்கும் தமிழ்ப்பகைவர் கையாண்ட உத்தி இதுவாகும் என்று பாவாணர் கண்டிக்கிறார். மயிலை நாதர் உரையில் காட்டப்பட்டுள்ள மேற்கோளையும் சுட்டிக்காட்டி, 150க்கு மேற்பட்ட சகர முதற் சொற்களையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

"உலகில் முதன் முதல் நாகரிகமாகச் சமைத்துண்டவன் தமிழனாதலின் அவன் சட்டி வனையவும் சமையல் செய்யவும் தெரியாதவன் என்று கருதவொண்ணுமோ ?"[15] என்று கேட்கிறார்.

தமிழகத்தில் ஆரியம் வேரூன்றியதாலேயே கடைக்கழகம் அமைக்கப்பட்டது. பிரயோகவிவேகம் தமிழ்ச் சொல்லிலக் கணத்தையே மறைக்க முற்படுகிறது.

இதன் விளைவாகச் செ.ப.க.த. அகர முதலியில் ஆயிரக் கணக்கான தமிழ்ச் சொற்கள் விடப்பட்டுள்ளன. அடிப்படைத் தமிழ்ச் சொற்கள் எல்லாம் ஆரியச் சொற்களாகக் காட்டப்பட்டுள்ளன. பல சொற்கள் ஆரியச் சொற்களோ என நம்மையே மயங்கவைக்கும் நிலை ஏற்பட்டதற்கும் கரணியம் வடமொழியால் நேர்ந்த நெடுங்காலத் தாக்குதலேயாகும்.

ஆமைபோல் மேல் வளைவாயிருப்பது ஆமைவடை ஆமைத்தாலி, ஆமைப்பலகை என்பன இக்கரணியம் பற்றியே பெயர் பெற்றன. ஆமை என்பதை 'ஆம' என்று திரித்து நன்றாய் வேகாதது ஆமவடை எனப் பொருள் கூறுவதிலிருந்து வடமொழி எப்படிப் பல அறிஞர்களையே திக்குமுக்காட வைக்கிறது என்பதைப் பாவாணர் எடுத்துக்காட்டுகிறார்.

முடிபதிகாரத்தில் பாவாணர் கூறும் கருத்தை இங்கு வலியுறுத்திக் கூறுவது பொருத்தமாக இருக்கும்.

---

14. வடமொழி வரலாறு, ப. 333.
15. வண்ணனை மொழிநூலின் வழுவியல், ப. 8.

'ஆரிய ஏமாற்றிற் காளா யடிமைமடப்
பூரிய வாழ்வழுந்திப் போந்தமிழா - சீரிய
செந்தமிழ் மானஞ் சிறந்துரிமை பெற்றுயர்க
முந்திய தென்னோர் முறை.'

'மறைமலை மாணடிகள் மாபெயர் வாழி
நிறைமொழி முத்தமிழ் வாழி-இறைமொழியான்
என்னும் வடமொழியும் ஏமாற்றா தெந்நிலத்தும்
மன்னுக நுன்மொழி மற்று'

வடமொழியில் இல்லாத பல சிறப்புகள் தமிழில் உண்டு ; முன்னிலையை உளப்படுத்தும் தன்மைப் பன்மைப் பெயர் உயர்திணை, அஃறிணை என்ற பாகுபாடு, பொருளிலக்கணம், வெண்பா, ஆசிரியப்பா முதலிய பாக்களும், இனங்களும், இயல், இசை, நாடகமாக மொழியைப் பகுத்தல் ஆகியவை வடமொழியில் இல்லாத சிறப்புகளாகும்.

தமிழ் தன் சிறப்பை நிலைநாட்டி, உலக மொழிகளிடை உயர் சிறப்பைப் பெற வேண்டுமென்பதே பாவாணர் விருப்பமாகும்.

# பாவாணர் பார்வையில் இந்தி

வடமொழியின் வரவாலும் உறவாலும் தமிழ் அடைந்த கேடுகளையும், அடையும் இன்னல்களையும் விளக்கமாகக்காட்டி அதனை அறவே விலக்குவதற்கான கருத்துகளையும் எடுத்துக் கூறியுள்ளார் பாவாணர்.

இக்கால அரசியல் துணையோடு தமிழை அழிக்க வரும் இந்தியை எதிர்த்துக் குரல் கொடுப்பதில் வியப்பொன்றுமில்லை, 'இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?" 'Is Hindi the Logical solution of India?' "The Language Problem of Tamiland and its Logical solution ' போன்ற நூல்கள் நேரடியாக இந்தி எதிர்ப்புக் கருவிகளாக இயங்குகின்றன.

1937 இல் வெளியிடப்பட்ட 'செந்தமிழ்க்காஞ்சி' கட்டாய இந்திக்கல்விக் கண்டனம் என்னும் பெயரில்தான் வெளியாகியுள்ளது. அந்நாளிலிருந்தே இந்திப் போரட்டத்தை ஊன்றிக்கவனித்துப் பாவாணர் தம் கருத்துகளைத் தெளிவுற எடுத்துவைக்கிறார்.

"ஆங்கிலர் நீங்கியபின், இந்தியரெல்லாரும் கண்ணியமான விடுதலையின்ப வாழ்வு வாழ எண்ணியிருந்த காலத்து, இந்தி வெறியர் ஏனைமொழியாரை முன்னினும் பன்மடங்கு இழிவான அடிமைத்தனத்துள் அமிழ்த்தவும் தமிழை நாளடைவில் மெல்ல மெல்ல அழிக்கவும் திட்டமிட்டுவிட்டனர்" என்றும் 'கடந்த முப்பான் ஆண்டுகளாகத் தமிழர் எத்தனையோ வகையில் எதிர்த்துப் போராடியும், மறைமலையடிகள் உள்ளிட்ட மாபெரும் புலவர் ஏரணமுறையில் எடுத்துரைத்தும், பாலறாவாய்ப் பசுங் குழவிகளை யேந்திய தாய்மார் பலர் சிறை சென்றும், தமிழை உயிர்போற் கருதிய இளைஞரும் நடுமையரும் தமிழ் கெடுமென்றஞ்சி அளவிறந்து உளம்நொந்து உலகை வெறுத்துத் தீக்குளித்தும், முதுகந்தண்டொடிய மாணவர் தடியடியுண்டும், இந்திவெறியர் இம்மியும் அசையாது கடுமுரண்டுடன் அஃறிணையும் நாணுமாறு அடர்த்து நிற்கின்றனர்" [1] என்றும் கூறுகிறார்.

---

1. இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும், முகவுரை (ii).

இந்தியின் மூலமொழி வட திரவிடமாய் இருத்தல் வேண்டுமென்றும் சேய்மையினாலும் காலமாற்றத்தாலும் அது நாளடைவில் ஆரிய வண்ணமாய் மாறிவிட்ட தென்றும் கருதுகிறார்.

"இந்தியின் அடிப்படை எது" ?

"நடு இந்திய மொழிகளாகிய மராட்டியும் குசராத்தியும், பஞ்சதிரவிடக் கூறுகளாகக் கொள்ளப்பட்டிருந்தமையாலும், வட இந்திய மொழியாகிய இந்தியின் அடிப்படை இன்றுந் தமிழாயிருப்பதனாலும், மேலையாரிய மொழிகளிலும் தமிழ் சிறிதும் பெரிதுங் கலந்திருப்பதனாலும், வட இந்தியப் பிராகிருதங்களும் மூவகைத் திரவிடங்களுள் ஒன்றான வட திரவிடத்தின் திரிபு வளர்ச்சியாயிருந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு"[2] என்கிறார்.

இந்திமொழிக் கிளைகளும் பிரிவுகளும் பின்வருமாறு வகுக்கப்படுகின்றன.

1. அ. மேல்நாட்டு இந்தி (பச்சானி) - பாங்காரு, பிரசபாசை (ப்ரஜ்பாஷா) கன்னோசி (கனோஜ்), பந்தேலி, உருது

 ஆ. கிழ்நாட்டு இந்தி-அவதி, பகேலி, சத்தீசகடி (சத்தீஸ்கடி)

 இ. பீகாரி-மைதிலி, போசபுரி (போஜ்புரி), மககி

2. அ. மேலையிந்தி-கடிபோலி, பிரசபாசை, பந்தேலி, கன்னோசி, பாங்காரு.

 ஆ. கீழையிந்தி அல்லது கோசலி-அவதி, பகேலி, சத்தீசகடி

 இ. பீகாரி-போசபுரி, மைதிலி, மககி (மகஹி)

 ஈ. இராசத்தானி-மால்வி, மார்வாடி, மேவதி, சைபுரி (ஜைபுரி)"[3]

இத்தகைய நிலையால் இந்தி ஒரு தனிமொழியன்று என்பதை உணரலாம். இந்தி பேசுவார் தொகையைப் பெருக்கிக் கொள்வதற்காகவே இனமொழிகளையும் இந்தியோடு இணைத்துக் கூறுகிறார்கள்.

இராமானந்தர் என்னுந் துறவியர் 15ஆம் நூற்றாண்டில் இராமகாதை பற்றிப் பாடிய பாடல்களே இந்திக்கு முதல் இலக்கியமாக வாய்த்தன ; அதனாலேயே ஆதிகிரந்தம் என்னும் பெயரும் அதற்கு உண்டு.

---

2. இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும், ப. 3.
3. மேலது ப. 7-8.

இந்தியின் சொற்றொடர் அமைப்பு தமிழைப்போல் சிறந்து விளங்கவில்லை.

வஹ் ஹை என்றால் அவன் இருக்கிறான் அவள் இருக்கிறாள், அது இருக்கிறது என்ற மூன்றுக்கும் பொருந்தும்.

நன்னூல் போன்ற இலக்கணங்களே இந்தியில் இல்லை என்றால் தொல்காப்பியம் போன்ற நூல்களை அவர்கள் கனவிலும் கருத வேண்டியதில்லை.

"திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, திருக்கோவை, நாலடியார், மெய்கண்டான் நூல் (சிவஞான போதம்), தனிப்பாடற்றிரட்டு முதலியன போன்ற அரும் பெரு நூல்கள் இந்தியிற் காண்பதிலும், ஆமைமயிர்க் கம்பளமும் குதிரைக் கொம்புக்கட்டிலும் பெறுவது எளிதாயிருக்கும்."[4] என்று பாவாணர் இந்தியின் புன்மையைக் குறிப்பிடுகிறார்.

இந்திக்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கும் மாநிலம் தமிழ்நாடு ஆகும். இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்னதாகவே, 1937 ஆம் ஆண்டில் இந்த முன் முயற்சி நடைபெற்றதும், அரசியல் அறிஞர்களும் தமிழ் அறிஞர்களும் சேர்ந்து எதிர்க்க வேண்டிய சூழல் ஏற்பட்டதும் வியப்பாகவே உள்ளன. தமிழகத்தை மீளா அடிமைத்தனத்தில் ஆழ்த்தும் முயற்சியாக இஃது அமைந்தது.

இதற்கான நோக்கத்தைப் பாவாணர் தெளிவுபடுத்துகிறார்.

"இங்ஙனம் புகுத்திய நோக்கம், ஆரியத்தை மிக வன்மையாய் எதிர்ப்பதும், தமிழ் நாகரிகத்தைப் பெரும்பாலும் தூய்மையாகத் தாங்கி நிற்பதும், வடமொழித்துணையின்றி வழங்கவும் தழைத் தோங்கவும் வல்ல மொழியைக் கொண்டிருப்பதுமான, தமிழ்நாட்டில் இந்தியைப் புகுத்திவிட்டால் ஏனை இந்தி பேசாநாடுகளில் அதை எளிதாய்ப் புகுத்தி விடலாம் என்பதே."[5]

இந்தி பேசுவார் 28.4 விழுக்காட்டினர்தான். மீதி 71.6 பேரும் பல்வேறு மொழிகளைப் பேசுபவரே. இந்நிலையில் பெரும்பான்மை என்னும் பெயரால் இந்தியா முழுவதும் இந்தியைத் திணிப்பது மக்களாட்சிப் பண்புக்கு மாறான கொடுமை ஆகும்.

---

4. இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும், ப. 12.

5. மேலது ப. 13.

ஆங்கிலத்தை அயன்மொழியாகக் கருதுவோர் இந்தியை மட்டும் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

"ஆங்கிலம் அயன்மொழியெனின், இந்தியும் ஏனைமொழி பேசுவார்க்கு, சிறப்பாகத் திரவிடர்க்கு, அவருள்ளும் சிறப்பாகத் தமிழர்க்கு, அயன்மொழியே; இந்தி இந்திய மொழியெனின் ஆங்கிலமும் இன்று ஆங்கில இந்தியரின் மொழியாயிருத்தலின் இந்திய மொழியே.

ஆங்கிலம் பொது மக்கள் மொழியாக முடியாதெனின், இந்தியும் தமிழகத்திலும் திரவிட நாடுகளிலும் வங்காளத்திலும் பொதுமக்கள் மொழியாக முடியாததே" [6] என்று பாவாணர் திட்டவட்டமாக அறிவிக்கிறார்.

'English is the only language fit to be the official and link language of India [7] என்பதைப் பல்வேறு கரணியங்களை எடுத்துக்காட்டி விளக்குகிறார்.

இந்தியால் விளையுங் கேடுகளை வரிசைப்படுத்துகிறார். இந்தியால் தமிழ் கெடும் வகைகளை முதலில் சுட்டுகிறார்.

1. கவனக் குறையும் புலமைக்குறைவும்

ஒவ்வொருவனும் தன் தாய்மொழியோடு ஓர் உலக அறிவியன் மொழியையும் கற்பதே சாலும். அவ்வகையில் தமிழுடன் ஆங்கிலத்தை முழுமையாகக் கற்பதே எல்லாவகையிலும் பொருத்தம். பயனற்ற இந்தியையும் கற்க நேர்ந்தால் தமிழ்க் கல்விக்குரிய காலமும் முயற்சியும் கவனமும் குறையும்; தமிழறிவும் குன்றும்.

2. கலப்பட மிகையும் சொன்மறைவும்

ஏற்கெனவே கலந்துள்ள பிறமொழிகளால் நம் நடையே கெட்டுப்போய் விட்டது.

இந்த வருஷம் ஜாஸ்தி லீவ்

கிஸ்திப் பாக்கி வசூலுக்காகத் தண்டோராப் போடுகிறார்கள்.

ஈஸ்வரன் கிருபையால் சகல பந்துக்களும் ஷேமம்.

சொற்றொடர்களில் தமிழ் ஒளிந்து கிடக்கிறது ; ஒழிந்தும் போய்விட்டது.

---

6. இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும், ப. 15.
7. 'The Language Problem of Tamilnadu and its logical Solution' ப. 56.

இந்நிலையில் இந்திச் சொற்களும் கலந்து தமிழின் சிறப்பைக் கெடுக்க வேண்டுமா ?

3. சொற்சிதைவு

இந்தி வந்தால் ஐந்து பாட்டு என்பதை 'அஞ்ச் பாட்' என்று தான் சொல்ல நேரும் ; தமிழ்நாடு என்பதைக்கூட 'தம்ல் நாட்' என்று கூறுமாறு ஆகிவிடும்.

"செந்தமிழ்ப் புலவரிருந்து போற்றாமையால், பழஞ்சேரநாட்டுத் தமிழின் திரிபாகிய மலையாளத்தில், முக்கால ஐம்பால் வினைமுற்றுகளும் வன்னு, வருன்னு, வரும் எனப் பாலீறற்ற வடிவங்களாகவே வழங்கிவருதலையும் நோக்குக"[8] என்கிறார்.

4. ஒலிமாற்றம்

செவ்வந்தியையே ஜாமந்தி ஆக்கி வைத்துள்ளனர்.

5. அயற்சொற் சேர்ப்பு

தமிழைக் கலவைமொழியாகக் காட்ட வேண்டி சபாஷ், பலே, பேஷ் என்பவற்றைக்கூடத் தமிழ் அகரமுதலியிற் சேர்த்தவர்கள்.

லக்கிடி, டர் முதலிய இந்திச் சொற்களையும் சேர்த்துள்ளவர்கள், மேலும் இந்திச் சொற்களைப் புகுத்த மாட்டார்கள் என்பது என்ன உறுதி ?

6. இந்தி மூலப் புணர்ப்பு

இந்தி வழக்கூன்றினால் தென் சொல்லிலிருந்து திரிந்த இந்திச் சொற்களும் தென் சொற்கு மூலமாகக் காட்டப்படும்.

7. மதிப்புக் குறைவும் பற்றுக் குறைவும் பேச்சுக் குறைவும்.

8. எழுத்து மொழி வரலாற்றழிவு :

இந்தியை ஆட்சிமொழியாய் ஆக்கியே தீர்வது என்னும் போக்கால் நாளடைவில் தமிழ் மொழி அழிந்து போவது உறுதி.

இனி இந்தியால் தமிழன் கெடும் வகைகளைக் குறிப்பிடுகிறார்.

---

8. இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும், ப. 32.

1. தமிழ் மாணவர்க்கு வீண் கடுஞ்சுமை

"மொழி என்பது மக்கள் வாயில் வழங்கும் ஒலித்தொகுதியேயன்றி, அவரினும் வேறான ஓர் உயிரி அல்லது உருவம் அன்று ; மக்கள் தம் தாய்மொழியைப் பேசினால் அது வாழும் ; அன்றேல் மாளும். ஆகவே, ஒரு மொழி வழக்கிற்கு இன்றியமையாத சார்பு அல்லது நிலைக்களம் அதைப் பேசும் மக்கள் வாய் அல்லது நாவே ; இதனாலேயே, மொழி வாயிலாய்க் கற்கப் பெறும் கலைகட்குத் தெய்வமும் நாமகள் அல்லது சொன்மகள் எனப் பெயர் பெற்றதும் என்க."[9]

2. தமிழர் குடிமைத் தாழ்வு

3. தமிழர் பண்பாட்டுக்கேடு அலுவற்பேறும் பதவியுயர்வும் பிற ஏந்துகளும் கருதித் தமிழர் பலர் அடிமைப்பட்டே தீர்வர்.

4. தமிழ்ச் சான்றோர்க்கு வாழ்வின்மை

5. தமிழின மறைவு

"தமிழின்றேல் தமிழனில்லை ஆதலால் தமிழ் அழியின் தமிழ் என்னும் இனமும் நாளடைவில் மறைந்துபோம். இந்தியரெல்லாரும் இந்தியாராகவே யிருப்பர்."[10]

இனி இந்தியை எதிர்த்து நடந்த போராட்டங்களை வரலாற்று முறையில் விரிவாக விளக்கிக் காட்டுகிறார்.

1937 ஆம் ஆண்டு இராசாசி காலத்தில் நடந்தது முதற் போராட்டம்; மறைமலையடிகள், பெரியார், சோமசுந்தர பாரதியார், கா. சுப்பிரமணிய பிள்ளை, ஈழத்துச் சிவானந்த அடிகள் சண்முகானந்த அடிகள், ஆகிய பலதரப்பினரும் இணைந்து நின்று போராடினர்.

1949 இல் இந்தியே பொதுமொழி என்னும் அரசியலமைப்பு வெளிவந்தது.

பிற்காலத்தில் இராசாசியே எதிர்த்தார் ; நேரு உறுதிமொழியும் பிறந்தது. எனினும் இந்த உறுதிமொழி தமிழ் நாட்டிற்குப் பயன்படாது என்பதே உண்மை.

'தமிழ் நாட்டிற்கு இந்தி கூடாது என்பதே தமிழறிஞர் கொள்கை. இந்தி பிந்திவரினும் இன்றே வரினும் தமிழ் நாட்டிற்கு ஒன்றே.

---

9. இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும், ப. 32.

10. மேலது, ப. 34.

'ஆரியங்கலந்த திரவிடமொழிகள் தென்மொழியின் செத்த கூறுகள். தமிழ் ஒன்றே உயிருள்ளது. ஆதலால், இந்தி வந்தால் திரவிடத்திற்குக் கேடில்லை ; தமிழுக்கோ இறப்புண்டாம். இதையறியாத திரவிடர் இந்தியை எதிர்க்கும் தமிழரைக் கண்டிப்பது அறியாமையொடு கூடிய அடிமைத்தனமே." [11]

இரண்டாம் போராட்டம் 1965 சனவரி 25 இல் தொடங்கியது. இது முற்றிலும் மாணவர் கிளர்ச்சியாக அமைந்தது. தீக்குளித்த நிகழ்ச்சிகள் தமிழகத்தில் பரபரப்பைத் தோற்றுவித்தன.

பலபேர் துமுக்கிச் (துப்பாக்கிச்) சூடுகட்கு ஆளாகி உயிரிழந்தனர்; சட்டப்பிரிவுகளை எரித்துச் சிறை சென்றனர்.

ஒருவாரியாகக் கலகம் அடங்கியது. மாணவர்க்கு ஏற்பட்ட கொதிப்பு 1967 இல் ஆட்சியையே மாற்றியமைத்துவிட்டது. அண்ணா முதல்வரானார்.

மூன்றாம் போராட்டம் மீண்டும் மாணவர்களால் தொடங்கப் பெற்றது. அண்ணா எடுத்த முன் முயற்சியால் போராட்டம் ஒரு முடிவுக்கு வந்தது. இதுபற்றிப் பாவாணர் குறிப்பிடுகிறபோது,

"தக்க சமையத்தில் முதலமைச்சர் திரு அண்ணாதுரையார் சென்னைச் சட்டப்பேரவையில் இந்தி நீங்கிய இருமொழித் திட்டத் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டதனால், மாணவர் இந்தியெதிர்ப்பு உடனே அடங்கிற்று. அதன்பின் நிகழ்ந்ததெல்லாம் மழை நின்ற பின் தொடர்ந்த தூவானமே. வடநாட்டு ஊர்க்காவற்படையும் பொருநர் படையும் வருவிக்கப்படாமலும் ஒருவரும் சுட்டுக் கொல்லப்படாமலும், மூன்றாம் இந்தியெதிர்ப்புப் போராட்டம் அடக்கப்பட்டது தி.மு.க. அரசிற்குப் பாராட்டிற்குரிய வெற்றியே"[12] என்கிறார்.

இன்னும் பல்வேறு செய்திகளை விரிவாகப் பாவாணர் ஆராய்கிறார்.

எனினும் இந்தி எதிர்ப்புக்கு அவர் முழுமையயாக நம்புவது தமிழக மாணவர்களைத்தான்.

தமிழ் மாணவர் கட்டாய இந்தி எதிர்ப்பு ஒன்றிலன்றி வேறெந்தக் கிளர்ச்சியிலும் ஈடுபடுதலும் ஊர்வலம் வருதலும் கூடாது என்பது பாவாணர் கருத்து.

---

11. இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும், ப. 37.
12. மேலது, ப. 41.

தமிழாசிரியர்கள் இவ்வகையில் எப்படி இயங்கவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.

"இந்நிலையில், தமிழாசிரியரும் மாணவரும் விடுமுறை நாளெல்லாம் பட்டினம்பாக்கம் பட்டிதொட்டி யெல்லாம் புகுந்து, இந்திக் கல்வியாலும் ஆட்சியாலும் தமிழுக்கும் தமிழர்க்கும் விளையும் தீங்குகளைக் கட்சிச் சார்பற்ற முறையில் பொதுமக்கட்கு விளக்கிக் காட்டல் வேண்டும். இது குடியரசு (Democracy) முறைப்பட்ட மக்களாட்சி (Republic) நாடாதலால், பொதுமக்கள் முனையின் எப்படையும் எதிர்நிற்காது".[13]

கட்டாய இந்திக் கல்வியால் தமிழுக்கு வரும் கேட்டைப் பாடல் வாயிலாக உணர்த்துகிறார்.

'நந்தவனத்திலோராண்டி' - என்ற மெட்டு

செந்தமிழ்க் கிந்தியின் தொந்தம்-மிகச்
சிறையற்ற நரியாட்டிற்குள்ள சம்பந்தம்

இந்தியினால் வருந்தீமை-இன்று
இயம்புவேன் கேள் வெறுப்பேதுமில்லாமை
செந்தமிழ் ஒலிகளோ எளிய-மிகச்
செயற்கையாம் இந்தியின் ஒலிகளோ வலிய
இரண்டுமொன்றாய் இசைந்தாலே-தமிழ்
எழுத்துக்களின் ஒலி இலகா பின்மாலே
முந்தியே தென்சொற்கள் மறையும்-இந்தி
முக்கியமாய் விடின் மிகவின்னுங் குறையும்
கலந்திடு முன்னமே கெட்ட-தூய்மை
கலந்தால் இந்தி தமிழ்கெடுவது முற்ற
முன்னமே வடமொழி மூலம்-காட்டி
முத்தமிழ் கெடுத்தவர்க் கொத்தது காலம்
எத்துணையோ தமிழ்ச் சொற்கள்-பலர்
நத்தும் பாஷையாம் சமஸ்கிருதத்துள்
வடமொழி கடன்கொள்ளாதென்றார்-ஏனை
வையகமொழியெல்லாம் வடமொழியென்றார்
மொழிநூலே யறியாதார் முற்றும்-சொல்லும்
முறையற்ற சொற்களுக் குரையுண்டோ சற்றும்
இயற்கையாம் தென்மொழித் தன்மை-மிகச்
செயற்கையாய்ச் சேயதே ஆரியத்தன்மை

13. இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும், முகவுரை, iii.

இந்திய மொழியெல்லாம் ஒன்றே-என்றால்
இந்தியர்க் கூண்மண சம்பந்தமுண்டே
அண்மை இந்தி எளிதென்றீர்-அந்த
ஆங்கில ஒலிகளோ எளியன கண்டீர்.
ஆங்கிலம் போலவே இந்தி- ஒரு
ஆரியக்கிளைமொழியானது சிந்தி.
உடன்பிறந்தார்க் கெல்லாம் அன்போ-நம
துடன்பிறந்தே கொல்லும் நோயொடு நண்போ.
தமிழ் நாடோ ஒரு சிறு பாகம்-என்று
தள்ளாதீர் பாரதத் தலையதுவாகும்.
பலர் இந்தி பேசுவதாலே-தமிழ்ச்
சிலர் அதைக் கற்றிடுஞ் சிரமமுங் காலோ ;
ஓநாயாட்டுக்குட்டி நியாயம்-அறி
வுள்ளவ ரெல்லாரும் தள்ளுவர் மாதோ.
ஆரியங் கலப்பதினாலே-முற்றும்
அழிந்துபோம் தமிழ்இதை அறிவீர் இக்காலே
தமிழென்றே ஒருமொழி யுண்டோ-என்று
சந்தேகிக்குங் காலம் சமீபமாயுண்டே
தமிழா உன் மடிகட்டிக் கொண்டு-இன்று
தற்காத்துக்கொள் உன்றன் தாய்மொழி நன்று"[14]

14. செந்தமிழ்க் காஞ்சி, ப. 9-10.

# தனித்தமிழும் பாவாணரும்

தனித்தமிழ் வளர்ச்சியில் பாவாணர் பங்கு குறித்து ஆராயும் போது நான்கு வகையாகப் பிரித்துக் கொண்டு பார்க்க வேண்டும்.

1. தமிழில் பிறமொழிக் கலப்பு
2. தனித்தமிழ்
3. பாவாணர் பங்கு
4. எதிர்க் கருத்துகளும் நம் கடமையும்

## 1. தமிழிற் பிறமொழிக் கலப்பு

தொல்காப்பியர் காலத்திலேயே தமிழில் வடசொற்கள் கலக்கத் தொடங்கின. அதனால்தான் செய்யுட்குரிய சொல்லாக வரையறுக்கப்பட்டவற்றுள் வடசொல்லும் இடம்பெறுகிறது. எந்தச் சொல்லையும் மொழிபெயர்த்துக் கோடல் வேண்டும் என்னும் நெறி, புலவர் நடுவில் வேரூன்றி நிற்காத காலம் அது. எனவேதான் வடசொல்கலக்க நேர்ந்தால் அதற்கு ஒரு வரையறை செய்துகொண்டு கலக்க வேண்டும் எனத் தொல்காப்பியர் வலியுறுத்தினார்.

> 'வடசொல் கிளவி வடவெழுத் தொரீஇ
> எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே'[1]

என்றார். இந்த முறையை விடாது கடைப்பிடித்திருந்தால் கூடத் தமிழில் கலந்த பிறமொழிச் சொற்கள் தமிழ் வடிவத்திலும் தமிழ் ஒலி நயத்துடனும் நின்றிருக்கும். அந்த விதியைப் புறக்கணித்ததால் ஜில்லா, கஷ்டம், இஷ்டம் என்று பேசுவதோடு நிற்காமல் நமது 'காட்சி' யைக் கூடக் 'கர்க்ஷி' என்று எழுதுவதும் மீனாட்சியை 'மீனாக்ஷி' என்று எழுதுவதுமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

கழகக் காலப் புலவர்கள் தத்தம் இலக்கியங்களில் கலந்து கொண்ட வடசொற்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு; அதுவும் தக்க வரையறைக்குட்பட்டு அவை கலக்கப்பட்டன.

---

1. தொல். சொல். நூற்பா, 401.

"இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த தமிழ்ப் புலவர் அனைவருந் தமது தமிழ்மொழி திரிபடைந்து மாறுதற்கும் அயன்மொழிச் சொற்கள் அதன்கட்புகுந்து விரவுதற்கும் இடங்கொடாமல், இலக்கண இலக்கிய வரம்புகோலித், தாமும் தனித் தமிழிலேயே நூல்கள் இயற்றி, அதனை ஒருமுகமாய் நின்று கண்ணுங் கருத்துமாய்ப் பாதுகாத்து வந்தனர்" [2] என்று மறைமலையடிகள் குறிப்பிடுகிறார்.

கி.பி. முதல் நூற்றாண்டு வரை பிறமொழிக் கலப்பு மிகுதியும் இல்லாத தனித்தமிழ்க் காலம் எனலாம். கழக இலக்கியங்களில் இரண்டு விழுக்காடு மட்டுமே பிறமொழிச் சொல் கலந்திருப்பதாகக் கூறுவர். சிலப்பதிகாரத்தில் நூற்றுக்கு ஐந்து என்னும் அளவில் கலப்பு நிகழ்ந்துள்ளது; மணிமேகலையின் இறுதி மூன்று காதைகளும் புத்த மதக் கோட்பாடுகளைத் தமிழ் வடிவில் தந்ததாகவே அமைந்துள்ளமையைக் காணலாம். திருவாசகத்தில் உள்ள 2810 சொற்களில் 373 வடசொற்கள் உள்ளதாக மறைமலையடிகள் குறிப்பிடுகின்றார்.[3]

தமிழ்நாட்டு வரலாற்றில் எப்படி இருண்டகாலம் குறிப்பிடத்தக்க பலமாறுதல்களை உண்டாக்கிய காலமோ அப்படியே தமிழ்மொழி வரலாற்றிலும் கடுமையான கலப்படம் நேர்ந்த காலமாக அது ஆகிவிட்டது.

கி.பி. 3-ஆம் நூற்றாண்டு தொடங்கி 6-ஆம் நூற்றாண்டு முடிய 400 ஆண்டுகள் நாடு சின்ன பின்னப் பட்டுப்போய்க் கிடந்தது. யார் ஆண்டார்கள், ஆட்சிமுறைகளின் தெளிவு என்ன என்பனவெல்லாம் யாராலும் திட்டவட்டமாகக் கூறமுடியாத நிலை. இதில் தமிழ் கேட்பாரற்றுக் கிடந்தது என்று சொன்னால் மிகையாகாது. இதனையொட்டி நாட்டில் புகுந்த களப்பிரர், பல்லவர் போன்றவர்கள் தத்தம் மொழியாட்சியை நிலைநாட்டினர். தமிழ் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டது. சனாதனச் சமயமும், சமணம், புத்தம் முதலிய சமயங்களும் ஆள்வோர் துணையுடன் தத்தம் முழுமையான வடிவைக் காட்டத் தொடங்கின. மூன்று நூற்றாண்டுகள் ஆட்சிபுரிந்த பல்லவர்கள் முதலில் பிராகிருத மொழியையும், பின்னர் வடமொழியையும் தாராளமாகக் கையாண்டு ஆட்சியிலும், சமய வாழ்விலும், பொது வாழ்விலும் தமிழைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாது நடந்து வந்தனர். அவர்கள் தம் பிற்காலத்தில்தான் தமிழையும் கருத்தில் கொண்டு செயல்படத் தொடங்கினர்.

2. மறைமலையடிகள், முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், ப. 24.
3. க. தமிழமல்லன், தனித்தமிழ், ப. 19.

தமிழில் பிறமொழிச் சொற்கள் கலந்ததற்கான காரணங்களாக ம.பொ. சிவஞானம் இரண்டினைக் குறிப்பிடுவார்.[4]

1. சனாதனம், சமணம், பௌத்தம், இசுலாம், கிறித்துவம் ஆகிய புறச் சமயங்களின் வரவு

2. பல்லவ, விசயநகர, மராட்டிய, மொகலாய, ஆங்கிலேய வல்லரசுகளின் வல்லாண்மை.

இந்நிலையில் அப்பர், சம்மந்தர் தேவாரங்களில் 20 விழுக்காடு வடசொற்கள் கலந்துவிட்டன. சமண, புத்த சமயங்களை வென்று சைவத்தை நிலைநாட்டுவதற்குத் தமிழ்தான் அவர்கட்குக் கை கொடுத்தது. சமண சமயஞ்சார்ந்து நின்ற அரசர் சிலர் சைவத்துக்கு மாறியபோது கொஞ்சம் தமிழுணர்ச்சியும் சேர்ந்தே பிறந்தது.

திருவாசகத்தைக் காட்டிலும் தேவாரத்தில் வடசொற்கலப்பு மிகுதி எனலாம். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள் தவிர ஏனையவெல்லாம் கழகக்காலத்திற்குப் பிந்தியனவாகலின் வட சொற்கலப்பு மிகையாக உள்ளது. சில நூற்பெயர்களே கூடத் தமிழில் அமையவில்லை.

திருமாலியம் எனப்படும் வைணவம் மேலோங்கி நின்று ஆழ்வார்கள் முனைப்பாக இயங்கிய காலத்தில் இலக்கண, இலக்கியங்களிலும் வடசொல்லாட்சிகள் பேரிடம் பெற்றன. சமணர்கள் எழுதிய இலக்கண இலக்கியங்களிலும் இந்தக்கலப்பு நிலையே மேலோங்கி நின்றது.

9-ஆம் நூற்றாண்டில் தமிழக ஆட்சியைக் கைப்பற்றிய பிற்காலச் சோழர்கள் காலத்திலும் வடமொழிக் கலப்புக்குக் குறைவொன்றும் நேரவில்லை. இலக்கண, இலக்கிய, பேச்சுமொழியில் கலந்து நின்ற வடமொழி 'தேவமொழி'யாக மதிக்கப்பட்டது. ஆள்வோரின் அரவணைப்புடன் வடமொழி கோயில்களில் புகுந்து தமிழை வெளியேற்றியது. அன்று தொடங்கிய இந்த நிலை இன்று வரைக்கும் மாறவில்லை. தமிழில் வழிபாடு செய்யவேண்டுமென்று நினைத்தாலும் உச்ச அற மன்றம் நம்மோடு மோதும் அளவுக்குச் சூழ்நிலைகள் உருவாகிவிட்டன, 'தமிழிலும் அர்ச்சனை செய்யலாம்' எனும் இழிவுச் சிறப்பு நம்மை ஆட்கொண்டுள்ளது.

கழகக் காலத்தில் ஆண்ட சோழர், பாண்டியர் பெயர்களுக்கும் பிற்காலச் சோழர், பாண்டியர் பெயர்களுக்கும் உள்ள வேறுபாட்டைக் கொண்டே கலப்படத்தின் கொடுமையைக் கண்டு கொள்ளலாம்.

4. ம. பொ. சிவஞானம், தமிழும் கலப்படமும், ப. 56.

**கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன் ஆண்ட சோழ அரசர் பெயர்கள்:**

தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன், உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, கரிகாலன், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், நலங்கிள்ளி, மாவளத்தான் போரவைக் கோப்பெருநற் கிள்ளி, வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி, நெடுங்கிள்ளி, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, செங்கணான், நல்லடி.

**கி.பி. 846–881 காலத்துப் பிற்காலச் சோழ அரசர் பெயர்கள்:**

நிசும்பசூதனி விசயாலயன், முதல் ஆதித்தன், பராந்தகன், கண்டராதித்தன், அரிஞ்சயன், உத்தமசோழன், இராசராசன், இராசேந்திரன், இராசாதிராசன், வீரராசேந்திரன், அதிராசேந்திரன் குலோத்துங்கன், விக்கிரமன்.

**சங்க காலத்துப் பாண்டிய அரசர் பெயர்கள்:**

வடிம்பலம்ப நின்ற பாண்டியன், முதுகுடுமி, பொற்கைப் பாண்டியன், கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி, பாண்டியன் அறிவுடை நம்பி, ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி, நன்மாறன், பாண்டியன், கீரஞ்சாத்தன், பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய நன்மாறன்.

**சங்க காலத்துக்குப் பின் ஆண்ட பாண்டிய அரசர் பெயர்கள்:**

அரிகேசரி மாறவர்மன், கோச்சடையன் இரணதீரன், இராசசிம்மன், நெடுஞ்சடையன், வரகுண மகாராசன், சீமாறன் சீவல்லபன், சடையவர்மன், குலசேகர பாண்டியன், பராக்கிரம பாண்டியன், அதி வீரராம பாண்டியன்".[5]

கி.பி. 12-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு உரையாசிரியர்கள் தலையெடுத்த பின் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கலந்து நின்ற வடமொழிக்கு அவர்கள் வளமான வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தனர். தமிழும் வடமொழியும் ஐம்பதைம்பது விழுக்காடாகக் கலந்து எழுதும் மணிபிரவாள நடையை உருவாக்கினர். ஆரியத்திற்கும் தமிழுக்கும் பொதுவாகவுள்ள எழுத்தாலாகி விகாரமின்றித் தமிழில் வந்து வழங்கும் வடமொழி தற்சமம் எனப்படும்.

(எ–டு) கமலம், காரணம்

---

5. க. தமிழமல்லன், மு. நூ. ப. 12-13.

ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்தாலும் பொதுவும் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகித் திரிதல் முதலிய விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் வடமொழி தற்பவம் எனப்படும்.

**(எ-டு)** ஹரன் - அரன்

இந்த நடை தற்சம மணிப்பவளம், தற்பவ மணிப்பவளம் என இருவகையாகி வளர்ந்தது.

**1. தற்சம மணிப்பவளம்:**

"மணவாளமாமுனிகள் தமக்காசார்யரான பிள்ளையுடைய ப்ரஸாதத்தாலே, க்ரமாகதமாய் வந்த அர்த்த விசேஷங்களைப் பின்புள்ளாரு மறிந்து உஜ்ஜீவிக்கும்படி, ப்ரபந்தரூபேண உபதேசித்து ப்ரகாசிப்பிக்கிறோமென்று ச்ரோத்ரு புத்தி ஸமாதாநார்த்தமாக ப்ரதிஜ்ஞை பண்ணியருளுகிறார்'

-உபதேசரத்நமாலை

**2. தற்பவ மணிப்பவளம்**

"பிரகிருதி மாயையினின்றுஞ் சிருட்டி முறை பற்றிக் குணதத்துவ முதல் வைத்தெண்ணப்படும் போக்கிய தத்துவ மிருபத்து நாலுந் தோன்றும். இஞ்ஞனஞ் சடரூபமான விந்து மோகினி மூன்றுந் தத்தங் காரியங்களைச் சிவசத்தி சங்கற்பரூப சந்நிதியினின்றுந் தோற்றுவிக்கும்"

-சிவஞான சித்தி உரை.[6]

இது குறித்து மு. அருணாசலம் என்பார் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"வட சொற்களின் பெருக்கத்தை வைணவர்களும் சமணர்களும் சேர்ந்து மேலும் மேலும் போட்டியிட்டுக் கொண்டு வளர்த்தனர். அதன் விளைவாகப் புதிதாக ஒரு செயற்கை மொழி தமிழை ஒழிப்பதற்கென்றே உருவாக்கப்பட்டது. பல்லவர் ஆட்சியிலேயே இந்த மணிப்பிரவாள நடை கருக்கொண்டு விட்டது என்றாலும் மணிப்பிரவாள நடை முழுவடிவம் பெற்றது பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பாதியிலாகும். அக்காலத்தில் வைணவ சமய ஆசிரியரான இராமாநுசர் நியமனத்தின் மேல் திருக்குருகைப் பிரான் பிள்ளான் திருவாய்மொழி வியாக்கியானம் ஆறாயிரப்படி எழுதத்

6. ஞா. தேவநேயப் பாவாணர், கட்டுரை வரைவியல், ப. 81.22.

தொடங்கியது முதல், இந்நடை தமிழ் உரைநடையில் வழங்கத் தொடங்கியது. வைணவரே அதிகமான மணிப்பிரவாள நூல் செய்தார்; சைனரும் மிகுந்த நூல் செய்துள்ளனர்."[7]

குறளுக்கு உரையெழுதிய பரிதியார் போன்றவர்கள் தமிழை ஒழிக்க வேண்டுமென்ற சூளுரையுடன் செயற்பட்டதாகவே தெரிகிறது.

"தமிழ் பைசாச பாஷை; சமஸ்கிருதம் தேவபாஷை. தமிழ் அபிவிருத்தி அடைந்ததும், அது இன்னாள் வரை ஜீவித்து வருவதும் வடமொழியால்தான். வேதாந்த சித்தாந்த காஸ்த்ர பூஜா விதிகளையும், ஸ்தோத்ரா பூஜா விதிகளையும், தவயோக ஸாதனங்களையும், நாடக-நாட்டிய கலா ஞானங்களையும் தமிழர் சம்ஸ்கிருதத்திடமிருந்தே ஆஸ்ரயித்துக் கொண்டனர். அதனால் சம்ஸ்கிருதப் பதங்களை, லிபிகளைத் தமிழில் வெகுவாக ஸம்பந்தப்படுத்தி தமிழை போஷிக்க வேண்டும் என்கின்றனர் ஒரு சாரார்."[8]

இப்படி ஒரு சாரார் தொடர்ந்து கூறிக்கொண்டு வருவது மட்டுமன்றி அந்த நோக்கிலேயே செயற்பட்டும் வருகின்றனர். இவர்களும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்தாம்.

வடமொழிச் சொற்களைப் பெரிய அளவில் புகுத்தித் தமிழை அதற்குள் அடக்கவும், அடைக்கவும் விரும்பிய சிலர் செய்த முயற்சியின் விளைவாகத் தான் 'மணிப்பிரவாள நடை' தோன்றியது. சமற்கிருதச் சொற்களும் கிரந்த எழுத்துகளும் தமிழை இருபுறமும் நெருக்கி ஒடுக்கி வைத்தன. இது பற்றிப் பரிதிமாற் கலைஞர் குறிப்பிடுகிறார்.

"சைனர், ஆரியரது ஆச்சாரங்களுட் பலவற்றை மேற்கொண்டனர்...... வடமொழியின் பாகதங்களையும் அவற்றினிலக்கணங்களையும் நன்குணர்ந்து கொண்டனர். இத்தகைய சைனப் புலவர்கள் தமிழ் மொழியையும் அப்பியசிக்கப் புகுந்து தமிழின் கண்ணே அளவிறந்த வடசொற்களை யேற்றினர். அத்துணையோடமையாது 'மணிப் பிரவாளம்' என்றதோர் புதிய பாஷையையும் வகுத்துவிட்டனர். அஃதாவது தென்மொழியும் வடமொழியும் சரிக்குச் சரி கலந்ததோர் பாஷையாம். மணியும் பவளமும் கலந்ததோர் மாலை காட்சிக்கின்பம் பயத்தல் போலத் தமிழுஞ் சமஸ்கிருதமுங் கலந்த பாஷை கேள்விக்கின்பம் பயக்கும் என்ற

7. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு-
13ஆம் நூற்றாண்டு ப. 302.
8. ம. பொ. சிவஞானம், மு. நூ; ப. 6.

போலி எண்ணமே இத்தகைய ஆபாச பாஷையொன்று வகுக்குமாறு தூண்டிற்று. 'ஸ்ரீ புராணம்' என்னும் சைவ நூல் முழுவதும் மணிப்பிரவாளம் என்னும் இவ்வாபாச நடையின் இயன்றதாமாறு காண்க. மற்றொரு புறத்தில் ஆரியப் புலவர் சிலர் தமிழ் மொழியை அப்பியசித்துக் கொண்டு, நீதி மார்க்கத்தையும் சமய சாஸ்திரங்களையும் தமிழர்க்குப் போதிப்போமெனப் புகுந்து, தமது கருத்துக்களையெல்லாம் மேற்கூறிய மணிப்பிரவாள பாஷையில் வெளிப்படுத்துரைப்பாராயினர்[9] பின்னர் வந்த விசய நகர மன்னராட்சிக் காலத்தில் தெலுங்கு ஆட்சி வாய்ப்புப் பெற்றது. எனினும் தெலுங்கு தமிழில் கலந்து கெடுத்துவிட்டது என்று சொல்லும்படியான நிலை இல்லை. ஆனாலும் தெலுங்கு மொழி இசைத்துறையை முற்றிலும் கைவயப்படுத்தித் தமிழைத் 'துக்கடா' நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டது.

இதன்பின் இசுலாமியர், தச்சுக்காரர், பிரெஞ்சியர், போர்த்துக்கீசியர், ஆங்கிலேயருடைய வரவுகளாலும் உறவுகளாலும் பாரசீக இந்துத்தானிச் சொற்களும் போர்த்துக்கீசியச் சொற்களும் கலந்து விட்டன. ஆங்கிலேயர் நம் நாட்டை விட்டுப் போய்விட்டாலும் ஆங்கிலத்தைக் கலந்து பேசும் கட்டாயம் அவர்களுக்கே இல்லாது போய் விட்டாலும் நாம் விடுவதாக இல்லை.

இன்று சிறுகதை, புதினம், நாடகம், உரைநடை கவிதை ஆகிய இக்கால இலக்கியங்கள் அனைத்தும் ஆங்கிலக் கலப்பில் அளவிறந்து மூழ்கிக் கிடக்கின்றன. பேச்சு வழக்கிலும் இத்தகைய நிலை பெருவழக்காகி நிற்கிறது.

**பிறமொழிக் கலப்பால் ஏற்பட்ட விளைவு:**

வடமொழி கலக்கக் கலக்கத்தான் தமிழில் இருந்து பிரிந்து ஒலி வேறுபாட்டோடு மட்டும் நின்ற கன்னடமும் தெலுங்கும் மலையாளமும் துளுவும் முற்றிலும் வேறுபட்ட மொழிகளாகி விட்டன.

**'கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமும்துளுவும்**
**உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்'**

எனும் சுந்தரனார் கூற்று இக் கருத்தை அரண் செய்வதாகும்.

கலப்பால் கிளை மொழிகள் சில பிறந்தது மட்டுமின்றி இன்று சிலர் அந்த மொழி இலக்கிய வரலாறுகளை எழுதும்போது அவை

9. மேலது, ப. 21-22, மேற்கோளாக ஆளப்பட்டுள்ளது.

தமிழைவிடத் தொன்மையான மொழிகள் எனக் காட்டுவது கொடுமையாகும். பிறமொழி வழக்கால் வந்த வினையல்லவா இது!

மிகப் பரந்த எல்லையுடைய தமிழ்நாடு - வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம் கிளைமொழிகளின் பிறப்பினால் எல்லை சுருங்கிவிட்டது. சென்னை, குமரியிடை விளங்கும் தமிழ்நாடு சிறுத்துப் போனதற்கும் பிறமொழிக் கலப்பே கரணியம். தேவிகுளம், பீர்மேடு, திருத்தணியை நம்முடன் வைத்துக் கொள்வதற்குப் போராட வேண்டிய நிலையும் இதனால் தானே ஏற்பட்டது!

சென்னையைக் கூட விட்டுவிடுவோமோ என்ற சூழ்நிலை கூட எழுந்தது. இதுவும் கலப்பினால் வந்த இடர் தானே!

அடுத்து, பிறமொழிகள் தமிழில் ஊடுருவி அவற்றின் வழக்கு வேரூன்றும்போது ஏற்கெனவே தமிழில் இருந்து, பலராலும் கையாளப்பட்டு வந்த தமிழ்ச்சொற்கள் பல அறவே மறைந்துபோகும் நிலை உருவாகி விடுகிறது.

சாளரம், பலகணி, வளிவாய், காலதர், காற்றுவாரி ஆகிய ஐந்தும் நல்ல தமிழ்ச் சொற்கள், தெற்குக்கே உரிய தென்றல் நம் வீட்டுக்குள் நுழைந்து நம்மைத் தழுவுவதற்கு வாய்ப்பளித்த சொற்கள்.

'கோலச் சாளரக் குறுங்கண் நுழைந்து' – சிலம்பு

'வளிதரு வாய் பொருந்தி' - பட்டினப்பாலை

ஆனால். போர்த்துக்கீசியர் விட்டுச் சென்ற 'ஜன்னல்' எனும் சொல்லாட்சி மேற்கண்ட ஐந்து சொற்களையும் வீழ்த்தியிருப்பதைக் காணலாம். மேற்குறித்த சொற்களில் எவற்றையேனும் நாம் கையாண்டால் நம்மை ஏற இறங்கப் பார்க்கிறது நாடு. பிறமொழிக் கலப்பு இதுபோன்ற எண்ணற்ற சொற்களையே வழக்கிலிருந்து மறையச் செய்துள்ளது.

பிறமொழியாளரிடை வாழ்ந்து வர நேரும் போது தமிழைப் பேசி, தமிழ் பிறமொழி வல்லாண்மையில் வீழ்ந்து படாதவாறு காத்து வந்தால்தான் தமிழ் தமிழாக நிற்கும்.

மலேசியாவின் மலாக்காப் பகுதியில் இருப்பவர்கள் தமிழை மறந்து பிறமொழிக் கலப்பை ஏற்றதால் இன்று தமிழே தெரியாதவர்கள் ஆகிவிட்டனர். மொரீசியசு நாட்டில் தமிழர்கள் உள்ளனர். ஆனால் தமிழ் பேசத் தெரியாத தமிழர்களாக உள்ளனர். பிற மொழிக் கலப்பு தமிழனைக் கூட அடையாளம் காண முடியாதபடி ஆக்கி விடுகிறது.

### எப்படி ஏற்பட்டது?

வடமொழி, பேச்சு வழக்கற்றுப் போன பின்னால்தான் தமிழரும் ஆரியரும் கலந்து பழகலாயினர். இந்நிலையில் தம் தாய்மொழியைத் தனிமொழியாக வளர்க்க வாய்ப்பில்லாத ஆரியர்கள், மிகத் தோதாகக் கிடைத்த தமிழில் வடமொழிச் சொற்களை ஏற்றிக் கலப்படம் செய்து மகிழ்ந்தனர். தனக்கென ஓர் உயிரில்லாத வடமொழி தமிழை ஒட்டி நின்று கொண்டு தமிழையே தாழ்த்த முனைந்தது. வடமொழி தனது மிகப் பலவாகிய சொற்களைத் தமிழில் கலந்து ஊடுருவி நிற்கிறது. ஏற்கெனவே நிலைத்துள்ள தமிழ்ச் சொற்களில் சிலவற்றை வடமொழியாக்கி மகிழ்ந்தது. வேட்டியை 'வேஷ்டி' யாக்கியது. தாயுமானவரை 'மாத்ரு பூதேஸ்வரர்' ஆக்கியது. திருவாடானையை 'அஜகஜபுரம்' என மாற்ற முயன்று தோற்றது. ஆனால் ஆங்கிலம் இவ்வகையில் வடமொழியினும் பெருங்கேடு புரிந்துள்ளது. பேச்சு வழக்கில், இக்கால இலக்கியங்களில் ஆங்கிலம் வடிவம் மாறாமல், ஒலி மாறாமல் அப்படியப்படியே கையாளப் பெறுகின்றது. அதைவிடப் பெருங்கேடு ஆங்கிலம் நுழைந்த பிறகு ஒழுங்காக இருந்த மதுரை 'மசுரா'கி விட்டது. தூத்துக்குடி 'Tuticorin' ஆகி நிற்கின்றது. தமிழ் ஊர்களின் பெயர்கள் எல்லாம் மாறி நிற்பதுடன் எதையும் ஆங்கில ஒலிப்பு முறையுடன் பேசும் கெட்ட பழக்கத்தைத் தமிழர்கள் அனைவரிடமும் உண்டாக்கி விட்டது. இப்படியே போனால், பிற மொழிக் கலப்பினைத் தவிர்த்துத் தனித்தமிழ் பேசத் தவறினால் தமிழ் ஒரு மிகச்சிறிய எல்லைக்குள் வாழும் மிகச் சிலர் பேசும் மொழியாகி நிற்கும். தமிழகம் தங்கட்குக் கை கொடுக்காது எனும் நிலை வருமானால் பிறநாட்டில் வாழும் தமிழர்களும் நாளடைவில் தமிழைப் பேணுவதையும் பேசுவதையும் விட்டு விட நேரிடும்.

பின்னர், நாமெல்லாம் இலக்கண, இலக்கியப் பழம் பெருமைகளை மட்டும் பேசி வெட்டிப் பொழுது போக்கும் மட்டிக் கூட்டமாகத்தான் இருப்போம்.

### இன்றைய நிலை

பேச்சு வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் ஆங்கிலம் எந்த வரையறையுமின்றிக் கலக்கப்படுகிறது. அப்படிக் கலப்பதுதான் படித்தவர்கள் என்று பிறர் நம்மைப் பாராட்டுவதற்குரிய சுருக்கு வழி என்று நினைக்கக் கூடிய குறுக்கு அறிவு நம் அனைவர்க்கும் வந்து விட்டது.

பேச்சு வழக்கில் ஆங்கிலம் ஊடாடி நின்று தமிழையே 'பண்ணித் தமிழ்' ஆக்கி விட்டது.

'எனக்கு health சரியில்லாததாலே இன்றைக்கு morning college க்குப் போய் first period attend பண்ணிவிட்டு professor இடம் half a day leave கேட்டுக்கொண்டு hostel க்குப் போய் என் friendன் room இல் rest எடுக்கலாமென்றிருக்கிறேன்'. என்பது படிப்பாளிகள் நடை

"ஏன் இவ்வளவு லேட்டு? டயம் என்ன தெரியுமா ? டூட்டியை சரியாய்ச் செய். இல்லாவிட்டால் சூப்பிரண்டிடம் ரிப்போர்ட் பண்ணி விடுவேன்'.' என்பது படிக்காத ஒருவரின் நடை

இரண்டு வகையிலும் ஆங்கிலம் கோலோச்சி நிற்பது மட்டுமன்றி மறைமலையடிகள், திரு.வி.க., அண்ணா, பாவாணர் போன்றவர்களின் முயற்சியால் புறமுதுகிட்டோடிய மணிப்பிரவாள நடை மீண்டும் புதிய போர்வையோடு வந்து துணிச்சலாக உலவுகிறது என்று தான் சொல்ல வேண்டும்.

இலக்கணத்துறையில் தண்டியலங்காரத்தைப் பார்த்து அணி வகைகளையும் அவற்றின் பெயர்களையும் பார்த்தால் வியர்த்து விறு விறுத்துவிடும்.

வடசொல் தமிழில் கலந்து நின்றதாலேயே இலக்கணப் போக்குகளும் மாறிப் போய்விடுகின்றன.

"ஆவோடு டல்லது யகரம் முதலாது" [10] (தொல்காப்பியம்) யகரம் ஆகாரத்தோடு மட்டும் சேர்ந்து மொழிக்கு முதலாக வரும்.

எ-டு யானை
யாறு
யாண்டு

ஆனால் நன்னூலார்,

'அஆ உஊ ஒஔ யம்முதல்'11 என்கிறார். யவனர், யுகம், யூகி, யோகம், யௌவனம் எனும் சொற்களுக்காக ஏற்பட்ட மாற்றம் இது. வடசொற்களைக் கலந்து விட்டு அதற்காக இலக்கணம் ஏற்படுத்தும் போக்கு இது.

புதினங்களிலும், சிறுகதைகளிலும், நாடகங்களிலும், வடமொழிச்சொற்கள், ஆங்கிலச் சொற்கள் வரைதுறையின்றி விளையாடுகின்றன.

---

10. தொல். எழுத்து. நூற்பா : 65 (மொழி மரபு).

11. நன்னூல், நூற்பா : 104.

எல்லா இதழ்களிலும் இவற்றிற்கான எடுத்துக் காட்டுகளைக் காண முடியும். நாடக உரையாடலுக்கு, சோ எழுதிய 'மனம் ஒரு குரங்கு' எனும் நாடகத்தை மேற்கோளாகச் சுட்டலாம்.

இன்றைய செய்தித் தாள்களில் வரும் தலைப்புகள், கதை, கட்டுரைகளுக்கு இடப்படும் தலைப்புகள் யாவும் தனித்தமிழைத் தூக்கி விழுங்குபவைதாம்.

2.8.1981 ஆம் நாளைய 'ஆனந்தவிகடன்' இதழிலிருந்து எடுக்கப்பட்ட தலைப்புகள் பின்வருமாறு :

லெட்டர் பாக்ஸ்
சிவசங்கரி எழுதும் கவர்ஸ்டோரி
வாக்கி டாக்கி
ஹலோ ஒரு நிமிஷம்
16-8-81 இதழ் சினிமா ஸ்பெஷல்
டெலஸ்கோப்
ஸைலன்ஸ்
குட்நியூஸ்
ஸோலோ, மீட்டிங் பாயிண்ட்

நான்கைந்து தமிழ்த் தலைப்புகளைத் தவிரப் பிற அனைத்தும் எப்படி உள்ளன என்பது மேலே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

## 2. தனித்தமிழ்

பிறமொழிக் கலப்பால் தமிழுக்கு ஏற்பட்ட தீங்குகளை எடுத்துக் காட்டுகளுடன் பார்த்தோம். உண்மையில் தனித்தமிழ் என்றால் என்ன என்று பார்க்க வேண்டும்.

தமிழ்தான் தனித்தமிழ். கலப்பின்றித் தனித்தியங்கும் தன்மை தமிழுக்குண்டு. அந்தத் தன்மை மாறாமல் தமிழ் பேணப்படுமாயின் அதுவே தனித்தமிழ் ஆகும்.

'தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தின் தாய்மொழி பண்டு'

என்கிறார் பாவேந்தர்.

தனித்தமிழ் எது என்பதற்கான விடையைப் பாவாணர் மொழியிலேயே காணலாம்.

"ஆரியர் வருமுன் தமிழ் இயற்கையாக எப்படி வழங்கினதோ அப்படி வழங்குவதே தனித்தமிழ். அது உலக முதன் மொழியாதலால்,

பிற்காலப் பிற மொழிகளில் எழுந்த வல்லொலிகள் பல அதிலில்லை. அவை அதற்குத் தேவையல்ல. மக்களின் கருத்தைத் தெரிவிக்கும் மொழிக்கு வேண்டியவை சொற்களேயன்றித் தனியெழுத்தொலிகளல்ல. தமிழர் தம் கருத்தைத் தெரிவிக்க வேண்டிய சொற்களெல்லாம், ஏற்கனவே தமிழில் அமைந்துள்ளன. புதுக் கருத்துகளைத் தெரிவிக்கக் கூடிய புதுச் சொற்களைப் புனைந்து கொள்வதற்கும் தேவையான கருவிச் சொற்களும் கருச் சொற்களும் அதில் உள்ளன.

எம் மொழியிலும் எல்லா மொழியொலிகளுமில்லை. ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனியுடம்புள்ளது. அது அவ்வம் மொழியின் ஒலித் தொகுதியினாலேயே அமைவது. ஒருமொழி தன் இயல்பிற்கேற்காத ஒலிகளை யேற்பின் நாளடைவில் அது சிதைந்து வேறு மொழியாகிவிடும்.

ஆகவே தமிழ் என்றும் தனித் தமிழாகவே வழங்குதல் வேண்டும். தூய்மையே அதன் இயற்கை ; கலவையே அதன் செயற்கை. மொழிபெயர்க்கக் கூடாத இயற்பெயர்களையும் சிறப்புப் பெயர்களையும் ஒலி பெயர்த்தல் வேண்டும்." [12] பிற அயற் சொற்களையெல்லாம் மொழிபெயர்த்தல் வேண்டும்.

'தமிழில் அயல்மொழிச் சொற்களைக் கலக்க விரும்புவோரை அவர் எவ்வளவு கற்றவராயினும் மதியேன் ! மதியேன்' என்கிறார் மறைமலையடிகள்.

ந.மு. வேங்கடசாமி நாட்டார் 'ஸ்ரீ' என்பதை நீக்கித் 'திரு' வை வழங்குவதில் பெரு முயற்சி மேற்கெண்டார்.

பண்டிதமணி பண்பாடு, வானொலி எனும் சொற்களை ஆக்கி உதவினார். நாவலர் சோமசுந்தர பாரதியார் தனித்தமிழுக்காகக் குரல் கொடுத்தார்.

அறிஞர் அண்ணாவுடன் நிகழ்த்திய சொற்போரில் கூட 'ஆரியமாயை'யை அகற்ற நினைக்கும் நீங்கள் மட்டும் தன்மானம் எனும் சொல்லை வழங்காமல் 'சுயமரியாதை' எனும் சொல்லுக்கு 'அடிமையாகலாமா' என்று கேட்டார்.

"தனித்தமிழ் என்பது ஒரு செயற்கை அமைப்பென்றும் அதன் காலம் மறைமலையடிகளோடு கடந்துவிட்டதென்றும், பலர்

12. ஞா. தேவநேயப்பாவாணர், தமிழிலக்கிய வரலாறு, ப. 254-255.

கருதுகின்றனர். இது தமிழின் சிறப்பியல்பை அறியாமல் அல்லது பிறமொழிகளைப் போல் தமிழையுங் கருதுவதால் எழுங்கருத்தே"[13] என்கிறார் பாவாணர்.

'தமிழென ஒன்றும் தனித்தமிழ் என்றும் தானிரு மொழியில்லை தமிழது தானே தனித்தமிழாகும் தவிர்த்திடின் பிறசொல்லை'[14] என்று பாவாணர் தரும் வரையறையே பொருத்தமானதாகும். இனித் தனித்தமிழ் உணர்ச்சியைத் தோற்றுவித்த பெருமக்களைப் பற்றிக் காணலாம்.

பரிதிமாற் கலைஞரே தனித்தமிழ் இயக்கத்தின் வழிகாட்டி எனலாம். தன் இயற்பெயராகிய 'சூரிய நாராயண சாஸ்திரியார்' எனும் பெயரை இவர் மாற்றியமைத்துக் கொண்டார். 'தனிப் பாசுரத் தொகை' எனும் தம் நூலின் உண்மை மதிப்பு எத்தகையது என்பதை உணர விரும்பித்தான் 'பரிதிமாற்கலைஞர்' எனும் புனை பெயரை வைத்துக் கொண்டார். ஆனால் அப்படி அவர் வைத்துக் கொண்டதுதான் பின்னால் பலர் தங்கள் பெயரை மாற்றிக் கொள்வதற்கும் வழிகாட்டியாக அமைந்தது. அளவிறந்த வடமொழிக் கலப்பினை அவர் வெறுத்து ஒதுக்கினார் என்பது உண்மை. ஆனால் அவரது நூல் தலைப்புகள், நூலில் அவர் கையாண்ட பெயர்கள் பெரும்பாலும் வடமொழியாகவே அமைந்திருந்தன. தனித்தமிழ் உணர்ச்சி அவரிடம் அமைத்திருந்தது என்றாலும் நெடுங்காலமாக நிலைத்திருந்த வடமொழியின் தாக்குரவிலிருந்து அவராலும் விடுபட முடியவில்லை என்றே கூறலாம்.

மொழி என்பதைக்கூட ஒரிரண்டு இடங்களில் 'பாஷை' என்றே குறிப்பிடுவார். இன்று 'பாஷை' என்பதும் 'பாடை' என்பதும் முற்றிலும் மறைந்து 'மொழி' எனும் சொல்லே மேலோங்கியுள்ளது.

கால்டு வெலார் கருத்தும் ஈண்டுக் கருதற்பாலது.

"எவ்வகையிலும் திராவிட மொழிகளுக்குள் தலைசிறப்பப் பண்படுத்தப் பெற்ற தமிழ், வேண்டுமாயின், வடமொழித் தொடர்பை அறவே விலக்குவதுடன், தனித்து வழங்குதல் மட்டுமன்று; அதன் "உதவியின்றித் தழைத்தோங்கவும் இயலும்,"[15]

"தமிழ் தன்னிடத்துக் கொண்டுள்ள வடசொற்களிற் பெரும்பாலானவற்றை அல்லது அவையெல்லாவற்றையும் உடனே

---

13. ஞா. தேவநேயப்பாவாணர், தமிழிலக்கிய வரலாறு, ப. 254.
14. ஞா. தேவநேயப்பாவாணர், இசையரங்கு இன்னிசைக் கோவை, ப. 13.
15. ஞா. தேவநேயப்பாவாணர், திரவிடத்தாய், ப. 28- மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளது.

நீக்கமுடியும். அங்ஙனம் நீக்குவதனால் அது நடை உயர்ந்து மிகத் தூய்மையும் நேர்த்தியும் அடைகிறது.' [16]

இந்நிலையில் வடமொழியின் தாக்குதலுக்கு ஆட்படாத நல்ல தமிழ், தனித்தமிழ் வளரவேண்டும் எனும் தூய உணர்வைக் கொண்டிருந்த பரிதிமாற்கலைஞரை நன்றியுடன் நினைக்கிறோம்.

**தனித்தமிழ் வித்து தானே விதைத்து**
**தண்ணீர் உகுத்துத் தணந்த புறத்து**
**இனித்த கனித்து எனும்மரம் கொத்து**
**ஈயும் நிலத்து இந்தக் காலத்து–**
**பரிதி மாற் கலைஞன் பயன்முதிர் இளைஞன்,[17]**

என்று பாவாணர் பாராட்டிப் பாடியுள்ளார்.

"பெரும்பாலும் அந்தணர்களுக்குத் தமிழ்ப்பற்றில்லை' என்பது அடிகள் கருத்து. ஆனால் இந்தச் சூரிய நாராயணருக்கு மட்டும் ஏன் இவ்வளவு தமிழ்ப் பற்று அதிலும் தனித்தமிழ்ப் பற்று நான் 'தனித்தமிழ்' இயக்கங் காண்பதற்கு முன்பே அவர் தனித்தமிழ் உணர்ச்சி கொண்டு தன் வடமொழிப் பெயரைப் பரிதிமாற்கலைஞர் என்று மாற்றிக் கொண்டாரே! என்று பரிதிமாற்கலைஞரைப் பற்றித் தம் வாழ்நாள் முழுவதும் அடிகள் பாராட்டிக் கொண்டிருந்தார்." [18] என்று, "மறைமலையடிகள் வரலாறு" என்ற நூலில், திரு. மறை. திருநாவுக்கரசு குறிப்பிட்டுள்ளார்.

பரிதிமாற் கலைஞரின் தமிழுணர்ச்சி மறைமலையடிகள் உள்ளத்தைத் தொட்டிருந்தது. அந்நிலையில் 1916-ஆம் ஆண்டில் 'பெற்ற தாய்தனை மகமறந்தாலும்' எனும் வள்ளலார் பாட்டைப் பாடிக் கொண்டிருந்த பொழுது அப்பாட்டில் எல்லாச் சொற்களும் நல்ல தமிழில் அமைந்திருக்கும் போது (உற்ற தேகத்தில்) 'தேகம்' எனும் ஒரு வடசொல் மட்டும் கலந்திருப்பது பொருத்தமாக இல்லை என்று கருதினார். அவரது மகள் நீலாம்பிகையும் இந்தக் கருத்தை ஒப்புக் கொண்டார். இனித் தூய தமிழிலேயே எழுதுவது, பேசுவது என அன்று எடுக்கப்பட்ட முடிவுதான் ஒரு பாவாணரையும் உருவாக்கி அவருக்குப்பின் ஓர் இயக்கத்தையும் உருவாக்கியது.

---

16. ஞா. தேவநேயப்பாவாணர், திரவிடத்தாய், ப. 29.
17. ஞா. தேவநேயப்பாவாணர், இசையரங்கு இன்னிசைக் கோவை, ப.10.
18. மறை. திருநாவுக்கரசு, மறைமலையடிகள் வரலாறு ப. 23.

பின் 'வேதாசல சுவாமிகள்' எனும் பெயரை 'மறைமலையடிகள்' என மாற்றிக் கொண்டார். தாம் நடத்தி வந்த 'ஞானசாகரம்' எனும் இதழ்ப் பெயர் 'அறிவுக்கடலா'க மாற்றப்பட்டது. தாம் முன்னர் எழுதிய நூல்களை மறுபதிப்பாகக் கொண்டு வரும் போது அவற்றில் உள்ள பிறமொழிச் சொற்களையெல்லாம் களைந்து தனித் த்மிழாக்கி வெளியிட்டார்.

"யான் தமிழில் எழுதும் ஒவ்வொரு சொல்லையும் சொற்றொடரையும் நீங்கள் செவ்வையாக உன்னித்து வந்தால் தமிழிற் பிழையின்றிப் பேசவும் எழுதவும் ஆற்றல் பெறுவீர்கள்"[19] என்று அவரே குறிப்பிடுகின்றார்.

இத்தகைய மறைமலையடிகளையே பாவாணர் வழிகாட்டியாகக் கொண்டார். தம் வழிகாட்டியாகிய மறைமலையடிகளைப் பற்றிப் பாவாணர் கூறுகிறபோது ஏற்படும் பெருமிதம் நம்மை வியக்கவைக்கிறது.

ப

"தவத்திரு மறைமலையடிகள்
தமிழே தமிழன் உயரும் படிகள்

உ.1

தமிழோடு வடமொழியுங் கற்றுத்
தகுபுலமை யாங்கிலமும் உற்றுத்
தருக்கொடு செருக்கறவே யற்றுத்
தனித்தமிழ்த் திறம் கனியப் பெற்று
ஆன்றவிந் தடங்கிய கொள்கை
சான்றெதிர் மடங்கிட வெல்கை
ஏன்றரு நூல்களை நல்கை
எதிரியும் வாழ்ந்திட வுள்கைத்

-(தவத்திரு மறைமலையடிகள்)"[20]

"பொதுத் தமிழிலக்கிய மனைத்தும் பொருந்ததற்கற்று, ஆங்கிலரும் வியக்கும் அழகிய ஆங்கில நடை கைவரப் பெற்று, ஆரிய மறைகளையும் ஆழ்ந்து ஆராய்தலுற்று, கடந்த மூவாயிரம் ஆண்டாக மறைந்து கிடந்த தனித்தமிழை மீட்டு எப்பொருள் பற்றியும் செந்தமிழில்

19. மறைமலையடிகளார் கடிதங்கள், ப. 1.

20. ஞா. தேவநேயப் பாவாணர், இ.இ.கோ., ப. 11.

எழுதவொண்ணும் என்னும் உண்மையை நாட்டிய மறைமலையடிகள், திருவள்ளுவர்க்கு அடுத்தபடியாக வைத்தெண்ணத்தக்க தனிப்பெருந் தகுதியுடையவராவர்" [21] என்று பாராட்டுகிறார்.

மறைமலையடிகள் கருத்தினை ஏற்றுப் பலர் தனித்தமிழில் பேச முன்வந்தனர்; தத்தம் பெயர்களையும் தனித்தமிழில் மாற்றிக் கொண்டனர். க.ப. சந்தோசம் 'மகிழ்நன்' ஆனார். நீலாம்பிகை அம்மையாரே 'வடசொற்றமிழ் அகரவரிசை' எனும் அகரமுதலியை வெளியிட்டார். அது தனித்தமிழ் விரும்பிகட்குப் பெரும் வாய்ப்பாக அமைந்தது.

கரந்தைத் தமிழ்ச்சங்கம் இவ்வகையில் ஆர்வம் காட்டியது. 'தமிழ்ப்பொழில்' எனும் இதழ் வாயிலாக நல்ல தனித்தமிழ் நடை அறிமுகப்படுத்தப்பட்டது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், தான் வெளியிட்ட நூல்கள் அனைத்தையும் நல்ல தமிழில் வெளியிட்டது. 'செந்தமிழ்ச் செல்வி' இதழ் தனித்தமிழ் இதழாகவே வெளிவந்தது. மேலும் கழகம் வடசொற்றமிழ் அகரவரிசைச் சுருக்கம், மக்கட்பெயர் அகரவரிசை ஆகியவற்றை வெளியிட்டு உதவியது. பாவாணரின் மாணவராகிய பெருஞ்சித்திரனாரின் 'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு', 'தமிழ்நிலம்' ஆகிய இதழ்கள் தனித்தமிழ் வளர்க்கும் தாளிகைகளாக நிமிர்ந்து நிற்கின்றன. இடையில் நின்று போன கோவலங்கண்ணனின் 'கலைச்சொல்' இதழும், தமிழ்க்குடிமகனின் 'கைகாட்டி', 'அறிவு' ஆகியவையும் செம்பியனின் 'தமிழம்' இதழும், த.ச. தமிழனின் 'தமிழோசை' ஆகியவையும் வி.பொ. பழநிவேலனாரின் 'மாணாக்கன்' மி.மு. சின்னாண்டாரின் 'முதன்மொழி' கு. பூங்காவனத்தின் 'மீட்போலை' ஆகிய இதழ்களும் தனித்தமிழ்த் தொண்டு செய்தவை என்பதை யாரும் மறக்க முடியாது.

தனித்தமிழ் எவ்வாறெல்லாம் பாழ்படுத்தப்பட்டுள்ளது என்பதனையும், அது தொடர்பான நம் முயற்சிகளையும் பார்க்க வேண்டும்.

அனைவரது கண்ணிலும் பளிச்செனப்படுவது கடை விளம்பரங்கள் தாம். நூற்றுக்கு ஓரிருவர் தவிரப் பிறர் அனைவரும் ஆங்கிலம், வடமொழி கலவாமல் விளம்பரப் பலகைகளை எழுதுவதில்லை. மலேசியா போன்ற நாடுகளில், 'உணவகம்' எனும் சொல்லை முழுமையாகக் கையாளுகின்றனர். ஆனால் தமிழ்நாட்டில் இந்தச் சொல்லைப் பயன்படுத்தக் கோரி ஒரு போராட்டமே

21. ஞா. தேவநேயப் பாவாணர், தமிழிலக்கிய வரலாறு, ப. 232-233.

நடத்தவேண்டியுள்ளது. 'கிளப்' எனும் சொல்லையும், 'ஹோட்டல்' எனும் சொல்லையும் தாராளமாகப் பயன்படுத்துகின்றனர். அரசு கூட 'உண்டு, உறைவிடுதி' என்று போடாமல் 'ஹோட்டலை' ஒட்டலாக்கித்தான் வைத்திருக்கிறது. தையலகம் 'tailors' என்றும், இன்னும் பல கடைகள் 'Stores, Mart' போன்ற பெயரிலும் விளங்குவதைக் காண்கிறோம்.

'ஆணி விற்போன் முதலாக அணிவிற்போன் ஈறாக
அனைவர் போக்கும்

நாணமற்ற தல்லாமல் நந்தமிழின் நலங்காக்கும்
செய்கை யாமோ?,[22] என்றும்,

"உணவுதரு விடுதியினைக்
கிளப் எனவேண்டும் போலும்!
உயர்ந்த பட்டுத்

துணிக்கடைக்கு 'சில்கு ஷாப்'
எனும் பலகை தொங்குவதால்
சிறப்புப் போலும்!

மணக்கவரும் தென்றலிலே
குளிரா இல் லை? தோப்பில்
நிழலா இல்லை!

தணிப்பரிதாம் துன்பமிது
தமிழகத்தின் தமிழ்த்தெருவில்
தமிழ்தான் இல்லை."[23] என்றும்

பாவேந்தர் மனம் குமுறிப் பாட வேண்டிய நிலை உள்ளது.

கோவையில் 'சேரன் கொற்றம்', மதுரையில் 'தமிழ்காக்கும் மாணவர் மன்றம்' புதுவையில் 'தனித்தமிழ் இலக்கியக் கழகம்' போன்ற அமைப்புகளின் முயற்சியால் மிகச்சில கடைகளின் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன. ஆனால் இது நூற்றில் ஒருபங்கு கூட இல்லை எனலாம்.

பழைய சொற்களைப் பேணாமல் விட்டதாலும் பல சொற்கள் வழக்கிலிருந்து மெல்ல நழுவி விடுகின்றன. நோய் நமக்குத் தெரியும். அது தொடர்பான குறளும் தெரியும். ஆனால் பல காலமாக 'வியாதி'

22. பாரதிதாசன், தமிழியக்கம், ப. 13.
23. பாரதிதாசன், தமிழியக்கம், ப. 13.

எனும் வடசொல்லைப் பயன்படுத்துகின்றோம். 'உடன் பிறந்தே கொல்லும் வியாதி' என்று பழமொழியும் படைத்துக் கொண்டோம். 'பெரும் வியாதியஸ்தர்கள் உள்ளே நுழையக் கூடாது' என்று உணவகங்களில் விளம்பரம் வைத்திருப்பதைப் பார்க்கிறோம். 'நோயாளிகள்' என்று போட அவர்களுக்கு மனம் வரவில்லை. இது போல ' Sick' எனும் ஆங்கிலச் சொல்லும் பொதுமக்கள் வழக்கில் வந்துள்ளது. அந்தச் 'சீக்கு' என்றே சொல்கின்றனர். 'சீக்காளி' எனும் சொல்லும் உருவாகியுள்ளது. 'அவன் சீக்குப் பார்க்க ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறான்' என்று இயல்பாகப் பேசும் வழக்கம் வந்துவிட்டது. நல்லனவாக உள்ள பழைய சொற்களை விடாது பேணுதல் தனித்தமிழ் முயற்சிக்கு உகந்ததாகும்.

புதுச் சொற் புனைவு என்பது ஒவ்வொரு மொழிக்கும் இன்றியமையாத பணியாகும்.

**புதுச் சொற் புனைவும் புதுநூல் யாப்பும்**
**எதுகுறை வெனவாய்ந் ததுவது இயற்றலும்**
**வளர்த லென் றறிகுமின் என்பார்** [24]

பெருஞ்சித்திரனார்.

கல்லூரி எனும் சொல்லும் 'சொற்பொழிவு' எனும் சொல்லும் புதியதாக ஆக்கப்பட்டவைதாம். இவை உருவாக்கப்பட்ட காலத்தில் பலர் பகடி செய்ததும் உண்டு. இன்று காலம் நெகிழ்ந்து கொடுத்துப் பெருவழக்காக அவற்றை ஏற்றுக் கொண்டது. மலேசியா போன்ற இடங்களில் platform-அஞ்சடி என்றும், ஹோட்டல் - சோற்றுக்கடை என்றும், Theatre-பட மேடை என்றும், friend-கூட்டாளி என்றும் அனைவராலும் வழங்கப்படுகின்றன. இது தொடர்பாகப் பாவாணர் கூறும் கருத்தினையும் ஆராயலாம். "இனி, நேர் தென்சொல் இல்லாத அயற்சொற்களை அங்ஙனமே ஆளுதல் கூடாதோவெனில், அதுவும் கூடாததே. தமிழ் ஒரு பெருந்தாய் மொழியாதலின், அயன் மொழிச் சொற்களின் வேர்ப் பொருளறிந்து அதற்கொப்பப் புதுச் சொற்களை ஆக்கிக் கோடல் வேண்டும். கருச்சொற்களும் அதனிடத்து மிகுதியாய் உள. ஆதலால் அயற் சொற்கட்கு இயன்றவரை புதுச் சொற்புனைந்தே வழங்குதல் வேண்டும். இருட்டடிப்பு, கட்டுரை, கூட்டுறவியக்கம், செயலாளர், தண்டல் நாயகம், தொலைவரி, தொலைபேசி, தொலைக்காட்சி, படிவம், பொதுவுடைமை, முடிதிருத்து நிலையம், வழக்கறிஞர் முதலிய வேர்ப்பொருள் பற்றிய சொற்களும், சொற்பொழிவு, திரைப்படம், நகராண்மை, படம் பற்றி, பற்றாட்டு,

24. பெருஞ்சித்திரனார், தென்மொழி, மலர். 1.

பாராளுமன்று, மதிப்பெண், முதலிய பொருட்டன்மை பற்றிய சொற்களும் அண்மைக் காலத்தில் புதிதாகப் புனையப் பெற்றவையே.

இனி, புதுச் சொற் புனைந்தும் நேர் தென் சொல் அமைக்கவியலாத ஒரு சில அயற் சொற்களை அங்ஙனமே ஆளலாம். ஆயின், அவற்றை அயன் மொழியொலிப்படி வழங்காது தமிழொலிக்கேற்பத் திரித்தே வழங்குதல் வேண்டும் அல்லாக்கால் வேற்றொலி விரவித் தமிழ்த் தன்மை கெட்டுவிடும்." [25]

இவ்வாறாகத் தனித்தமிழ் என்றால் என்ன என்பதனையும் அதனைப் பாழ்படுத்தும் போக்குகளையும், அந்தப் போக்குகளை முறியடித்து நல்ல தமிழை வழங்கிட நாம் எடுக்க வேண்டிய முயற்சிகளையும் கண்டோம்.

### 3. பாவாணர் பங்கு

அடுத்து, தனித்தமிழ் வளர்ச்சியில் பாவாணர் பங்கு பற்றி ஆராய்தல் வேண்டும்.

மறைமலையடிகளை வழிகாட்டியாகக் கொண்டுதான் பாவாணர் தனித்தமிழ் முயற்சியில் இயங்கினார் என்பது பொருந்தும். மறைமலையடிகளைத் தவிர வேறொருவரும் தன்னை மேற்பார்க்கும் தகுதி உடையவரல்லர் என்று பாவாணர் ஆணித்தரமாகக் கூறுவது உண்டு. மறைமலையடிகளைத் தொடர்ந்து தனித்தமிழ்ப்பணியில் பாவாணர் ஆழமாக ஈடுபட்டார்.

கட்டாய இந்திக் கல்விக்குக் கண்டனமாகச் 'செந்தமிழ்க் காஞ்சி' எனும் நூலைப் படைத்த போது தன் பெயரைத் 'தேசாபிமானத் தண்டமிழ்த் தொண்டன்' என்றே வைத்துக் கொண்டார். முறையாக அவர் பெயரில் நூல் வெளிவந்த போது ஞா. தேவநேசன் என்றே குறிப்பிட்டார். பின் 'நேசம்' என்னும் சொல் 'நேயம்' என்னும் சொல்லின் திரிபு என உணர்ந்ததும் 'தேவ நேயன்' ஆனார். 'என் பெயர் என் சொல்?' எனும் விளக்கக் கட்டுரையும் வரைந்தார். தன் பெயரை ஒட்டிக் 'கவி வாணர்' எனும் பெயரையும் சேர்த்து வரைந்தார். பிறரும் அவ்வாறே அழைத்தார்கள். 'கவி' தமிழ்ச் சொல்லன்று என்ற தெளிவு பெற்ற பின் 'பாவாணர்' ஆகி விட்டார். ஞா. தேவ நேயப் பாவாணர் என நம்மால் அழைக்கப்படும் அவ்வறிஞர் எடுத்த எடுப்பிலேயே தனித்தமிழ் வல்லாராகி விடவில்லை. மெல்ல மெல்ல வளர்ந்து மறைமலையடிகளின் வழி காட்டுதலுக்குப் பின் வேகம் பெற்று, தன்

---

25. ஞா. தேவநேயப் பாவாணர் தமிழ் கடன் கொண்டு தழைக்குமா, ப.18-19.

விடா முயற்சியாலும், மொழி நூல் ஆராய்ச்சியாலும், இலக்கியப் பயிற்சியாலும் அவர் கண்ட உண்மைகள் அவரை ஒரு தமிழ்ப் பற்றாளராக்கின. தமிழின் பெருமையைத் தமிழ் நாட்டிலேயே சிலர் மறைத்து வருவது கண்டு அவர்க்கு ஏற்பட்ட கொதிப்பு அவரை ஓர் இயக்கத்தைத் தோற்றுவிக்கச் செய்தது.

அவர் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிய போதுதான் 'ஒப்பியன் மொழி நூல்' எழுதினார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வீரர்களுக்குக் கருவியாகப் பயன்படட்டும் எனும் நல்ல நோக்கத்தோடு அந்நூல் செய்யப்பட்ட பின்னர் சேலங் கல்லூரியில் பணியாற்றிய போதும் அவரது தனித்தமிழ்த் தொண்டுக்குப் பெரிதும் வாய்ப்பு ஏற்பட்டது.

அதன் பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சொற்பிறப்பியல் அகர முதலி உருவாக்கும் பணியில் அமர்ந்தார். அக்கால கட்டம் அவரது முழு ஆற்றலையும் அறுவடை செய்வதற்கு வாய்ப்பாக அமைந்தது. ஆனால் முழுமையாக அவரால் அங்கு இயங்க முடியாமல் போய்விட்டது. சுனித்குமார் சட்டர்சி போன்றோரின் மாறுபட்ட கொள்கைகட்கு நடுவில் தனித்து நின்று போரிட நேர்ந்தது.

அதன்பிறகு பல ஆண்டுகள் கழிந்த பின்தான் - அதுவும் வருவாய் எதுவுமின்றி வறுமையில் வாடி நொந்த பின்தான் - தமிழ் நாட்டு அரசு சொற் பிறப்பியல் அகரமுதலித் துறையின் இயக்குநராக அவரை அமர்த்தியது. அதனுடைய விளைவும் அனைவரும் அறிந்ததுதான்.

இந்த இடைக்காலத்தில் தான் தனித்தமிழ் இயக்கம் தொடங்கப்பட்டது. திரு. பெருஞ்சித்திரனார் முன்னின்று செயற்படுத்தினார். சேந்த மாங்குடியார், செந்தமிழ்க் கிழார், சின்னாண்டார் போன்ற நெடுநாள் தொடர்புடைய அன்பர்களும், தி.வை. சொக்கப்பனார் போன்ற நெடுநாளைய நண்பர்களும், என்னையும் இளவரசுவையும் வளனரசையும் போன்ற விடாப்பிடியான மாணவர்களும் இணைந்து செயற்பட்டதன் விளைவாக 1968 இல் தொடங்கப் பெற்ற உலகத் தமிழ்க் கழகம் 1969 திசம்பரில் பறம்புக்குடியில் நடைபெற்ற முதல் மாநாட்டில் அதன் உச்ச கட்டத்தையே கண்டது எனலாம்.

அந்த மாநாட்டின் ஊர்வலம், கூட்டம் ஆகியவற்றைக் கண்ட பாவாணர் 'தனித்தமிழுக்கு இவ்வளவு பெரிய கூட்டமா?" என்று வியந்து போனார்.

"தனித்தமிழ் என்பது, மறைமலையடிகள் புதிதாகத் தோற்றுவித்ததும் அவரொடு முடிந்து போவதுமான ஓர் ஏற்பாடன்று. பால் எங்ஙனம் தனிப் பாலாகவே தோன்றிப் பின்னர் விற்பனையாளரின் பேராசையால் தண்ணீர் கலக்கப்படுமோ, அங்ஙனம் தமிழும் முதற்கண் தனித் தமிழாகவே தோன்றிப் பின்னர் ஆரியரின் பொறாமையால் வடசொற் கலக்கப்பட்டது. ஆங்கிலர் வருவதற்கு முன் ஆங்கிலச் சொல் கலவாதிருந்தது போலவே, ஆரியர் வருமுன் ஆரியச் சொல்லும் கலவாதிருந்தது".[26] என்று பாவாணர் கூறுவதுண்டு எனினும், மறைமலையடிகள் காலத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தளிர்விட்ட தனித்தமிழ் இயக்கம் பாவாணர் காலத்தில் தமிழ்நாடு, புதுவை, கருநாடகம் போன்ற மாநிலங்களிலும் பரவிப் பல கிளைகளைக் கொண்டு விளங்கியது. முகவை மாவட்டத்தில் மட்டும் 33 கிளைகள் இருந்தன.

'முலமுலென மொய்த்து முகவை மாவட்டம்
உலகத் தமிழ்க் கழகம் ஊன்றி'[27]

என்று பாவாணர் பெருமைப்பட்டுப் பாடியுள்ளார்.

பல ஆயிரக்கணக்கான அன்பர்கள் தத்தம் பெயரைத் தனித்தமிழில் அமைத்துக் கொண்டு இதழ் வாயிலாகவும் இயக்க வாயிலாகவும் கடுமையாகச் செயற்பட்டனர்.

1970 இல் மதுரையில் இரண்டாம் மாநாடு நடைபெற்றது. பின் தஞ்சையில் ஒரு மாநாடும், சென்னையில் ஒரு மாநாடும் நடைபெற்றன. வேகமாக வளர்ந்த உலகத் தமிழ்க் கழகம் தமிழ் நாட்டுக்கே உள்ள பொது நோயால் பாதிக்கப்பட்டது. அமைப்புக்குள் கருத்து வேறு பாடுகள் ஏற்பட்டிருந்தாலும் பாவாணரது தனித்தமிழ்க் கொள்கையிலோ அது தொடர்பாக அவர் வெளியிட்ட கருத்துகளிலோ யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. இதிலிருந்தே பாவாணரது தனித்தமிழ்க் கோட்பாட்டின் பெருமையை உணரலாம்.

நெல்லையில் உள்ள தனித்தமிழ் இலக்கியக் கழகம் நெடுங்கால மாகப் பல பணிகளைச் செய்து வருகின்றது. பா. வளனரசு நண்பர்கள் துணையுடன் அதனை மிகச் சிறப்பாக நடத்தி வருகிறார்.

புதுவையில் உள்ள 'தனித்தமிழ்க் கழகம்' பல்வேறு பணிகளைச் செய்கின்றது. நூல் வெளியிடல், அரசுக்கு அறிவுறுத்தல், கிளர்ச்சி செய்தல் போன்றவற்றோடு அண்மையில் மிகப் பெரிய தனித்தமிழ் இலக்கிய மாநாட்டையே நடத்தியுள்ளது.

---

26. ஞா. தேவநேயப் பாவாணர், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 320.
27. தமிழ்க்குடிமகனுக்கு எழுதப்பட்ட மடல்.

நெய்வேலியில் 'பாவாணர் தமிழ்க் குடும்பம்' எனும் அமைப்பு இயங்கி வருகின்றது. பாவாணர் இயக்கம் குடும்பம் குடும்பமாகப் பெருகி வளர்ந்து சிறப்புற்றுள்ளது.

அத்தனை சிறப்புகளையும் விஞ்சும் அளவுக்கு மலேசியா நாட்டில் உள்ள ஈப்போவில் 'பாவாணர் தமிழ் மன்றம்' 20 ஆண்டுகட்கு மேலாக இயங்கி வருகின்றது. சா. சி. சுப்பையாவை ஆசிரியராகக் கொண்ட அம்மன்றம் பல தமிழர்களைத் தனித்தமிழ் அன்பர்களாக்கி வைத்துள்ளது. இங்கிருந்து சென்ற தமிழறிஞர்களைப் பெரிதும் பேணிப் பாராட்டித் தனித்தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகளை நாடெங்கும் நடத்தி வருகிறது.

இவ்வாறாகப் பாவாணர் காலத்தில் தான் தனித்தமிழ் இயக்கம் வீறு கொண்டு எழுந்து நிற்கிறது என்று துணிந்து சொல்ல முடியும்.

இனி, தனித்தமிழ் பற்றிய அவரது கொள்கைகளையும் கருத்துகளையும் முதலில் பார்க்க வேண்டும். அவரது நூற்கருத்துகளை ஒருவாறு சுருக்கி உரைக்க விரும்புகிறேன்.

தமிழ் கடன் வாங்கத்தான் வேண்டுமா என்பதற்கு அவர் விடையிறுக்கிறார்.

" ஆங்கிலம் போன்ற மொழிகளில் சொல் வளமின்மையால் அவற்றிற்குப் பிற மொழிகளினின்று கடன் கோடல் இன்றியமையாத தாயிற்று. தமிழ் பெருவள மொழியாதலின் அதற்குச் சொற்கடன் தேவையில்லை. தமிழில் இதுவரை புகுந்த அல்லது புகுத்தப்பட்ட அயற்சொற்களெல்லாம், அதன் வளத்தைக் குறைத்து அதன் தூய்மையைக் குலைப்பதற்குக் காரணமாயிருந்தவையே" [28] என்கிறார்.

தமிழ் தானே தோன்றிய தாய்மொழி ; சொற்றூய்மை அதன் சிறந்த பண்புகளில் ஒன்றாகும். பண்டைத் தமிழர் அயல் நாட்டிலிருந்து வவந்த பொருள்கட்கெல்லாம் உடனுக்குடன் தூய தமிழ்ப் பெயர்களைப் புனைந்து வழங்கியுள்ளனர்.

| பொருள் தோன்றிய இடம் | பொருட் பெயர் |
|---|---|
| அரபி | குதிரை |
| சீனம் | கரும்பு |
| அமெரிக்கா, பாரசீகம் | புகையிலை |
| மேலையிந்தியத் தீவுகள் | முந்திரி (Cashew) |
| துருக்கி | வான் கோழி |

28. ஞா. தேவநேயப் பாவாணர், தமிழ் கடன் கொண்டு தழைக்குமா ? ப. 3.

ஒட்டகமும் அரபி நாட்டினின்று வந்ததே. இச்சொல் தமிழ் இலக்கணத்திலும் இடம் பெற்றுள்ளது. அரபியமொழியில் 'Jamal' எனப்படும் ஒட்டகம் ஒருமாதம்வரை பட்டினி கிடக்கும் தன்மையால் பெயர் பெற்றிருக்கலாம். (ஒட்டப் போடுதல் - பட்டினியிருத்தல்) சமற்கிருதத்தில் உள்ள 'உஷ்ட்ரக்க' இதன் திரிபேயாகும்.

தமிழ் இதுவரை கடன் கொண்ட அயற்சொற்களால் தாழ்ந்ததே தவிர வளர்ந்தது என்று கூற முடியாது என்பது அவர் கருத்து.

ஆதன், உறவி, புலம்பன் என மூன்று தென்சொற்கள் இருக்கவும் அவை வழக்கற்றுப் போய் 'ஆன்மா' மேலோங்கி நிற்கிறது.

அடுக்களை, அட்டில், அடுக்குப்புரை, சமயலறை, மடைப்பள்ளி முதலிய பழந்தமிழ்ச் சொற்கள் இருக்கும்போது குசினி எனும் பிரெஞ்சுச் சொல்லும் கிச்சன் எனும் ஆங்கிலச் சொல்லும் மேலோங்கி நிற்கின்றன.

இழப்பு, உரையாடல், ஐயம், முகமன், வஞ்சினம், வியப்பு, விலங்கு எனும் அரிய இனிய தமிழ்ச் சொற்களை நஷ்டம், சம்பாஷனை, சந்தேகம், முகஸ்துதி, சபதம், ஆச்சரியம், மிருகம் முதலிய வட சொற்கள் நெருக்கித் தள்ளிவிட்டது கண்கூடான உண்மை.

தமிழ் நாட்டில் பொதுவான சொற்கள் மட்டுமன்றி ஆட்பெயர், இடப்பெயர், தெய்வப்பெயர் முதலியனவும் எவ்வாறு வடமொழி யாக்கப்பட்டன என்பதையும் பாவாணர் எடுத்துக் காட்டுகிறார்.

"கயற்கண்ணி, தடங்கண்ணி, அழகன் என்னும் ஆட்பெயர்கள் முறையே மீனாக்ஷி, விசாலாக்ஷி, சுந்தரன் என்றும் ; பழமலை, மறைக்காடு என்னும் இடப்பெயர்கள் முறையே விருத்தாசலம், வேதாரண்யம் என்றும் ; ஆறுமுகம், சிவன் தாயுமான தெய்வம் என்னும் தெய்வப்பெயர்கள் முறையே, ஷண்முகம், சங்கரன், மாதுருபூதேஸ்வரர் என்றும் வழங்கிவருதல் காண்க".[29]

"பற்பல மொழிகளினின்றும், பலப்பல சொற்கள் தமிழில் வந்து வழங்கினது, தமிழில் அவற்றுக்கு நேர் சொல் இல்லாமலோ, அல்லது அவற்றின் பொருளுக்கேற்ற புதுச் சொற்கள் புனைய முடியாமையாலோ அன்று ; தமிழர்க்குத் தாய்மொழியுணர்ச்சி யில்லாமை யாலேயே. தமிழ் தமிழர் வயமில்லாது ஆரிய வயப்பட்டுக் கிடக்கின்றது".[30]

---

29. ஞா. தேவநேயப் பாவாணர், ஒப்பியன் மொழி நூல், ப. 54

30. மேலது, ப. 57.

எளிமையும் பொருத்தமும் உள்ள தென்சொற்கள் இருக்கும் போது அவற்றை வெறுத்துத் தள்ளிப் பொது மக்கட்கு விளங்காதனவற்றைக் கூடப் பலர் கையாண்டனர்.

| | | |
|---|---|---|
| ஆண், பெண் | - | ஸ்திரீ, புருஷர் |
| உற்றார் உறவினர் | - | இஷ்ட ஜன பந்து மித்திரர் |
| ஐம்புலன் | - | பஞ்சேந்திரியம் |
| அடிமுதல் முடிவரை | - | பாதாதி கேசம் |

தமிழ் நாட்டில் வடமொழிக்கு மதிப்பு ஏற்பட்ட பின் ஒரு பொருட் பல சொற்கள் தமிழில் இடம் பிடித்தன.

**சத்தியம், நிஜம், வாஸ்தவம்**
**சந்தோஷம், ஆனந்தம், குதூகலம்**

ஆனால், அதே வேளையில் தமிழில் உள்ள ஒரு பொருட் சொற்கள் ஒவ்வொன்றாக வழக்கு வீழ்த்தப்பட்டன.

**உச்சிவேளை, நண்பகல், உருமம்**
**எச்சம், கான்முளை, கால்வழி, கொடிவழி, மரபு**
**மெய்ப்பித்தல், எண்பித்தல், மூதலித்தல்**

பூப்படைதல், முதுக்குறைதல், பருவம் எய்துதல்- இதைக் கூடப் புஷ்பவதியாவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

"அயற்சொற்களை வழங்குவதினால், மொழி வளருமென்றும், வளம் பெறுமென்றும், ஆங்கிலத்தை யெடுத்துக்காட்டி அறியாதாரை மருட்டி வருகின்றனர் சில தமிழ்ப் பகைஞர்;" உவகை, களிப்பு, மகிழ்ச்சி என முத்தென்சொல் இருக்கவும் அவை வழக்கற்று ஆனந்தம் சந்தோஷம் ஜாலி (jolly) குஷி முதலிய அயற்சொற்களும், உண்மை வாய்மை மெய்மை என முத்தென் சொல் இருக்கவும், அவற்றுக்குப் பதிலாக சத்தியம் நிஜம் வாஸ்தவம் என்னும் வடசொற்களும் ; இறை பகுதி வரி முதலிய பல தென் சொற்களிருக்கவும், அவற்றுக்குப் பதிலாகக் கிஸ்து என்னும் உருதுச் சொல்லும் ; இன்னும் இவை போன்ற எத்துணையோ பலவும் வழங்கி வருவதால் தமிழ் தளர்ந்ததோ, வளர்ந்ததோ ? நடு நிலையும் பகுத்தறிவுமுள்ள அறிஞர் கூறுவாராக.

தமிழ்ப் பொதுமக்கள் வாயினின்றும், 'சொல்' என்று வராது 'வார்த்தை' என்று வருவதற்கும், 'ஆண்டு' என்று வராது 'வருஷம்' என்று வருவதற்கும் 'குலம்' என்று வராது 'சாதி' என்று வருவதற்கும் எது காரணம்? தமிழ்ச்சொல் வழக்கற்றமையோ, அதன் தகுதியின்மையோ?

இன்னும் நூலாசிரியர் சிலர் வட சொற்களைத் தமிழிற் புகுத்தி அதன் தூய்மையைக் குலைப்பதையே குறிக்கோளாகக் கொண்டு, 'தலைக்கீடு' என்பதை 'வியாஜம்' என்றும், பணிவிடை என்பதை 'சிசுருஷை' என்றும், 'நல்லிணக்கம்' என்பதை 'சௌஜன்யம்' என்றும், 'செழிப்பு' என்பதை 'சுபிக்ஷம்' என்றும், இன்னும் இவை போன்ற பலவும் எழுதி வருவதை ஒரு சிலரான தமிழறிஞரன்றி வேறு யாரறிவார்?

ஆதலால், தமிழை அழியாது காக்க வேண்டுமெனின், அதன் வழக்கிறந்த சொற்களையெல்லாம் மீண்டும் வழக்கிற்குக் கொண்டுவரல் வேண்டும்" [31] என்பது பாவாணர் கருத்து. இதிலும் ஒரு கொடுமை என்னவென்றால் தனித்தமிழை வழங்குவோர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்டவர்கள் என்றும் பிற மொழிகளைக் கலந்து வழங்குபவர்கள் மேட்டுக்குடியினர் என்றும் கருதப்படுவதுதான்.

அழகன், மொக்கையன் போன்ற பெயர்கள் தாழ்த்தப்பட்ட மக்களிடத்து மட்டும் பெருவழக்காகி நிற்கின்றன. மேட்டுக் குடியினரோ ரமேஷ், லதா, உஷா, ராகினி, மாலினி என்று பெயர் வைத்துக்கொள்கின்றனர். இந்தப் பெயரை வைத்துக் கொண்டுள்ளவர்களில் 90 விழுக்காட்டினருக்குத் தங்கள் பெயரின் உண்மையான பொருள்கூடத் தெரியாது. வாழ்நாள் முழுவதும் வழங்கக் கூடியதும், வரலாற்றில் நிலைத்து நிற்கக் கூடியதுமான தத்தம் பெயரைக்கூட விளங்கி வைத்துக்கொள்ள முடியாத அளவுக்கு வடமொழியின் கலப்பு நம்மைத் தாழ்த்தியிருக்கிறது.

"பிறமொழிச் சொல்லைக் கடன் கொள்வதால் தமிழ் வளரும் என்பவர் தமிழறியாதவரும், தமிழ்ப் பகைவரும் தமிழைக் காட்டிக் கொடுப்பவருமே யாவர்" [32]

தமிழில் எச்சொல்லிலும் எவ்விடத்திலும் பிறமொழியெழுத்தும் எழுத்து முறையும் வருதல் கூடாது. பிறமொழிச் சொல் இன்றியமையாததும் மொழிபெயர்க்க முடியாததுமாயின் தமிழ் மரபுக்கேற்பத் திரித்தெழுத வேண்டும். வரம்பீட்டை மீறினால் தமிழ் நாளடைவில் வேறுமொழியாய் மாறிவிடும். சொன் முதல் வாராவெழுத்தை முதலிற் கொண்ட பிறமொழிச் சொற்கள் தமிழில் எழுதப்பெறின் அவற்றின் முதலெழுத்து நீக்கப்பெறும் அல்லது மாற்றப்பெறும். அதன்முன் உயிர்க்குறில் சேர்ப்பதும் உண்டு.

---

31. ஞா. தேவநேயப் பாவாணர், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், ப. 82-83.

32. ஞா. தேவநேயப் பாவாணர், தமிழ் வரலாறு, ப. 238.

ஸ்காட்லாந்து - காட்டிலாந்து, காத்துலாந்நது

ஸ்பெயின் - இசுப்பெயின்

ரஷ்யா - இரசியா

வல்லின மெய்யும் அயலெழுத்தும் இறுதியிற் கொண்ட சொல்லாயின் ஓர் உயிர் அல்லது உயிர் மெய் சேர்க்கப்பெறும் அல்லது மாற்றப்பெறும்.

நியூயார்க் - நியூயார்க்கு

டேனிஷ் - தேனியம்

'தமிழ் மாது ஆரிய மொழியால் அலங்கரிக்கப் பெற்றிருப்பதாக உ.வே.சா. கூறியுள்ளார். இக்கூற்றை முற்றிலும் மறுப்பதோடு வேண்டாது வழங்கும் வீண் வட சொற்களையும் அதனால் வழங்கப்படாது நிற்கும் தூய தென் சொற்களையும் 1940ஆம் ஆண்டிலேயே பாவாணர் மிக விரிவாக எடுத்துக்காட்டுகிறார்.

சோறு, மிளகுச்சாறு, தண்ணீர் எனும் சொற்கள் கூட எளிய மக்களிடத்தில் தான் வழங்குகின்றன. படித்த பெருந்தகையர் சாம்பார், சாதம், Rice, ரஸம், ஜலம், தீர்த்தம், water எனும் சொற்களை வழங்குகின்றனர். இதன் விளைவால்தான் மிக எளிய உணவகத்தில் கூடத் 'தயிர் சாதம் ரெடி' என்றெழுதும் நிலை ஏற்படுகிறது.

'தமிழ், வடமொழி, ஆங்கிலம் மூன்றும் கலந்து விற்கும் நிலை ஏற்பட்டதை அறிஞர்கள் பெருமையுடையதாகக் கருதுகின்றார்களா?'

வடசொல் வழக்கால் தமிழர்க்கு மொழியுணர்ச்சி முற்றும் அற்றுப்போய் விட்டமையால் புதிதாய் வந்த உருதுச் சொற்களும் ஆங்கிலச் சொற்களும் தங்குதடையின்றித் தமிழில் கலக்கத் தொடங்கின.

தயார், சவால், குமாஸ்தா, கஜானா, ஜப்தி, சிபாரிசு, வசூல், ரஜா, ராஜினாமா, இலாகா போன்ற உருதுச்சொற்களையும்,

கோர்ட்டு, போலீஸ், பென்சில், பியூன், டிக்கெட்டு, பேப்பர், மாதிரி, கேஸ், ஆஸ்பத்திரி போன்ற ஆங்கிலச் சொற்களையும், அவற்றின் மருவிய வழக்குகளையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேலும் மேலும் வேற்றுச் சொற்களை வேண்டாது ஏற்றுக் கொண்டே போவதால் தமிழ் ஒரு பன்மொழிக் கலவையாக மாறித் தமிழரை நாகரிகமற்ற இனத்தவராகக் காட்டும் சூழ்நிலை ஏற்படும் எனப் பாவாணர் கருதுகிறார்.

பல தென் சொற்களுக்குப் பிறமொழி வாயிலாகவே பொருள் கூறி விளக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

'கழுவாய்' என்றால் 'பிராயச்சித்தம்' எனும் வடசொல் கொண்டும், மீகாமன் என்றால் 'மாலுமி' (அரபுச் சொல்) Pilot (ஆங்கிலம்) ஆகிய சொற்கள் கொண்டும் விளக்கம் சொல்கிறோம்.

'அங்கட' என்று மலையாளத்தார் வழங்கிக் கொண்டிருக்க நாம் மட்டும் 'மார்கெட்'டுக்கு போய்க் கொண்டிருக்கிறோம்.

மேற்கண்டவாறு பாவாணர் தம் கருத்துகளை விரித்துரைத்து தனித்தமிழ் பற்றி எல்லாக் கோணத்திலும் ஒரு தெளிவை ஏற்படுத்தியுள்ளார்.

'சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்' எனும் அவர் நூல் தமிழ்ச் சொல்லின் வளத்தை நிலைநாட்டுவதாகும். அது போன்ற நூல்களைப் படித்து வாய்ப்புள்ள இடங்களில் அவற்றைப் பயன்படுத்துவதற்கு மாறாக எவ்வகையிலும் முயலாமலும், விரும்பிச் செயல்படாமலும் தமிழைக் குறைகூறிக் கொண்டிருப்பவர்க்கு அவர் சாட்டையடி தருகிறார்.

எடுத்துக் காட்டாகத் தொகுதிப் பெயரை மட்டும் காணலாம்.

"அம்பலம், (Village Assembly), அவை (Audience), அவையம் (Jury), ஆசிடை (Association), ஆயம் (Assembly), இல் (அல்), இல்லம் (House), கடிகை (Village Council), கணம் (Society, host, body), கழகம் (Academy), களம் (Field), களரி (Institute), குழு (Faction, Committee), குழூஉ (Class), குழுமம் (Guild), குழாம் (Group), கும்பல் (Crowd), குறி (Village Council), பெருங்குறி (Village Assemly), கூளி (Maltitude), கூட்டம் (Meeting, gathering), திரள் (Mass), தொழுதி (Hard. Flock) தொகுதி (set. Aggregation), தொகை (Collection, sum), நெருள் (Big Crowd), பண்ணை (Farm-a bevy of ladies), பொதியில் (Public Hall), மக்கள் (People), மந்தை-ஆனிரை மானிரை ; மன்று, மன்றம்-பொதுவிடம் அம்பலம், அறங்கூறவையம் ; மாந்தர் (Human beings), மன்பதை (Humanity, mankind), வகுப்பு (class).

தானை, சேனை (Army), படை (Division, Force), பஞ்லம் (Company), கணகம் (Battalion), மன்பதை (Regiment), தண்டு (Troop), தார் - போர்ப் படையின் முன்னணி; கூழை போர்ப்படையின் பின்னணி, தூசு, தூசி - கொடி தாங்கிச் செல்லும் கொடிப்படை.

தலைக்கட்டு: கணவனும் மனைவியும் மட்டும் உள்ள குடும்பம்

| | | |
|---|---|---|
| குடும்பம் | : | கணவனும் மனைவி மக்களும் சேர்ந்த கூட்டம் |
| குடும்பு | : | பல குடும்பங்கள் சேர்ந்த கூட்டம் |
| இல் (அல்) குடி | : | பல தலைமுறையாகத் தொடர்ந்து வரும் பெருங்குடும்பம் |

மரபு : தொடர்ந்து வரும் குடிவழி

குலம் : பல குடிகள் சேர்ந்த தொகுதி (எ.டு, பள்ளியர், கவண்டர், அகம்படியர், குடியானவர் முதலிய பல குடிகள் சேர்ந்த தொகுதி வேளாண் குலம்)

இனம் : ஒரே வகையான மொழி பேசும் பல குலத் தொகுதி (Nation)

வரணம் : நிறங்காரணமாக ஏற்பட்ட மாபெருங் குலம் (Race) [33]

நம் தமிழர்களைப் பற்றி அவர் கூறும் கருத்துச் சிந்திக்கத்தக்கது.

"அறிவுப் பெருக்கமும் ஆராய்ச்சி வன்மையும் ஒருங்கே கொண்ட மேனாட்டார்க்கும் மொழி நூல் நெறிமுறைகள் முற்றத் தெரியாத போது, நூற்றுக்குத் தொண்ணூறு தற்குறிகளும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையான மூடக்களஞ்சியங்களும் பகுத்தறிவில்லா உருவேற்றிகளும் குடிகொண்ட இந்நாட்டில், மொழிநூலைப்பற்றித் தவறான கருத்திருப்பதில் வியப்பொன்றுமில்லை" [34]

தமிழ் தொடர்பான உண்மைகள் மறைக்கப்படுவது குறித்து முழுங்குகிறார். 'திரவிடத்தாய்' எனும் நூலில்—

"உலக மொழிகளுள் தலைமையானவற்றுள் தமிழும் ஒன்றெனினும், "பல்குழுவும் பாழ்செயும் உட்பகையும்" தமிழகத்திலிருந்து கொண்டு, தமிழின் பெருமையைப் பிறநாடுகள் மட்டுமன்றித் தமிழ்நாடும் அறியாதபடி, அதனை மறைத்து வருவது மிகமிக இரங்கத்தக்கதொன்றாம். ஆராய்ச்சியாளரோவெனின், ஓரிருவர் நீங்கலாக, பிறரெல்லாம், பிறநாட்டுச் செய்திகளாயின் மறைந்தவுண்மையை வெளிப்படுத்துவதும், தமிழ்நாட்டுச் செய்திகளாயின் வெளிப்பட்ட வுண்மையை மறைத்து வைப்பதுமே தொழிலாகக் கொண்டுள்ளனர். ஆயினும், கார் காலத்தில் மறைக்கப்பட்ட கதிரவன் திடுமென ஒரு நாள் திகழ்ந்து தோன்றுவதுபோல், தமிழும் ஒருநாள் உலகத்திற்கு வெளிப்படும் என்பதற்கு எட்டுணையும் ஐயமின்று" [35]

இன்று விளையாட்டுத்துறையில் பல சொற்கள் தமிழாக இல்லை. காற்பந்து, பூப்பந்து, கைப்பந்து என்பதைக் கூட நாம் நம் வாயால் பயன்படுத்துவதில்லை. இந்நிலையில் பாவாணர் அவர்கள் தமிழ்நாட்டு விளையாட்டுகள் அனைத்தையும் தொகுத்துத் தந்திருப்பதோடு அவற்றின் தமிழ்ப் பெயர்களையும் உலகறியச் செய்துள்ளார்.

---

33. சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், ப. 49.
34. ஞா. தேவநேயப் பாவாணர், முதல் தாய்மொழி, முகவுரை.
35. ஞா. தேவநேயப் பாவாணர் திரவிடத்தாய், முகவுரை.

இன்னும் அவரது நூல்களின் பல்வகைச் சிறப்புகளையும் படித்துணர்ந்து தெளிவு பெறுவது நமது கடைமையாகும்.

**எதிர்க் கருத்துகள்**

தனித்தமிழ்க் கோட்பாட்டுக்கு எதிராகப் பலர் பலவகை வினாக்களைத் தொடுப்பது உண்டு. அவற்றை வரிசைப்படுத்தி முறையான விடையிறுக்க வேண்டியுள்ளது.

1. தமிழ்ப்பற்றாளர் பலராலேயே 'தனித்தமிழ்' எழுதமுடியாத போது உங்களுக்கேன் இந்த வேலை என்று கேட்கிறார்கள் சிலர்.

திரு வி.க. 'மனோன் மணீயம்' சுந்தரனார் போன்றாரின் மொழிப்பற்றும் அன்னார்தம் தமிழ்த் தொண்டும் நாடறிந்தவை. செந்தமிழ் வல்ல திரு. விக. அரசியல், செய்தித்தாள் உலகம், தொழிலாளர் நலம் என்று கீழிறங்கி நின்று மக்களோடு பழகியதால் சில வடமொழிச் சொற்களைக் கலந்தார். ஆனால், அவரது மொழிப் பற்றுக்கு அது மாறானதன்று. வலிந்து அவற்றை மாற்றாமல் எளிய மக்களுக்கு விளங்கட்டுமே என்பதில் கருத்துச் செலுத்தினார் என்பதே பொருந்தும்.

அதே போல் சுந்தரனார் 'ஆரியம் போல் உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையாத சீரிளமைத்திறம், படைத்த தமிழின் பெருமையை வானளாவப் புகழ்கின்றார். தமிழுக்கு ஆக்கமாக நாடக நூலைப் படைத்தார். எனினும் அவரது நடையில் பல வடமொழிச் சொற்களைக் காணலாம். 'பாஷாபிமானமும், தேசாபிமானமும்' எனும் தொடரையும் காணலாம். அன்று அவரால் கூட வடமொழிப் பிடிப்பிலிருந்து மீள முடியாத நிலை. இலக்கியம் படைக்க முடிந்த அவர் புதுச்சொற் புனைவில் கருத்துச் செலுத்தவில்லை. இன்று நாட்டுப் பற்று மொழிப்பற்று எனும் சொற்கள் பெருவழக்காகி விட்டன. பாஷாபிமானம், தேசாபிமானம் முதலியவை ஓடி ஒளிந்து விட்டன. சுந்தரனார் செய்யாததை அவரது பின்னோர் செய்து விட்டனர். ஆனால் பின்னோர் செய்த இந்தச் செயலுக்குத் துணை செய்தது சுந்தரனாரின் துணிச்சலான கொள்கையே ஆகும்.

எனவே, மொழிப்பற்றுடைய சிலர் சில இடங்களில் தனித்தமிழ்க் கொள்கையில் நின்று இயங்கவில்லை என்றாலும் மறைமலையடிகளும், பாவாணரும், பெருஞ்சித்திரனும், இலெனின் தங்கப்பாவும், தமிழ்க்குடிமகனும், இளவரகும், த.ச. தமிழனும் இன்னும் பலரும் தனித்தமிழால் எதுவும் முடியும் என்று மெய்ப்பித்துவிட்டனர். எனவே, சுந்தரனார் போன்றவர்களின் நடையை எடுத்துக்காட்டித் தனித் தமிழ்க் கொள்கையை முறியடிக்க முனைவது பேதைமை என்றும் காலத்தின் விரைவையும் வெற்றியையும் விளங்கிக் கொள்ளாத தன்மை என்றுமே சுட்ட வேண்டியுள்ளது.

பாவேந்தர் கூட

**'ஆதரவு காட்டாமல் ஐய எனைவிடுத்தால்**
**பாதரக்ஷை போலுன்றன் பாதம் தொடர்வதன்றி**

என்று எழுதியவர்தான்.

"சபாஷ்! கரகோஷம்" என்றவர்தான். ஆனால், அவரேதனித் தமிழ்க்கொள்கையை ஏற்றுக்கொண்டபின் 'தமிழியக்கம்' படைக்கிறார். ஒருகாலத்தில் 'தனித்தமிழ்' எனும் கோட்பாட்டை இறுக்கமாக வைத்துக் கொள்ளாதவர்கள் கூடக் காலம் கனிந்தபின் முழுமையான வேகத்துடன் இக்கொள்கையை முழங்கியிருப்பதை உறுதியாக உணரமுடியும்.

எங்கள் முன்னோர்களால் ஆற்றிக் காட்ட முடியாதவற்றையும் நடைமுறையில் செயற்படுத்திக் காட்டியிருக்கிறோம். எங்களுக்கு ஏன் இந்த வேலை என்று கேட்பவர்கள் 'தங்களுக்கு மேல் வேறெவரும் தமிழறிந்தவனாகவோ தமிழ்த் தொண்டன் எனும் பெயரோடோ உலவக் கூடாது என நினைக்கும் தன்னலக்காரர்களே என்று உரைத்தல் தகும்.

2. எல்லாரும் தனித்தமிழைப் பின்பற்ற முடியுமா? என்பது ஒரு கேள்வி.

பொது மக்கள் பலரும் வாயில் வந்ததையெல்லாம் பேசுவார்கள். அவரவர் தரத்துக் கேற்ப என்னென்னவோ வரும். மிக மிகக் கீழ்த்தரமான சொற்களைக் கூட இயல்பாகப் பேசுவார்கள். எனவே, அவற்றை அளவையாகக் கொள்ள வேண்டியதில்லை.

மறைமலையடிகள், பாவாணர் போன்றவர்களின் நடையே அளவையாக முடியும். திரைப்படம், மிதிவண்டி போன்ற சொற்கள் பொருத்தமானவை; நாடெங்கும் பலராலும் பயன்படுத்தப் படுபவை. இவற்றைக் கூடப் பயன்படுத்தத் துணிவும், முதுகெலும்பும் அற்றவர்கள் இருக்கும் போது என்ன செய்வது?

நாடெங்கிலும் சாராயம் வழிந்தோடுகிறது என்பதற்காகக் குறள் நெறி தவறாகி விடுவதில்லையே! வடமொழியோ, ஆங்கிலமோ வருவதற்கு முன் தமிழர்கள் என்ன பேசிக்கொண்டிருந்தனர்?

3. பிறமொழிச் சொற்களை அப்படியே ஏற்றால் என்ன என்று சிலர் கேட்கிறார்கள்.

பிறந்த நாள் முதல் ஐந்து அகவை முடியும் வரை எல்லாப் பிள்ளைகளும் அவரவர் தாய்மொழியைப் பேசுகின்றன. எளிதாக விளக்கி, எளிதாக விளங்கிக் கொண்டு வாழ்கின்றன. வாய்க்கு வந்ததை எல்லாம் பேசியும் திரிகின்றன. இவ்வளவே போதும் என்று விட்டு விடுகிறோமா? பல கோடிக்கணக்கான பணத்தை அள்ளி இறைத்துக்

கல்வி நிறுவனங்களை உண்டாக்கி வைத்திருக்கிறோம். மொழியைச் செப்பமாகப் பேசவும் எழுதவும் முன்னோர் தந்த பழமைச் செல்வத்தை யெல்லாம் பின்னோரும் பெறவும் ஏற்பட்ட முயற்சி தானே கல்வி; அதை விட்டு அறியாப் பருவத்தில் ஐந்து அகவையில் பேசியதை அப்படியே எழுத்து வடிவில் மட்டும் கொணரக் கற்றுக் கொடுப்பதா கல்வி?

பிறமொழிகள் பிறமொழிகளே! தமிழ் விரும்பிகளின் தளரா முயற்சிகளால் தான் வடமொழி கலந்த மணிப்பிரவாள நடை முற்றிலும் ஒழிந்தது. எனவே, பிறமொழிகளை அப்படியே ஏற்காமல் மொழி பெயர்த்தும், புத்தாக்கம் செய்தும் வளப்படுத்தும் முயற்சியில் பலரும் உழைத்தாக வேண்டுமே அல்லாமல் வலிக்காமல் உழைக்க வேண்டும்; உழைக்காமலேயே உட்கார்ந்து சாகவேண்டும் என்று நினைக்கும் சோம்பேறி மனப்பாங்கை முதலில் தூக்கி எறிய வேண்டும்.

4. பல்வேறு மொழிகளையும் கலந்து வளர்ந்துள்ள ஆங்கிலத்தைப் பாருங்கள் என்று பலரும் சுட்டிக் காட்டுகின்றனர். ஆங்கிலம் கடன் வாங்கித்தான் வளர வேண்டுமென்ற நிலைபடைத்த மொழி. ஆனால் தமிழ் அப்படியன்று. எங்களைப் போன்றவர் பிறமொழிச் சொற்களின் உதவியின்றியே இயங்க முடிகிறது ; இயங்க முடியும் ; எனவே, வேண்டாது கடன் வாங்குவதால் தமிழ் வளராது; தளரும். மேலும் ஆங்கிலம் இப்படிக் கடன் வாங்கியதால் 1400ஐ ஒட்டிய சாசர் காலத்து ஆங்கிலத்தை இப்போது நம்மால் படிக்க முடியவில்லை.

'Whom' என்பதைச் சாசர் 'Whome'என்று எழுதுகிறார். இப்போதைய ஆங்கிலத்தின்படி அது Who me என்றல்லவா வாரும்? ஆனால் இன்றும் என்னால் படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும் உடைப் பெருஞ்செல்வனாகவே இயங்க முடிகிறதே!

5. தனித்தமிழை எழுதி விடலாம். ஆனால் பேசமுடியாதே என்கின்றனர் சிலர்.

பேசமுடியும் என்பதைப் பலர் மெய்ப்பித்து விட்டபிறகும் இந்தக் கேள்விக்கு இடமில்லை என்பதே சுருக்கமான விடையாகும்.

6. தனித்தமிழ் விரும்பிகள் எல்லாம் நாத்திகர்கள் என்றும், தெய்வீகத்துறையில் ஈடுபாடு கொள்ளும் போது பிறமொழிகளைக் கலந்துதான் ஆக வேண்டியுள்ளது என்றும் சிலர் கூறுகின்றனர்.

மறைமலையடிகளோ பாவாணரோ நாத்திகர்கள் அல்லர். மறைமலையடிகள் தமிழும் சைவமுமாக வாழ்ந்து பணியாற்றியவர். பாவாணர் இறைநம்பிக்கையாளர். எனவே தனித்தமிழ் விரும்பிகள் நாத்திகர்கள் என்று பழியுரைப்பது பொருந்தாது.

7. வடமொழி பற்றி ஏதும் தெரியாதவர்கள்தாம் தனித்தமிழ் பற்றி வாய் ஓயாமல் பறை சாற்றுவதாகக் கூறுகின்றனர். இந்தக் கருத்தும் தவறானதாகும்.

மறைமலையடிகள் வடமொழியில் நல்ல புலமை பெற்றவர் என்பதை யாரும் மறுக்கமுடியாது. பாவாணரும் அதே வல்லமை பெற்றவர் என்பதை அவர் எழுதிய 'வடமொழி வரலாறு' எனும் நூல் தெளிவாகக் காட்டும்.

8. தனித்தமிழ் விரும்பிகள் வடமொழியின் பால் தாம் கொண்ட 'பகைமை' எனும் நஞ்சை உருவாக்கித் தமிழ்ப் பயிரை வளர்க்க முயல்வதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

பன்னூறாண்டுகட்கு முன்பிறந்து தூய மொழியாகவே வளர்ந்து இலக்கணச் செழுமையும் இலக்கிய வளமையும் பெற்ற மொழி அளவிறந்த வடமொழித் தாக்கத்தால் அழகிழந்து நிற்கும் போது அந்த மொழிச் சொந்தக்காரன் எடுக்க வேண்டிய நடவடிக்கை என்ன? பல நூற்றாண்டுகள் வடமொழியைப் பகையாகக் கருதாமல் கோயில் வழிபாட்டிலும், ஆட்சி அதிகாரத்திலும், இலக்கண, இலக்கியத்திலும் தன் தாய்மொழிக்கான வாய்ப்பை அறவே இழந்து முழுத் தூக்கத்தில் இருந்தவன் தமிழன், அவனே ஒரு கட்டத்தில் விழித்தெழுந்து, உண்மை உணர்ந்து, உணர்ச்சி கொண்டு, நிமிர்ந்து நின்று ஏன் இந்த இழிநிலை? என்று கேட்கும் போது அவன் எழுப்புகின்ற குரல் உரிமைக் குரலே தவிர, வடமொழியைப் பகையாகக் கருதும் குரலன்று. இத்தனை காலம் அழுத்தியது போதும் என உணர்ந்து வடமொழி தானாகப் பின் வாங்கா விட்டால் அதைப் பகையாகக் கருதி மோதுவது தவிர்க்க முடியாதது. எங்கிருந்தோ வந்து எங்கள் தமிழ் மண்ணில் வேரூன்றி நின்று, நாங்கள் ஏமாந்த காலத்தில் ஏற்றம் பெற்ற வடமொழி இப்படியொரு கருத்தைக்கக்குவது பொருத்தமன்று.

தமிழ் கடந்த ஈராயிரமாண்டுகளாக வடமொழியோடு போராடிக் கொண்டுதானிருக்கிறது.

'ஆரியத்தோடு

**உறழ்தரு தமிழ்த் தெய்வத்தை உள் நினைந்து**

**ஏத்தல் செய்வோம்'**[36] என்னும் கூற்றை நோக்கவும்.

சிலர்க்கு இயலாமை இருக்கும். தனித்தமிழ் பேசுவதும், எழுதுவதும், தங்களால் முடியாது என்று கூடக் கருதலாம். தங்களால் முடியாது என்பதாலேயே வேறு எவராலும் முடியாது என்று

36. தென்மொழி மலர் 1-இதழ் 1 (1959) - மேற்கோளாக எடுத்தாளப் பெற்றது.

கருதக்கூடாது. இயலாதவர்கள் இயன்றதைச் செய்பவர்களை வாழ்த்த வேண்டும். சோம சுந்தர நாயகர் மறைமலையடிகட்கே தமிழுணர்ச்சியை ஊட்டியவர். அறுபது நூல்கள் வரை எழுதியிருக்கிறார். ஆனால் அவரது நூல்களில் எண்பது விழுக்காடு வடசொற்கள் இருக்கும். இதுபற்றி மறைமலையடிகள் கேட்டபோது அவரது ஆசிரியர் கூறிய விடை நமக்கும் வேண்டியது தான்.

"என்னால் வடசொற்களின்றி எழுத இயலாது. நீ வடசொல் கலவாது தனித்தமிழிலேயே எழுது- உன் தனித்தமிழைப் படிக்கப் படிக்க என் காதுகளுக்கு இன்பமாயிருக்கிறது. நீ தனித் தமிழிலே எழுவது எனக்கு விழிப்பையும், கிளர்ச்சியையும் உண்டு பண்ணுகிறது."[37] என்று கூறியுள்ளார்.

பிற மொழிகளைத் தமிழில் ஏற்கும் போது ஒலியின்பம் கெடாமல் இருக்க வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர்.

கிரந்த எழுத்துகளுக்குப் பகரமாகத் தமிழ் எழுத்துகளைப் பயன்படுத்தும்போது ஒலியின்பம் கெடக் கூடாது என்று கருதுகின்றனர் சிலர். வீபீஷணன்-வீடணன், லஷ்மணன்-இலக்குவன் என மாற்றிக் கையாண்ட கம்பரின் போக்கைச் சற்றுச் சிந்திக்க வேண்டும். அவர் ஒலியின்பத்திற்காகத் தமிழைக் காவு கொடுக்கவில்லை.

Paid, laid என ஒரே வகையில் ஒலிக்கும் ஆங்கிலம் 'Said' எனும் போது மாற்றி ஒலிப்பதை மனத்தில் கொள்ள வேண்டும். 'no' நோவாகிறது. 'now' நௌவாகிறது. ஆனால் 'Know' மட்டும் மறுபடி நோவாகிறது. ஒலியின்பம் என்ன ஆயிற்று? தமிழர்கள் மட்டும் பிறமொழிச் சொற்களை நம் ஒலிக் கேற்பக் கையாள்வதில் என்ன தவறு? 'இங்கிலாண்ட்' என்று தான் சொல்ல வேண்டுமா? இங்கிலாந்து என்று மாற்றியது பெருவழக்கான பிறகும் ஏன் தடுமாற்றம்?

'ஜலம்' என்பதை 'சலம்' போட்டுக்குழப்பாதீர்கள் என்று நம்மைப் பார்த்துக் கெஞ்சுகிறார்கள் சிலர். நீரும், தண்ணீரும் கைவயம் இருக்கும் போது நீங்கள் மட்டும் புண்ணினின்று வடியும் ஜலத்தைப் பிடித்துக் குடிக்க நினைப்பது ஏன்? என்று கேட்க விரும்புகிறோம்.

ஜலத்தையே தூக்கி எறிந்துவிட்டால் சலத்திற்குத் தேவையிராது.

நம் திருவல்லிக்கேணியையே எவனோ சொன்னான் என்பதற்காக 'டிரிப்ளிகேன்' என்று வாய் கூசாமல் சொல்லித்திரியும் தமிழர்கள் நம்மைப்பார்த்து 'ஒலியின்பம்' பற்றி உரையாற்ற நினைப்பது கேவலமாகும். எவனோ கக்கிப் போட்டதையெல்லாம் அள்ளி விழுங்க

---

37. மறைமலையடிகளார் கடிதங்கள், ப. 54.

நினைக்கும் போக்கினர்தாம் 'மதுரை போகிறேன்' என்பதைக் கூட 'மசுராப் போகிறேன்' என்று சொல்வதில் பெருமைப்படுவார்கள்.

நமக்கு நம் ஒலி போதும் என்பது மட்டுமன்று; எந்தப் பிறமொழிப் பெயரையும் பயன்படுத்த வேண்டுமென்று தேவைப்பட்டால் நம் ஒலிக்கேற்பத்தான் சொல்ல வேண்டும். டோக்கியோவைத் தோக்கியோ என்றுதான் சொல்ல வேண்டும். இதனால் ஒரு கொள்கை தெளிவாகிறது. பிற மொழிச் சொற்களை அறவே விலக்கிவிடும் போது இந்த ஒலித்தொல்லை வருவதில்லை. சில ஊர்ப்பெயர்கள், ஆட்பெயர்களை எழுதும்போது நம் ஒலிக்கேற்ப எழுதலாம்; அறிமுகப்படுத்தலாம்; ஒன்றும் குடிமுழுகி விடாது.

இறுதியாக நமது கடமைகளைப் பற்றி எண்ணுவோம்.

நயன்மை (நீதி) என்பது உலகோர் அனைவர்க்கும் பொது. தமிழில் 'பேனா' என்பதனைத் 'தூவல்' என்று வழங்குகிறோம். 'Penna' என்பது இலத்தீன் சொல். அஃது ஆங்கிலத்துக்கு வரும்போது 'Pen' ஆகிறது. தமிழர்கள் அதைக் கண்டதும் 'பேனா' ஆக்கிவிட்டனர். ஆக இலத்தீன் 'பென்னா' தமிழில் 'பேனா' ஆகிவிட்டது. Penna என்றால் பறவையின் இறகு என்று பொருள். பறவை இறகு கொண்டுதான் இலத்தீன் நாட்டார் எழுதினர். தமிழனும் பறவை இறகு கொண்டுதான் எழுதினான். 'தூவி' கொண்டு எழுதியதால் இன்றைய 'பேனா'வைத் 'தூவல்' என்பது பொருந்தும். ஆனால், ஒரே பொருளுடைய 'Penna'வைச் சொல்லும்போது இனிக்கிறது என்பவன் 'தூவல்' எனச் சொல்லத் துன்பப் படுவானானால் அது தாழ்வுமனப்பாங்கையே காட்டும். 'தையலகம்' என்று எவனாவது எழுதியிருந்தால் அவன் கிழிந்த துணி தைப்பவன் என்று கருதுகிறார்கள் நம் காளைகள். Tailors என்று போட்டால்தான் அவன் இங்கிலாந்தில் தையல் கற்றுக் கொண்டு வந்து இங்குக் குப்பாயமும் முழுக்காற் சட்டையும் தைப்பவன் என்று முடிவு செய்யும் நிலை உள்ளது. இந்த இழி நிலை மாறாதவரை மொழி நிலையிலும் முன்னேற்றம் இராது.

தனித்தமிழ் வேண்டாமென்று கருதியும், தேவைப்படும் போது அதனை நெகிழ விட்டும் வாழ்பவர்கள் தமிழை விற்றேனும் தாம் வாழ விரும்புவோர் என்பதே உண்மை. இத்தகையோர்க்குப் பாவாணர் வாழ்க்கை ஒரு பாடமாக அமையட்டும்.

தனித்தமிழ் பேச, எழுத இயலாதவர்களைத் தெளிவுபடுத்தி விடலாம்; பயிற்சி வாயிலாக இயலும் என்றும் நிறுவிவிடலாம். ஆனால், முயலாதவர்களை இந்த முயற்சியில் ஈடுபடுத்த வேண்டும். சில இதழ்களையும் நூல்களையும் காட்டி முயல வைக்க வேண்டும்.

தமிழறிஞர்களே நல்ல சொற்களை உருவாக்கித் தருகிறார்கள். எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் அவற்றைப் பயன்படுத்திக் காட்டுகின்றனர். பிறகும் தயங்கினால் அவர்களை என்னென்பது?

**'ஏணி பெற்றும் ஏறாத**
**தமிழர் உயிர் வாழ்வதினும்**
**இறத்தல் நன்றே'** [38]

என்றுதான் கூறவேண்டும்.

பிற மொழி கலத்தல் கூடாது என்று தொடர்ந்து எதிர்த்து வர வேண்டும். அப்படி எதிர்த்ததால்தான் மணிப்பிரவாள நடை ஒழிந்தது. அதுமறைந்து மாண்டுபோய் விட்டது என்று 'ம.பொ.சி''. போன்றவர்களே கூறுகின்றனர். இப்போது ஆங்கிலம் கலந்த மணிப்பிரவாளம் மறுபடி தலைதூக்கி நிற்கிறது. புதுக்கவிதைகள் எனும் பெயரில் இந்தக் கலப்பு நடைபெற்று வருகிறது.

**'இம்பார்ட்டண்ட் லீடர்ஸ்**
**ஆப் மாடர்ன் இண்டியா**
**என டிக்டேஷன் போட்டால்..............''** [39]

என்பது ஒரு கவிதை..................

இத்தகைய போக்கை ஒழித்துக்கட்டியே ஆகவேண்டும். முன்னைய மணிப்பிரவாளத்தை முறியடிக்க முடிந்த நம்மால் இதையும் முறியடிக்க முடியும் எனும் நம்பிக்கையோடு போராட வேண்டும்.

புதுச் சொற்களை ஆக்கும் போது அதுவே பிற்காலத்தில் வேறு வகையாக மாறிவிடுவதும் உண்டு. அதுபற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. 'Teachers' என்பதைக் கூட உபாத்தியாயர், உபாத்தியாயினி என்றுதான் சொல்லித் தந்தனர். இன்று ஆசிரியர், ஆசிரியை, உரையாளர், விரிவுரையாளர், பேராசிரியர் எனும் எத்தனை சொற்கள் வந்து விட்டன!

'Bicycle' என்பதைத் துவிச்சக்கர வண்டி' என்று மொழிபெயர்த்தனர். 'துவி, சக்கரம்' இரண்டும் வடமொழி என உணர்ந்ததும் 'ஈருருளி' எனும் சொல்லைப் பயன்படுத்தினர்; ஆனால் இது, இரண்டு உருளைகள் உள்ள எல்லாவற்றுக்கும் பொதுவாக அமைந்ததால் 'Pedal' எனும் சிறப்பு உறுப்பினைக் கொண்டு 'மிதி வண்டி' எனும் சொல்லை உருவாக்கினார் கீ. இராமலிங்கனார். இன்று உலகெங்கும் அந்தச் சொல் பரவி விட்டதே!

38. பாரதிதாசன், தமிழியக்கம், ப. 7.
39. தமிழ்நாடன், மண்ணின் மாண்பு, ப. 1.

எனவே 'கடிசொல் இல்லை காலத்துப் படினே' எனும் துணிச்சலோடு செயற்பட வேண்டும்.

தனித்தமிழ் என்றால் உடனே கடும் நடைநோக்கி ஓட வேண்டியதில்லை.

'அஞ்ஞான்று எல்லி எழ நானாழிப் போதின்வாய் ஆழி வரம் பணித்துக் காலேற்றுக் காலோட்டப்புக்குழி' எனும் ஆறுமுக நாவலர் நடையைக் கொள்ளவேண்டுமென்று யாரும் சொல்லவில்லை.

'திருப்தி என்பதைப் 'பொந்திகை' என்று சொல்லாவிட்டால் போகிறது. 'மனநிறைவு' என்றாவது சொல்லலாம் அல்லவா? 'அதிர்ஷ்டம்' என்பதற்குப் 'பொங்கு' எனும் சொல் உண்டு. அதை விட்டு 'நற்பேறு' என்று சொல்லலாமே!

'எளிய சொற்களை' வழங்க வேண்டுமெனும் கருத்தைப் பாரதி கூறினான், 'எளிய நடையில் தமிழ் நூல் எழுதிடவும் வேண்டும், என்றான் பாரதிதாசன்.

மேலும் பிறமொழி கலக்கக் கூடாது என்றால் அது வடமொழி மட்டும் கலக்கக் கூடாது; ஆங்கிலம் கலந்து பேசினால் அது பெருமை என்று கருதக்கூடாது. பிறமொழி என்றால் எதுவானாலும் பிறமொழிதான். இதில் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை.

கல்வியறிவு பெற்றவர்கள் சிலர் தங்கள் பெயரைத் தமிழில் எழுதிவிட்டுத் தங்கள் தந்தை பெயர்சுட்டும் தலைப்பு எழுத்துகளை மட்டும் ஆங்கிலத்தில் தருகின்றனர். கல்வியறிவே இல்லாத நம் தந்தை பெயர் மட்டும் ஏன் ஆங்கிலத்தில் நிற்க வேண்டும்?

செ. பாண்டியன் என்று எழுதுவதை விட்டு C. பாண்டியன் என்று எழுதுவது அருவருப்பாக இல்லையா? 'செ. Pandian' என்று எழுதிக் காட்டினால்தான் அந்த அருவருப்புப் புலனாகுமா?

மொழி வளர வேண்டுமே எனும் கவலை இருந்தால், உலகெங்கும் நம்மொழி பரவவேண்டுமே எனும் ஆர்வம் இருந்தால், இழந்த வரலாற்றை மீண்டும் எய்த வேண்டுமே எனும் முனைப்பு இருந்தால் பொறுப்புணர்ச்சி தானே வரும். தனித்தமிழுக்கு ஏற்றம் வரும்.

மொழியாக்கம் செய்து கொள்ளவும், தெரிந்தவற்றைத் துணிந்து பயன்படுத்தவும் முனைதல் வேண்டும்.

வீதி, தெரு, சாலை, முடுக்கம் எல்லாம் இருந்தும் 'தேவகோட்டை ரஸ்தா' என்கிறோம். கோவலன் உலவிய 'நகரவீதி'யை 'Townhall Road' என்கிறோம். வடநாட்டில், தில்லியில் 'சாலை'யை 'Marg' என்று

இந்தியில் தான் வழங்குகின்றனர். ஆங்கிலம் நன்கு வேரூன்றி நிற்கும் மலேசியாவில் கூடச் 'சாலை'யை 'Jalan' என்று மலாய் மொழியில் தான் வழங்குகின்றனர். நாம் மட்டும் ஏன் ரோட்டிலும், ஸ்டீரீட்டிலும் அலைய வேண்டும்!

முதலில் நம் பெயர்களைத் தமிழாக்கிக் கொள்வோம். அப்படியில்லாவிட்டாலும் நம் பிள்ளைகட்காவது நல்ல தமிழ்ப் பெயர் வைப்போம். சார்லஸ், அகஸ்டின், சாலமன் என்று பெயர்வைத்துத் தங்களைக் கிறித்தவர்களாக அடையாளம் காட்டிக் கொள்ளும் போது, லியாகத், இக்பால், காதர் என்று தங்களை இசுலாமியர்களாக அடையாளம் காட்டிக் கொள்ளும் போது, முருகன், திருமால், திருமகள், கலைமகள் என்று பெயர் வைத்துக் கொண்டு தங்கள் சமயத்தைக் கூட அடையாளம் காட்டித் தனித்தமிழைப் பேணலாமே!

பாரி, அன்பழகன், வெற்றிச்செல்வி என்று தனித்தன்மையுடன் காட்டலாமே!

பரிதிமாற் கலைஞர், மலைமலையடிகள், பாவாணர் நெறி அது தானே! திராவிட இயக்கம் இவ்வகையில் கருத்துச் செலுத்தியதால் தானே அன்பழகன், நெடுஞ்செழியன், மதியழகன் போன்ற தலைவர்கள் பிறந்தனர்?

உலகத் தமிழ்க் கழகத்தில் உறுப்பினராவோர் தம் பெயரைத் தமிழாக்கிக் கொள்ள வேண்டும் என்பது பாவாணர் வகுத்த விதியாகும். பிறமொழியில் பெயர் தாங்கினாலும் பாவாணர் அவர்களைத் தமிழில்தான் அழைப்பார்; கருணாநிதி 'அருட்செல்வர்' ஆவதும் செகதீசன் 'உலகிறைவன்' ஆவதும் பாவாணர்பால் இயல்பாகக் காணலாம்.

நாம் சிலரது எழுத்துகளை ஊன்றிப் பயில வேண்டும். அதுவே தனித்தமிழை முற்றிலும் அறிந்து கொள்ளவும், பயன்படுத்தவும் நமக்கு ஆற்றலைத் தருவது. மறைமலையடிகள் இவ்வகையில் நம் வழிகாட்டியாகிறார். மறைமலையடிகள், பாவாணர் போன்றோரது நூல்களையும் தென்மொழி, தமிழ் நிலம், தமிழ்ச்சிட்டு போன்ற இதழ்களையும் தொடர்ந்து பயில்வோர் தனித்தமிழைக் கட்டாயம் பேண முடியும் என்பது உறுதி.

"புலமையிருந்தும் வேண்டுமென்றே தேவையற்றவிடத்தும் பிறமொழிச் சொற்களைத் தமிழில் திணிப்பார்களானால் அது மன்னிக்க முடியாத பெருங் குற்றமாகும்; அதனைக் கண்டிப்பது தமிழர் கடமை"[40] என்று ம. பொ. சி. கூறுவதையும் கருத்தில் கொள்வோம்.

---

40. ம.பொ. சிவஞானம், மண்ணின் மாண்பு ; ப. 65.

'கெடல் எங்கே தமிழின் நலம்?
அங்கெல்லாம் தலையிட்டுக்
கிளர்ச்சி செய்க![41]

என்றார் பாவேந்தர். அவர் வழியில் நின்று தமிழியக்கம் காண்பதே தனித்தமிழ் பேணவும் பாவாணர் கண்ட பெரும் கொள்கையைப் பாங்குடன் வளர்க்கவும் ஆன நெறியாகும். இன்றும் பாண்டிய நாட்டில் சொற்றூய்மை நிலவி வருகிறது. சிகிச்சை எனும் வடசொல்லுக்கு மாறாகப் பண்டுவம் என்றும், சுத்தம் எனும் வடசொல்லுக்கு மாறாகத் துப்புரவு என்றும் வழங்குவதைக் காணலாம். எனவே, படித்த மக்களே தமிழைக் கெடுப்பதில் முன் நிற்கின்றனர் என்பது வெளிப்படை.

முடிவுரை

தனித்தமிழ் குறித்த அவரது கருத்தை முடிவுரையாகவும் முடிந்த முடிபாகவும் கொள்வோம்.

"இதுகாறும் கூறியவற்றால், பிறரிடங் கடன் கொள்ள வேண்டாத ராக்பெல்லர், நப்பீல்டு, பிர்லா முதலிய பெருஞ்செல்வர் போல், தமிழும் பிற மொழிகளினின்று சொல்லைக் கடன் கொள்ளாதென்றும்; அயற்சொற்களை எல்லாம் இயன்றவரை மொழி பெயர்த்தல் வேண்டுமென்றும்; மொழி பெயர்க்க முடியாதவற்றிற்குப் புதுச்சொற்களைப் புனைந்து கோடல் வேண்டுமென்றும்; அதுவும் இயலாத ஒரு சில இன்றியமையாத சொற்களைத் தமிழ் எழுத்திற்கேற்பத் திரித்து வழங்குதல் வேண்டுமென்றும்; பிறமொழிகளிலுள்ள அரிய நூல்களை மொழிபெயர்ப்பதே தமிழை வளப்படுத்தத் தலைசிறந்த வழியென்றும்; பிறமொழிச் சொற்களைக் கட்டுமட்டின்றித் தமிழிற் கலப்பது அதன் கேட்டிற்கே வழிகோலுவதாகும் என்றும்; இதுவரை தமிழிற் புகுத்தப்பட்ட எல்லாச் சொற்களும் தமிழதிகாரிகளால் ஒப்புக் கொள்ளப்பட்டனவல்ல என்றும்; அவற்றை இயன்றவரை விலக்கித் தமிழின் தூய்மையைக் காப்பது தமிழறிஞரின் தலையாய கடனென்றும்; நேர் நின்று காக்கை வெளிதென்பாரும் தாய்க்கொலை சால்புடைத் தென்பாரும் தமிழை யொழிக்கத் தயங்காராதலின், அவர் தமிழுக்கு மாறாகக் கூறும் கூற்றையெல்லாம் கூற்றென்றே கொள்ளுதல் வேண்டுமென்றும்; தெற்றெனத் தெரிந்து கொள்க."[42]

நான் முதல்வர் ஆனபின் எனக்கு எழுதிய மடலில் பாவாணர் தன் கொள்கையைத் தெளிவுபடுத்துகிறார். எந்தப் பொறுப்பில் இருந்தாலும் தனித்தமிழைப் பேண வேண்டும் என்று வற்புறுத்துவதிலும்,

---

41. பாரதிதாசன், மண்ணின் மாண்பு ; ப. 52.
42. தமிழ் கடன் கொண்டு தழைக்குமா ? ப. 20-21.

பேண முடியும் என்று நம்பிக்கை ஊட்டுவதிலும் அவர்க்கு நிகர் அவர்தான்.

அவரது மடல் இதோ;

"அதிகாரமின்றி அங்குமிங்கும் ஓடியாடித் திரிநிலையிலும் அதிகாரத்துடன் ஓரிடத்திருக்கும் நிலையே, தொண்டு செய்யச் சிறந்தது.

1. கல்லூரி மாணவர் அனைவர்க்கும் தமிழ்ப் பற்றூட்டலாம்; தமிழ் என்பது செந்தமிழே.
2. ஆண்டுதோறும் வெளியேறும் மாணவருள் ஓரிருவரையேனும் தமிழ்த் தொண்டராக்கலாம்.
3. அரசோ, பல்கலைக்கழகமோ தமிழுக்குக்கேடான சட்டம் பிறப்பிப்பின் அல்லது கட்டளையிடின் கண்டித்துத் தவிர்க்கலாம்.
4. இந்தித் திணிப்பையும் வடமொழி வழிபாட்டையும் தடுக்கலாம்." [43]

அவர் வகுத்த வழியில் அயராது நடைபோடுவதனாலேயே அவரைக் குறித்து உரையாற்றும் தகுதி பெற்றவன் என்னும் முறையில் நிறைவு செய்கிறேன்.

## கருவி நூற்பட்டியல்


தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

தொல்காப்பியம் - சொல்லதிகாரம்

மனோன்மணீயம்

சிலப்பதிகாரம்

பட்டினப்பாலை

நன்னூல்

அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு - 13 ஆம் நூற்றாண்டு, காந்தி வித்தியாலயம், மயிலாடுதுறை, 1969.

'அறிவு' 'கைகாட்டி' இதழ்கள்

'ஆனந்த விகடன்' 2-8-84 இதழ்

சிவஞானம், ம.பொ., தமிழும் கலப்படமும், இன்ப நிலையம், சென்னை, 1960.

தமிழமல்லன், க., தனித்தமிழ்க் கழகம், சென்னை (வி.உ.) 1978

தமிழ்நாடன், மண்ணின் மாண்பு, சேலம்.


43. தமிழ்க் குடிமகனுக்கு எழுதப்பட்ட மடல்.

திருநாவுக்கரசு, மறை; மறைமலையடிகள் வரலாறு, கழகம் (வி.உ.) 1959.

'தென்மொழி' இதழ்கள்

தேவநேயப் பாவாணர், ஞா., -- அனைத்து நூல்களும்.

தேவநேயப் பாவாணர் எழுதிய மடல்கள்.

நாங்கள் காணும் பாவாணர், பாவாணர் தமிழ்க் குடும்பம், நெய்வேலி, 1982.

பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி.

பாரதிதாசன், தமிழியக்கம், செந்தமிழ் நிலையம், திருச்சி, 1969.

மறைமலையடிகள், முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், கழக வெளியீடு 1963.

மறைமலையடிகளார் கடிதங்கள், பாரி நிலையம், சென்னை (வி.உ.) 1967.

## இயற்றமிழ் இலக்கணம்

மு.ப. 23-12-1934 ஐந்தாம் பதிப்பு: 1943

ஆறாம் பதிப்பு: 1944 ஏழாம் பதிப்பு: 1945

கழக வெளியீடு

விலை: 1-25 உருபா. பக். 12+148

1934 ஆண்டு வாக்கில் பள்ளியிறுதி வகுப்புப் பாடத்திட்டக் குழுவினர் தாய்மொழிப் பயிற்சி மேம்பாட்டைக் கருதி நன்னூலில் இன்றியமையாது வேண்டப்படும் பகுதிகளை உரை நடை முறையில் கற்பிக்கப் பாடத்திட்டம் ஒன்றினை ஏற்படுத்தினர்.

இத்திட்டத்தையொட்டி 4,5,6ஆம் படிவ மாணவர்களுக்கென எழுதப்பட்ட நூல் இது.

இதுவே பாவாணர் எழுதிய முதல்நூல் ஆகும்.

எழுத்தியல், சொல்லியல், 'புணரியல்' 4-ஆம் படிவத்திற்கும் மேலும் யாப்பியலும், அணியியலும் 5ஆம் படிவத்திற்கும் தரப்பட்டுள்ளன. 6ஆம் படிவத்திற்குப் பொதுவியலும் சேர்க்கப்பட்டுள்ளது.

## கட்டுரை வரைவியல் என்னும் உரைநடை இலக்கணம்

மு.ப. 1936 மறுபதிப்புகள்: 1940, 1944, 1952

கழக வெளியீடு

விலை: 1-25 உருபா. பக். 8+160

மாணவர் மனம் பெரும்பாலும் ஆங்கிலமயமாயிருக்கின்ற இக்காலத்தில் தமிழில் செம்மையாக எழுதுவதற்கான வழிகாட்டியாக இந்நூல் அமைந்துள்ளது. கட்டுரைக்கு வேண்டிய இலக்கணங்களை மட்டும் இயன்றவரை சுருக்கமாகவும் விளக்கமாகவும் தொகுத்துத் தந்துள்ளார். மாணவர் பிழைகள் பெரும்பாலும் எழுத்துப்பிழையும் சொற்பிழையுமாயிருத்தலின் அவற்றை நீக்குவதற்குப் பலவழிகள் இந்நூல் நெடுமையும் கையாளப்பட்டுள்ளன.

எழுத்தியல், சொல்லியல், சொற்றொடரியல், அணியியல், கட்டுரையியல் என்னும் ஐந்து பகுப்புகளாக நூல் அமைந்துள்ளது.

## செந்தமிழ்க் காஞ்சி

மு.ப. 1937 முதற் பாகம்

ஸ்ரீநிலையம் அச்சுக்கூடம்

விலை: அணா 2 பக். 32

கட்டாய இந்திக் கல்விக் கண்டனம் என்னும் பெயரில் 32 இசைப் பாடல்கள் அமைந்துள்ளன. இந்தித் திணிப்பு எதிர்ப்பு வலுத்து அரசியல் அடிப்படையில் கிளர்ச்சி நடந்த போது ஒரு தமிழ் ஆசிரியன் தன் உணர்ச்சியாலும் கருத்தாலும் எப்படிப் பங்கு கொள்ள முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டு இந்நூல்.

பள்ளித் தமிழாசிரியர் என்னும் முறையில் நடுவண் அரசு, தமிழ்நாட்டு அரசு, ஆங்கிலேய அரசு ஆகியவற்றின் எதிர்ப்புகளை நேரடியாக எதிர்கொள்ளத் தேவையில்லை என்பதால் 'தேசாபிமானத் தண்டமிழ்த் தொண்டன்' என்னும் புனைபெயரில் நூலை எழுதியுள்ளார்.

முகப்பில் காந்தியடிகள் படம் வெளியிடப்பட்டுள்ளது.

## ஒப்பியன் மொழிநூல்

மு.ப. 1940 திருத்திய பதிப்பு: மார்ச்சு 1971

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

விலை. பக். 20+74+334

இந்நூலை விரிவாக எழுதத் திட்டமிட்டு அமைத்துள்ளார். திராவிடம், துரேனியம், ஆரியம், சேமியம் ஆசுத்திரேலிய ஆப்பிரிக்க அமெரிக்க முதுமொழிகள் என ஐந்து மடலங்களாக எழுத எண்ணியிருக்கிறார். அவற்றுள் இப்பொத்தகம் முதன் மடலம் - முதற் பாகம் - இது தமிழைப்பற்றி மட்டும் கூறுவது, இரண்டாம் பாகம் பிற திராவிடமொழிகளைப் பற்றிக் கூறும் (இதுவே 'திராவிடத்தாய்' எனும் பெயரில் பின்னர் வெளிவந்துள்ளது)

முறையாக வளர்ந்தோங்கி உலக அரங்கில் முன்னணி பெறக் கூடிய வாய்ப்பை இழந்த தமிழர்களின் தாழ்ச்சியையும், இந்திய வரலாறு சரியாக எழுதப்படாததால் ஏற்பட்ட இழிவையும் சுட்டிக் காட்டி புதுவாழ்வும், புத்துணர்ச்சியும் ஏற்பட வழிகோலுவது இந்நூல் என்று மதிப்புரை கூறுகிறது.

இந்நூல் மறைமலையடிகள், த.வே. உமாமகேசுவரனார் ஆகியோரால் பெரிதும் பாராட்டப் பெற்றதாகும்.

மறைமலையடிகள் பாவாணர்க்கு வழங்கிய சான்றிதழ் ஆங்கிலத்திலும் தமிழிலும் இடம்பெற்றுள்ளது.

நூல் முன்னுரையில் ஆரிய திராவிடப் பகுப்பு விரிவாக இடம் பெறுகிறது, மொழிநூல், பண்டைத்தமிழகம், தமிழ்த் தோற்றம் என்னும் முப்பெரும் பிரிவுகளுடன் நூல் இலங்குகிறது.

## திரவிடத்தாய்

*மு.ப. சனவரி 1944* *மறுபதிப்பு: மே, 1956*

*சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்*

*விலை: 1-75* *பக். 112+8*

தமிழ் திராவிட மொழிகளின் தாய் என்பதை நிலைநாட்ட எழுந்தது இந்நூல்.

'பெலுச்சித்தானத்திலும் வட இந்தியாவிலும். புலனாம்' என்று முகவுரை பேசுகிறது.

தமிழையும் பிற திரவிட மொழிகளையும் ஆராய்வதால் தமிழின் சிறப்பையும் பழந்தமிழரின் பெருமையையும் அறிய வாய்ப்புள்ளதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

எடுத்துக்காட்டுக்குரிய அளவான சொற்களைப் பயன்படுத்தி இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. திருந்திய திரவிட மொழிகளுள் மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு ஆகிய நான்கிற்கும் உள்ள உறவும் நெருக்கமும் விரிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

## சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்

*மு.ப. பெப். 1949* *மறுபதிப்பு: சூலை 1956*

*கழக வெளியீடு*

*விலை: தெரியவில்லை* *பக். 120*

'எல்லா மொழிகளும் இயற்கையாய் எழுந்தவையென்றும் கடவுளைப் போல் தொடக்கமற்றவை யென்றும், ஒன்றோடொன்று தொடர்பற்றவை என்றும், சில மொழிகள் தேவமொழியென்றும்,

தேவ மொழியில் வழிபாட்டை நடத்துவது கடவுட்குகந்ததென்றும், தமிழ் வடமொழியினின்று வந்தது அல்லது அதனால் வளம்பெற்றது என்றும் பல பேதைமைக் கருத்துகள் பல தமிழர் உள்ளத்தில் வேரூன்றியிருப்பதால் அவற்றைப் பெயர்த்து அவர்களை மொழிநூற் கல்விக்குப் பண்படுத்தும் வண்ணம் இச்சொல்லாராய்ச்சி நூல் வெளி வருகின்றது.' என்று முன்னுரை பேசுகின்றது.

ஆங்கிலத்தில் திரெஞ்சுக் கண்காணியார் எழுதிய 'on the study of words' என்னும் நூலின் போக்கைத் தழுவி எழுதப்பட்டது.

இந்நூலுள் அணியியல், வரலாறு, மெய்ப்பொருள், ஒழுக்கவியல் தொடர்பான சொற்களும் ஒருபொருட் பல சொற்கள், பல பொருள் ஒரு சொற்கள், வழக்கற்ற சொற்கள், பொருள்திரி சொற்கள் முதலானவும் இடம் பெற்றுள்ளன.

தமிழ்ச்சொல் வளம், சொற்குடும்பமும் குலமும் என்னும் தலைப்பிலும் சொல்லாராய்ச்சி இடம் பெற்றுள்ளது.

## உயர்தரக் கட்டுரை இலக்கணம்

(முதற் பாகம்)

மு.ப. திசம். 1950 மறுபதிப்பு: 1968

விலை: 12 உருபா பக் 8+285

கழகவெளியீடு

"ஆங்கில உரை நடையிலக்கணம் மிக விரிவாகவும் நிறைவாகவும் வரையப்பட்டிருந்ததாலும், ஆங்கில உரைநடையைப் பின்பற்றியே தமிழ் உரைநடை வளர்க்கப்பட்டு வருவதாலும் ரென்னும் மார்ட்டினும் இணைந்தியற்றிய ஆங்கில இலக்கண நூலைத் தழுவியே சென்னை அரசியலார் தமிழ்க் கட்டுரை யில்க்கணப் பாடத்திட்டம் வகுத்திருத்தலானும் அந்நூலைத் தழுவியே இந்நூலும் வரையப்பட்டுள்ளது" என்று முகவுரை பேசுகிறது.

இந்நூல் தொடரியல், மரபியல், கட்டுரையியல் என்னும் மூவியல்களையுடையது. முதற்பாகத்தில் தொடரியல் மட்டும் இடம் பெற்றுள்ளது.

## உயர்தரக் கட்டுரை இலக்கணம்

இரண்டாம் பாகம்

மு.ப. நவம். 1951 மறுபதிப்பு: மார்ச்சு 1968

விலை: 12 உருபா பக். 8+252

கழக வெளியீடு

மரபியலும் கட்டுரையியலும் இவ்விரண்டாம் பாகத்தில் இடம் பெறுகின்றன. இவ்விலக்கணம் கட்டுரையியலை முழுமையாகத் தருகிறது. பதினான்கு போலிகைக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. மரபியலில் வழக்கு, பெயர், வினை, ஒருபொருட் பலசொற்கள், இணைமொழிகள், மரபுத்தொடர்கள் இடம் பெற்றுள்ளன. கட்டுரையியலில் கடிதம், கதை, தன்வரலாறு, உரையாட்டு வரைதல், கட்டுரை வரைதல், சுருக்கியும் பெருக்கியும் வரைதல் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

## பழந்தமிழாட்சி

மு.ப. பிப். 1952 மறுபதிப்பு: 1961

விலை. 2.25 பக். 8+170

கழக வெளியீடு

'நம் பழந்தமிழ்ச் சான்றோர் பல்லாயிர ஆண்டுகளாக அறிவுறுத்திய அறமுறை திறம்பாது, ஆவியும் கண்ணுமாக ஆருயிர் ஓம்பி ஆட்சி புரிந்த அரும்பெரும் நுட்பங்கள் பலவும் பிழிவாக அடங்கியுள்ளது இந்நூல். இதன்கண், ஆட்சி புரியும் ஆட்சித்துணை, ஆட்சித்துறை, ஆட்சிப்பரப்பு, பட்டமும் பரிசும், கல்வி வளர்ச்சி, தமிழ் நாகரிகம், பொருளியல், அகப்புறக் காவல், தமிழகப் பண்பாடு, வெளியுலக நிலைமை, வெளியுலகத் தொடர்பு முதலிய பலவும் வரலாற்றுண்மைகளுடனும்' கல்வெட்டு செப்புப் பட்டயங்களின் வலிய சான்றுகளுடனும்' விளக்கப்பட்டுள்ளதாகப் பதிப்புரை பேசுகின்றது.

26 உட்பிரிவுகளையும், 4 பின்னிணைப்புகளையும் நூல் கொண்டுள்ளது.

## முதல் தாய்மொழி

மு.ப. 1953

விலை: 5 உருபா பக். 32+344

கழக வெளியீடு

'தமிழ்மொழி நம் மக்களின் அகக்குறிப்பு முகக் குறிப்பினால் தோன்றி வளர்ச்சியடைந்த வரலாற்றை அ,இ,உ என்னும் முவ்வகைச் சுட்டினின்றே பிறந்தன என இந்நூலில் விளக்கமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன' எனப் பதிப்புரை பேசுகிறது.

பல்வேறு நிலைகளில் நிகழ்ந்த திரிபு, சுருக்கம், பெருக்கம், கூட்டு, கலப்பு என்னும் ஐம் முறைகளால் உலக மொழிகள் மூவாயிரமாகக் கிளைத்துள்ளன. அம்மூல மொழிகளுள் முதன்மையானது தமிழே என்றும் அது தோன்றிய இடம் குமரி நாடே என்றும் மெய்ப்பிக்கும் வகையில் இந்நூல் எழுந்துள்ளது.

குறிப்பொலிக் காண்டம், சுட்டொலிக் காண்டம் என்றும் இரு பகுப்புகட்குள் பல படலங்களும், படலங்கட்குள் பல இயல்களும் இயல்களுக்குள் பல துறைகளும் துறைகளுக்குள் பல உட்பிரிவுகளும் அமைந்திருக்கும் பாங்கு எண்ணி வியத்தற்குரியது.

## தமிழ் நாட்டு விளையாட்டுக்கள்

முதற் பதிப்பு திசம். 1954 மறுபதிப்பு: மார்ச்சு 1962

கழக வெளியீடு

விலை: 2-00 பக்: 16+144

விளையாட்டு நம் தமிழகத்தில் பண்டைக்காலந்தொட்டே பல வகையிலும் வளர்ந்து பரவி நிற்கிறது. நம் நாட்டின் பயன் கருதியும் நாட்டில் தொன்று தொட்டு வந்த விளையாட்டின் பெயர்கள் எக்காலத்தும் மறையாதிருத்தலைப் பயனாகக் கொண்டும் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

"ஆங்கில ஆட்சி நீங்கித் தமிழாட்சி வரவிருக்கும்போது, வழக்கில் குன்றிய தமிழ்நாட்டு விளையாட்டுக்களை நாடு முழுவதும் பரப்புவது நல்லதென்று கண்டு" இச்சிறு நூலை எழுதியதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

ஆண்பாற் பகுதி, பெண்பாற் பகுதி, இருபாற் பகுதி என மூன்று பகுதிகளாக இளைஞர் விளையாட்டுகள் தொகுக்கப்பட்டுள்ளன.

குழந்தைப்பக்கமும் காட்டப்பட்டுள்ளது. பெரியோர் பக்கத்திலும் ஆண், பெண்பாற்பகுதி உளது.

## தமிழர் திருமணம்

முதற் பதிப்பு: 1956

விலை: 1 உருபா பக்: 10+96

சேலம் கூட்டுறவு அச்சகம்

'தமிழர் திருமணம்' என்னும் நூல் குறித்த முன்னுரையில் தன் நோக்கத்தை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

'இல்லறமாகிய நல்லறம் பூணும் மக்கள் வாழ்க்கையில் திருமணமே தலைசிறந்த மங்கல நிகழ்ச்சியாதலாலும், நீண்ட காலமாகத் தமிழுக்கும் தமிழனதுக்கும் இழுக்கு நேரும் வண்ணம் ஆரிய முறையில் பெரும்பால் தமிழ் மணங்கள் நடைபெற்று வருவதாலும் அண்மையில் யான் நடத்தி வைத்த பல திருமணங்களில் யான் உணர்ந்த முறையை நிறைத்தற் பொருட்டும் இந்நூல் எழுதப்பட்டது."

பாவாணரது மகன் நச்சினார்க்கினிய நம்பி நூலை வெளியிட்டுள்ளார். தென்காசிப் புலவர் குற்றாலம் துணை செய்துள்ளார்.

பண்டைத் தமிழ் மணம், இடைக்கால மாறுதல்கள், திருமணச் சீர்திருத்தம் என்னும் மூன்று இயல்களில் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

## இசைத்தமிழ்க் கலம்பகம்

முதற் பாகம்

*முதற் பதிப்பு: 1966* *பக்: 4+248*

*விலை: மூன்று உருபா*

*திருமுருகன் அச்சகம், 74, ஆர்க்காட்டுச் சாலை,*
*கோடம்பாக்கம், சென்னை-24*

வெளியிடப்பட்ட ஆண்டோ, நூலாசிரியர் முன்னுரையோ, பதிப்புரையோ இடம் பெறவில்லை.

குறியீட்டு விளக்கம், குறுக்க விளக்கத்தை அடுத்துப் பாயிரம், காப்பு, இசையாசிரிய வணக்கம் இடம் பெற்றுள்ளன. கடவுள் வணக்கம் தொடங்கி மங்களம் ஈறாக 303 இசைப்பாடல்கள் இடம் பெற்றுள்ளன. தமிழ், தமிழர், தமிழ்நாடு தொடர்பாக உள்ள அனைத்துச் செய்திகளும் இசைப்பாடலாக வழங்கப்பட்டுள்ளன.

**'தன்மை யிழந்து தவிக்கின்ற தமிழன்தன்**
**முன்மை யுணர்ந்து முன்னேறிச் சென்றிட**
**உண்மை வடிவெனும் ஒருவன் உணர்த்தவும்**
**இன்னி திசைத்தேன் இசைத்தமிழ்க் கலம்பகம்'**

## The Primary Classical language of the world

*மு.ப. 9-4-1966*

நேசமணி வெளியீடு

*விலை: 25 உருபா* *பக்: 312*

பாவாணர் பன்னெடுங்காலமாகக் கூறி வந்த கருத்துகளை நிரல் பட ஆங்கிலத்தில் தந்துள்ளார். நூலின் உள்ளடக்கம் குறித்து நூல் முகப்பில் உள்ள குறிப்பு

'Origin, development and cultivation of Tamil; its ramifications, alterations and corruptions, its uniqueness and affinities'

கொடைவள்ளல் அரிராம் சேட் அவர்களின் 32வது பிறந்தநாள் விழாவையொட்டி அவர்கள் வழங்கிய நன்கொடை கொண்டு

வெளியிடப்பெற்றது. ஒரு வள்ளலின் புகழை நிலைநாட்டுவது வெறும் புகழ்மொழிகளால் அன்றி, ஒரு பயனுள்ள செயலாலும் அமையவேண்டும் என்று விழாக்குழு கருதியதன் விளைவே இந்நூல். இது குறித்து விழாக்குழுத் தலைவர் கெருடலிங்கம் கூற்று கருதத்தக்கது.

'கொடைவள்ளல் கருணைத் திரு. அரிராம் சேட் நினைவு அமைப்புப் பணியினராகிய நாங்கள் கொடைவள்ளல் அவர்கட்கு சமர்ப்பணமாக மதிப்பிற்குரிய மொழியாராய்ச்சி வல்லுநர் உயர்திரு. தேவநேயப் பாவாணர் அவர்களுடைய இந்நூலை வெளியிடுவதன் மூலம் கொடை வள்ளலுக்கு ஓர் அழியாத நினைவுச்சின்னத்தையும் மதிப்பிற்குரிய பாவாணர் அவர்களுடைய அரும்பெரும் மொழியாராச்சித் தொண்டுக்கு எங்களால் இயன்றதோர் ஊக்குவிப்பையும் தந்துவிட்ட நன்னிலை எய்தப் பெறுகிறோம்.'

ஆறாண்டுகளாகவே கையெழுத்துப் படியாக இருந்ததாகப் பாவாணர் குறிப்பிடுகிறார்.

## தமிழ் வரலாறு

*முபட: பிப்; 1967*

நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி விரிவு., விலை 6.25 உருபா, பக்: xxlv +319

பல்வேறு நிலைகளில் சிறப்பிழந்தும் மறக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் வரும் தமிழின் உண்மையான வரலாறாக இந்நூல் அமைகின்றது. இதுவரை வெளிவந்தன வெல்லாம் தமிழிலக்கிய வரலாறும் மொழிபற்றிய பொதுவான செய்திகளைக் கூறுவனவுமாகவே அமைந்துள்ளன. வரலாற்றையும் மொழிநூலையும் தழுவி வெளிவரும், முதல் வரலாற்று நூல் இது.

செந்தமிழின் உயர்தனிச் செம்மையையும் குமாரிக் கண்டத் தமிழரின் கூர்மதி நுட்பத்தையும் உணர்ந்து தமிழையும் தம்மையும் உயர்த்திக் கொள்ள உதவும் நூல் இது.

இந்நூல் வெளியிட நாலாயிரம் உருபா நல்கிய திருச்சிமாவட்டம் பாவாணர் நூல் வெளியீட்டுக் குழுவின் செங்கைப் பகுதிக்கு குறிப்பாக நா.செல்வராசுவிற்கு நன்றியுரையாகப் பத்து வெண்பாக்கள் இடம் பெற்றுள்ளன.

முன்னுரையில் 50 பக்கங்களில் பல செய்திகளை விரிவாகப் பேசும் இந்நூல், இயனிலைப் படலம், திரிநிலைப் படலம், சிதைநிலைப் படலம், மறைநிலைப் படலம், கிளர்நிலைப்படலம், வருநிலைப் படலம் எனும் ஆறு பகுதிகளைக் கொண்டது. பின்னிணைப்பிலும் சில செய்திகள் உள்ளன. பாவாணர் நூல் வெளியீட்டுக்குழுவுடன் கொடையாளர் தம் விரிவான பட்டியலும் உள்ளது.

## வடமொழி வரலாறு

மு.ப. திசம் : 1967

நேசமணி பதிப்பகம், விலை: 7.50 உருபா, பக்.16+350.

வடமொழி தேவமொழி என்பது மிகப் பெரிய ஏமாற்று என்றும் தமிழரும் மேலையரும் பல்வேறு கரணியங்களால் வடமொழியினால் தாக்கப்பட்டுள்ளனர் என்றும் பாவாணர் கருதுகிறார் என்று முகவுரை பேசுகிறது.

தமிழ் ஆரியத்துக்கு மூலமாகும் என்பதனை இந்நூல் தெளிவாக விளக்குகிறது.

திருச்சி மாவட்டப் பாவாணர் நூல் வெளியீட்டுக் குழுவின் பொருள் உதவி கொண்டு இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. அது குறித்து இரண்டு பாராட்டு வெண்பாக்கள் உள்ளன.

நூலினுள் முன்னுரைப் பகுதிக்குப்பின் வடமொழி வரலாறு மொழியதிகாரம் எனவும் இலக்கணவதிகாரம் இலக்கியவதிகாரம் எனவும் பகுக்கப்பட்டுள்ளது. இலக்கணவதிகாரம் எழுத்தியல் சொல்லியல் தொடரியல் எனும் உட்பகுப்புகளைப் பெற்றுள்ளது.

நான்காவது அதிகாரம் தமிழ் மறைப்பு அதிகாரம் எனப் பெயர் பெற்றுள்ளது. ஐந்தாவதாக வைக்கப்பட்டுள்ள முடிபதிகாரம் 16 வெண்பாக்களைக் கொண்டதாக அமைந்தள்ளளது.

## The Language Problem of Taminad and its logical Solution

மு.ப..22.12.1967, சொந்தவெளியீடு, விலை : உருபா 2, பக்.6+112

தமிழ்நாட்டில் ஏற்பட்ட மொழிச் சிக்கலுக்கு இந்திச் சார்பாளர்களின் கடுமையான போக்குகளும், தமிழ்நாட்டுப் பேராயக்கட்சியினரின் வலிந்த முயற்சிகளுமே கரணியம் எனக் குறிப்பிடுகிறார். 1965 இந்தி எதிர்ப்பிலும், 1967 தேர்தலிலும் ஏற்பட்ட மாறுதலான நிகழ்ச்சிகளை மனத்திற் கொண்டு இந்நூல் ஆங்கிலத்தில் வரையப்பட்டுள்ளது.

**இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும் ?**, முதற்பதிப்பு: 29.2.1968 புன்செய்ப் புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றப் பாவாணர் நூல் வெளியீட்டுக் குழுவின் நிதி உதவியுடன் வெளியிடப்பெற்றது. விலை : 12 உருபா, பக்: 90+4.

ஆங்கிலர் நீங்கியபின் இந்தியரெல்லாம் கண்ணியமான விடுதலையின்ப வாழ்வு வாழ எண்ணியிருந்த காலத்து, இந்தி வெறியர் ஏனைமொழியாரை முன்னினும் பன்மடங்கு இழிவான அடிமைத்தனத்துள் அமிழ்த்தவும் தமிழை நாளடைவில் மெல்ல மெல்ல அழிக்கவும் திட்டமிட்டனர்.

கடந்த முப்பான் ஆண்டுகளாகத் தமிழர் எத்தனையோ வகையில் எதிர்த்துப் போராடியும், மறைமலையடிகள் உள்ளிட்ட மாபெரும் புலவர்கள் ஏரணமுறையில் எடுத்துரைத்தும் பாலறாவாய்ப் பசுங் குழவிகளையேந்திய தாய்மார் பலர் சிறை சென்றும், தமிழை உயிர்போற் கருதிய இளைஞரும், நடுமையரும் தமிழ் கெடுமென்றஞ்சி அளவிறந்து உளம் நொந்து, உலகை வெறுத்துத் தீக்குளித்தும், முதுகந்தண்டொடிய மாணவர் தடியடியுண்டும், இந்தி வெறியர் இம்மியும் அசையாது கடுமுரண்டுடன் அஃறிணையும் நாணுமாறு அடர்த்து நிற்கின்றனர். இந்நிலையில் தமிழாசிரியரும், மாணவரும் விடுமுறை நாளெல்லாம் பட்டினப்பாக்கம், பட்டிதொட்டியெல்லாம் புகுந்து இந்திக் கல்வியாலும் ஆட்சியாலும் தமிழுக்கும், தமிழர்க்கும் விளையும் தீங்குகளைக் கட்சி சார்பற்ற முறையில் பொது மக்களுக்கு விளக்கிக் காட்ட வேண்டும். இது குடியரசு முறைப்பட்ட மக்களாட்சி நாடாதலால் பொதுமக்கள் மூளையில் இத்தகைய தொண்டாற்றும் தனியார்க்கும், படைஞர்க்கும் பயன்படுமாறு புன்செய்ப்புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றப் பாவாணர் நூல் வெளியீட்டுக் குழுவின் விருப்பத்திற்கிணங்கி இச்சுவடியை எழுதலானேன். இதன் வெளியீட்டிற்கு அக்குழுவின் சார்பாக ஆயிரத்தைந்நூறு உருபா தண்டியளித்த ஏழு மன்றங்கட்கும் உண்மைத் தமிழர் அனைவரும் என்றுங் கடப்பாடுடையர் -என்கிறார் பாவாணர்.

நூல் ஆறு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

1. முற்படை 2. இந்திவரலாறு 3. இந்தியால் விளையும் கேடு. 4. இந்திப் போராட்டம் (மூன்று கட்டங்கள்) 5. பல்வேறு செய்திகள் 6. முடிபு.

பின்னிணைப்பாக மூன்று செய்திகள் உள்ளன.

1. இந்தியால் முருகன் ஆரியத் தெய்வமாகுங் கேடு
2. இந்திய ஒற்றுமையைக் குலைப்பார் யார் ?
3. புன்செய்ப் புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றப் பாவாணர் நூல் வெளியீட்டுக்குழு உறுப்புகள்.

## வண்ணனை மொழி நூலின் வழுவியல்
## (The Fallacies of Descriptive Linguistics)

மு.ப. 28-8-1968.

வெளியீட்டாளர் பெயர் இல்லை

விலை உருபா 2. பக்: 4+122.

மொழிநூல் முதன்முதலில் தமிழில் தோன்றியமையால் தமிழர் கண்டதாகும். வரலாற்றை நீக்கி வரையப்பட்ட எந்நூலும் எவர் இயற்றியதேனும் அறிவியன் முறைப்பட்டதாகாது.

"ஆரிய விளம்பரத்தின் விளைவாக மறைந்து கிடக்கும் தமிழைப் பற்றிய உண்மைகளை அறிதற்குத் தடையாக உள்ள வண்ணனை மொழிநூலின் வழுவியலை மொழிநூல் கல்லாரும் கண்டறிந்து கொள்ளுமாறு" இச்சிறுநூலை எழுதியதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

'சமற்கிருதத்தைப் பரப்புவதற்கென்றே ஏற்படுத்தப்பட்ட பூனாத்தெக்காணக் கல்லூரியின் சார்பாக, ஆண்டுதோறும் நடத்தப் பெறும் வேனிற்பள்ளியில் அறுகிழமையும், இலையுதிர்காலப் பள்ளியில் முக்கிழமையும் பயிற்சி பெற்ற அளவிலேயே வண்ணனை மொழிநூலறிஞராகக் கிளம்பும் ஆங்லப் பட்டந் தாங்கியரான மாணவர் தமிழிலக்கியப் பரப்பையும் பொருளிலக்கணச் சிறப்பையும் குமரிநாட்டுத் தமிழ்ப்பிறப்பையும் எங்ஙனம் அறியவல்லார் ?' என்றும் கேட்கிறார்.

மொழிநூல் என்னும் தலைப்பில் பத்துக் கூறுகளும், வண்ணனை மொழிநூல் என்னும் தலைப்பில் மூன்று கூறுகளும் அமைந்துள்ளன. உலகத் தமிழ்ப்பேரவைகள் பற்றிய திறனாய்வும் இடம் பெற்றுள்ளது.

## தமிழ் கடன்கொண்டு தழைக்குமா?

மு.ப. 1069 மறுபதிப்பு 1983

முகவை மாவட்ட உலகத் தமிழ்க்கழகம்

விலை : 35 காசுகள் (மறுபதிப்பு: 50 காசுகள்) பக்: 6+22.

தமிழ்க்குடிமகன் முன்னுரை, 1959இல் 'தென்மொழி' இதழில் வெளிவந்த கட்டுரையே நூல்வடிவில் வெளியிடப்பட்டுள்ளது. தனித்தமிழன் தேவையை வலியுறுத்தியும், தமிழ் கடன்கொண்டால் தளர்ச்சியடையும் என்று தெளிவாக்கியும் விரிவான எடுத்துக்காட்டுகளுடன் விளங்கும் நூல்.

## இசையரங்கு இன்னிசைக் கோவை

முகவை மாவட்ட உலகத்தமிழ்க் கழகம்,
அல்லிமின் அச்சகம், பறம்புக்குடி.

கி.பி. 2000 சிலைத்திங்கள் விலை.0.50, பக். 31.
13ஆம் நாள். (திசம்பர் 1969)

**உட்தலைப்புகள்: 34**

பறம்புக்குடி நகரில் நடைபெற்ற உலகத் தமிழக் கழக முதலாண்டு விழாவில் பாடப்பெற்றவை. வேலூர் வேழத்திருமகள் என்னும்

கசலட்சுமி பாடுவதாக நூலில் காணப்படுகின்றது. ஆனால் பாடியவர் பறம்புக்குடி பொன்னப்பர் எனும் சொர்ணப்பா குழுவினர்.

## திருக்குறள் தமிழ் மரபுரை

மு.ப. 1969 பக்: 19+815

விலை: 15 உருபா

நேசமணிப் பதிப்பகம்.

திருக்குறளுக்கு உரை எழுதியோர் பலர். 14ஆம் நூற்றாண்டிற்கு முந்திய உரையாசிரியர் பதின்மர். உரைத் திறத்தில் பரிமேலழகர் சிறந்து விளங்குகிறார். குறள் உலக மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் நூறு உரைகளுக்குமேல் இருந்தாலும் அனைவருள்ளும் பரிமேலழகர் சிறந்தவராகக் கருதப்படுகிறார்.

"அது பெரும்பாலும் ஏனையுரைகளெல்லா வற்றினும் சிறந்த தென்பதும் சில குறள்கட்கு ஏனையுரையாசிரியர் காண முடியாத உண்மைப் பொருளைப் பரிமேலழகர் நுண்மையாக நோக்கிக் கண்டுள்ளார் என்பதும் உண்மையே. ஆயின், பெறுதற்கரிய அறுசுவையரச வுண்டியில் ஆங்காங்குக் கடுநஞ்சு கலந்து படைத்துள்ள தொப்ப, உண்மைக்கு மாறானதும் தமிழுக்கும் தமிழர்க்கும் கேடு பயப்பதுமான ஆரிய நச்சுக் கருத்துகளைப்" புகுத்தியுள்ளதாகப் பாவாணர் குறிப்பிடுகிறார்.

இதைமாற்றிப் பலவகையில் திருத்தமும் வேறுபாடும் தோன்று மாறு புத்துரை வரைந்துள்ளார் பாவாணர்.

பாவலர் பெருஞ்சித்திரனாரின் சிறப்புப்பாயிரம் இடம் பெற்றுள்ளது. நூல் முன்னுரையில் தமிழர் வாழ்க்கைக் குறிக்கோள் போலும் 12 செய்திகள் இடம் பெற்றுள்ளன. பிற் சேர்க்கையில் உரையெச்சம் முதலாகிய 24 செய்திகள் இடம் பெற்றுள்ளன.

இந்நூல் திசம்பர் 1969இல் பறம்புக்குடியில் நடைபெற்ற உலகத் தமிழ்க்கழக முதல் மாநாட்டில் வ.சுப. மாணிக்கனார் தலைமையிற் புலவர் குழந்தை அவர்களால் வெளியிடப் பெற்றது. பேரா. இலக்குவனார் முதற்படியைப் பெற்றுக் கொண்டார்.

## தமிழர் வரலாறு

மு.ப. பிப். 1972

விலை: 12.50 உருபா பக் : 12+372

நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி விரிவு.

தமிழனைப் போல் முன்பு உயர்ந்தவனுமில்லை; பின்பு தாழ்ந்த வனுமில்லை. ஓரின உணர்ச்சியும் ஒற்றுமையும் மறமும் மானமும்

இற்றைத் தமிழருட் பெரும்பாலார்க்கு எள்ளளவும் இல்லை. பல்வேறு கரணியங்களால் தமிழரின் பழம் பெருமையைத் தமிழரே உணராத நிலை உள்ளது.

இந்நிலையில் '1929ஆம் ஆண்டில் (P.T.) சீநிவாச ஐயங்கார் தெற்கினின்று தொடங்கித் தமிழர் வரலாறு (History of Tamils) வரைந்து வெளியிட்டாரேனும் அது ஆங்கிலத்திலிருப்பதனாலும் போதிய அளவு மொழிநூற் சான்று காட்டாமையாலும் இவ்வரலாற்று நூலை எழுதத் துணிந்தேன்' என்று முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

மதுரையில் அமைந்த பாவாணர் மணி விழாக் குழுவினர் தொகுத்தளித்த நன்கொடைப்பயனாக இந்நூல் வெளிவந்துள்ளது. இக்குழுவினரைப் பாராட்டி ஏழு வெண்பாக்கள் இடம் பெறுகின்றன.

முன்னுரைப் பகுதியில் குமரிக்கண்டம், தமிழர் வரலாறு அமையும் வகை ஆகியவை இடம் பெறுகின்றன. நூல் தனிநிலைக் காண்டம், கலவு நிலைக் காண்டம், தனிநிலைக் காண்டம் எனும் முப்பிரிவாகப் பகுக்கப்பட்டுள்ளது.

முதற்பிரிவில் கற்காலம் முதல் இரும்புக் காலம் வரையிலான செய்திகளும், இரண்டாம் பிரிவில் ஆரியர் வருகையால் ஏற்பட்ட குழப்ப நிலைகளும் நால்வருணத் தோற்றங்களும் இடம்பெறுகின்றன. மூன்றாம் பிரிவில் ஆங்கிலேயராட்சியில் தமிழர்க்கு ஏற்பட்ட நன்மைகள், தமிழன் முன்னேற்றத்துக்கான தடைகள் முதலியவை விளக்கப்பட்டுள்ளன.

பின்னிணைப்பாக உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்குகளால் தமிழுக்கு விளைந்த கேடுகளும், மொழியின் உணர்வும் படிமுறைக்காப்பும் இடம்பெற்றுள்ளன.

## வேர்ச் சொற் கட்டுரைகள்

பக் : 19+300

மு.ப. 1973

விலை: 15 உருபா கழகவெளியீடு.

'செந்தமிழ்ச் செல்வி'யில் வெளியிடப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பாகும் இந்நூல்.

இக்கட்டுரைகளில் அம், அர், இல், இள், உ, உம், உய், உல், உள், உளது, ஏ, ஒல், ஒ என்றும் உயிர் முதல் வேர்ச்சொற்களும் கல், குல், சுல், துல் என்னும் உயிர்ம்மெய் முதல் வேர்ச்சொற்களும் எவ்வெக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பதை முதற்கண் வரையறை செய்து கொண்டு, இதன் மீது பிறந்த சொற்கள் எவ்வாறு இயல்பாகவும் திரிந்தும் கிளைத்தெழுந்துள்ளன என்பதை ஆசிரியர் விளக்கிச் செல்கிறார். அச்சொற்கள் கையாளப்படும் இடங்களை மேற்கோளோடு சுட்டுகிறார்.

'உலக மொழிகளுள் தமிழ்மொழியே தொன்மை வாய்ந்தது என்பதும் சொல்வளம், பொருள்வளம், கருத்துவளம், கலைவளம் நிறைந்துள்ளதென்பதும்' இக்கட்டுரைகளால் உணரப்படும் எனப் பதிப்புரை பேசுகிறது.

அன்றைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேரா. அன்பழகன் அணிந்துரை வழங்கியுள்ளார்.

## தமிழர் மதம்

மு.ப. 1972 பக். 12+199

விலை: 6.25 உரூபா

நேசமணி பதிப்பகம்.

தமிழர் ஏனைத் துறைகளைப் போன்றே மதத்துறையிலும் தலை சிறந்திருந்தனர். ஆரியர் வருகையால் முதலில் ஏற்பட்ட வீழ்ச்சி மதவியல் சார்பானதாகும். இறைவழிபாடும், இருவகைச்சடங்கும் பிராமணரே நடத்தி வைக்க வேண்டும் என்னும் நிலை ஏற்பட்டது.

'While the Aryans were Dravidised in Culture, the Dravidians were Aryanised in Language' என்பது இல்பர்ட் சிலேட்டர் கூறிய உண்மையாகும். இவ்வுண்மையை முழுமையாக வெளிப்படுத்தும் நோக்கத்தோடு 'தமிழர் மதம்' என்னும் நூல் இயற்றப்பட்டுள்ளது.

நூல் வெளியீட்டுக்குதவிய கோவை மறை நித்தலின்பன் பொருள் திரட்டியுதவிய சிங்கை வாழ் பெருமக்கள் பட்டியல் உள்ளது. முன்னின்று செய்த முல்லைவாணன் ஆறு வெண்பாக்களால் பாராட்டப்படுகிறார்.

நூல் குமரி நிலையியல், இடை நிலையியல், நிகழ் நிலையியல், வருநிலையியல், முடிவுரையியல் என்னும் பகுப்புகளையுடையது.

## மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கூட்டுடைமை

மு.ப. 1.4.1978 பக். 11+251

விலை: 12 உரூபா

நேசமணி பதிப்பகம்.

மண்ணுலகில் துன்பமே மிகுவதனாலும், விண்ணுலகம் தேவர் வாழிடமாகக் கற்பனை செய்யப்பட்டு எல்லார்க்கும் இன்பந் தருவதாக எண்ணப்படுவதாலும் மண்ணினும் விண்ணே விரும்பப்படுகிறது.

மனநிறைவான மண்ணுலகச் செங்கோலாட்சியே எல்லா இன்பங்களையும் தரவல்லது.

'எல்லாத் தொழிலர்க்கும் எக்காலத்திற்கும் ஏற்றதும் வகுப்பு வேற்றுமையைத் தோற்றுவிக்காததும், உடம்பியற் பண்பாட்டையும்,

உளவியற் பண்பாட்டையும் ஒருங்கே வளர்ப்பதும் இறைவழிபாட்டை மறுக்காததும், தனியுடைமையை விலக்காததும், பகுத்தறிவிற்கு முற்றிலும் ஒத்ததும், உயரியதுமான கூட்டுடைமையாட்சி அல்லது வாழ்க்கை கி.மு. அல்லது கி.பி. முதல் நூற்றாண்டிலேயே திருக்குறள் வாயிலாகத் திருவள்ளுவரால் தெரிவிக்கப்பட்டு விட்டது. அதுவே இப் பொத்தகத்தில் விரிவாக விரிக்கப்பட்டுள்ளது.' என்று முன்னுரை பேசுகின்றது.

இந்நூல் 1972 ஆம் ஆண்டில் எழுதப்பட்டது எனினும் நெருக்கடி நிலையெல்லாம் தாண்டியபின்தான் வெளியிடப்பட்டுள்ளது.

வள்ளுவர் கூட்டுடைமை, தமிழ்நாட்டு அரசின்கடமை, தமிழ் நாட்டு அரசின் தனிக்கடமை, நடுவணரசின் கடமை, உலகக் கூட்டரசு முதலிய உள்ளடக்கங்களை உடைய நூல்.

நூல் வெளியிடத் துணை செய்த நெய்வேலி அன்பர்கள் மீது பாடப்பெற்ற பாராட்டுப்பா உள்ளது.

## தமிழ் இலக்கிய வரலாறு

முதற்பதிப்பு 25.7.1979
நேசமணி பதிப்பகம் — 38, 2 ஆம் மேற்குக் குறுக்குச்சாலை
காட்டுப்பாடி விரிவு, — வ.ஆ. மாவட்டம்
விலை: 12.50 உருபா — பக்: 16+65+328.

சிங்கப்பூர் வணிகக் கல்விச்சாலை முதல்வர் திரு.வெ. கோபால கிருட்டினனார் அவர்கள் பொருளுதவி கொண்டு வெளியிடப்பட்டது. அவர்க்கான நன்றியுரைப் பாடலும், பாவாணர் பதிகமும், நூலாசிரியன் முகவுரையும் இடம் பெற்றுள்ளன.

"ஆனை கொன்றான் என்னும் மலைப்பாம்பு ஓர் யானை முழுவதையும் விழுங்கினாற் போன்று, இனம் மொழி இலக்கியம் நாகரிகம் பண்பாடு என்னும் ஐங்கூறமைந்த தமிழம் முழுவதையும் ஆரியம் விழுங்கக் கவ்விவிட்டது. சுந்தரம்பிள்ளை, மறைமலையடிகள் முதலியோர் தமிழைப் பேரளவு மீட்டிருப்பினும், மூல வையாபுரியாரும் வழிநிலை வையாபுரியாரும் அம்மீட்பின் பயனைப் பெரிதுங்கெடுத்து விட்டனர். அக்கேட்டை நீக்கவும், இனிமேல் அத்தகைய கேடு என்றேனும் நேராதிருக்கவும் வரலாறு, மாந்தனூல் (Anthropology), மொழிநூல் ஆகிய முந்நூலப்படையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது." என்று முகவுரையில் குறிப்பிட்டுள்ளது. 30.11.1973 ஆம் நாளிலேயே நூல் எழுதப்பட்டுவிட்டது எனினும் ஆறாண்டிற்குப் பின்புதான் நூலை வெளியிட முடிந்தது. கால மாற்றம் கருதிச் சில செய்திகள் விலக்கப்பட்டுள்ளன. தமிழாரியப் போராட்டப் பட்டிமன்ற நடுவர் பெயர்ப்பட்டி உள்ளது. நூலுள் முன்னுரைப் பகுதியில்

குமரிக்கண்டச் சிறப்புக் கூறுகள் பேசப்படுகின்றன. நூல் தலைக்காலம் (கி.மு. 50 ஆயிரம்-(1500), இடைக்காலம் (கி.மு.1500-கி.பி. 18ஆம் நூற்றாண்டு), ஆங்கிலச் சார்புக் காலம் (19ஆம் நூற்றாண்டு), இக்காலம் (இருபதாம் நூற்றாண்டு), எதிர்காலம் ஆகிய பாகுபாடுகளைக் கொண்டுள்ளது. பின்னிணைப்பிலும் பல செய்திகள் தரப்பட்டுள்ளன. தமிழிலக்கிய வரலாறு எழுதத் தக்கார் யார் ? என்று பாவாணர் அறுதியிட்டுரைக்கும் பகுதி இடம் பெற்றுள்ளது.

## சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின் சீர்கேடு

## (The Manifold Defects of the Madras University Tamil Lexicon)

முபட. 1961

விலை: 75 காசு பக். 8+46

1913 முதல் 1939 வரை 27 ஆண்டுகளாக 4, 10, 100 உருபா செலவழித்து உருவாக்கப்பட்டது செபக. தமிழகராதி. 6 மடலங்களுள் 5 வெளியானபின் அவற்றில் விடுபட்ட 200 சொற்களை மட்டும் தொகுத்து 1934இல் பாவாணர் பதிப்பாசிரியரான வையாபுரியார்க்கு விடுத்தார். நூறு உருபாச் சம்பளத்தில் தன்னை ஈராண்டிற்கு அமர்த்திக் கொள்ள வேண்டியும் பயனில்லை.

17.6.1955இல் அகராதியின் 41 வகைக் குற்றங்குறைகளை எடுத்துக் கூறி ஆங்கிலத்தில் அச்சிட்டு செ.ப.க. ஆட்சிக் குழுவிற்கு விடுத்தும் பயனில்லை.

இத்தமிழ் நூலில் பல கூறுபாடுகளில் குற்றங்குறைகள் எடுத்துக் காட்டப்பட்டுளளன.

1. சொல்வழுக்கள் - இத்தலைப்பில் 14 வகைக் குற்றங்கள் உள்ளன. 2. பொருள் வழுக்கள் - இதில் 11 வகைகள் காட்டப்பட்டுள்ளன. 3. வேர்வழுக்கள் - இதில் 9 வகைகள் உள்ளன. மேலும் இலக்கணவழுக்கள் இரண்டும் மரபு வழுக்கள் இரண்டும் அகராதியமைப்பு வழுக்கள் இரண்டும் எடுத்துக்காட்டப்பட்டுளனள.

இறுதியாக அகராதியாசிரியர் குறைகள், சென்னைப் பல்கலைக் கழக அமைப்புக் குறைகள் ஆகிய இரண்டும் சுட்டப்பட்டுள்ளன.

## பண்டைத் தமிழ் நாகரிகம் பண்பாடும்

மு.ப. 1966

விலை: 6.25உருபா நேசமணி வெளியீடு பக். 8+241

இன்று உலகின் நாற்றிசையிலும் பல்வேறு நாடுகளில் பழங்கால நாகரிகம் இருந்திருப்பினும் அவற்றிற்கெல்லாம் தமிழ நாகரிகமே மூலமாகும்.

எனினும் தமிழர்களாலேயே தமிழ் நாகரிகம் சரியாக எடுத்துக் காட்டப்படவில்லை. இக்குறையை நீக்கும் வகையில் இந்நூல் படைக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டப் பெரம்பலூர் வட்டச் செட்டி குளத்துப் பாவாணர் நூல் வெளியீட்டுக்குழு தொகுத்தளித்த தொகை கொண்டு இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. பச்சைமுத்து, நாகமுத்து, செல்வராசனார் ஆகியோர் முன்னின்று ஏற்பாடு செய்துள்ளனர்.

நாகரிகம், பண்பாடு முதலிய சொற்கள் விளக்கப்படுகின்றன. பண்டைத் தமிழ் நாகரிகம் 16 வகையிலும், பண்டைத் தமிழ்ப் பண்பாடு 7 வகையிலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இலக்கிய மேற்கோள்களுடன் எடுத்துக்காட்டப் பட்டுள்ளமையால் தெளிவான, வலுவான சான்றுகளுடன் செய்திகள் அமைந்துள்ளன.

****

## கி.பி. 2002 இல் தமிழ்மண் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டவை

1. தமிழர் சரித்திரச் சுருக்கம்
2. தமிழன் எப்படிக் கெட்டான் ?
3. பாவாணர் பாடல் திரட்டு
4. சிறுவர் பாடல் திரட்டு
5. கிறித்தவக் கீர்த்தனைகள்
6. என் அண்ணாமலைநகர் வாழ்க்கை

### பாவாணர் நூற்றாண்டு விழாவை ஒட்டி மேலும் உருவானவை

1. வேர்ச் சொற் கட்டுரைகள்
2. தலைமைத் தமிழ்
3. மறுப்புரை மாண்பு
4. தென் சொற் கட்டுரைகள்
5. மொழியாராய்ச்சிக் கட்டுரைகள்
6. செந்தமிழ்ச் சிறப்பு
7. இலக்கணக் கட்டுரைகள்
8. பாவாணர் நோக்கில் பெருமக்கள்
9. தமிழியற் கட்டுரைகள்
10. பண்பாட்டுக் கட்டுரைகள்
11. தமிழ் வளம்
12. பாவாணர் உரைகள்
13. மொழிநூற் கட்டுரைகள்
14. கட்டுரைக் கசடறை

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| AN INTRODUCTION TO RELIGION AND PHILOSOPHY - TEVARAM AND TIVVIYAPPIRAPANTAM | 200.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு | 75.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| பயிலரங்கக் கவிதைகள் | 18.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-3 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-2 | 110.00 |
| நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும் | 30.00 |
| சுவடிப் பதிப்புத் திறன் தொகுதி-2 | 45.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| ON TRANSLATING TIRUKKURAL | 50.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| THIRUVACHAGAM | 175.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| நானும் என் எழுத்தும் | 50.00 |
| தமிழர் கட்டிடக்கலை | 30.00 |
| THE NARRINAI FOUR HUNDRED | 175.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| மேலை நோக்கில் தமிழ்க்கவிதை | 100.00 |
| SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE | 35.00 |
| அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் | 125.00 |
| TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY | 200.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| சதகத்திரட்டு தொகுதி-2 | 55.00 |
| தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை-4 | 70.00 |
| சுவடிச்சுடர் | 120.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |

**Pub.No. 419** **பாவாணரும் தனித்தமிழும்** **40.00**